www.tamilarangam.net தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

# இலங்கையின் இனப்பிரச்சினையும் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட வடமாகாண முஸ்லிம்களும்

தொகுதி 5

## முசலி முஸ்லிம்கள்



கலாநிதி எஸ்.எச்.ஹஸ்புல்லா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கையின் இனப்பிரச்சினையும் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட வடமாகாண முஸ்லிம்களும்

தொகுதி 5

## முசலி முஸ்லிம்கள்

கலாநிதி எஸ். எச். ஹஸ்புல்லா

வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ETHNIC CONFLICT IN SRI LANKA AND THE FORCIBLY EVICTED MUSLIMS OF NORTHERN PROVINCE

Vol. 5 : Musali Muslims

By S.H. Hasbullah, M.A. Ph.D
Department of Geography,
University of Peradeniya,
Sri Lanka.

Copy Right © Author.

First Edition , 1997

Published by
The Northern Muslims' Rights Organization
15A, Rohini Road, Colombo - 6, Sri Lanka.

Printed by
Unie Arts (Pvt) Limited
No: 48 B, Bloemendhal Road,
Colombo-13.

Price: Rs.150/=

ISBN 955 - 9447- 05- 7

# பொருளடக்கம்

பக்கம்

அட்டவணைகள் vi
படங்கள் vii
என்னுரை ix
அணிந்துரை xii
நன்றியுரை xvii
1. அறிமுகம் 1
2. முசலிப் பிரதேசம் 6
2.1 குடிசனம் 9
2.2 குடியிருப்புகள் 10
2.3 வரலாறும் கலாசாரமும் 12
3. முசலியின் பொருளாதாரம் 17
3.1 விவசாயம் 17
3.2 மந்தை வளர்ப்பு 33
3.3 காட்டு வளம் 34
3.4 கடல் வளம் 35
3.5 வர்த்தகமும் கைத்தொழிலும் 36
3.6 முசலியின் குறைவிருத்திக்கான காரணங்கள் 37
4. முசலியின் சமூக-பொருளாதாரப் பிரதேசங்கள் 41
4.1 சமூக-பொருளாதாரப் பிரதேசங்கள் 41
4.2 வேப்பங்குளப் பிரதேசம் 44
4.3 அகத்திமுறிப்புப் பிரதேசம் 49
4.4 புதுவெளி-கொண்டச்சிப் பிரதேசம் 53

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

4.5 மணற்குளம்-முசலிப் பிரதேசம் 58
4.6 மறிச்சுக்கட்டிப் பிரதேசம் 63

5. இலங்கையின் இனப்பிரச்சினையும் முசலிப் பிரதேசமும் 68
5.1 முசலியில் இன உறவு 68
5.2 இலங்கையின் இனப்பிரச்சினை 71
5.3 இலங்கை இராணுவம் 72
5.4 தமிழ் ஆயுதக் குழுக்கள் 74
5.5 முஸ்லிம் ஊர்காவற் படை 75
5.6 இரண்டாவது ஈழப் போரும் முசலி முஸ்லிம்களும் 80
5.7. முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றத்திற்கு முன்னர் 83

6. பலவந்த வெளியேற்றமும் அதன் தாக்கமும் 88
6.1 வெளியேற்ற உத்தரவு 88
6.2 வெளியேற்ற உத்தரவும் முஸ்லிம்களின் நிலைப்பாடும் 90
6.3 வட எல்லைக் கிராம முஸ்லிம் மக்களின் தெற்கு நோக்கிய இடப்பெயர்வு 91
6.4 ஒக்டோபர் 25ஆம் திகதி 92
6.5 முசலி முஸ்லிம்களின் வெளியேற்றம் 94
6.6 அபயம் தேடிய முஸ்லிம் அகதிகள் 97
6.7 பலவந்த வெளியேற்றமும் பொருளாதார இழப்பும் 98

7. முசலி முஸ்லிம் அகதிகள் 103
7.1 அகதிகளின் பரம்பல் 103
7.2 ஏனைய வடமாகாண முஸ்லிம் அகதிகளுடன் முசலி அகதிகள் சேர்தல் 106
7.3 முகாம் சூழல் 107
7.4 இயற்கை. செயற்கை அனர்த்தங்கள் 114
7.5 மாற்று வழி தேடி 115
7.6 சொந்தக் குடியேற்றம் அமைக்கும் முயற்சி 117
7.7 அரசின் மீள் குடியேற்றத் திட்டம் 118

8. அண்மைக்கால மாற்றங்கள் 121
8.1 அரசின் மீள்குடியேற்றம்: ஒரு பரிசீலனை. 121
8.2 மீள்குடியேற்றம் அறிமுகப்படுத்தப்பட்ட சூழ்நிலை. 123
8.3 பலவந்த வெளியேற்றத்திற்குட்பட்ட மக்களின் தனித்துவப் பிரச்சினைகள். 124
8.4 மீள்குடியேற்றம் பற்றிய மற்றுமொரு சிந்தனை. 125
8.5 புதிய மாற்றங்கள். 127
8.6 முசலியில் சிவில் நிர்வாகமும் முஸ்லிம் அகதிகளும் 129

9. எதிர்காலம் 132
9.1. முசலி முஸ்லிம்கள் எதிர் நோக்கும் சவால்கள் 132
9.2. சொந்த இடம் மீள்வது பற்றிய முசலி முஸ்லிம்களின் அபிப்பிராயம் 135
9.3 முஸ்லிம்களின் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய ஒரு மீள்குடியேற்றம் பற்றிய முன்மொழிவு 140

விபரம் தந்தவர்கள் 147
உசாத்துணை நூல்கள் 150
பின்னிணைப்பு
1. முசலிப் பிரதேச முஸ்லிம் கிராமங்கள் 155
2. யானை பிடித்தல் 176
3. முத்துக் குளிப்பு 180
4. முசலிப்பிரதேச முஸ்லிம் புலவர்கள் 184
5. சிலாவத்துறையின் வர்த்தக நிலையங்களும் உரிமையாளர்களும் 190



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அட்டவணைகள்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | கிராம அடிப்படையில் முசலிப் பிரதேச முஸ்லிம் சனத்தொகை விபரம், 1921. | 11 |
| 2. | முசலிப் பிரதேச நீர்ப்பாசனக் குளங்கள் பற்றிய விபரம். | 28 |
| 3. | முசலியின் சமூகப் பொருளாதாரப் பிரதேசங்கள். | 28 |
| 4. | வேப்பங்குளப் பிரதேசம்: குடிசனமும், விவசாயமும். | 47 |
| 5. | வேப்பங்குளம்: நிலப்பயன்பாடு. | 47 |
| 6. | அகத்திமுறிப்புப் பிரதேசம்: குடிசனமும், விவசாயமும். | 51 |
| 7. | அகத்திமுறிப்புப் பிரதேசம்: நிலப்பயன்பாடு. | 51 |
| 8. | புதுவெளி-கொண்டச்சிப் பிரதேசம்: குடிசனமும், விவசாயமும். | 55 |
| 9. | புதுவெளி-கொண்டச்சிப் பிரதேசம்: நிலப்பயன்பாடு. | 55 |
| 10. | மணற்குளம்-முசலிப் பிரதேசம்: குடிசனமும், விவசாயமும். | 60 |
| 11. | மணற்குளம்-முசலிப் பிரதேசம்: நிலப்பயன்பாடு | 61 |
| 12. | மறிச்சுக்கட்டிப் பிரதேசம்: குடிசனமும், விவசாயமும். | 66 |
| 13. | மறிச்சுக்கட்டிப் பிரதேசம்: நிலப்பயன்பாடு | 66 |
| 14. | முசலியில் இனப்பிரச்சினையால் உயிரிழந்தவர்கள், 1986-1990. | 76 |
| 15. | தமிழ் ஆயுதக்குழுக்களால் கடத்தப்பட்டு இதுவரை திரும்பி வராதவர்கள். | 77 |
| 16. | கிராம அடிப்படையில் முசலிப் பிரதேச முஸ்லிம் குடும்பங்களின் இழப்பு பற்றிய சுருக்க அட்டவணை. | 100 |




# படங்கள்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | வடமாகாணமும் அதன் நிர்வாக மாவட்டங்களும். | 2 |
| 2. | முசலிப் பிரதேசத்தின் இட அமைவு. | 7 |
| 3. | முசலிப் பிரதேச முஸ்லிம், தமிழ், சிங்களக் குடியிருப்புகளின் பரம்பல், 1990. | 13 |
| 4. | முசலிப் பிரதேசத்தின் நிலப்பயன்பாடு. | 18 |
| 5. | முசலி முஸ்லிம்களின் தொழில் அமைப்பு. | 20 |
| 6. | அகத்திமுறிப்பு நீர்ப்பாசனத் தொகுதி. | 22 |
| 7. | அகத்திமுறிப்பு நீர்ப்பாசனத் தொகுதியின் சமூக, பொருளாதாரப் பிரதேசங்கள். | 43 |
| 8. | முசலியின் வேப்பங்குளப் பிரதேசம். | 46 |
| 9. | முசலியின் அகத்திமுறிப்புப் பிரதேசம். | 50 |
| 10. | முசலியின் புதுவெளி-கொண்டச்சிப் பிரதேசம். | 54 |
| 11. | சிலாவத்துறையின் வர்த்தக சேவை மையங்கள் | 57 |
| 12 | முசலியின் மணற்குளம்-முசலிப் பிரதேசம். | 59 |
| 13. | முசலியின் வியாயடிப் பிரதேசம். | 65 |
| 14. | முசலிப்பிரதேச மக்களின் வெளியேற்றப் பாதை, 25-30 ஒக்டோபர், 1990 | 96 |




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

15. முசலிப் பிரதேச முஸ்லிம் அகதிகள் வாழும் முகாம்களின் பரம்பல். 1996 ஜனவரி. 105

16. கண்டக்குழி அகதி முகாம், 1995. 110

17. மில்லடி அகதி முகாம்கள், 1995. 113

18. இனப்பிரச்சினையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மீள் குடியேற்றம் 141

19. பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முசலி முஸ்லிம்களுக்கான மீள்குடியேற்றம். 145

20. வடபுற முசலிப் பிரதேச முஸ்லிம், தமிழ், சிங்கள குடியிருப்புக்களின் இட அமைவு. 156

21. முசலிப் பிரதேசத்தில் யானை பிடிக்கும் இடங்களும் அதில் ஈடுபட்ட முஸ்லிம் கிராமங்களும். 178

22. முசலியின் முத்துக்குளித்தற் பிரதேசமும் செயற்பாடுகளும். 182



# என்னுரை

இன முரண்பாட்டைக் குறைத்து இனங்களுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்த அரசியல் யாப்பு ரீதியான சீர்திருத்தங்கள் அவசியம் எனக் கூறப்படுகின்றது. அதற்கான முயற்சிகளும் இன்று இலங்கையில் எடுக்கப்பட்டு வருகின்றன.

ஆனால் சமூகங்களுக்கிடையில் உடன்பாட்டையும், ஒற்றுமையையும் ஏற்படுத்த எடுக்கப்பட வேண்டிய வேறுபல நடவடிக்கைகளும் இருக்கின்றன. அவற்றில் ஒன்று, பிரதேச மட்டத்தில் சமூகங்களை இணைப்பதனைக் குறிப்பிடலாம்.

பிரதேச மட்டத்தில் இனங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்துதற்காக இதுவரை மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் மிகக் குறைவாகக் காணப்படுகின்றன. தேசிய மட்டத்திலான சிங்கள-தமிழ் இன ஒற்றுமை என்ற அம்சத்தை விட பிரதேச மட்டத்தில் இவ்விரு மக்களுக்குமிடையிலான ஒற்றுமையும், உடன்பாடுமே நடைமுறையில் இனப்பிரச்சினையின் வேகத்தைக் குறைக்கக் கூடியதாகும்.

தமிழ்-முஸ்லிம் மக்களுக்கிடையிலான உறவுகளும் இது போலவே காணப்படுகின்றன. தமிழ்-முஸ்லிம் மக்களுக்கிடையில் வடக்கு-கிழக்கு என்ற பரந்த பிரதேச மட்டத்திலான இன முரண்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து இன்று நோக்கப்படுகின்றது. மாறாக கிராம, நகர, வட்டார மட்டங்களில் ஒன்றாக வாழும் இம்மக்களின் ஒற்றுமையின் அடிப்படைகளை மேலும் வளர்ப்பதற்கான முயற்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை.

தமிழ்-முஸ்லிம் உறவில் இரண்டு உதாரணங்களை எடுத்துக் காட்டி இவ்விரு மக்களுக்கிடையிலும் இன இணக்கப்பாட்டை எவ்வாறு வளர்க்கலாம் என்பதை விளக்க விரும்புகின்றேன்.

எனது முதலாவது உதாரணம் கிழக்கு மாகாண தமிழ்-முஸ்லிம் உறவு பற்றியதாகும். இப்பிரதேசத்தில் தமிழ்-முஸ்லிம் உறவு அண்மைக் காலத்தில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. தமிழர்களும், முஸ்லிம்களும் ஒருவருக்கொருவர் பரம எதிரிகளாக கருதுகின்றார்கள் என்றும் சொல்லப்படுகின்றது.

இக் கூற்றுக்களில் உண்மையில்லை என்பதே எனது கருத்தாகும். இதனை கிழக்கு மாகாணத்திற்கான எனது அண்மைக்கால விஜயத்தில் நான் மேற்கொண்ட அவதானிப்பில் இருந்து அறியக் கூடியதாக இருக்கின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிழக்கு மாகாணத்தில் தமிழ்-முஸ்லிம் முரண்பாட்டால் இரு பகுதி மக்களும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் ஒன்று மட்டக்களப்பாகும். அதில் ஏறாவூர் கிராமமும் ஒன்றாகும். இக்கிராமத்தில் தமிழ்-முஸ்லிம் ஆகிய இரு இன மக்களும் கலந்து வாழ்கின்றனர்.

கடந்த காலத்தில் இவ்விரு இன மக்களுக்கிடையிலும் ஏற்பட்ட மனக் கசப்புக்களின் பிரதிபலிப்புகளுக்கான தடயங்களை இக்கிராமத்தில் இன்றும் தெளிவாக அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. ஏன் இவ்வாறான ஒரு மனக் கசப்பு இவ்விரு இன மக்களுக்கும் இடையில் ஏற்பட்டது என்பதற்கு பல பின்னணிக் காரணிகள் கூறப்படுகின்றன. அவற்றினை விளக்குவது எனது நோக்கமல்ல.

மாறாக இக்கிராமத்தில் தமிழ் முஸ்லிம் மக்கள் ஒன்றாக வாழ்வதும் ஒற்றுமையாகக் காணப்படுவதும் இன்றைய நிதரிசனமாகும். இவ்வொற்றுமை இன்று நேற்றல்ல பல நூற்றாண்டு காலம் இவ்விரு மக்களுக்கிடையிலும் காணப்பட்டு வந்திருக்கின்றது.

தமிழ் முஸ்லிம் மக்கள் பொருளாதார மற்றும் ஏனைய பல காரணங்களுக்காக நெருங்கிப் பழகி வருகின்றமை இக்கிராமத்திற்குச் செல்லும் யாராலும் அறியாமல் இருக்க முடியாது. நாளாந்த நடைமுறை வாழ்க்கையில் இவ்விரு இன மக்களும் இணைந்து வாழ்வது நிதர்சனமானதொன்றென்றால் அவ்வாறான அம்சங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து இன உறவு வளர்க்கப் படுவதே பொருத்தமானதாகும்.

கிழக்கு மாகாண தமிழ்-முஸ்லிம் உறவை நோக்குகின்ற போது வடக்கு-கிழக்கு பிரதேச மட்டத்தில் தமிழ்-முஸ்லிம் மக்களுக்கிடையிலான உடன்பாட்டுக்காக எடுக்கப்படுகின்ற முயற்சியைப் போல் கிராம, நகர, வட்டார மட்டத்திலும் இவ்விரு இன மக்களும் ஒன்றாக, ஒற்றுமையாக வாழ்வதற்கான அடிப்படைகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கான முயற்சிகளும் அவசியமாகும். அடிமட்டத்தில் இனங்களுக்கிடையிலான உறவை வளர்ப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படாவிட்டால் தேசிய மட்டத்தில் எடுக்கப்படுகின்ற யாப்புச் சீர்திருத்தத்தால் எவ்வித பயனுமற்ற நிலை உருவாகும் என்பது உண்மையாகும்.

தமிழ் முஸ்லிம் உறவில் மற்றுமொரு உதாரணம் வட மகாணத்தோடு தொடர்புடையதாகும். முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களும் இப்பிரதேசத்தில் மிக நீண்ட காலமாக இன இணக்கப்பாட்டுடன் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தார்கள். 1990 ஆம் ஆண்டில் முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றம் ஒரு துரதிஷ்டமான



நிகழ்வென்று தமிழ் மக்கள் நம்புகின்றனர். இத்தவறுக்கு உரிய பொருத்தமான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்பட்டால் இப்பிரதேசத்தில் தமிழ்-முஸ்லிம் இன உறவில் திருப்தியான மாற்றங்கள் எதிர்காலதில் ஏற்படக் கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன.

வட மாகாணத்தில் தமிழ்-முஸ்லிம் உறவை மீண்டும் கட்டியெழுப்ப இவ்விரு மக்கட் குழுக்களுக்கும் இடையிலான தொடர்பு மீள ஏற்படுத்தப்பட வேண்டும்.

வடக்கு முஸ்லிம்கள் அகதிகளாக இம் மாகாணத்திற்கு வெளியே வாழ்கின்றார்கள். ஒரு பிரதேசத்தில் சேர்ந்து வாழ்ந்த இம்மக்கள் தமிழ் மக்களில் இருந்து பிரிந்து வேறொரு இடத்தில் இன்று வாழ்கின்றார்கள். எனினும் முஸ்லிம்கள் மீண்டும் தமது சொந்த இடம் சென்று அங்கு தமிழ் மக்களுடன் தமது பழைய உறவைத் தொடர விரும்புகின்றார்கள்.

முஸ்லிம் மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலான உறவைப் பலப்படுத்த முசலிப் பிரதேச தமிழ்-முஸ்லிம்களுக்கு இடையில் தற்போது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தேசிய, சர்வதேச மட்டத்தில் பொருத்தமான உதவிகள் செய்யப்பட்டால் இம்முயற்சிகள் வெற்றியளிப்பதற்கான வாய்ப்புகள் உண்டு.

வடக்குக் கிழக்கை முழுமையாக நோக்குகின்றபோது தமிழ்-முஸ்லிம் மக்களுக்கிடையிலான இணக்கப்பாடான உறவின் அடிப்படைகள் பிரதேச மட்டத்தில் அடையாளம் காணப்பட்டு அவற்றினை வளர்தெடுப்பதற்காக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் அவசியமாகும்.

***எஸ்.எச்.ஹஸ்புல்லா***



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அணிந்துரை

*மன்னார் மாவட்ட முசலிப் பிரதேச ஜூம்ஆப் பள்ளிவாயில்களின் பிரதம தர்ம கர்த்தாக்களால் வழங்கப்பட்டது.*

மன்னார் மாவட்ட முசலிப்பிரதேசத்தைச் சேர்ந்த 21 கிராமங்களையும், அவற்றின் 15000 முஸ்லிம் மக்களையும் கிராம மட்டத்தில் பிரதிநிதித்துவப் படுத்தும் பள்ளிவாயில் பிரதம தர்ம கர்த்தாக்களாகிய நாங்கள், முசலி முஸ்லிம்கள் பற்றிய இந்நூலுக்கு அணிந்துரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றோம். இந்நூல் எமது மக்களின் வரலாறு, கலை, கலாசாரம் ஆகியவற்றையும், எமது பிரதேசத்தின் பொருளாதார வளம் பற்றியும், இனப் பிரச்சினையால் எமக்கேற்பட்ட இன்னல்கள் பற்றியும் தெளிவாக விளக்குகின்றது. இந்நூலில் தரப்பட்டுள்ள விபரங்கள், விபரிக்கப்பட்ட சம்பவங்கள் அனைத்தும் எமது அறிவுக்கெட்டியமட்டில் சரியானவையாகும்.

எமது சொந்தப் பிரதேசத்திலிருந்து தொலை தூரத்தில் அகதிகளாக வாழும் நாம், எமது மக்கள் சார்பாக பின்வரும் செய்தியை இலங்கை வாழ் எல்லா சமூகத்தினருக்கும் அத்துடன் சர்வதேச ஸ்தாபனங்களுக்கும் இவ்வணிந்துரை மூலமாக அறிவிக்க விரும்புகின்றோம்.

500சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட முசலிப்பிரதேசத்தில் நாங்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்தோம். அப்பிரதேசத்தில் வாழ்ந்த தமிழ், சிங்கள மக்களோடு மிக அந்நியோன்னியமாக சகோதரர்களைப்போல வாழ்ந்து வந்தோம்.

1983ஆம் ஆண்டிலிருந்து தீவிரமடைந்து வந்த இனப் பிரச்சினையுடன் நேரடியாக சம்மந்தமற்றவர்களாக நாங்கள் இருந்தோம். அரச படைகளுக்கும்–தமிழ் ஆயுதக் குழுக்களுக்கு மிடையிலான ஆயுதப் போராட்டத்தில் பக்கம் சாரா நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதைத் தவிர வேறு மார்க்கம் எமக்கிருக்கவில்லை.

அவ்வாறு நாங்கள் இருந்தும், 1990ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் தமிழீழ விடுதலைப் புலியினரால் குறுகிய கால அவகாசத்தில் எமது பிரதேசத்தை விட்டு வெளியேறும்படி வற்புறுத்தப்பட்டோம். அதனால், கடந்த ஏழு வருடங்களாக எமது பாரம்பரிய பிரதேசத்திற்கப்பால் தொலைதூரத்தில் அகதி முகாம்களில் அல்லல் பட்டு வாழ்ந்து வருகின்றோம்.



பலவந்த வெளியேற்றத்திற்குட்பட்ட எம்மை கௌரவமாக எமது சொந்த இடங்களில் குடியேற்றி எமது துயரைத்துடைக்க எந்த முயற்சியும் இலங்கை அரசாலோ, தமிழ் ஆயுதக் குழுக்களினாலோ, ஐக்கிய நாடுகள் சபையினாலோ, வேறு சர்வதேச அமைப்புகளினாலோ இதுவரை எடுக்கப்படாதது மிகவும் துரதிஸ்டமானதாகும்.

இன்று, 1997ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் திகதி இவ் அணிந்துரையை எழுதும்போது, எமது எதிர்காலத்தைத் தீர்மானிக்கக் கூடிய முக்கியமான பிரச்சினையொன்றிற்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையில் நாம் இருக்கின்றோம். அதாவது, இராணுவ நடவடிக்கை மூலமாக வவுனியா–மன்னார் வீதி போக்குவரத்திற்காகத் திறக்கப்பட்டதையடுத்து எமது முசலிப் பிரதேசம் சிவில் நிர்வாகத்திற்குட்பட்ட பகுதியாக அரசினால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. எமது பிரதேசத்தைச் சேர்ந்தவர்களும் எமது பிரதேசத்தில் சேவை செய்தவர்களுமான அரசாங்க ஊழியர்கள் தாம் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட பிரதேசத்தில் தமது கடமையைப் பொறுப்பேற்குமாறு கேட்கப்பட்டுள்ளார்கள். அடுத்த கட்டமாக எவ்வித முன்னாயத்தமுமின்றி எமது மக்களும் தமது சொந்த இடங்களுக்கு மீளச்செல்லும்படி நேரடியாகவோ, மறைமுகமாகவோ அரசால் வற்புறுத்தப்படலாம் என அஞ்சுகின்றோம்.

எமது சொந்த இடத்திலான மீள்குடியேற்றம் எமது பலவந்த வெளியேற்றத்தோடு தொடர்புபடுத்தி நோக்கப்பட்டு, அந்த அடிப்படையில் எமக்குப் பொருத்தமான மீள்குடியேற்ற ஏற்பாடு செய்யப்படுவது அவசியம் என்பதை நாங்கள் இங்கு வற்புறுத்த விரும்புகின்றோம். எமது மீள்குடியேற்றத்துடன் தொடர்பான பின்வரும் அம்சங்களில் தெளிவான நிலைப்பாடொன்றை தேசிய, சர்வதேச சமூகம் எடுத்து, பாதிக்கப்பட்ட எங்களுக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றோம். அந்தவகையில்,

1. இனப்பிரச்சினையில் பக்க சார்பற்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்த நாங்கள் தொடர்ந்தும் அதே நிலைப்பாட்டைக் கொண்ட மக்களாக எமது பிரதேசத்தில் வாழ விரும்புகின்றோம்.

2. எமது சொந்த இடத்திற்கு நாங்கள் மீழுவதற்காக எடுக்கப்படுகின்ற முயற்சிகள் தமிழ் மக்களினதும், அரசினதும் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

3. நாங்கள் எமது பிரதேசத்தில் மீண்டும் குடியேறிய பின்னர், எச்சந்தர்ப்பத்திலும் திரும்பவும் வெளியேற்றப்பட மாட்டோம் என்பதற்கான உத்தரவாதம் எமக்கு அவசியம்.

4. நாம் எமது பிரதேசத்திலிருந்து வெளியேற்றப்படும் போது எமது 21 கிராமங்களிலும் 21 பள்ளிவாயில்கள் 11 பாடசாலைகள், 48 பொதுக்கட்டிடங்கள், 3 பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள், 83 நீர்ப்பாசனக் குளங்கள், பயன்பாட்டிற்குட்பட்டிருந்த 6155 ஏக்கர் நெல் நிலம் என்பன எமக்குச் சொந்தமாக இருந்தன. நாம் எமது சொந்த இடங்களுக்கு மீள்வதற்குப் பொருத்தமான வகையில் இவை சீர்செய்யப்பட வேண்டும்.

5. வெளியேற்றத்திற்கு முன்னர் எமது பிரதேசத்தில் வாழ்ந்த 3000 குடும்பங்களினதும் வீடுகள், தளபாடங்கள், கால்நடைகள் போன்ற சொத்துக்கள் யாவற்றையும் இழந்த நிலையில் நாங்கள் வெளியேற்றப்பட்டோம். எமது வாழ்க்கையை திரும்பவும் ஆரம்பிப்பதற்கு இவைகள் எமக்குத் தேவை.

அதனால், இலங்கை அரசும், தமிழ் ஆயுதக் குழுக்களும், அரசியல் கட்சிகளும், சமாதானத்திற்கான தேசிய, சர்வதேச அமைப்புக்களும் பலவந்த வெளியேற்றத்தால் எமக்கு ஏற்பட்ட பிரச்சினைகளை மனிதாபிமான அடிப்படையிலும், மனித உரிமை அடிப்படையிலும் அங்கீகரித்து எமது மக்களின் நலன் கருதும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

மேற்குறித்த இந்த ஏற்பாடுகள் எமது சொந்த இடங்களில் செய்யப்படும் வரை நாங்கள் வாழ்கின்ற பிரதேசங்களில் எங்களை அகதிகளாக அங்கீகரித்து நாங்கள் கௌரவமாக வாழ்வதற்குரிய மேம்பாட்டு நடவடிக்கைகள் செய்யப்பட வேண்டும் என வினயமாக வேண்டிக் கொள்கின்றோம்.

இவ்வண்ணம்
முசலிப் பிரதேசப் பள்ளிவாயில்களின்
பிரதம தர்மகர்த்தாக்கள்



**அணிந்துரை வழங்கிய தர்மகர்த்தாக்களின் ஒப்பமும் பெயர் விபரமும்.**

1. கே. அப்துல் கபூர்.
தலைவர், மொஹிதீன் ஜும்ஆப் பள்ளி,
சிலாவத்துறை (முதலைப்பாளி)

2. பி.எம். ஜஹ்பர்,
உப தலைவர்,
ஜும்ஆப் பள்ளி (சீனதுர் ரஹ்மானியா)
கூளாங்குளம். (கண்டக்குளி)

3. அலி முஹம்மது புலவர் சேகுமுகம்மது,
தலைவர், ஜும்ஆப் பள்ளி,
பிச்சைவாணிப நெடுங்குளம்.
(முசல்பிட்டி)

4. எம்.எஸ்.அப்துல் சுக்கூர்,
தலைவர், ஜும்ஆப் பள்ளி,
கொண்டச்சி. (பள்ளிவாசல்துறை)

5. எம். எம். முகம்மது சரீபு,
தலைவர், ஜும்ஆப்பள்ளி,
அளவக்கை சிறுக்குளம் (பள்ளிவாசல்துறை)

6. எம்.அப்துல் சலாம்,
தலைவர், காதிருல் கபீர் ஜும்ஆப் பள்ளி
புதுவெளி. (பள்ளிவாசல்துறை)

7. ஏ.எல். அப்துல் றஹ்மான்,
தலைவர், மஸ்ஜிதுன் நூர் ஜும்ஆப் பள்ளி,
முசலி. (கண்டக்குளி)

8. எம்.ஐ. தாஸீம்,
தலைவர், மஸ்ஜிதுல் மீரான் ஜும்ஆப் பள்ளி
பூநொச்சி குளம். (கண்டக்குளி)

9. பி. றஸாது,
தலைவர், மஸ்ஜிதுல் பலாஹ் தைக்காப் பள்ளி,
தம்பட்ட முதலிகட்டு.
(ஆலங்குடா)

10. ஏ.எச்.பி. மரைக்கார்,
தலைவர், அல்-மஸ்ஜிதுல் முனவ்வர் ஜும்ஆப் பள்ளி,
பண்டாரவெளி.
(கொய்யவாடி)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

11. எஸ். அப்துல் முனாப்,
தலைவர், மொஹிதீன் ஜும்ஆப் பள்ளி,
தம்பட்டமுதலிகட்டு. (ஆலங்குடா)

12. ஏ. செயினுலாப்தீன்,
தலைவர், ஜாமிஉல் அன்ஸ் ஜும்ஆப் பள்ளி,
அகத்தி முறிப்பு. (90 ஏக்கர்)

13. எஸ். முகம்மது ஹனிபா,
தலைவர், ஜாமிஉஸ் ஸலாம் ஜும்ஆப் பள்ளி,
கரடிக்குளி. (4ஆம் கட்டை)

14. ஏ.ஆர்.நசீர்,
செயலாளர், மொஹிதீன் ஜும்ஆப் பள்ளி,
வேப்பங்குளம்.(தம்பபன்னி)

15. எம்.எஸ். ஹமீது மரைக்கார்,
தலைவர், மொஹிதீன் ஜும்ஆப் பள்ளி,
பாலக்குளி. (சலாமத், இஸ்மாயில்புரம்)

16. ஐ.எம். ஹுசைன் சாஹிப்,
செயலாளர், மஸ்ஜிதுல் பலாஹ் தைக்காப் பள்ளி,
மரைக்காதீவு, மறிச்சுக்கட்டி. (6ஆம் கட்டை)

17. எஸ். அசன் முகம்மது,
உபதலைவர், மஸ்ஜிதுன் நூர் ஜும்ஆப்பள்ளி,
மறிச்சுக்கட்டி. (4ஆம் கட்டை)



# நன்றியுரை

முசலி முஸ்லிம்கள் பற்றிய நூலொன்றை எழுதுவதற்கான முயற்சியொன்று 1989ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. அப்போது இந்நூலுக்கான வெளிக்கள ஆய்வுக்கு எஸ்.எம்.ஏ. நியாஸ், எச். எம். நசீர் ஆகியோர் உதவினர்.

இந்நூலின் கருப்பொருளும், வடிவமும் வடக்கு முஸ்லிம்களின் வெளியேற்றத்தோடு உருவாகின்றது. இந்நூலுக்கான அடிப்படை விபரங்கள் 1991ஆம் ஆண்டின் அகதிகள் பற்றிய வெளிக்கள ஆய்விலிருந்து பெறப்பட்டன. இவ்வாய்வுக்கு இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி உதவியது.

இந்நூலை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு முசலி முஸ்லிம்களிடம் இருந்து மேலதிகமான விபரங்கள் பெறப்பட்டன. இந்நூலுக்கான விபரம் தந்தவர்களின் பெயர் விபரங்கள் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன.

இந்நூல் வடமாகாண முஸ்லிம் அகதிகள் பற்றிய ஆய்வின் ஒரு பகுதி. கடந்த ஐந்து ஆண்டுகளாக தொடர்ச்சியாக செய்யப்பட்ட ஆய்வுகளில் பல தனிப்பட்டவர்கள் உதவி செய்தனர். அவர்களில் கலாநிதி எம்.ஏ. லதீப், எம்.எஸ்.எம். நவ்பல், ஜனாப். பி. அஜ்மல், எஸ்.எச்.எம். நவ்பர், ஆர். நிகான், திரு. ஹேரத், செல்விகள் எம். ஐ. வாபிகா, பி. சாஜிதா, எம். ஐ. முர்சிதா ஆகியோருக்கும் எனது நன்றிகள்.

முசலி பற்றிய இந்நூலுக்கு வடிவம் கொடுத்த காலக்கட்டத்திலிருந்து நூலாக இது வெளிவரும் வரையும் என்னோடு இந்நூலின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவர் எனது மாணவர் எம். தௌபீக் அவர்களாகும். இந்நூலில் வரையப்பட்டுள்ள படங்களும் எம். தௌபீக் அவர்களாலேயே வரையப்பட்டன.

மேலும் பல்கலைக்கழகத்தில் மாணவர்களாக இருக்கும் போது முசலி பற்றிய விபரங்களைச் சேகரிக்க எனக்கு உதவியாக இருந்த சிலாவத்துறை எம். ஆர். றயீஸ், அகத்திமுறிப்பு எஸ்.எச். உவைஸ், புதுவெளி எம். லபீர், பாலைக்குளி எம். நியாஸ், கூளாங்குளம் ஏ.சீ.எம். நசீம் ஆகியோர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

முசலி முஸ்லிம்களின் மீள் குடியேற்றம் பற்றிய அபிப்பிராய விபரம் திரட்டலில் எனக்கு எ. மிஃலார், எ. ஜி. அனீஸ் ஆகியவர்கள் உதவியாக இருந்தனர். இந்நூலுக்கு முசலிப் பிரதேச பள்ளிவாயில் தர்ம கர்த்தாக்களால் அணிந்துரை வழங்கப்பட்டது.

இந்நூல் எனது மனைவி சுஆதா ஹஸ்புல்லா அவர்களினதும், பி. சுக்ரியினதும் உதவியுடன் கனணிப்படுத்தப்பட்டது. இந்நூலினை யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் அச்சகத்தினர் நல்ல முறையில் அச்சிட்டுத் தந்தார்கள்.

இந்நூலை வெளியிடுவதற்கு முசலிப் பிராந்திய மக்கள் ஒன்றியமும், ஜமாஅத்தே இஸ்லாமியும் நிதி உதவி அளித்தன.

இந்நூலின் உருவாக்கத்திற்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் உதவியளித்த யாவருக்கும் எனது நன்றியைக் கூறிக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**எஸ். எச். ஹஸ்புல்லா**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 1. அறிமுகம்

இந்நூல் முசலி பற்றியது. முசலி மன்னார் மாவட்டத்தின் ஒரு நிர்வாகப் பிரிவாகும். இப்பிரதேசத்தில் வாழ்ந்த முஸ்லிம் மக்கள் பற்றி இந்நூலில் விளக்கப்பட்டிருக்கின்றது. (படம் 1) முசலியில் முஸ்லிம்கள் அதிக எண்ணிக்கையில் வாழ்ந்தார்கள். இப்பிரதேசத்தில் வாழ்ந்த ஏனைய குழுக்களோடு ஒப்பிடுகின்ற போது விகிதாசார ரீதியாக அதிக எண்ணிக்கை கொண்டவர்களாக இவர்கள் இருந்தார்கள். இப்பிரதேசத்தில் முஸ்லிம்கள் நீண்ட வரலாற்றினைக் கொண்டவர்களாக கௌரவமாக வாழ்ந்தார்கள்.

முசலியில் முஸ்லிம்கள் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கிராமிய வாழ்க்கை வாழ்ந்து வந்தார்கள். இக்கிராமிய விவசாயம் நிலம், நீர் வளத்தினை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இவ் இயற்கை வளத்தினைக் கொண்டிருந்த முசலிப் பிரதேசம், இங்கு வாழ்ந்த மக்களின் வாழ்க்கைச் சிறப்பிற்குக் காரணமாக இருந்தது. சமூக, கலை, கலாசார ரீதியாக மிகவும் ஒரு சிறப்பான வாழ்க்கையை இங்கு வாழ்ந்த மக்கள் கொண்டிருந்தார்கள்.

இந்நூல் ஒரு வரலாற்று தேவை கருதி எழுதப்பட்டிருக்கின்றது. முசலியில் வாழ்ந்த முஸ்லிம்கள் 1990 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளால் பலவந்தமாக இப்பிரதேசத்தை விட்டு வெளியேற்றப்பட்டமை யாவரும் அறிந்த உண்மையாகும். இவ்வாறு வெளியேற்றப்பட்ட முசலி முஸ்லிம்கள் இப்போது தொலை தூரத்தில் அகதிகளாக, அநாதைகளைப்போல் வாழ்ந்து வருகின்றார்கள். இந்நூல் இம்மக்களின் அகதி வாழ்க்கையின் துன்பத்தையும், துயரத்தையும் எடுத்துக் காட்டுகின்ற அதே நேரத்தில் இம்மக்களைத் திரும்பவும் சொந்த இடங்களுக்கு மீளக் குடியேறச் செய்வதற்குத் தேவையான அடிப்படை விபரங்களையும் வழங்குகின்றது.

எல்லாவகையான வளங்களோடும், சிறப்புக்களோடும் வாழ்ந்த முசலி முஸ்லிம்களின் வாழ்க்கை பற்றியும், அவர்களுடைய பொருளாதார, சமூக, கலாசாரப் பின்னணிகள் பற்றியும் தெளிவாக விளக்குவதை நோக்காக கொண்டு இந்நூல் எழுதப்பட்டுள்ளது. அதே நேரத்தில் இது இம்மக்கள் திரும்பவும் தமது சொந்த இடத்திற்கு மீளச் செல்வதற்கு தேவையான விபரங்களையும் உள்ளடக்கியதாக உள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படம் 1 : வடமாகாணமும் அதன் மாவட்டங்களும்




மூலம்: இலங்கையின் நிருவாக அறிக்கை



முசலி முஸ்லிம்கள் நல்ல பண்புகளைக் கொண்டிருந்தார்கள். சகல இன மக்களுடனும் சமாதானமாக வாழ்ந்து வந்தவர்கள். அவ்வாறான சிறப்புப் பண்புகளைக் கொண்ட இம்மக்கள் திரும்பவும் தமது சொந்த இடம் மீள்கின்ற போது பழைய வாழ்க்கையைத் தொடரத் தயாராக இருக்கின்றார்கள் என்ற இம்மக்களின் அபிலாசைகளை வெளியுலகிற்கு எடுத்துக் காட்டுவதும் இதன் நோக்கமாகும்.

மேலும், பல்லினத் தன்மை கொண்ட முசலிப் பிரதேசத்தில் முஸ்லிம்கள், தமிழர்கள், சிங்களவர்கள் ஆகிய மூவின மக்களும் எவ்வாறு ஒற்றுமையாக வாழ்ந்தார்கள் என்பதையும் விளக்கி அவ்வாறான ஒற்றுமையை அப்பிரதேசத்தில் மீண்டும் கட்டியெழுப்புவதற்கான வழி முறைகளையும் இந்நூல் ஆராய்கின்றது. குறிப்பாக முசலிப் பிரதேச தமிழ்-முஸ்லிம் ஒற்றுமையின் அடிப்படைகளையும் ஆழத்தையும் தெளிவாக விளக்கி, வடக்கு-கிழக்குப் பிரதேசத்திற்கான முஸ்லிம்-தமிழ் ஒற்றுமைப்பாட்டை முசலியில் முதலில் ஆரம்பித்து வைக்கலாம் என்ற எண்ணக்கரு ஒன்று பற்றியும் இந்நூல் விளக்குகின்றது.

இத்தகைய நல்ல நோக்கங்களைக் கொண்ட இந்நூல் ஒன்பது அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதில் முதல் நான்கு அத்தியாயங்களும் 1990 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட முசலிப் பிரதேசம் பற்றியும் அங்கு வாழ்ந்த மக்கள் பற்றியும், அம்மக்களின் பொருளாதாரம், வாழ்க்கை வரலாறு பற்றியும் விளக்குகின்றன. அத்தியாயம் 5உம், 6உம் இனப் பிரச்சினை என்ற சூறாவளியில் முசலிப் பிரதேசத்தில் வாழ்ந்த முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களை விளக்குகின்றன. அத்தியாயம் 7 பலவந்த வெளியேற்றத்தினால் அகதியாக்கப்பட்ட முசலி முஸ்லிம்களின் கடந்த 7 வருட கால கஷ்டமான அனுபவங்களை விளக்குகின்றது. அத்தியாயம் 8உம், 9உம் இம்மக்களின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு இவர்களின் தனித்துவமான பிரச்சினைகளை அடையாளப்படுத்தி இப்பிரச்சினையை எதிர் காலத்தில் எவ்வாறு எதிர் கொள்ளலாம் என்பது பற்றிக் குறிப்பிடுகின்றன. இந்நூலின் பின்னிணைப்புக்கள் ஆசிரியரால் வெளிக்கொணரப்படும் கருத்தை மேலும் உறுதிப்படுத்த பயன்படுத்தப்பட்டுள்ளன.

இந்நூல் பல ஆய்வு ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டிருக்கின்றது. முசலி முஸ்லிம்களின் பிரதேச தனித்துவமும், பொருளாதார, கலாசாரத் தனித்துவங்களும் பல சிறப்புப் பண்புகளைக் கொண்டிருக்கின்றன. இப்பண்புகளை ஆய்ந்தறிந்து வெளியுலகிற்கு நூலுருவில் கொண்டுவருவதற்கான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முயற்சி 1989 ஆம் ஆண்டு இந்நூலாசிரியரால் மேற்கொள்ளப்பட்டது. அச்சந்தர்ப்பத்தில் முசலிப் பிரதேசத்திற்கு விஜயம் செய்து அப்பிரதேச மக்களின் வாழ்க்கை வரலாறு, கலாசாரம், மற்றும் பொருளாதார அடிப்படைகள் பற்றிய விபரங்கள் ஆசிரியரால் திரட்டப்பட்டன. இன்றைய இந்நூலுக்கான அடிப்படை விபரங்கள் 1989ஆம் ஆண்டு வெளிக்கள ஆய்வில் இருந்து பெறப்பட்டவையாகும்.

1990ஆம் ஆண்டு முசலி முஸ்லிம்கள் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேற்றப்பட்டு, தற்போது இவர்கள் புத்தளம், குருநாகல், அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் ஏனைய வடமாகாண முஸ்லிம் அகதிகளோடு வாழ்ந்து வருகின்றார்கள். வடமாகாண முஸ்லிம்களின் அகதிப் பிரச்சினை பற்றிய வெளிக்கள ஆய்வு ஒன்று 1991 ஆம் ஆண்டு இந்நூலாசிரியரின் தலைமையில் ஒரு குழுவால் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வில் வடமாகாண முஸ்லிம் அகதிகள் பற்றிய குடும்ப மட்டத்திலான விபரங்கள் பெறப்பட்டன. அதில் முசலிப் பிரதேசத்தில் வாழ்ந்த முஸ்லிம்களின் விபரமும் உள்ளடங்கியிருந்தன.

இந்நூலுக்கு மேலே குறிப்பிட்ட 1990ஆம் ஆண்டு செய்யப்பட்ட ஆய்விலிருந்தும் விபரங்கள் பெறப்பட்டன. முசலி முஸ்லிம்களின் வெளியேற்றம். அகதிநிலை, பொருளாதார இழப்புக்கள் ஆகிய அம்சங்கள் மேற்குறித்த ஆய்வு மூலத்திலிருந்து பெறப்பட்டு இந்நூலில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் நூலாசிரியர் கடந்த 6 வருடங்களாக வடமாகாண முஸ்லிம் அகதிகள் பற்றிய ஆய்வுகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்துள்ளார். ஆசிரியரால், அகதிகள் பற்றிய ஆய்வு விபரங்கள் 1992ஆம் ஆண்டிலும் 1994 ஆம் ஆண்டிலும் புதுப்பிக்கப்பட்டன. அவ்வாய்வுகளில் முசலி முஸ்லிம்கள் பற்றிச் சேகரிக்கப்பட்ட விபரங்கள் இந்நூலுக்குப் பயன்படுத்தப் பட்டன.

அதுமட்டுமன்றி முசலி முஸ்லிம் மக்களோடும், அவர்கள் சார்ந்த சமூக அமைப்புக்களோடும் மிக நீண்ட காலத் தொடர்புகள் ஆசிரியருக்குக் காணப்பட்டன. அத்தோடு இம்மக்கள் பற்றிய கலந்துரையாடல்களில் பங்குபற்றுகின்ற சந்தர்ப்பங்களும் கிடைத்தன. இக்கலந்துரையாடல்கள் இம்மக்களின் அபிலாசைகளை ஆசிரியருக்குத் தெளிவாக அறிய உதவுவனவாக இருந்தன. முசலி முஸ்லிம்களின் அபிலாசைகளை அறிகின்ற நோக்கில் 1997 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் ஆசிரியரின் வேண்டுகோளுக்கிணங்க முசலிப் பிராந்திய மக்கள் ஒன்றிய அங்கத்தினர்களால் முசலி



முஸ்லிம்களின் சொந்த இடத்திலான மீள்குடியேற்றம் பற்றிய அபிப்பிராய ஆய்வில் பெற்ற விபரங்களும் இந்நூலில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இவற்றைவிட முசலிப் பிரதேசத்தோடு தொடர்புடைய பல முக்கியமான நூல்களிலிருந்தும், கட்டுரைகளிலிருந்தும், அரச ஆவணங்களிலிருந்தும், நில அளவீட்டுத் திணைக்களத்தின் படங்களிலிருந்தும் இந்நூலை ஆதாரப்படுத்துவதற்குத் தேவையான மேலதிக விபரங்கள் பெறப்பட்டன.

இந்நூலில் பயன்படுத்தப்பட்டுள்ள விபரங்களில் மற்றுமொரு முக்கியமான அம்சம் முசலிப் பிரதேசத்தைச் சேர்ந்த 25 அறிவும், அனுபவமும், மதிப்பும் மிக்க முஸ்லிம் பிரமுகர்களிடமிருந்து இப்பிரதேச மக்கள், அவர்களின் வாழ்க்கை முறை, பழக்க வழக்கங்கள், வரலாறு, கலாசாரம் பற்றி பெறப்பட்ட விபரங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளமையாகும். ஆதே நேரத்தில் முசலிப் பிரதேசத்தில் வாழ்ந்த தமிழ் மக்களினதும், சிங்கள மக்களினதும் விபரங்கள், அபிப்பிராயங்கள் பெறப்படாமற் போனது இந்நூலின் குறைபாடாகும். தவிர்க்கப்பட முடியாத காரணங்களினால் இவ் விபரங்களை பெற முடியாது போயிற்று.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## 2. முசலிப் பிரதேசம்

முசலிப் பிரதேசம் இலங்கையின் வட மேற்கில் அமைந்துள்ளது. இப்பிரதேசம் புவியியல் ரீதியாக பல தனித்துவங்களைக் கொண்டுள்ளது. இப்பிரதேசத்தின் வடக்கு எல்லையாக அருவியாறும், தெற்கு எல்லையாக மோதரகம ஆறும் அமைந்துள்ளன. கிழக்குப் பகுதி அடர்ந்த வில்பத்துக் காட்டினால் எல்லையிடப்பட்டுள்ளது. மேற்கே இந்து சமுத்திரம் காணப்படுகின்றது. இவ்வியற்கை எல்லைகளுக்குட்பட்ட 486 சதுர கி. மீ. பரப்பைக் கொண்ட இப்பிரதேசம் முசலி என்று அழைக்கப்படுகின்றது. இப்பதம் பேச்சு வழக்கிலும், அரசாங்க ஆவணங்களிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது (படம் 2).

முசலி என்ற இடப்பெயரை இப்பிரதேசம் எவ்வாறு பெற்றுக் கொண்டது என்பதற்கு தெளிவான விளக்கங்கள் வரலாற்று நூல்களில் இல்லை. முசலி என்ற பதத்திற்கு தமிழ் மொழியில் நேரடியான கருத்து ஒன்று இல்லை. வரலாற்று நூல்களை நோக்குகின்ற போது பிரித்தானியர் காலத்திற்கு முன்பிருந்தே இப்பிரதேசம் முசலி என்று அழைக்கப்பட்டு வந்திருக்கின்றது. பிரித்தானிய காலனித்துவ கால அறிக்கைகள், நூல்கள் என்பன இப்பிரதேசத்தை மொசலி (Mosely) என்று குறிப்பிடுகின்றது. மொசலி என்பது முஸ்லிம் (Moslim) என்ற ஆங்கிலப் பதத்திலிருந்து மருகி இருக்க வாய்ப்புண்டு. முஸ்லிம் என்ற பதம் பிரித்தானிய ஆவணங்களில் இஸ்லாமிய சமயத்தை, பின்பற்றும் மக்களைக் குறிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டது. எனின், மொசலி என்பது இப்பிரதேசத்தில் வாழ்ந்த முஸ்லிம் மக்களைக் குறிக்கும் நோக்கில் பயன்படுத்தப் பட்டிருக்கலாம் என்று கருதக் கூடியதாக இருக்கின்றது.

வரலாற்று ரீதியாக தனித்துவப் பண்புகளைக் கொண்ட பிரதேசமாக முசலி காணப்படுகின்றது. உலகில் முத்து சேகரித்தலுக்குப் பிரபல்யமான இடங்களில் ஒன்று முசலிக் கரையோரமாக இருந்தது. அதுபோல சங்கு, அம்பர் ஆகிய கடற்திரவியங்களின் இருப்பாகவும் இப்பிரதேசக் கடல் வலயம் காணப்பட்டது. முசலியின் உலகப் பிரபல்யத்திற்குரிய மற்றும் ஒரு அம்சம்



படம் 2 : முசலிப்பிரதேசத்தின் இட அமைவு




மூலம்: இலங்கையின் நிருவாக அறிக்கை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இப்பிரதேசத்தின் யானைகளாகும். பழைய உலக நாகரீகப் பிரதேசங்களால் யானை வர்த்தகத்திற்கும், யானைத் தந்தங்களுக்கும் பிரபல்யமான ஒரு பிரதேசமாக முசலி காணப்பட்டது என்று வரலாற்று நூல்கள் எடுத்து இயம்புகின்றன.

முசலிப் பிரதேசத்தின் மற்றுமொரு சிறப்பு அதன் விவசாயப் பொருளாதாரமாகும். மிகவும் திட்டமிட்ட அடிப்படையில் உருவாக்கப்பட்ட இரண்டு பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களைக் கொண்ட விவசாயப் பிரதேசமாக முசலி காணப்படுகின்றது. வரலாற்று நூல்களில் இருந்து முசலிப் பிரதேசத்தின் நீர்ப்பாசனத் திட்டங்கள் கி.பி. 4ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதென்று அறியக் கூடியதாக இருக்கின்றது.

முன்னொரு காலத்தில் விவசாயப் பொருளாதார அடிப்படைகளையும், ஏனைய வளங்களையும் நிறையக் கொண்டிருந்து, முசலி இலங்கையில் மட்டுமல்ல சர்வதேச ரீதியாகவும் முக்கியமானதொரு பிரதேசமாக மதிக்கப்பட்டிருப்பதற்கான நியாயங்கள் காணப்படுகின்றன.

முஸ்லிம் மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு பிரதேசம் முசலியாகும். இப்பிரதேசத்தின் மொத்த சனத்தொகையில் ஏறக்குறைய 70 சதவீதமானவர்கள் முஸ்லிம்களாவர். முஸ்லிம்கள் முசலியில் பரவலாக வாழ்ந்தார்கள். விவசாயத்தோடு, காட்டு, கரையோர வளப் பயன்பாட்டு நடவடிக்கைகளோடும் தொடர்புற்ற முறையில் இம்மக்களின் பொருளாதார நடவடிக்கைகள் காணப்பட்டன.

முசலியின் மற்றுமொரு சிறப்பு இப்பிரதேசத்தின் பல்லினத் தன்மையாகும். முஸ்லிம்களோடு, தமிழர்களும், சிங்களவர்களும் இப்பிரதேசத்தில் வாழ்ந்தார்கள். தமிழ்-முஸ்லிம் மக்கள் இப்பிரதேசத்தின் பங்காளிகளாக மிக நீண்ட காலம் வாழ்ந்திருக்கின்றார்கள். தமிழ் மக்கள் கிறிஸ்தவ சமயத்தைப் பின்பற்றுபவர்களாகவும், கடல்வள நடவடிக்கைகளில் அதிகம் ஈடுபட்டும் வந்தனர். அதே நேரத்தில் சிங்கள மக்கள் பருவகால மீனவர்களாக முசலிப்பிரதேச கரையோர மீன்பிடியோடு தொடர்புடையவர்களாக மிக நீண்ட காலம் இருந்து வந்திருக்கின்றார்கள்.

மூவின மக்களினதும் தாயகமான முசலி முஸ்லிம்களின் வாழ்விடமாகவும் காணப்பட்டது. முஸ்லிம்களின் தனித்துவமும், இஸ்லாமிய கலாசாரமும் இப்பிரதேசத்தில் ஓங்கி வளர்ந்திருந்தன. இலங்கையில் எண்ணிக்கை ரீதியாக



முஸ்லிம் தனித்துவத்தைப் பேணக்கூடிய செறிவு கொண்ட பிரதேசம் முசலியாகும். முஸ்லிம்கள் தமது சமய, இன தனித்துவத்தைப் பாதுகாத்த அதே சந்தர்ப்பத்தில், இப்பிரதேசத்தில் வாழ்ந்த ஏனைய இன மக்களோடு இன ஐக்கியத்தோடும் வாழ்ந்து வந்தார்கள்.

## 2.1 குடிசனம்

முசலி இலங்கையின் பழைய நாகரீக வலயத்தில் அமைந்திருந்த ஒரு பிரதேசமாகும். வரலாற்றுக் காலத்தில் இருந்தே இப்பிரதேசத்தில் மக்கள் வாழ்ந்து வந்திருக்கின்றார்கள் என்பதற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன. இப்பிரதேசத்தில் வாழ்ந்த ஆதிக்குடிகளில் முஸ்லிம் மக்களும் உள்ளடங்குவர். இப்பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் பற்றியும் அவர்களின் எண்ணிக்கை, இன, சமய வேறுபாடுகள் பற்றிய விபரங்கள் காலனித்துவ ஆட்சியாளர்களின் ஆட்சிக் காலத்தில் இருந்தே கிடைக்கக் கூடியதாக இருக்கின்றன. அதிலும் குறிப்பாகப் பிரித்தானிய ஆட்சிக்கால குடிசன விபரங்கள் மிகத் தெளிவான தரவுகளைத் தருகின்றன. இந்த அடிப்படையில் பிரித்தானிய ஆட்சிக்கால நிர்வாக அறிக்கைகளும், குடிசனக் கணிப்பீடுகளும் முசலிப் பிரதேச குடிசன விபரம் பற்றி அறிவதற்கான முக்கிய வரலாற்றுத் தகவல்களாகக் காணப்படுகின்றன.

பிரித்தானிய ஆட்சியின் ஆரம்ப காலக்கட்ட குடிசன விபரங்களை அடிப்படையாகக் கொண்டு 1834ஆம் ஆண்டு சைமன் காசிச்செட்டி என்ற (Chitty, 1834) அறிஞர் முசலிப் பிரதேசத்தில் குடிசன, குடியிருப்பு விபரங்களைத் தெளிவாகத் தருகின்றார். இவரின் கருத்துப்படி 17ஆம் நூற்றாண்டு காலத்தில் முசலிப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்களில் முஸ்லிம்களே மிகப் பெரும்பான்மையினராக இருந்தனர் என்று அறியக் கூடியதாக இருக்கின்றது. பிரித்தானியக் காலனித்துவக் கால வரலாற்று நூலாசிரியர்களான Boake (1888), Denham (1902) போன்றவர்கள் முசலிப் பிரதேச முஸ்லிம் மக்களின் எண்ணிக்கை ரீதியானதும் அத்துடன் இம்மக்களின் பொருளாதார நடவடிக்கைகளின் சிறப்புத் தன்மை பற்றியும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கையில் முதன்முதலாக இன ரீதியான குடிசன விபரங்களைத் தரும் அடிப்படையில் 1921ஆம் ஆண்டு குடிசனக் கணிப்பீடு வெளியிடப்பட்டது. ஆதாரபூர்வமான இக்குடிசனக் கணிப்பீட்டில் இருந்து முசலியின் இன ரீதியான குடிசன விபரங்களைக் கிராம மட்டத்தில் அறியக் கூடியதாக இருக்கின்றது. இக்குடிசனக் கணிப்பீட்டில் முசலிப் பிரதேசத்தின் குடிசனம் பற்றிய விபரங்கள் அட்டவணை 1 இல் தரப்பட்டுள்ளன. இக்காலக் கட்டத்தில் முசலிப் பிரதேசம் இரண்டு உடையார் பிரிவுகளுக்கு உட்பட்டிருந்தது. இவ்விரண்டு உடையார் பிரிவுகளுள் 21 கிராமங்கள் காணப்பட்டன. அவ் 21 கிராமங்களிலும் முஸ்லிம்களே பெரும்பான்மையினராகக் காணப்பட்டனர். பல கிராமங்களில் முஸ்லிம் மக்களின் விகிதாசாரம் மொத்த சனத்தொகையில் 90 சதவீதத்திற்கும் அதிகமாகக் காணப்பட்டது. இத்தகைய குடிப்பரம்பல் அமைப்பு மிக நீண்ட காலமாக இப்பிரதேசத்தில் இருந்திருக்க வேண்டும் என்று கிடைக்கின்ற ஆதாரங்களைக் கொண்டு நம்பக் கூடியதாக இருக்கின்றது. அதுமட்டுமன்றி 1990ஆம் ஆண்டு வரை முசலி முஸ்லிம் பெரும்பான்மை பிரதேசமாக இருந்து வந்திருக்கின்றது என்பதைப் பிற்பட்ட கால குடிசனப் புள்ளிவபரங்கள் தெளிவாக எமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

## 2.2 குடியிருப்புக்கள்

முசலிப் பிரதேசத்தின் குடியிருப்புப் பரம்பல் இப்பிரதேசத்தின் வரலாற்று மாற்றங்களாலும் பொருளாதார வளப்பரம்பல் முறையாலும் உருவாகியவைகளாகும். இப்பிரதேசத்தில் மூவின மக்களும் தனித்துவமான குடியிருப்புக்களில் வாழ்ந்து வந்திருக்கின்றார்கள். மிகப் பெரும்பான்மையான குடியிருப்புக்கள் இப்பிரதேசத்தின் வட புறமாக அருவியாற்றுக்குத் தெற்கே ஒரு முக்கோண வடிவில் பரந்து காணப்படுகின்றன (மடம் 3). மற்றுமொரு குடியிருப்புச் செறிவு இப்பிரதேசத்தின் தென் எல்லயில் மோதரகம ஆற்றுக்கு வடக்காக அமைந்துள்ளது.

வடபுறக் குடியிருப்புக்களில் மிகப் பெரும்பான்யையானவை முஸ்லிம் மக்கள் வாழும் குடியிருப்புக்களாகும். அதே நேரத்தில் அரிப்பு, கொக்குப்படையான் போன்ற தமிழ் குடியிருப்புக்களும் இவ்வடபுறத்தில் காணப்படுகின்றன. இதை விட வடபுறக் குடியிருப்புச் செறிவின் தென்



## அட்டவணை - 1

### கிராம அடிப்படையில் முசலிப் பிரதேச முஸ்லிம் சனத்தொகை, 1921.

| முசலி | மொத்த சனத் தொகை | முஸ்லிம் சனத் தொகை | மொத்த சனத்தொகையில் முஸ்லிம்களின் விகிதாசாரம் |
|---|---|---|---|
| முசலி வடக்கு உடையார் பிரிவு | 1529 | 1013 | 66 |
| மேத்தன் வெளி | 59 | 58 | 98 |
| அளவக்கை சிறுக்குளம் | 36 | 36 | 100 |
| வாரிவெளி | 77 | 69 | 90 |
| பண்டாரவெளி | 104 | 96 | 92 |
| மணற்குளம் | 21 | 21 | 100 |
| இலந்தைக்குளம் | 48 | 46 | 96 |
| அகத்தி முறிப்பு | 148 | 146 | 99 |
| பெரிய புள்ளச்சி பொற்கேணி | 220 | 218 | 99 |
| இலந்தைக்குளம் | 42 | 42 | 100 |
| வேப்பங்குளம் | 107 | 105 | 98 |
| பிச்சை வாணிபன் குளம் | 105 | 100 | 92 |
| | 65 | 65 | 100 |

| முசலி | மொத்த சனத் தொகை | முஸ்லிம் சனத் தொகை | மொத்த சனத்தொகையில் முஸ்லிம்களின் விகிதாசாரம் |
|---|---|---|---|
| முசலி தெற்கு உடையார் பிரிவு | 1595 | 1076 | 68 |
| சிலாவத்துறை | 204 | 118 | 58 |
| முசலி | 88 | 75 | 85 |
| கொண்டச்சி | 124 | 117 | 94 |
| இலக்கரிக்குளம் | 42 | 35 | 83 |
| புதுவெளி | 192 | 180 | 94 |
| கூளாங்குளம் | 103 | 101 | 98 |
| தம்பட்டமுதலிகட்டு | 86 | 80 | 93 |
| கரடிக்குளி | 147 | 145 | 99 |
| மறிச்சுக்கட்டி | 136 | 115 | 85 |
| பாலைக்குழி | 118 | 110 | 93 |

*மூலம்:* குடிசனக் கணிப்பீடு, 1921.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அந்தத்தில் மிக அண்மைக்காலத்தில் அரசால் ஏற்படுத்தப்பட்ட மரமுந்திரிகைக் குடியேற்றத்தை அடிப்படையாகக் கொண்ட சிங்களக் குடியிருப்பொன்றும் இணைந்து இப்பிரதேசத்தின் மூவினக் கலப்பை எடுத்துக் காட்டுவனவாக அமைந்துள்ளன.

வடபுறக் குடியிருப்பில் இருந்து ஏறக்குறைய 20 மைல் காட்டுப் பிரதேசத்தால் துண்டிக்கப்பட்ட தென்புறக் குடியிருப்புச் செறிவிலும் முஸ்லிம் குடியிருப்புக்களே அதிகமாகும். அம்முஸ்லிம் குடியிருப்புக்களுக்கு தெற்காக முள்ளிக்குளம் என்ற தமிழ்க் குடியிருப்பு ஒன்றும் அமைவுற்றுக் காணப்பட்டது.

முசலிப் பிரதேசம் ஆறு கிராம சேவையாளர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டது. இதில் அரிப்பு கிராம சேவையாளர் பிரிவைத் தவிர்ந்த ஏனைய ஐந்து கிராம சேவையாளர் பிரிவுகளிலும் முஸ்லிம்களே பெரும்பான்மையினர் என்பதையும், அதே நேரத்தில் கணிசமான எண்ணிக்கை கொண்டவர்கள் என்பதையும் 1981ஆம் ஆண்டு குடிசனக் கணிப்பீட்டுப் புள்ளிவபரங்கள் குறித்துக் காட்டுகின்றன.

## 2.3 வரலாறும், கலாசாரமும்

முசலியின் வரலாறும், முசலி முஸ்லிம்களின் வரலாறும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவைகளாகும். முசலியின் வரலாறு மிகப் பழைமையானது. வரலாற்று அறிஞர்களின்படி இலங்கையின் மிக ஆதி நாகரீகம் முசலி–மாந்தை–அனுராதபுரம் ஆகிய மூன்று பிரதேசங்களை இணைக்கும் முக்கோணப் பிரதேசத்தில் காணப்பட்டது என்று விளக்கப்படுகின்றது (Hocart, 1924). இலங்கையின் பழைய நாகரீக மையமான அனுராதபுரத்தை வெளி ஊலகத்தோடு இணைக்கும் துறைமுக வசதிகளைக் கொண்ட மன்னார் கடல்வலயம் காணப்பட்டது. மிக ஆதிகாலத்தில் இருந்தே இலங்கையுடனான தொடர்புகள் எல்லாம் மன்னார்ப் பிரதேசத்தின் ஊடாகவே செய்யப்பட்டு வந்தன (De Silva, 1981). விஜயனின் இலங்கை வருகையும், மன்னாரோடு அதிலும் குறிப்பாகச் சில ஆய்வுகளின் படி முசலிப் பிரதேசத்தோடும் சேர்த்துப் பார்க்கப்படுகின்றன (Seneviratne, 1979). அந்த அளவுக்கு வரலாற்றுக் காலத்தில் சிறப்பு மிக்க கரையோரத்தைக் கொண்ட பிரதேசங்களில் ஒன்றாக முசலிப் பிரதேசம் காணப்பட்டிருக்கின்றது.






படம் 3 : முசலிப்பிரதேச முஸ்லிம், தமிழ், சிங்கள குடியிருப்புக்களின் பரம்பல், 1990

*Brohier, 1937ம் இலங்கை ஒரங்குலப்படம், 1992*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முசலியின் உள்நாட்டுப் பிரதேசம் சிங்கள, தமிழ் மன்னர்களால் தொடர்ச்சியாக அபிவிருத்தி செய்யப்பட்டு வந்துள்ளமை இப்பிரதேசத்தின் வரலாற்றுச் சிறப்புக்களின் மற்றுமொரு அம்சமாகும். இப்பிரதேச விவசாயப் பொருளாதாரத்தின் இதயநாடியான அகத்திமுறிப்பு நீர்ப்பாசனத் திட்டமும் வியாயடித் திட்டமும் காணப்படுகின்றன என்பதை வரலாற்று நூல்கள் எடுத்து இயம்புகின்றன.

முசலி இலங்கையின் நுழைவாயிலாக மட்டுமல்லாமல் பழைய உலக நாகரீகங்களைத் தன்பால் ஈர்த்தெடுக்கக் கூடிய வளங்கள் பலவற்றைக் கொண்ட பிரதேசமாகவும் வரவாற்றுக் காலத்தில் மிளிர்ந்திருக்கின்றது. முசலியின் வரலாற்றுச் சிறப்புக்களில் முதன்மையானது இப்பிரதேச முத்துக் குளிப்பாகும். முசலிப் பிரதேச முத்துக் குளிப்பு ஏறக்குறைய 2000 தொடக்கம் 3000 ஆண்டுகள் பழைமையானதொன்று என்றும் இது உலகிலேயே மிகப் பழைமையான கைத்தொழில் நடவடிக்கையாகக் காணப்பட்டது என்றும் பழைய வரலாற்றறிஞரான Van (1888) எனபவர் கூறுகின்றார்.

முசலியோடு ஒன்றில் முஸ்லிம்கள் அல்லது அவர்களின் மூதாதையர்களான அராபியர்கள் இப்பிரதேச முத்துக் குளிப்பு நடவடிக்கையோடு மிக ஆரம்ப காலத்திலிருந்து தொடர்புற்றிருந்தார்கள் என்பதற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன (Brohier, 1929). மிக ஆரம்ப கால அராபிய அத்துடன் இந்திய முஸ்லிம் முத்துக் குளிப்பாளர்களின் வரலாற்றுத் தொடர்ச்சி பற்றிய விபரங்கள் இப்போது கிடைக்கக் கூடியதாக இல்லை. ஆனால் முசலிப் பிரதேசத்தின் கரையோரமாக வாழுகின்ற முஸ்லிம்களின் மூதாதையர்கள் முத்துக் குளிப்புடனும், முத்துடன் தொடர்புடைய ஏனைய நடவடிக்கைகளுடனும் தொடர்புற்ற முறையிலேயே தமது வரலாற்றை இப்பிரதேசத்தில் ஆரம்பித்திருக்க வேண்டும் என்று உறுதிப்படுத்தக் கூடிய ஆதாரங்கள் உண்டு.

முசலிப் பிரதேசத்தின் முத்துக் குளிப்பு 19ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் இருந்து குறைவடையத் தொடங்கியது. (பின்னிணைப்பு 3) தொழில் ரீதியாக முத்தின் பொருளாதார முக்கியத்துவத்தை சங்கும், அம்பரும் பிற்காலத்தில் ஈடுசெய்ததை இப்பிரதேசத்தின் பிற்கால வரலாற்றில் இருந்து நாம் அறியக் கூடியதாக இருக்கின்றது (Twynam, 1902). முத்துக்குளிப்புடன் தொடர்புடைய தொழில்களில் ஈடுபட்டு வந்த இப்பிரதேச மக்கள் பிற்காலத்தில் சங்கு குளித்தல், கடல் திரவியம் தேடுதல் ஆகிய பொருளாதார நடவடிக்கைகளுக்கு தம்மை மாற்றிக் கொண்டார்கள். இன்று முசலிப் பிரதேச முஸ்லிம் குடியிருப்பாளர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் சங்கு குளித்தல், ஏனைய கடல் திரவியம் தேடுதல் போன்ற தொழில்களில் ஈடுபட்டு வருகின்றார்கள். இவை இம்மக்களின் வரலாற்றுத் தொடர்ச்சியை எடுத்துக் காட்டும் சான்றுகளாகும்.



கடல்வளப் பொருளாதார நடவடிக்கைகள் பருவகாலப் பண்புகளைக் கொண்டதாகும். வருடத்தின் சில மாதங்களிலேயே முத்துக் குளித்தலிலும், சங்குளித்தலிலும் ஈடுபடலாம். ஏனைய காலங்களில் கடல் கொந்தளிப்பும், தெளிவற்ற தன்மையும், முத்துச் சிப்பிகள், சங்குகளினது இடப் பெயர்ச்சியும் மேற்குறித் தொழில்களைச் செய்ய முடியாததாக்குகின்றன. அதனால் வருடத்தின் மிக நீண்ட காலம் இப்பிரதேச மக்கள் தொழிலற்ற நிலையில் வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது. இப்பிரதேச மக்களில் பெரும்பான்மையினர் மாற்றுத் தொழில்களை இக்காலத்தில் மேற்கொள்வது வழமையாகக் காணப்பட்டது.

முசலியில் கடல் நடவடிக்கைளில் ஈடுபட முடியாத காலம் விவசாயத்திற்குப் பொருத்தமானதாகக் காணப்பட்டது. முசலி மக்கள் மிக ஆரம்ப காலத்தில் இருந்தே விவசாயத்தைப் பருவகாலத் தொழிலாகச் செய்து வந்திருக்கின்றார்கள். இப்பிரதேசத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க நீர்ப்பாசனக் குளங்களும், கால்வாய்களும் முசலிப் பிரதேச முஸ்லிம்களின் விவசாயப் பொருளாதாரத்தின் அடிப்படைகளாகக் காணப்பட்டன. ஏற்கனவே இப்பிரதேசத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க அகத்திமுறிப்பு நீர்ப்பாசனத்திட்டம், வியாயடி நீர்ப்பாசனத் திட்டம் பற்றியும் எடுத்துக் கூறினோம்.

மேற்குறித்த நீர்ப்பாசனத் திட்டங்கள் உருவாக்கப்பட்ட காலத்தில் இப்பிரதேசத்தில் வாழ்ந்த சமூக அமைப்புக்கள் பற்றிய தெளிவான விபரங்கள் எமக்குக் கிடைக்கக் கூடியதாக இல்லை. ஆனாலும் அறியப்பட்ட காலத்தில் இருந்து முசலிப் பிரதேச நீர்ப்பாசனத் திட்டங்களின் பாதுகாவலர்களாக முஸ்லிம்கள் இருந்து வந்திருக்கின்றார்கள் என்பது வரலாற்று உண்மையாகும்.

வரலாற்று ரீதியாக முசலியின் கடல்வளத்துடனும், விவசாய நடவடிக்கைகளுடனும் பின்னிப் பிணைந்தவர்களாக முஸ்லிம்கள் வாழ்ந்து வந்திருக்கின்றார்கள் என்பதை முன்பகுதியில் நோக்கினோம். முசலிப் பிரதேசம் வேறு வகைகளிலும் உலகப் புகழ் பெற்றதொன்றாக வரலாற்றுக் காலத்தில் இருந்து வந்திருக்கின்றது. அங்கும் முசலி முஸ்லிம்களின் வரலாற்றுத் தொன்மையைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

முசலியின் யானைகள் பல சிறப்புத் தன்மைகளைக் கொண்டவைகளாக இருந்ததனால் அதிகமான கேள்விகள் இருந்தன (Cannon and Davis, 1995). தென்னாசியாவில் யானைகளுக்குப் பிரபல்யமான இடங்களில் ஒன்றாக முசலி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காணப்பட்டது (Jeyewardena, 1994). யானை ஏற்றுமதியின் மூலமாக முசலி அதிக வருமானத்தைப் பெற்றதோடு சர்வதேசப் புகழையும் பெற்றுக் கொண்டது (Boake, 1888).

காட்டு யானைகளை சாதுரியமாகப் பிடிக்கும் ஆற்றலைக் கொண்டவர்கள் முஸ்லிம்களாவர். அதிலும் குறிப்பாக முசலி முஸ்லிம்கள் இத்தொழிலில் மிகவும் தேர்ச்சி பெற்றவர்கள் என்று யானை பிடித்தலுடன் தொடர்புடைய ஆய்வு நூல்கள் எடுத்துக் காட்டுகின்றன (Jeyewardena, 1994).

யானை பிடித்தலில் தேர்ச்சி பெற்ற முஸ்லிம்கள் "பணிக்கர்கள்" என்று அழைக்கப்பட்டார்கள். இலங்கையின் வரலாற்றில் பணிக்கர் முஸ்லிம்களுக்கு ஒரு தனியான இடம் காணப்படுகின்றது. (பின்னிணைப்பு 2) முசலிப் பணிக்கர்கள் வீரமும், தேர்ச்சியும், சாதுரியமும் மிக்கவர்கள் என்று நூல்களில் குறிப்பிடப்படுகின்றன (Jeyewardena, 1994). முசலியில் யானை பிடித்தல் இன்று நேற்றல்ல மிக நீண்ட காலமாக நடைமுறையில் இருந்து வந்திருக்கின்றது. வரலாற்று நூல்களின் படி 16ஆம் நூற்றாண்டுகளுக்கு முன்னரிலிருந்தே பணிக்கர் முஸ்லிம்கள் முசலியில் யானை பிடித்தல் தொழிலில் ஈடுபட்டு வந்திருக்கின்றார்கள் (Deraniyagala, 1955).

இத்தகைய வரலாற்றுச் சிறப்பு மிக்க முசலி முஸ்லிம்கள் தனித்துவமான கலாசாரத்தைக் கொண்ட மக்களாக வாழ்ந்து வந்திருக்கின்றார்கள். (பின்னிணைப்பு -4) முசலி முஸ்லிம்களின் கலாசாரச் சிறப்புக்களில் இம்மக்களின் கட்டுக் கோப்பான சமூக அமைப்பும், இன ஐக்கியமும் பரந்த கண்ணோட்டமும், பரோபகாரமும் கொண்ட மனோபாவமும் குறிப்பிடத்தக்க சிறப்புப் பண்புகளாக இருந்தன.

கிராமிய விவசாயப் பொருளாதாரத்தையும், கடல் வளப் பொருளாதார நடவடிக்கைகளையும் ஒன்றிணைத்த புவியியல் சூழலில் எல்லா வளங்களோடும் வாழ்ந்த இம்மக்கள் ஒரு நிறைவான வாழ்க்கை அமைப்பைக் கொண்டிருந்தார்கள். நிறைவான வாழ்க்கையைக் கொண்ட இம்மக்களின் சமூகப் பொருளாதார அபிவிருத்திகள் தங்கு தடையற்று தொடர்ச்சியாகக் காணப்பட்டன.



# 3. முசலியின் பொருளாதாரம்

ஏறக்குறைய 500 சதுர கிலோ மீற்றர் பரப்பைக் கொண்டது முசலிப்பிரதேசம். முசலி எல்லா வகையான வளங்களையும் தாராளமாகக் கொண்ட பிரதேசமாகும் (படம் 4). இவ்வாறிருந்தும், ஒப்பீட்டு ரீதியாக இப்பிரதேசம் இலங்கையின் மிகப்பின்தங்கிய பிரதேசங்களில் ஒன்றாக அடையாளம் காணப்பட்டுள்ளது. குடிசன-வள முரண்பாடும் சமூக-பொருளாதார அபிவிருத்தியின்மையும் இப்பிரதேசத்தில் காணப்படக் காரணமென்ன? இது ஆராயப்படவேண்டியதொன்றாகும். இப்பிரதேசத்தின் தரை அமைப்பும், மண்வளமும், நீர்ப்பாசன வசதிகளும் விவசாய நடவடிக்கைகளுக்கு சாதகமாக இருக்கின்றது. அதே நேரத்தில் காட்டு-கடல் வளங்களைப் பயன்படுத்தும் வாய்ப்புகளும் நிறையக் காணப்படுகின்றன. பின்வரும் பகுதிகளில் இப்பிரதேசத்தின் பொருளாதார அடிப்படைகளும், பிரச்சினைகளும் விபரமாக நோக்கப்படுகின்றன.

## 3.1. விவசாயம்

முசலியின் மொத்த நிலப்பரப்பில் ஏறக்குறைய 16% மான பிரதேசம் பல்வேறு விவசாய நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. இப்பிரதேசத்தின் மொத்தத் தொழிலாளர்களில் 75% த்திற்கும் அதிகமானவர்கள் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தார்கள். (படம் 5) அதுமட்டுமன்றி இப்பிரதேசத்தின் மொத்த உற்பத்தி, மொத்த வருமான அடிப்படையிலும் விவசாயம் மிக முக்கிய பங்கினைக் கொண்டிருந்தது.

நெற்செய்கை, சேனைப் பயிர்ச்செய்கை, மேட்டுநிலப் பயிர்ச் செய்கை, மந்தை மேய்த்தல் ஆகியவை முசலிப் பிரதேசத்தில் அடையாளம் காணக்கூடிய பிரதான விவசாய நடவடிக்கைகளாகும். இவ்விவசாய நடவடிக்கைளுக்குட்பட்ட நிலப்பரப்பு, நிலப்பயன்பாட்டு முறை, தொழிலாளர், உற்பத்தி, வருமானம் போன்றவற்றை பின்வரும் பகுதிகளில் விபரமாக நோக்குவோம்.

### நெற்செய்கை

இப்பிரதேசம் நெற்செய்கைக்கு மிகப் பொருத்தமானதாகக் காணப்படுகின்றது. நீரைத்தேக்கக் கூடிய களித்தன்மை மிக்க வண்டல் மண்ணும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படம் 4 : முசலிப் பிரதேசத்தின் நிலப் பயன்பாடு




மூலம்: [illegible] 1972.



கால்வாய்கள், வரம்புகள் அமைக்கக் கூடியதான தாழ்நில சமதரைத் தன்மையும் இப்பிரதேசத்தின் நெற்பயிர்ச் செய்கைக்கு வாய்ப்பாக உள்ளன. அத்துடன் இப்பிரதேசத்தின் பெரிய, சிறிய, நீர்ப்பாசனத் திட்டங்களும், அவற்றின் நீர்ப்பாசனக் கால்வாய் அமைப்புகளும், சிறிய நீர்ப்பாசனக் குளங்களும், அதற்கேற்ப நெல் நிலங்களின் பரம்பலும் இவ்விவசாய நடவடிக்கைகளுக்கு பொருத்தமான முறையில் அமைந்துள்ளன.

இவ்வாய்வில் முசலியின் மொத்த நெல் நிலப்பரப்பு 6162 ஏக்கர் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது முசலியின் மொத்த நிலப்பரப்பின் 16 சதவீதமாகும். நெற்செய்கைப் பிரதேசம் முசலி எங்கிலும் பரந்து காணப்படவில்லை. இரண்டு பிரதான பிரதேசச் செறிவுகளை நெற்செய்கையில் அடையாளம் காணலாம். அதில் ஒன்று முசலியின் மேற்கேயுள்ள அகத்திமுறிப்பு நீர்ப்பாசன தொகுதிக்குட்பட்ட நெற்செய்கைப் பிரதேசம். இது மொத்த நெல் நிலப்பரப்பில் 73 சதவீதமாகக் காணப்படுகின்றது. இரண்டாவது, முசலியின் தென் எல்லையில் மோதரகம ஆற்றுக்கு வடக்காக வியாயடி நீர்ப்பாசனத் தொகுதிக்குட்பட்ட நிலமாகும். (படம் 4)

## நெற்செய்கையும் நீர்ப்பாசனமும்

நெற்செய்கை நீர் கிடைப்புத்தன்மையில் தங்கியுள்ளது. முசலிப் பிரதேசம் ஒக்டோபர்-ஜனவரி காலப்பகுதியில் வட-கீழ் பருவகால மழை வீழ்ச்சியைப் பெறுகின்றது. வரண்ட வலயத்தில் அமைந்துள்ள முசலிப்பிரதேச நெற்செய்கைக்கான மழைவீழ்ச்சி நெற்செய்கைக்குப் போதாது. அதனால் இப்பிரதேசத்தில் வானம்பார்த்த பயிர்ச்செய்கையே சாத்தியமானது. இதன் உண்மையை உணர்ந்த இப்பிரதேச மூதாதையர்கள், நில வளத்தின் உச்சப் பயன்பாட்டினைப் பெறும் நோக்கில் மாற்று நீர்ப்பாசன ஒழுங்குகளைச் செய்து வைத்திருந்தனர். அவற்றுள் விவசாயத்திற்கான கால்வாய், குள, கிணற்று நீர்ப்பாசன முறைகள் குறிப்பிடத்தக்கவையாகும். மேற்குறித்த நீர்ப்பாசன முறைகளின் நெல் விவசாயத்திற்கான பங்களிப்புக்களை தனித்தனியாக நோக்குவோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




## கால்வாய் நீர்ப்பாசனம்

முசலியின் நெல் நிலங்கள் நீர்ப்பாசனக் குளங்களாலும், நீர்ப்பாசனக் கால்வாய்களாலும் திட்டமிட்ட அடிப்படையில் இணைக்கப் பட்டுள்ளன. முசலியின் நீர்ப்பாசன வலைப்பின்னல் அமைப்பை முறைப்படி அறிந்து கொள்ள மேற்குறித்த நீர்ப்பாசன அமைப்பின் அடிப்படைகளை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். இதில் கால்வாய் நீர்ப்பாசனம் என்பது, பிரதான நதியிலிருந்து விவசாயத்திற்கான நீரைப்பெற்று, விவசாயம் செய்யாத காலங்களில் தேக்கி வைத்து, அதை விவசாயக் காலங்களில் கால்வாய்கள் மூலம் நெல்நிலங்களுக்கு வழங்குவதைக் குறிக்கின்றது.

முசலிப் பிரதேசத்தில் இரு பெரும் கால்வாய் நீர்ப்பாசனத் திட்டங்கள் காணப்படுகின்றன. அதில் ஒன்று அகத்திமுறிப்புத் திட்டம். மற்றையது வியாயடி நீர்ப்பாசனத் திட்டமாகும். இதில் அகத்திமுறிப்பு நீர்ப்பாசனத் திட்டம், அருவி ஆற்றிலிருந்தும், வியாயடி நீர்ப்பாசனத்திட்டம் மோதரகம ஆற்றிலிருந்தும் நீரினைப் பெற்றன.

அடுத்து குள நீர்ப்பாசனம் என்னும்போது கால்வாய் நீர்ப்பாசனத்திலிருந்தும், பருவகால மழைவீழ்ச்சியிலிருந்தும் நீரைப் பெற்று அதனைத் தேக்கி வைத்து விவசாய காலத்தில் நெல்லுக்கு வழங்கும் முறையினைக் குறிக்கின்றது. இக்குள நீர்ப்பாசனம் நெல்விவசாய நடவடிக்கைளுக்கு பெருமளவில் கால்வாய் நீரிலேயே தங்கியிருக்கின்றமையால் முதலில் கால்வாய் நீர்ப்பாசன முறைகளின் அடிப்படைகளை அறிவது பொருத்தமானதாகும்.

இவ்விரு ஆற்று நீரும் கால்வாய்கள் மூலம் மேற்குறித்த இரண்டு நீர்ப்பாசனத் தொகுதியுடனும் இணைக்கப்பட்டுள்ளன. அங்கிருந்து நீர்ப்பாசனத் தொகுதிகளுக்குள் திருப்தியாகப் பெறக் கூடிய முறையில் இப்பிரதேசக் கால்வாய்கள் கட்டியெழுப்பப் பட்டிருக்கின்றன. நெற்பிரதேசத் தரைத்தோற்றம், மண் வளம் ஆகியன கால்வாய் நீர்ப்பாசனத்திற்கு பொருத்தமானவையாகக் காணப்பட்டன.

## அகத்திமுறிப்புத் திட்டம்:

அகத்திமுறிப்பு மிகவும் பழைமையான நீர்ப்பாசனத் திட்டமாகும். இந்நீர்ப்பாசனத் திட்டம் விஜயனின் இலங்கை வருகைக்கு முன்னரே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



படம் 6 : அகத்திமுறிப்பு நீர்ப்பாசனத் தொகுதி

உருவாக்கப் பட்டிருக்கலாம் என்று Brohier (1937) கருதுகின்றார். இப்பிரதேசத்தின் நெல் விவசாய அபிவிருத்தி நோக்கில் உருவாக்கப்பட்ட இந் நீர்ப்பாசனத் திட்டம் பிற்காலத்தில் பல்வேறு அரசியல், குடிப்புள்ளியியல், சமூகக் காரணங்களால் படிப்படியான புறக்கணிப்புக்கு உள்ளாகி தனது இயல்பான செயற் திறனை இழந்தது. பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நெல் நிலங்கள் இந் நீர்ப்பாசன நீரை நம்பியிருக்கின்றன.

அகத்தி முறிப்புக் கால்வாய் நீர்ப்பாசனத்திட்டம் அருவி ஆற்றிலிருந்து நீரைப் பெறுகின்றது. இவ்வாற்றிலிருந்து நீரைப் பெறுவது முதல் இந்நீரைத் தேக்கி வைத்து பருவ காலத்தில் நீர்ப்பாசன நீரை வழங்கும் வரை மூன்று கட்டங்களாக இந் நீர்ப்பாசனத் திட்டம் கட்டமைக்கப்பட்டுள்ளது. அம்மூன்று கட்டங்களாவன

1. அருவி ஆற்றில் இருந்து நீர்ப்பாசன நீரை அகத்திமுறிப்பு நீர்த் தேக்கத்திற்குக் கொண்டு செல்லும் கால்வாய்.
2. நீரைத்தேக்கி வைக்கும் அகத்திமுறிப்புக்குளம்.
3. அகத்திமுறிப்புக் குளத்திலிருந்து கிராமக் குளங்களுக்கு நீரைக் கொண்டு செல்லும் நீர்ப்பாசனக் கால்வாய்கள்.

மேற்குறித்த இம்மூன்று கட்டங்களையும் படம் 6 காட்டுகின்றது.

## முதலாம் கட்டம்:

அருவியாற்று நீர் மன்னார் மாவட்டத்தில் காணப்படும் இரு பெரும் நீர்ப்பாசனத் திட்டங்களான கட்டுக்கரைக்குளம், அகத்திமுறிப்புக்குளம் என்பவற்றுக்கிடையில் பங்கிடப்படுகின்றது. இப்பங்கீடு அருவியாற்றின் தேக்கம் என்று அழைக்கப்படும் செயற்கையான அணைக்கட்டில் செய்யப்படுகின்றது. அருவியாற்று நீர் இவ்வாற்றின் இடது கரையோரமாக ஒரு கால்வாய் மூலம் அகத்திமுறிப்பு நீர்ப்பாசனத் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்நீர்ப்பங்கீடு டிசெம்பர் தொடக்கம் பெப்ரவரி மாதத்துக்கிடையில் செய்யப்படும். பங்கீட்டடிப்படையில் அகத்திமுறிப்பிற்கான நீரினளவு கட்டுக்கரையோடு ஒப்பிடும்போது குறைவானதாகும்.

அருவி ஆற்றில் இருந்து அகத்திமுறிப்புக் குளத்திற்கு நீரைக்கொண்டு வரும் கால்வாய் அகத்தி முறிப்புக் கால்வாய் என்று அழைக்கப்படுகின்றது





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(உள்ளூரில் இது அணைக்கட்டு என்று அழைக்கப்பட்டது). இக்கால்வாய் அருவி ஆற்றின் கழிமுகத்தில் இருந்து உள் நாடு நோக்கி 24 மைல் தூரத்தில் ஆரம்பிக்கின்றது. இது ஏறக்குறைய 14 மைல்கள் மேற்காக ஓடி அகத்திமுறிப்புக் குளத்தை அடைகின்றது. இக் கால்வாயின் ஆழம் 4.5 அடியாகவும் அகலம் 7 அடி யாகவும் காணப்பட்டது. இக்கால்வாய் 1928 ஆம் ஆண்டிலும், 1972 ஆம் ஆண்டிலும் புனரமைக்கப்பட்டது (Arumugam, 1969 and IRDP, 1980).

## இரண்டாம் கட்டம்

அகத்தி முறிப்புக் கால்வாய் மூலம் கொண்டுவரப்பட்ட நீர் அகத்தி முறிப்புக் குளத்தில் தேக்கிவைக்கப்பட்டிருக்கும். அகத்திமுறிப்புக் குளத்தின் இன்றைய நீர்தாங்கு பரப்பு 820 ஏக்கராகும். ஆனால், முன்னைய காலத்தில் இக்குளத்தின் நீர் தாங்கு பரப்பும், ஆழமும் தற்போதையதைவிடப் பெரிதாகக் காணப்பட்டன என்பதற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன.

இக்குளம் அகத்திமுறிப்பு நீர்ப்பாசனத்திட்டக் குளங்களுக்குள் அளவில் மிகப்பெரியதாவும் ஏனைய நீர்ப்பாசனக் குளங்களுக்கு நீர்ப்பாய்ச்சக்கூடிய முன்னிலத்திலும் அமைவுற்றுக் காணப்படுகின்றது. இதனைப் படம் 6 தெளிவாகக் காட்டுகின்றது.

## மூன்றாம் கட்டம்

அகத்தி முறிப்புக் குளத்தில் தேக்கி வைக்கப்பட்டிருக்கின்ற நீரை நீர்ப்பாசனக் கால்வாய்கள் மூலமாக கிராமக் குளங்களுக்கு வழங்கும் முறை இங்கு நடைமுறையிலிருந்து வந்தது. படம் 6இல் அகத்திமுறிப்புக் குளத்திலிருந்து கிராமக் குளங்களுக்கு நீரைக் கொண்டு செல்லும் உப நீர்ப்பாசனக் கால்வாய்கள் காட்டப்பட்டுள்ளன. அவை கொண்டச்சிக் கால்வாய், பெருங்காட்டுச் சிறுக்குளக் கால்வாய், இத்திக்குளக் கால்வாய், கூளாங்குளக் கால்வாய் என அழைக்கப்பட்டன. இக்கால்வாய்கள் எவ்வாறு கிராமியக் குளங்களோடும், நெல்நிலங்களோடும் இணைக்கப்பட்டிருந்தன என்பது அடுத்த அத்தியாயத்தில் விளக்கப்படுகிறது.



முன்னொரு காலத்தில் மிகவும் சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வந்த இந்த நீர்ப்பாசனமுறை பிற்காலத்தில் பல்வேறு பொருளாதார, சமூகக் காரணங்களால் புறக்கணிப்பிற்குட்படலாயிற்று. இதன் விளைவு நீர்ப்பாசனக் குளங்களின் நீர்தாங்கு தன்மை குறைக்கப்பட்டதோடு நீர்ப்பாசனக் கால்வாய்களின் மூலம் நீர் வரும் அளவும் குறைந்தது. இதன் பிரதிபலிப்புகள் நெல் செய்யக்கூடிய நிலத்தின் பரப்பைக் குறைத்தன. நெல்விவசாயம் இதனால் வீழ்ச்சியுற்றது. இறுதியில் இப்பிரதேச நெல் விவசாயம் அகத்தி முறிப்பு நீர்ப்பாசனத்தை முழுமையாக நம்பியிராத நிலைக்கு இது இட்டுச்சென்றது.

## வியாயடித்திட்டம்

இந்நீர்ப்பாசனத் திட்டமும் மிகவும் பழைமையான தொன்றாகும். 2ஆம் அக்கரபோதி மன்னர் காலத்திற்கு முன்னர் அமைக்கப்பட்ட நீர்ப்பாசனத் திட்டம் இதுவாகும் (Brohier, 1937). இப்பிரதேச நெல் விவசாயத்திற்கு மோதரகம ஆற்று நீரைப் பயன்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டு இத்திட்டம் உருவாக்கப்பட்டது. படம் 13 இந்நீர்ப்பாசனத் திட்டத்தையும் இந்நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் நீர் பெறும் விவசாய நிலங்களையும், விவசாயக் குடியிருப்புக்களையும் காட்டுகின்றது.

மோதரகம ஆறு அநுராதபுர பிரதேசத்தில் இருந்து உருவாகி மேற்காக ஓடி கடலை அடைகின்றது. இவ்வாற்று நீரேந்து பிரதேசம் 364 சதுர மைல்களாகும். வருடாந்த சராசரி நீரோட்டம் 252000 ஏக்கர் அடியாகும். இவ் ஆறு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பில்மடு தேக்கம் என்ற இடத்தில் மறிக்கப்பட்டு வியாயடி என்ற குளத்திற்கு சுமார் 7 மைல் நீளமான நீர்ப்பாசனக் கால்வாய் மூலமாக நீர்ப்பாசன நீரை எடுத்துச் செல்கிறது. பிரதான ஆற்றிலிருந்து நீர்த்தேக்கத்திற்கு நீரை எடுத்துச் செல்லும் இக்கால்வாய் 5 முதல் 8 அடி ஆழமும், 6 முதல் 10 அடி அகலமும் கொண்டது. வியாயடிக்குளம் 300 ஏக்கர் பரப்பையும் முக்கால் மைல் நீளமான குளக்கட்டையும் கொண்டிருந்தது (Arumugam, 1969).

அகத்தி முறிப்பு நீர்ப்பாசனத் திட்டத்தைப் போலவே வியாயடி நீர்ப்பாசனத் திட்டமும் அரசியல், சமூக புறக்கணிப்பிற்கு உட்பட்டிருந்தது. இதன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விளைவாக இந்நீர்ப்பாசனத் திட்டத்தின் முழுப்பயனையும் பெற முடியாத நிலை ஏற்பட்டது. உதாரணமாக, நவம்பர்–பெப்ரவரி மாத மழைவீழ்ச்சியைத் தேக்கி நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுத்த முடியாத நிலையில் இப்பிரதேச பிரதான நீர்ப்பாசனக் குளம் காணப்படுகின்றது. அந்த அளவு நீர்ப்பாசனத் திட்டம் சீரழிந்த நிலையில் இப்பிரதேசத்தில் காணப்படுகின்றது. இதே நிலைமை இப்பிரதேச நீர்ப்பாசனத் திட்டத்திற்குட்பட்ட ஏனைய குளங்களிலும் கால்வாய்களிலும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இறுதியாக 1962 ஆம் ஆண்டு பிரதான குளம் திருத்தப்பட்டது (Rajaratnam, 1971). இந்நீர்ப்பாசன நீர் வியாயடிக் குளத்திலிருந்து ஏறக்குறைய 5 மைல் நீளமான கால்வாய் மூலம் இலந்தைக் குளம், ஆத்திக்குளி குளம், பாலைக்குளி குளம், மறிச்சுக்கட்டிக் குளம் மற்றும் ஏனைய இப்பிரதேசத்தில் உள்ள நீர்ப்பாசனக் குளங்களுக்கும் நீரைப்பாய்ச்சுகின்றது.

## குளத்து நீர்ப்பாசனம்

குள நீர்ப்பாசனம் நெற்செய்கையோடு மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளது. குளத்து நீர்ப்பாசனம் என்பது மழை பெய்யும் காலங்களிலும் கால்வாய்களில் நீர்வரும் காலங்களிலும் நீரை கிராமக் குளங்களில் சேமித்து தேவையான போது பயிர் நிலங்களுக்கு சிறிய கால்வாய்கள் மூலமாக வழங்கும் முறையைக் குறிக்கும். முசலிப்பகுதியில் மழை நீர், கிணற்று நீர் என்பவற்றின் பயன்பாட்டை விட குளத்து நீரின் பயன்பாடே நெற்செய்கையில் முக்கியமானதாகும். வழமையில் விவசாயக்காணிகள் குளங்களுக்கு மேற்காக குளக்கட்டின் அண்மையில் அமைந்துள்ளன.

நெல்நிலங்கள் நேரடியாக கிராமக் குளங்களில் இருந்து நீர்ப்பாசனத்தைப் பெறுகின்றன. ஆரம்பகாலத்தில் இக்கிராமக் குளங்கள் நீர்ப்பாசனக் கால்வாய்கள் மூலம் மேலதிக நீரைப் பெறும் முறையில் திட்டமிடப் பட்டிருந்தன. நீர்ப்பாசனக் கால்வாய்கள் பிற்காலத்தில் புனரமைக்கப்படாமையால் மழை வீழ்ச்சியை அடிப்படையாகக் கொண்ட குள நீர்ப்பாசனமே முசலிப் பிரதேசத்திற்கான முக்கிய நீர்ப்பாசன முறையாக மாறியது.



மழை வீழ்ச்சியினளவு உயர்வாகவும் கட்டம் கட்டமாகவும் கிடைக்கின்ற காலங்களில் குளத்து நீர்ப்பாசனமானது வெற்றியளிக்கும். குறுகிய காலத்தில் உயர்வாக அல்லது மிகக்குறைவாக மழைகிடைக்கின்ற காலங்களில் குளத்து நீர்ப்பாசனம் தோல்வியடையும். எனினும் குளத்து நீர்ப்பாசனத்தின் வெற்றி மழைவீழ்ச்சி அளவிலேயே தங்கியுள்ளது.

முசலிப்பிரதேசத்தில் சிறியதும் பெரியதுமாக 83 குளங்கள் அடையாளப்படுத்தக் கூடியவையாக இருக்கின்றன. இவற்றில் 800 ஏக்கருக்குக் கூடிய நீர் தாங்கு பரப்பைக் கொண்ட அகத்திமுறிப்பு குளமும், 10 ஏக்கருக்கும் குறைந்த பரப்பைக்கொண்ட கிட்டையான் குளம், கள்ளிக்குளம் போன்ற குளங்களும் உள்ளடங்குகின்றன. அட்டவணை–2 முசலிப் பிரதேசக் குளங்களின் நீர் கொள் பரப்பளவு வேறுபாட்டு அடிப்படையில் அதன் நெல் விவசாய பங்களிப்புக்களை காட்டுகின்றன.

இப்பிரதேசத்தில் கிராம நீர்ப்பாசனக் குளங்களின் பரம்பலிலும் பல தனித்துவ அம்சங்களை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. கிராமியக் குளங்களில் மிக அதிகமானவை இப்பிரதேசத்தின் இரு பெரும் நீர்ப்பாசனத் திட்டங்களான அகத்திமுறிப்பு நீர்ப்பாசனத் திட்டத்திற்குள்ளும், வியாயடி நீர்ப்பாசனத் திட்டத்திற்குள்ளும் பரந்து காணப்படுகின்றன. அகத்திமுறிப்புத் திட்டத்தின்கீழ் ஏறக்குறைய 65 கிராமக் குளங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. படம் 6 இந்நீர்ப்பாசனத் திட்டத்திற்கு கீழ் உள்ள கிராமக் குளங்களின் பரம்பலைக் காட்டுகின்றது. இப்படத்திலிருந்து நீர்ப்பாசனக் கால்வாய்களும், கிராமக் குளங்களும் மிகவும் நேர்த்தியாக இணைக்கப்பட்டுள்ள தன்மையை மிகத் தெளிவாக அவதானிகக் கூடியதாக உள்ளது. இது போலவே வியாயடி நீர்ப்பாசனத் திட்டத்திலும் ஏறக்குறைய 18 கிராமக் குளங்கள் காணப்படுகின்றன. இதைவிட மேற்குறித்த இரு நீர்ப்பாசனத் திட்டத்துடனும் நேரடியாக இணைக்கப்படாத வேறுபல கிராமக் குளங்களும் இப்பிரதேசத்தில் காணப்படுகின்றன. (அட்டவணை 3)

அகத்திமுறிப்பு நீர்ப்பாசனத் தொகுதியில் அமைந்துள்ள குளங்கள் மூன்று கட்டங்களாக அமைந்துள்ளன. முதற் கட்ட குளங்கள் அகத்திமுறிப்பு பெரிய தேக்கத்திற்கு வடக்காயும் தெற்காயும் அமைந்துள்ளன. அவை அகத்திமுறிப்புத் தேக்கத்திற்கு ஒப்பான நீர்ப்பாசன செயற்பாடுகளைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அட்டவணை - 2

### முசலிப்பிரதேச நீர்ப்பாசனக் குளங்கள் பற்றிய விபரம்

| குளத்தின் பருமன் | அளவு (ஏக்கரில்) | குளங்களின் எண்ணிக்கை | நெற் செய்கைப் பரப்பளவு | குளங்களின் மொத்த பரப்பளவு |
|---|---|---|---|---|
| 1. மிகப்பெரிய குளம் | 800இலும்கூட | 01 | 340 | 820 |
| 2. பெரிய குளம் | 100-800 வரை | 12 | 1874 | 1775 |
| 3. சிறிய குளம் | 10-100 வரை | 59 | 3893 | 2207 |
| 4. மிகச்சிறிய குளம் | 10 இலும் குறைய | 10 | 55 | 59 |
| மொத்தம் | | 83 | 6162 | 4861 |

***மூலம்:*** **இலங்கை ஓரங்குலப் படங்களும் வெளிக்கள ஆய்வும்.**

## அட்டவணை - 3

### முசலியின் சமூக பொருளாதாரப் பிரதேசங்கள்

| பிரதேசம் | கிராமங்கள் எண்ணிக்கை | குடும்ப | குளங்கள் எண்ணிக்கை (ஏக்கர்) | நெற் பரப்பு (ஏக்கர்) | பிரதேச மொத்தப் பரப்பு |
|---|---|---|---|---|---|
| வேப்பங்குளப் பிரதேசம் | 3 | 415 | 19 | 916 | 2600 |
| அகத்திமுறிப்புப் பிரதேசம் | 4 | 800 | 8 | 1260 | 5405 |
| புதுவெளி-கொண்டச்சிப் பிரதேசம் | 6 | 850 | 1265 | 1384 | 3520 |
| மணற்குளம்-முசலிப் பிரதேசம் | 8 | 823 | 1240 | 945 | 3026 |
| மறிச்சுக்கட்டிப் பிரதேசம் | 4 | 695 | 18 | 1650 | 3950 |

***மூலம்:*** **இலங்கை ஓரங்குலப் படங்களும் வெளிக்கள ஆய்வும்.**



கொண்டவை. அவற்றில் சோனக நெடுங்குளம், பிச்சைவாணிபன் குளம், இத்திக்குளம், தாண்டிக்குளம் ஆகியன குறிப்பிடத்தக்க குளங்களாகும். இரண்டாவது கட்டக்குளங்கள் இந்நீர்ப்பாசனத் தொகுதியின் மத்திய பகுதியில் அமைந்துள்ளன. அவ்வாறு அமைந்துள்ள குளங்களுள் மரைக்காயரூர் குளம், புதுவெளிக்குளம், கூளாங்குளம் போன்றவை முக்கியமானவை. நீர் கடலையடைவதற்கு முந்திய குளங்கள் கடைசிக்கட்டத்தில் அமைந்துள்ளன.

மறிச்சுக்கட்டிப்பிரதேசக் குளங்கள் வியாயடி நீர்த்தேக்கத்திற்கு மேற்கே அமைந்துள்ளன. இவை ஒரு தொடர்ச்சியாகக் காணப்படுகின்றன. அவையாவன வியாயடி, கூமா குளம், ஆத்திக்குளி, பாலைக்குளி, ஆலாச்சுக்குளம், புளியங்குளம், அடைப்பன் குளம் என்பதாகும். வரட்சியான காலத்திலும் மோதரகம ஆற்றின் மூலம் இப்பிரதேச நீர்ப்பாசனக் குளங்கள் நீரினைப் பெறுகின்றன. இப்பிரதேசத்தில் குளக்கட்டிற்கு கீழ்ப்பகுதியில் நெற்காணிகள் அமைந்துள்ளன. மழைபெய்யாத வரண்ட காலங்களிலும் இப்பிரதேசத்தில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுவது ஒரு சிறப்பான அம்சமாகும்.

இங்குள்ள குளங்கள் பரப்பில் அதிகளவில் இருந்த போதிலும் போதியளவு ஆழமற்றனவாகக் காணப்படுகின்றன. இதனால் மிகச் சொற்ப மழைவீழ்ச்சியோடு இக்குளங்கள் நிறைந்து விடுகின்றன. அதனால், ஆற்றில் வருகின்ற நீர் பிரயோசனமற்றதாக கடலுக்குத் திறந்து விடப்படுகின்றது. இது துரதிஷ்டவசமான அம்சமாகும். மற்றும் இப்பிரதேச நீர்ப்பாசனத் திட்டம் சுமார் நான்கு தசாப்தங்களாக அரசால் புறக்கணிக்கப்பட்ட நிலையிலேயே காணப்பட்டது. இதனால் இந்நீர்ப்பாசனக் குளங்களின் நீர் தாங்கும் தன்மை குறைவடைந்து, நீர்ப்பாசனக் கால்வாய்களினூடாக நீர் வரும் அளவும் குறைந்ததோடு நெற்செய்கையும் அதிக அளவில் பாதிக்கப்பட்டது. அதாவது முன்னர் மூன்று போகம் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்த இப்பிரதேசம் பிற்காலத்தில் ஒரு போகத்தையேனும் சரியாகச் செய்ய முடியாதவாறான நிலைக்குத் தள்ளப்பட்டது.

### கிணற்று நீர்ப்பாசனம்

குளமும் நீர்ப்பாசனக் கால்வாய்களும் நெல் விவசாயத்திற்குத் தேவையான நீரைக்கொடுக்க முடியாமல் போனதனால் அடித்தள நீரைக் கிணறு மூலமாகப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெற்று நெல்விவசாயம் செய்யும் முறை சில பிரதேசங்களில் நடைமுறையிலிருந்தது. பண்டாரவெளி, புதுவெளி, வாரிவெளி, சிறுக்குளம், முசலி முஸ்லிம்களின் விவசாயமுறை இந்த அடிப்படையில் அமைந்திருந்தது. இப்பிரதேசங்களில் கிணற்று நீர் நிலமட்டத்திலிருந்து 15 அடி ஆழத்தில் பெறக்கூடியதாக இருந்தது. நில அடித்தள நீர்ப் பீடத்திலிருந்து அந்நீர் கிடைக்கப்பட்டதால் மட்டுப்படுத்தப்பட்ட நீர்த்தேவையை நிவர்த்தி செய்யக்கூடியதாக இருந்தது. அப்பிரதேச மக்கள் நீர் இறைக்கும் இயந்திரங்களைப் பயன்படுத்தி நெல் நிலங்களுக்கும், மேட்டுநிலப் பயிர்ச்செய்கைக்கும் இந்நீரைப் பெற்றுக் கொண்டார்கள். குறிப்பாக பயிருக்கான நீர்ப் பற்றாக்குறை ஏற்படுகின்ற காலங்களில் கிணற்று நீர்ப்பாசன நீர்ப்பயன்பாடு இப்பிரதேசத்திற்கு ஒரு பெரும் பாக்கியமாக இருந்தது. அந்த வகையில், இப்பிரதேச விவசாயத்தை வெற்றிகரமாக செய்துவர கிணற்று நீர்ப்பாசனம் உதவிற்று. இப்பிரதேசத்தில் ஏறக்குறைய 300 ஏக்கர் நெல் நிலத்திற்கு மேலதிக நீரை வழங்க கிணற்று நீர்ப்பாசனம் உதவியது.

## நில உடமையும் நெல் விவசாய உற்பத்தி முறையும்

நில உடமையில் விவசாயிகளுக் கிடையில் பெரிய வேறுபாடுகள் இருக்கவில்லை. ஒரு விவசாயக் குடும்பத்திற்கு சராசரி 3 ஏக்கர் நிலம் உரிமையாகக் காணப்பட்டது. பொதுவாகக் குடும்பத் தொழிலாளர்களைக் கொண்டே நெல்விவசாயம் செய்யப்பட்டது.

நிலத்தைப் பண்படுத்துதல், விதைத்தல், அறுவடை செய்தல் ஆகியவற்றில் பாரம்பரிய முறைகள் பின்பற்றப்பட்டன. மிக அண்மைக் காலத்தில் நவீன விவசாய முறைகளான இயந்திரப்பயன்பாடு, நாற்றுநடுகை, இரசாயன பசளை, கிருமிநாசினிப் பயன்பாடு போன்றன இப்பிரதேசத்தில் அறிமுகமாக்கப்பட்டு வந்தன.

நெற்செய்கைக்குட்பட்ட மொத்தப்பரப்பு இப்பிரதேசத்தில் கூடுதலாகக் காணப்பட்டாலும் வருடாந்த மொத்த நெல் உற்பத்தி குறைவாகக் காணப்பட்டது. இதற்குப் பல காரணங்கள் இருந்தன. நீர் பற்றாக்குறையினால் பயிரிடப்படக்கூடிய நிலம் செய்கை பண்ணப்படாத நிலை இருந்தது. காலநிலை சீர் கேட்டால் விளைந்த பயிர்கள் அறுவடை வரை செல்லாத நிலையும்



காணப்பட்டது. அதனால் நெல் விவசாயத்திற்கு நீர்ப்பாசனம் அவசியமாகக் காணப்பட்டது. நீர்ப்பாசன மூலங்கள் புறக்கணிப்பிற்கு உட்பட்டமை இப்பிரதேசத்தின் விவசாய உற்பத்தியைப் பாதித்தது.

## விவசாயமும் வாழ்க்கையும்

இப்பிரதேசத்தில் நெல் விவசாயமே முக்கிய பொருளாதார அம்சமாகும். அதுவும் இவ்விவசாயம் குளத்து நீரை அடிப்படையாகக் கொண்டதாகக் காணப்பட்டது. ஏனைய தொழில்கள் எல்லாம் பகுதி நேரத் தொழில்களாகவே இருந்தன. கிராமங்கள் குளத்தை அண்டிய விவசாயக் காணிகளிலேயே அமைந்திருந்தன. அதனால் மக்களின் நாளாந்த நடவடிக்கை நெல்விவசாயத்தோடு பின்னிப் பிணைந்தவையாகக் காணப்பட்டன. நெல் விவசாயம் செழிப்பாகக் காணப்படுகின்ற காலமே இம்மக்களின் சந்தோஷமான காலமாகும். விவசாயம் செழிப்பற்ற காலம் கஷ்டமான காலமாகும். இதனால் விவசாயச் செழிப்போடு இணைந்த வகையிலேயே இம்மக்களின் கலாசாரம் காணப்பட்டது.

நெல் விவசாயச் சூழலிலேயே மக்கள் வாழ்ந்தனர். இதனால் விவசாயத்தோடு இணைந்த வாழ்க்கை முறையே காணப்பட்டது. சமய, கலாசார நிகழ்ச்சிகளெல்லாம் விவசாயத்தோடு ஒட்டியதாகவே காணப்பட்டன. சமய நிகழ்ச்சி, மழைப் பிரார்த்தனைப் பாடல்கள் என்பனவும் விவசாயத்தை ஒட்டியவையாக அமைந்திருந்தன.

முசலியின் நெல் விவசாயம் பல பிரச்சினைகளை எதிர் நோக்கியது. இதில் அடிப்படையான பிரச்சினை நெல் விவசாயத்திற்கான நீர்ப்பாசன நீர்ப் பற்றாக்குறையாகும். கடந்த காலங்களில் அகத்திமுறிப்பு, வியாயடி நீர்ப்பாசனத்திட்டங்கள் புறக்கணிக்கப்பட்டமை இப்பிரதேச நெல் விவசாயத்திற்கு பாரிய பாதிப்புகளை ஏற்படுத்தியது. அதாவது உள்ளூர் குள நீர்ப்பாசனத்தை நம்பிய நெல் விவசாய முறை இப்பிரதேசத்தில் பரவலாகப் பின்பற்றப்பட்டது. ஆனால் பல சந்தர்ப்பங்களில் குள நீர்ப்பாசனப் பற்றாக்குறையால் நெல் விவசாயம் தோல்வியில் முடிவுற்றது. விவசாயக் கிராமங்களில் ஏற்பட்ட சன அதிகரிப்பு நீர்பெறக்கூடிய நெல் விவசாயக் காணிகளின் தலா அளவைக் குறைத்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதனால் நெல் விவசாயத்தில் வேலையின்மை அதிகரித்தது. இதை விட முதலீட்டுப்பிரச்சினை, புராதன செய்கை முறைகள், சந்தைப்படுத்தற் பிரச்சினை, நோய்கள் போன்ற பிரச்சினைகளும் முசலிப்பிரதேச நெல் விவசாயத்தைப் பாதித்து வந்தன.

## சேனைச்செய்கை

சேனைச் செய்கை காடுகளை வெட்டி, அதனை எரித்து தானியங்களைப் பயிரிடுவதனைக் குறிக்கும். குறைந்த மழை வீழ்ச்சியில் விளையக்கூடிய பயிர்கள் சேனைச் செய்கையின் கீழ் பயிரிடப்படுவது வழமை. முசலியின் புதர் நிலங்களிலும், மென் காடுகளிலும் சேனைச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. அகத்திமுறிப்பு, வியாயடிப் பிரதேச மென்காடுகளும் அருவி ஆறு, மோதரகம ஆற்றுப் புதர் நிலப்பிரதேசமும் இப்பிரதேச சேனைச் செய்கைப் பிரதேசங்களாகும். மேற்குறிப்பிட்ட பிரதேசங்களில் வாழும் பூநொச்சி, பிச்சைவாணிபன்குளம், அகத்திமுறிப்பு, பாலைக்குளி, கரடிக்குளி விவசாயிகள் சேனைச் செய்கையில் ஈடுபட்டனர். முசலிப் பிரதேசம் முழுவதும் மொத்தமாக 450 ஏக்கர் நிலத்தில் சேனைச் செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

சேனைச்செய்கை ஒரு பருவ காலச் செய்கையாகும். இதில் சோளம், பாசிப்பயறு, கௌபி, மிளகாய் போன்ற பயிர்களோடு மரக்கறிப் பயிர்களும் செய்யப்பட்டு வந்தன. இப்பயிர்ச் செய்கை ஒரு பகுதிநேர தொழிலாகவே முசலி முஸ்லிம்களால் செய்யப்பட்டது. குடும்ப அங்கத்தவர்களே இதன் தொழிலாளராவர். இப் பயிர்ச் செய்கை உற்பத்தி முறை, தொழில்நுட்ப ரீதியில் மிகப் பின்தங்கியதாகவும் காணப்பட்டது. சேனைப்பயிர் சுய தேவைக்காக செய்கை பண்ணப்பட்டது.

## மேட்டுநிலப் பயிர்ச்செய்கை

முசலிப் பிரதேசத்தில் மேட்டுநிலப் பயிர்ச்செய்கையானது வயல் வெளிகளில் நெல் பயிரிடப்படாத வயல் வெளிகளில் காலங்களில், குடியிருப்புக்களை அண்டியுள்ள மேட்டுநிலக் காணிகளிலும் மேற்கொள்ளப்படும்.



இப்பயிர்ச்செய்கையின் கீழ் மிளகாய், வெண்டி, கத்தரி, தக்காளி, புடோல், பயறு போன்ற மரக்கறி இனங்கள் பயிரிடப்பட்டு வந்தன.

இப்பிரதேச நெற்செய்கை நீர், மூலதன, நிலமின்மையால் பாதிக்கப்பட்டது. அதனால் முசலிப் பிரதேச விவசாயிகள் நெற்செய்கைக்கு மாற்று விவசாய நடவடிக்கையாக மேட்டுநிலப் பயிர்ச்செய்கையை மேற்கொண்டனர். மேட்டுநிலப் பயிர்ச்செய்கையானது தரைக்கீழ் நீர் அதிகம் கிடைக்கின்ற முசலியின் வடமேல் பிரதேசங்களிலேயே சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது. இப்பிரதேசத்தைச் சார்ந்த பண்டாரவெளி, புதுவெளி, கூளாங்குளம், முசலி, வாரிவெளி, மணற்குளம் போன்ற கிராமச் சூழலில் வெற்றிகரமான விவசாயச் செய்கையாகவும் மேட்டுநிலப் பயிர்ச்செய்கை காணப்பட்டது.

முசலிப்பிரதேச மேட்டுநிலப் பயிர்ச்செய்கை விவசாய விரிவாக்க ஆலோசனைகளின் பற்றாக்குறையாலும், அரசமட்ட நிதியுதவியின்மையாலும், சந்தைவசதியின்மையாலும், மூலதனப் பற்றாக்குறையாலும் பாதிப்படைந்திருந்தது.

## 3.2 மந்தை வளர்ப்பு

புவியியல் ரீதியாக முசலிப்பிரதேசம் மந்தை மேய்த்தலுக்கு வாய்ப்பாகக் காணப்பட்டது. 18 சதவீதமான நிலப்பரப்பு இப்பிரதேசத்தில் மந்தை மேய்த்தலுக்குப் பொருத்தமான புல்நிலம், சிறு காடுகளைக் கொண்டுள்ளது. இதில் குறிப்பாக பிச்சைவாணிபன் குளம், அகத்திமுறிப்பு, புதுவெளி, முசலி, வாரிவெளி, மணற்குளம், மறிச்சுக்கட்டி, கரடிக்குளி, பாலைக்குளி ஆகிய கிராமங்களின் சூழல்களில் மந்தை வளர்ப்புக்கான வாய்ப்புகள் இயற்கையாகக் காணப்பட்டன.

மிக நீண்ட காலமாக திட்டமிடப்படாத அடிப்படையில் மந்தை மேய்த்தல் ஒரு பாரம்பரியத் தொழிலாக பல கிராம மக்களால் செய்யப்பட்டு வந்தது. மாடு, எருமை, ஆடு போன்ற மிருகங்கள் பெரிய எண்ணிக்கையில் இப்பிரதேசத்தில் வளர்க்கப்பட்டன. இம்மந்தைகளுக்கு விவசாய காலத்திலும், விவசாமில்லாத காலத்திலும் கிராமச் சூழலில் போதியளவு உணவு கிடைக்கக் கூடியதாக இருந்தமை இம்மந்தைகளின் இயற்கைப் பெருக்கத்திற்குக் காரணமாக அமைந்தது. இங்கு கால்நடை வளர்ப்போடு தொடர்புடைய பால், தயிர், வெண்ணெய் போன்றவற்றின் உற்பத்தியும் நடைபெற்று வந்ததுமை குறிப்பிடத்தக்கது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மந்தை வளர்ப்பு இப்பிரதேசத்தில் பொதுவாக பொருளாதார நோக்கில் மேற்கொள்ளப்படவில்லை. தரை பண்படுத்த, பசளை பெற, வண்டி இழுக்க மாடுகள் வளர்க்கப்பட்டன. ஆடு, செம்மறி வளர்ப்பு இப்பிரதேசத்தில் ஒப்பீட்டு ரீதியாகக் குறைவாகும்.

எனினும் முசலிச் செறிவின் கிழக்குப் புறக் கிராமங்களில் எருமை மாடுகளும், மேற்குப்புறக் கிராமங்களில் மாடுகளும் விற்பனைக்காகவும் அத்துடன் ஏனைய பொருளாதார நோக்கிலும் வளர்க்கப்பட்டன. பருவகால வரட்சி, போதிய உணவின்மை, பராமரிப்புக் குறைவு போன்றன மந்தை வளர்ப்பில் உச்சப்பயனைத் தரத் தவறிவிட்டன.

1990ஆம் ஆண்டு பலவந்த வெளியேற்றத்தின் போது ஏறக்குறைய 15581 மாடுகள், 3503 எருமைகள், 24377 ஆடுகள் இப்பிரதேசத்தில் முஸ்லிம்களுக்குச் சொந்தமாக இருந்தனவென மதிப்பிடப்பட்டுள்ளது (Hasbullah, 1992). இம்மிருகங்களை அநாதரவாகக் கைவிடப்பட்ட நிலையில் முஸ்லிம்கள் அவசர அவசரமாக வெளியேறினர். மறிச்சுக்கட்டி, பாலைக்குளி, கரடிக்குளி ஆகிய மூன்று கிராமங்களில் மாத்திரம் சுமார் 1000 க்கும் மேற்பட்ட ஆடு மாடுகள் கைவிடப்பட்டிருந்தன என்று குறிப்பிடப்பட்டது. முசலியின் வடக்குப் பிரதேசத்தில் மேலும் பல்லாயிரம் மிருகங்கள் கைவிடப்பட்டிருக்க வேண்டும்.

## 3.3 காட்டு வளம்

முசலிப்பிரதேசத்தின் மொத்தப்பரப்பில் மூன்றில் இரண்டு பகுதி காடுகளாகும். இப்பிரதேசத்தின் காட்டுவளப் பரம்பலை படம் 4 காட்டுகின்றது. மொத்தக் காட்டுப்பரப்பில் 60% மானவை அடர் காடுகளாகும். ஏனையவை கிராமங்களை அண்டிய மென் காடுகளாகவும் காணப்பட்டன. காடுகள் முசலிம்களின் வரலாற்றோடும், பொருளாதாரத்தோடும், நாளாந்த வாழ்க்கையோடும் பின்னிப் பிணைந்திருந்தன.

காடுகளில் யானை பிடித்தல் இப்பிரதேச முஸ்லிம்களின் பாரம்பரியத் தொழிலாகக் காணப்பட்டது. யானை பிடிப்பது என்பது யானையை கண்ணி வைத்துப் பிடிப்பதைக் குறிக்கும். பிடிக்கப்பட்ட யானைகள் விலைக்கு விற்கப்படும். யானை பிடித்தல் "பணிக்கர்" என்று அழைக்கப்படும் இப்பிரதேச முஸ்லிம்களால் பாரம்பரியமாக செய்து வரப்பட்டது (Boake, 1888).



பிரபல்யமான ராஜ இன யானைகள் முசலிப்பிரதேச முஸ்லிம்களால் பிடிக்கப்பட்டு விற்கப்பட்டன. பின்னிணைப்பு 2 முசலிப்பிரதேசத்து யானை பிடித்தல் பாரம்பரியத்தை விளக்குகின்றது.

மக்களின் விறகுத் தேவையும் இப்பிரதேசக் காடுகளிலிருந்து பெறப்பட்டன. 99 % மானவர்களின் சமையலுக்கான எரிபொருள் தேவைகளை பூர்த்தி செய்தது விறகேயாகும். இப்பிரதேச மக்களில் பலர் தமது பருவகாலத் தொழிலாக விறகைச் சேகரித்து விற்பனை செய்து வந்தனர்; முதிரை, தம்மனை, கருங்காலி விறகுகளே இப்பிரதேச மக்களால் பெரிதும் பயன்படுத்தப்பட்டு வந்தன.

மேலும் இப்பிரதேசக் காடுகளில் கனிகளும், விதைகளும், கிழங்குகளும், அதுபோல தேன், மருந்துப் பொருட்கள் சேகரிக்கும் வழமையும் காணப்பட்டது. மேற்குறிப்பிட்ட காட்டுவள நடவடிக்கைகள் முசலிப்பிரதேசக் கிராமங்களில் பரவலாகவும் அடர்காட்டுச் சூழலில் காணப்பட்ட பொற்கேணி, பாலைக்குழி, பிச்சைவாணிபன் குளம் போன்ற கிராம மக்கள் மத்தியில் அதிகமாகவும் காணப்பட்டன.

இவற்றை விட காட்டுமரம் வெட்டுதல் மற்றுமொரு காடு சார்ந்த தொழிலாக இப்பிரதேசத்தில் இருந்தது. வீட்டுத்தளபாடத் தேவைக்கும், வேலி அடைப்பதற்கும், விவசாய தளபாடத் தேவைக்காகவும் காட்டு மரங்கள் இப்பிரதேச மக்களால் பயன்படுத்தப்பட்டன. இப்பிரதேசக் காட்டில் பாலை, முதிரை, தம்மனை, கருங்காலி போன்ற பயனுள்ள மரங்கள் நிறையக் காணப்பட்டன.

## 3.4 கடல் வளம்

18 மைல் நீளமான கடற்கரையைக் கொண்ட முசலிப்பிரதேசம் கடல் வளப் பயன்பாட்டுடன் நெருங்கிய தொடர்புற்றுக் காணப்பட்டது. இப்பிரதேசக் கடலானது ஆழமான இந்து சமுத்திரத்தின் ஒரு பகுதியாகும். இங்கு கரையோர மீன்பிடியும் அத்துடன் ஆழ்கடல் மீன் பிடியும் நடைமுறையிலிருந்தன. களப்புப் பிரதேசத்தில் இறால் பிடித்தல், சங்கு அட்டை எடுத்தல் நடவடிக்கைகளும் நடைபெற்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இப்பிரதேசம் கிறிஸ்து காலத்திலிருந்து 1887ஆம் ஆண்டு வரை முத்துக்குளிப்பதற்கு சர்வதேச முக்கியத்துவம் கொண்ட பிரதேசமாக காணப்பட்டது (Twynam, 1902). மீன்பிடியில் தமிழ் கிராம மக்களும் அதிகமாக ஈடுபட்டுவந்தனர். அரிப்பு தமிழ் கிராமம் ஒரு முக்கிய மீனவக் குடியிருப்பாகும். அது போல முசலியில் காணப்பட்ட ஏனைய இரு பிரதான தமிழ் மக்களின் செறிவுகளான கொக்குப்படையானிலும், முள்ளிக்குளத்திலும் பிரதான தொழிலாக மீன்பிடி காணப்பட்டது. கரையோரம் சார்ந்த இக்கிராமங்களின் அமைவிடம் மீன்பிடிக்கு வாய்ப்பாகக் காணப்பட்டது. இவற்றைவிட முசலிப்பிரதேச மீன்வளத்தால் கவரப்பட்ட கொழும்பு, நீர்கொழும்பு, சிலாபம், கொச்சிக்கடைப் பிரதேச சிங்கள கிறிஸ்தவ மீனவர்களும் முசலிப் பிரதேசத்திற்கு பருவ காலத்தில் இடம் பெயர்ந்து வந்து மீன் பிடியில் ஈடுபடும் வழமையும் காணப்பட்டது.

முஸ்லிம்களைப் பொறுத்த வரையில் இப்பிரதேசம் முத்துக்குளிப்பிற்கு முக்கியத்துவம் குறைந்ததோடு கடல்வள நடவடிக்கைகளில் தமது ஆர்வத்தையும் குறைத்துக் கொண்டனர். பிற்காலத்தில் இவர்கள் விவசாய நடவடிக்கைகளில் முழுநேரம் ஈடுபடத் தொடங்கினர். மீன்பிடியும் ஏனைய கடல் வளத் தேட்டமும் முசலி முஸ்லிம்களின் பருவகாலத் தொழிலாக மாறியது. ஏனைய கடல்வள நடவடிக்கைகளில் சங்கு குளித்தல், அட்டை எடுத்தல், இறால் பிடித்தல் ஆகியவை காணப்பட்டன. இதனை விட கடல்வள உற்பத்திப் பொருட்களுடன் தொடர்புடைய வர்த்தக நடவடிக்கைகளிலும் முசலிப்பிரதேச முஸ்லிம்கள் ஈடுபட்டு வந்தார்கள். முஸ்லிம்களின் வர்த்தக நடவடிக்கைகள் கிராம மீன் விற்றலில் இருந்து கொழும்பு, அநுராதபுரம், வவுனியா பகுதிகளுக்கும் மீன், கருவாடு, கடலட்டை, சங்கு ஆகிய பொருட்களை ஏற்றுமதி செய்வது வரையான நடவடிக்கைகளாகக் காணப்பட்டன.

## 3.5 வர்த்தகமும் கைத்தொழிலும்

1981ஆம் ஆண்டு குடிசனக் கணிப்பீட்டு விபரப்படி முசலிப்பிரதேசத்தின் மொத்த தொழிலாளர்களில் 25% மானோர் விவசாயம் கடற் தொழில் சாராத தொழில்களில் ஈடுபட்டு வந்தார்கள் என்று அறியக்கூடியதாக இருக்கின்றது.



விவசாய-கடல் சாராத தொழில்களில் வர்த்தகம், கைத்தொழில் சேவைத் துறை சார்ந்த தொழில்கள் உட்படும். இப்பிரதேச கைத்தொழிற் துறை வளர்ச்சி மூலவள, தொழில்நுட்ப பற்றாக்குறையினால் பாதிக்கப்பட்டது. இத்துறை சார்ந்த தொழிலாளர்கள் கைத்தொழிலைப் பகுதி நேரத்தொழிலாக செய்து வந்தனர். வேப்பங்குளக் கிராமத்தின் பாயிழைத்தல் அருவி ஆற்றுக் கரையோர மட்பாண்ட உற்பத்தி இவ்வாறான கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு உதாரணங்களாகும். இப்பிரதேசத்தில் முஸ்லிம்கள் வர்த்தக சேவைத் துறைகளிலான ஈடுபாட்டுக்குச் சிறந்த உதாரணமாக சிலாவத்துறையைக் குறிப்பிடலாம். சிலாவத்துறையின் வர்த்தக நடவடிக்கைகள் பற்றிய விபரங்கள் பின்னிணைப்பு 5 இல் தரப்பட்டுள்ளன.

## 3.6 முசலியின் குறைவிருத்திக்கான காரணங்கள்

பொருளாதாரக் குறிகாட்டிகளின் அடிப்படையில் முசலி ஒரு குறைவிருத்திப் பிரதேசம் என அடையாளம் காணப்பட்டது. குறைவிருத்தியின் வெளிப்பாட்டை இப்பிரதேசத்தில் பரவலாகக் காணப்பட்ட வறுமையின் மூலமாகவும், பருவகால வேலையின்மை, தலா வருமானக்குறைவின் மூலமும் அறிந்து கொள்ளலாம். அது மட்டுமன்றி, சமூக நல விருத்தி அடிப்படையிலும் இப்பிரதேசத்தின் கல்வி, மருத்துவ, ஏனைய சமூக நல அபிவிருத்திகள் வளர்ச்சியற்ற நிலையிலும் காணப்பட்டன.

இப்பிரதேசத்தில் குறைவிருத்திப் பொருளாதார நிலை காணப்படக் காரணம் என்ன? அதற்கு இப்பிரதேசப் பொருளாதார வளப் பற்றாக்குறையே காரணமா? சனத்தொகை-மூலவள முரண்பாடு காரணமா? உண்மையில் முசலி நில, நீர், கடல், காட்டு வளங்களை நிறைவாகக் கொண்டிருந்தது என்ற அம்சம் மிகத்தெளிவாக இவ்வத்தியாயத்தில் நிரூபிக்கப்பட்டது. அது மட்டுமன்றி நில-சனத்தொகை விகிதாசாரம் இப்பிரதேசத்தின் அபிவிருத்திக்கு முரண்பாடான வகையில் காணப்படவில்லை என்பதும் இவ்வத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளது.

முசலியின் குறைவிருத்திக்கு வரலாற்றுக் கால முசலிப் பிரதேச அபிவிருத்திப் புறக்கணிப்பு முக்கியமானது எனலாம். வரலாற்றில், முத்துக்குளிப்புப் பொருளாதாரம் முசலிக் கரையோரத்தில் வீழ்ச்சியுற்றதிலிருந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காலனித்துவ ஆட்சியாளர்கள் இப்பிரதேசத்தின் அபிவிருத்தியில் அக்கறையற்றவர்களாகக் காணப்பட்டார்கள். முசலியின் நெல் விவசாய வளர்ச்சிக்கான முயற்சிகள் எதுவும் இக்காலத்தில் எடுக்கப்படவில்லை. 1923ஆம் ஆண்டு வரை அகத்தி முறிப்பு நீர்ப்பாசனத் திட்டத்தின் வழமையான திருத்த வேலைகளும் புறக்கணிப்பிற்கு உட்பட்டிருந்தன. 1930 ஆம் ஆண்டில் அகத்தி முறிப்பு அபிவிருத்தித் திட்டத்திற்காகச் செய்யப்பட்ட சிபாரிசுகளும் இறுதியில் கைவிடப்பட்டன.

முசலிக் கடற்கரையின் முத்து வளத்திற்குப் பிறகு காலனித்துவ ஆட்சியாளர்களுக்கு தேவைப்பட்டதெல்லாம் முசலியின் யானைகளாக இருந்தன. யானை பிடித்தலுக்கும் பிரதேச அபிவிருத்திக்கு மிடையில் தொடர்பிருக்கவில்லை. முசலி யானை பிடிகாரர்கள் மிகக் குறைந்த கூலி மூலம் சுரண்டப்பட்டார்கள். யானையின் முழுப் பெறுமதியில் ஒரு சிறு பகுதியே இத்தொழிலில் ஈடுபட்டவர்களுக்குக் கிடைத்தது. எஞ்சியது யானை வர்த்தகத்தில் ஈடுபட்டவர்களுக்கும் அரசாங்கத்திற்கும் சென்றது. முசலியின் விவசாய, மீன்பிடிப் பொருளாதார விருத்திக்காக எந்த முன்னேற்றகரமான நடவடிக்கைகளும் காலனித்துவ அரசாங்கத்தால் எடுக்கப்படவில்லை. காரணம் அதனால் தமக்குக் கிடைக்கவிருந்த இலாபங்கள் போதாது என்று இவ்வாட்சியாளர்கள் கருதினார்கள். ஆனால் காலனித்துவ ஆட்சியாளர்கள் தமது முசலிப் பிரதேச அபிவிருத்தி விருப்பமின்மையை மறைப்பதற்கு வேண்டாத பழிகளை முசலி முஸ்லிம்கள் மீது சுமத்தினார்கள். ஸ்னைட் (Snyd) என்ற பிரித்தானிய உயர் அதிகாரி தனது 1813 ஆம் ஆண்டு அறிக்கையில் "முசலியில் வாழும் மக்கள் எல்லோரும் வெறுக்கத்தக்க மக்கள் இனத்தைச் சேர்ந்தவர்கள்" என்று குறிப்பிட்டார். முசலி முஸ்லிம்கள் பற்றிய இவ்வாறான கருத்தை ஸ்னைட் என்ற பிரித்தானிய அதிகாரி குறிப்பிட்ட காரணம் பற்றி பல விளக்கங்கள் பிற்காலத்தில் கொடுக்கப்பட்டன. அவ்விளக்கங்களில் முக்கியமானதொன்று மற்றுமொரு பிரித்தானிய உயர் அதிகாரியான போயிக்கால் 1888 ஆம் ஆண்டு (Boake, 1888) ஸ்னைடின் கூற்றிற்கு கொடுக்கப்பட்ட மறுப்பாகும். அதில் போயிக் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "கௌரவத்துக்குரிய ஸ்னைட், முசலி முஸ்லிம்கள் பற்றிய பக்கச் சார்பான கருத்தை முன்வைத்துள்ளார். முசலியில் வாழ்கின்ற முஸ்லிம்கள் எனது கண்ணோட்டத்தில் அவ்வாறான வெறுக்கத்தக்க பண்புகளையோ



வேறு வகையான குறைபாடுகளையோ கொண்டிருக்கவில்லை என்றும் இக்குற்றச் சாட்டுகள் உண்மையானவையல்ல என்றும் ஸ்னைட்டின் கருத்துக்கள் ஒரு இன விரோதக் கண்ணோட்டத்தில் கூறப்பட்டன" என்றும் குறிப்பிட்டு, பிரித்தானியர் கால இன விரோத ஆட்சியாளர்களை போயிக் கண்டிக்கின்றார்.

காலனித்துவ காலம் இவ்வாறிருக்க சுதந்திர காலத்திற்குப் பிந்திய காலத்திலும் முசலியின் அபிவிருத்திக்கான பொருத்தமான நடவடிக்கைகள் சுதந்திர அரசால் எடுக்கப்படவில்லை. இதற்குப் பல காரணங்கள் காணப்படுகின்றன.

ஒரு கண்ணோட்டத்தில் சுதந்திரத்திற்குப் பிந்திய கால தேசிய அபிவிருத்தி முயற்சிகளில் சிறுபான்மை மக்கள் வாழும் மன்னார் மாவட்டத்தின் அபிவிருத்திகளில் இலங்கை அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை. மாறாக இம்மாவட்டம் புறக்கணிப்புக்குள்ளானது. உதாரணமாக, அருவி ஆற்று நீரின் (மல்வத்துஓயா) பங்கு சிங்களப் பிரதேசங்களில் கூடுதலாகப் பயன்படுத்த அனுமதி அளிக்கப்பட்டதன் மூலம் மன்னார் பிரதேச விவசாயம் அரசால் புறக்கணிப்புக்குள்ளானது. அது போலவே, வரண்ட வலய விவசாயத்துக்காக அரசால் முன்வைக்கப்பட்ட அபிவிருத்தித்திட்டங்கள் எதிலும் மன்னார் உட்பட்ட தமிழ் பேசும் மக்கள் வாழும் மன்னார் மாவட்டம் உள்ளடக்கப்படவில்லை.

மன்னார் மாவட்ட மட்டத்தில் மிகவும் தாமதப்படுத்தப்பட்டு முன்வைக்கப்பட்ட கிராமிய ஒருங்கிணைப்பு அபிவிருத்தித்திட்டங்களும் இறுதியில் இனப் பிரச்சினையைக் காரணம் காட்டி அரசால் கைவிடப்பட்டன. இப்பிரதேசத்தின் அபிவிருத்தியில் தேசிய அரசாங்கம் மாற்றாந்தாய் மனோபாவத்தைக் கொண்டிருந்தது. முசலியின் முந்திரிகைச் செய்கைக்கும் அதனை அடிப்படையாகக் கொண்ட சிங்கள மக்கள் குடியேற்றத்திற்கும் தேசிய அபிவிருத்தியில் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் முசலி முஸ்லிம், தமிழ் மக்களின் வறுமை, வேலையின்மை, அபிவிருத்தியின்மையைப் போக்கும் திட்டங்களில் காட்டப்படவில்லை.

மற்றுமொரு மட்டத்தில் முசலியின் அபிவிருத்தி புறக்கணிப்புக்குள்ளானது. இப்புறக்கணிப்பு மாவட்டத்திற்குட்பட்ட இனப்புறக்கணிப்பாகும். முசலியின் நீர்ப்பாசன அபிவிருத்தியில் மாவட்ட மட்ட அதிகாரிகள் அக்கறையற்றவர்களாகக் காணப்பட்டனர். அருவியாற்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நீர்ப்பங்கீட்டில் கட்டுக்கரைக் குளத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. அதனால் அகத்திமுறிப்பு எல்லாவகையான புறக்கணிப்புகளுக்கும் உள்ளானது.

இதுபோல முசலியின் நில அடித்தள நீர் அபிவிருத்திக்கும் கடல்வள அபிவிருத்திக்கும் மாவட்ட மட்டத்திலான அபிவிருத்தித் திட்டங்களில் முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. அத்தோடு முசலிப்பிரதேச கல்வி, போக்குவரத்து, சமூகநல அபிவிருத்திகளும் நீண்டகால புறக்கணிப்புக்கு உட்பட்டு வந்தன.

முஸ்லிம் முசலி இன்று முஸ்லிம்களற்ற பிரதேசமாகக் காணப்படுகின்றது. முசலியின் நீர்ப்பாசன, நில, ஏனைய வளங்கள் தொடர்ச்சியான இயற்கை அழிவுக்குட்பட்டு வருகின்றன. வடக்குக் கிழக்கிற்கான சமாதானத் தீர்வோடு முன்னெடுத்துச்செல்ல இருக்கின்ற புனர்வாழ்வுத் திட்டங்களில் முசலிப் பிரதேசத்தின் வரலாற்றுக்கால புறக்கணிப்பை கருத்திற் கொண்டு பொருத்தமான புனர் நிர்மாணத் திட்டங்களை நிறைவேற்ற அரசு முன்வர வேண்டும். அது இப்பிரதேசத்திற்கிழைக்கப்பட்ட அநீதிக்கு நிவாரணமாகவும் பலவந்த வெளியேற்றத்தினால் கடந்த ஆறு வருடங்களாக அல்லல்படும் இம்மக்களின் எதிர்கால அபிவிருத்திக்கு பொருத்தமான தீர்வுத் திட்டமாகவும் அமையும்.



# 4. முசலியின் சமூக-பொருளாதாரப் பிரதேசங்கள்

தெளிவான புவியியல் எல்லைகளைக் கொண்ட முசலிப் பிரதேசத்திற்குள் தனித்துவமான பல உப பிரதேசங்கள் அடையாளம் காணக்கூடியவையாக உள்ளன. முசலிப் பிரதேசத்திற்குள் காணப்படும் பிரதேச ரீதியான சமூக, பொருளாதாரப் பண்புகள் இப்பாகுபாட்டின் அடிப்படைகளாகக் காணப்படுகின்றன. தனித்துவமான சமூக, பொருளாதாரப் பிரதேசங்களை அடையாளம் கண்டு அவற்றின் உள்ளார்ந்த பண்புகளை நோக்குவது முசலிப் பிரதேசத்தை மேலும் தெளிவாக விளங்கிக் கொள்ள உதவும்.

## 4.1. சமூக-பொருளாதாரப் பிரதேசங்கள்

இவ்வாய்வில் முசலியை ஐந்து சமூக-பொருளாதாரப் பிரதேசங்களாகப் பிரித்து அடையாளம் காணப்பட்டுள்ளது. அப்பிரதேசங்களாவன:

1. வேப்பங்குளப் பிரதேசம்,
2. அகத்திமுறிப்புப் பிரதேசம்.
3. புதுவெளி-கொண்டச்சிப் பிரதேசம்.
4. மணற்குளம்-முசலிப்பிரதேசம்.
5. மறிச்சுக்கட்டிப் பிரதேசம் ஆகியனவாகும்.

## சமூகப் பொருளாதார பிரதேசப் பரம்பல்

மேலே அடையாளம் காணப்பட்ட ஐந்து சமூகப் பொருளாதாரப் பிரதேசங்களும் முசலியில் பரவலாகக் காணப்படுகின்றன. இப்பிரதேசங்களின் பரம்பலை படம் 7 காட்டுகின்றது. முதல் நான்கு சமூகப் பொருளாதாரப் பிரதேசங்கள் முசலியின் வடமேற்குப் பிரதேசத்தில் அமைந்துள்ளன. இந்நான்கு சமூகப் பொருளாதாரப் பிரதேசங்களையும் உள்ளடங்கிய நீர்ப்பாசனத் தொகுதியை அகத்திமுறிப்புப் பிரதேசம் என்று முன்னர் அடையாளம் கண்டோம். இங்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமூகப் பொருளாதாரப் பிரதேசங்கள் புவியியல் ரீதியாக ஒன்றோடொன்று தொடர்புடையவையாகக் காணப்படுகின்றன. பொருளாதார ரீதியாக நெல்லையும் இன ரீதியாக முஸ்லிம்–தமிழ் மக்களையும் கொண்டது இப்பிரதேசங்களாகும். இந்நான்கு பிரதேசங்களோடு தொடர்புடைய அடிப்படை புள்ளிவிபரங்கள் அட்டவணை 3 இல் காட்டப்பட்டுள்ளன.

ஐந்தாவது சமூக–பொருளாதார பிரதேசம் மறிச்சுக்கட்டிப் பிரதேசமாகும். ஏனைய பிரதேசங்களைப் போல மறிச்சுக்கட்டியும் இப்பிரதேசத்துக்குள் காணப்படுகின்ற முக்கியமான கிராமம் ஒன்றின் பெயரால் அழைக்கப்படுகின்றது. இப்பிரதேசம் முசலியின் தென்புறமாக அமைந்துள்ளது. மறிச்சுக்கட்டி சமூக பொருளாதாரப் பிரதேசத்தை சென்ற அத்தியாயத்தில் வியாயடி நீர்ப்பாசனத் தொகுதிக்குட்பட்ட பிரதேசம் என்று நாம் அடையாளம் கண்டோம்.

## பிரதேச பாகுபாட்டின் அடிப்படைகள்

அடையாளம் காணப்பட்ட சமூகப் பொருளாதாரப் பிரதேசங்கள் எந்த அடிப்படையில் தனித்துவமான பிரதேசங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன என்பதை முதலில் நோக்குவோம். முசலிப் பிரதேசத்தை முழுமையாக நோக்குகின்றபோது இப்பிரதேச மக்களின் வாழ்க்கை அமைப்பிற்கும் பொருளாதார அடிப்படைகளுக்கும் இடையில் மிக நெருங்கிய தொடர்பு காணப்படுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இம்மக்களின் பொருளாதார அடிப்படை விவசாயமாகும். விவசாயத்தில் நெற்செய்கை மிக முக்கியமாகக் காணப்படுகின்றது. நெல் விவசாயம் கிராமிய குள நீர்ப்பாசனத்தில் வெகுவாகத் தங்கியுள்ளது. ஆகவே கிராமியக் குளமும், நெல்வயல் நிலங்களும், மக்களின் வாழ்விடங்களும் ஒன்றில் ஒன்று தங்கியவையாகக் காணப்படுகின்றன.

முசலிப் பிரதேச கிராமியக் குளங்களின் பரம்பல் இப்பிரதேசத் தரைத்தோற்ற அமைப்பாலும் நீர்ப்பாசனக் கால்வாய் வலைப்பின்னல் முறையாலும் செல்வாக்குப்படுத்தப்படுகின்றன. இச்செல்வாக்கிற்குட்பட்ட கிராமியக் குளங்கள் முசலியின் பொருத்தமான இடங்களில் தொகுதி தொகுதியாக அமைந்துள்ளன. இக்கிராமியக் குளங்களின் பரம்பல் வேறுபாட்டிற்கேற்ப இக்குளங்களில் தங்கியிருக்கின்ற நெல்நிலங்களும் விவசாயிகளின் குடியிருப்புக்களும் அமைவுற்றுள்ளன.



படம் 7 : அகத்திமுறிப்பு நீர்ப்பாசனத் தொகுதியின் சமூக - பொருளாதார பிரதேசங்கள்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆகவே முசலிப் பிரதேசத்தின் மேற்குறிப்பிட்ட குளம்-வயல்-குடியிருப்பு ஆகிய சமூக-பொருளாதார அம்சங்களின் அடிப்படையில் ஐந்து தனித்துவமான வலயங்கள் காணப்படுகின்றமையை அவதானிக்கலாம்.

இச்சமூக-பொருளாதாரப் பிரதேச பாகுபாட்டை மேலும் தெளிவாக அறிந்து கொள்ள முசலியின் உப பிரதேசங்களும் எவ்வாறு எல்லையிடப்பட்டுள்ளன என்பதை ஒரு உதாரணத்தின் மூலம் நோக்குவோம். இவ்வுதாரணத்திற்கு அகத்திமுறிப்பு சமூக-பொருளாதார பிரதேசத்தை எடுத்துக் கொள்வோம். படம்-9 இப்பிரதேசத்தையும் அதன் எல்லையையும் காட்டுகின்றது. கிராமிய நீர்ப்பாசனக் குளங்கள் இப்பிரதேசத்தின் கிழக்கு எல்லையில் தொடர்ச்சியாகக் காணப்படுகின்றன. இத்தொடர்ச்சியான குள அமைப்புக்குக் காரணம் தரைத்தோற்றமும், நீர்ப்பாசன வலைப்பின்னல் தொடர்புமாகும். இக்குளத் தொடர்ச்சிக்கு மேற்காக நெற்காணிகளும் தொடர்ச்சியாகப் பரந்து காணப்படுகின்றன. நெல் விவசாயக் காணிகளில் குடியிருப்புக்களும் காணப்படுகின்றன. இப்பிரதேசத்தில் நான்கு தனித்துவமான கிராமங்கள் காணப்பட்டாலும் இம்மக்களின் விவசாயப் பொருளாதார அடிப்படை ஒன்றாகக் காணப்படுகின்றது. இந்த விவசாயப் பொருளாதார அடிப்படையும் குடியிருப்புப் பரம்பலும் இம்மக்களுக்கிடையில் நெருங்கிய குடும்ப சமூக சலாசாரத் தொடர்புகளுக்கும் காரணமாக அமைந்தன.

சமூகப் பொருளாதார பிரதேசங்கள் பற்றிய ஆய்வுக்கான விபரங்கள் நம்பத்தகுந்த ஆய்வு மூலங்களிலிருந்து பெறப்பட்டிருக்கின்றன. ஓரங்குலப் படங்களையும், விமானப் படங்களையும், குடிசனக் கணிப்பீட்டு விபரங்களையும் பயன்படுத்தி முசலிப் பிரதேசத்தின் குடிசன பொருளாதார அடிப்படைகள் மதிப்பிடப்பட்டுள்ளன. வெளிக்கள ஆய்வுகள் இப்பிரதேசம் பற்றிய மேலதிக ஆழமான விபரங்களை அறிய உதவின.

## 4.2 வேப்பங்குளப் பிரதேசம்

முசலிப் பிரதேசத்தில் வேப்பங்குளம் என்ற கிராம நீர்ப்பாசனக் குளத்தை அடிப்டையயாகக் கொண்ட குடியிருப்பொன்று அக்குளத்தின் பெயரைக் கொண்டு அழைக்கப்படுகின்றது. வேப்பங்குள சமூக-பொருளாதாரப் பிரதேசத்தின் குடிசன



எண்ணிக்கையில் முன்னணிக் கிராமமாகவும் இக்குடியிருப்பு காணப்படுகின்றமையால் இப்பிரதேசம் இக்கிராமப் பெயரைக் கொண்டு அழைக்கப்படுகின்றது.

படம் 8 இல் வேப்பங்குள சமூக-பொருளாதாரப் பிரதேசம் காட்டப்பட்டுள்ளது. தெளிவாக குள-நெல்-குடியிருப்பு எல்லைகளைக் கொண்டு இப்பிரதேசம் காணப்படுகின்றது. மேற்கு-கிழக்காக நீண்டு காணப்படும் இப்பிரதேசத்தின் மேற்கு எல்லையாக அகத்திமுறிப்புப் பிரதேசத்தின் தொடர்ச்சியான நீர்ப்பாசனக் குளங்கள் அமைந்து காணப்படுகின்றன. வேப்பங்குள சமூக-பொருளாதாரப் பிரதேசத்தின் நீர்ப்பாசனக் குளங்கள் கிடையாக நீண்டு அமைந்துள்ளன. இந்நீர்ப்பாசனக் குளங்களின் பரம்பலுக்குப் பொருத்தமான முறையில் இப்பிரதேசத்தின் ஏனைய சமூக-பொருளாதார அடிப்படைகளும் காணப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட வேப்பங்குள சமூக-பொருளாதார எல்லைகளாக வடக்கில் அருவியாறும், தெற்கில் தேக்கத்திலிருந்து வரும் பிரதான நீர்ப்பாசனக் கால்வாயும் காணப்படுகின்றன.

வேப்பங்குள சமூக-பொருளாதாரப் பிரதேசம் ஏறக்குறைய 2600 ஏக்கர் பரப்பினைக் கொண்டுள்ளது. இப்பரப்பிற்குள் கிராம நீர்ப்பாசனக்குளங்கள், நெல்வயல்கள், குடியிருப்புகள், காடுகள் அத்துடன் மேட்டுநிலம், மேய்ச்சல் நிலம் என்பன அடங்குகின்றன. நெல் விவசாயமே இப்பிரதேசத்தின் பிரதான பொருளாதார நடவடிக்கையாகும்.

நெல்விவசாயம் கிராமக் குள நீர்ப்பாசனத்தில் தங்கியிருக்கின்றது. சிறிதும் பெரிதுமான 19 நீர்ப்பாசனக் குளங்கள் இப்பிரதேசத்தில் பரவலாகக் காணப்பட்டன. இந்நீர்ப்பாசனக் குளங்களின் பெயர்கள், நீர்கொள் பரப்பு, செய்கை நிலம் போன்ற விபரங்கள் அட்டவணைகள் 4லும், 5லும் தரப்பட்டுள்ளன. இந்நீர்ப்பாசனக் குளங்கள் மூலம் மொத்தமாக 900 ஏக்கர் நெல் நிலம் நீர்ப்பாசனத்தைப் பெற்றது.

இப்பிரதேசக் குளங்கள் சில காலத்தில் தேக்கத்திலிருந்து அகத்திமுறிப்பு நீர்த்தேக்கத்திற்குச் செல்லும் பிரதான கால்வயிலிருந்து நீர்பாசன நீரைப் பெறும் முறையும் இப்பிரதேசத்தில் வழமையிலிருந்தது. ஆனால் நீர்ப்பற்றாக்குறை இதனை சாத்தியபடுத்த வில்லை. இதற்கு முக்கிய காரணம் இப்பிரதேச



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# அட்டவணை - 4

**வேப்பங்குளப் பிரதேசம்: குடிசனமும் விவசாயமும்.**

| கிராமம் | குடும்பங்கள் | குளங்கள் | குளப் பரப்பு | நெற் பரப்பு |
|---|---|---|---|---|
| 1.4ஆம் கட்டை | 60 | 1. இத்திக்குளம் | 92 | 120 |
| 2.பிச்சைவாணிபன் குளம் | 55 | 2. கருங்காலி தாழ்வு | 38 | 62 |
| 3.வேப்பன் குளம் | 300 | 3. வேப்பன்குளம் | 98 | 94 |
| | | 4. வண்ணா குளம் | 112 | 180 |
| | | 5. கூமாகுளம் | 12 | 8 |
| | | 6. புதுக்குளம் | 42 | 12 |
| | | 7. மருதமடு | 18 | 36 |
| | | 8. பிச்சைவாணிபன் குளம் | 96 | 130 |
| | | 9. பள்ளாலன் குளம் | 28 | 45 |
| | | 10. கருங்காலி குளம் | 36 | 65 |
| | | 11. சோனக நெடுங்குளம் | 68 | 72 |
| | | 12. வட்டவான் குளம் | 8 | 6 |
| | | 13. ஆலடிக்குளம் | 65 | - |
| | | 14. கிங்கினியன் குளம் | 6 | - |
| | | 15. கோட்டைக்குளம் | 72 | 36 |
| | | 16. கள்ளியடஞ்சல் | 48 | 34 |
| | | 17. நூர்கேணிக்குளம் | 6 | - |
| | | 18. சின்னக் குளம் | 18 | 8 |
| | | 19. பாலையடிகுளம் | 18 | 8 |
| மொத்தம் | 415 | | 881 | 916 |

***மூலம்:*** **இலங்கை ஓரங்குலப் விளக்கபடங்களும் வெளிக்கள ஆய்வும்.**

# அட்டவணை-5

**வேப்பன் குளம்: நிலப் பயன்பாடு.**

| நிலப் பயன்பாடு | பரப்பளவு (ஏக்கர்) | வீதாசாரம் (%) |
|---|---|---|
| குளப்பரப்பு | 863 | 33.2 |
| நெற்பரப்பு | 908 | 35.0 |
| நெற்செய்கைக்குப் பொருத்தமான நிலம் | 240 | 9.2 |
| மேட்டுநிலப் பயிர் பரப்பளவு | 160 | 6.0 |
| சேனைச் செய்கை நிலம் | 189 | 7.2 |
| மேய்ச்சல் நிலப்பரப்பளவு | 240 | 9.2 |
| மொத்த நிலப்பரப்பு | 2600 | 100 |

***மூலம்:*** **இலங்கை ஓரங்குலப் படங்களும் வெளிக்கள ஆய்வும்.**





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நீர்பாசனக் குளமும், கால்வாய்களும், உரிய முறையில் பராமரிக்கப்படாமையாகும். இது மக்களின் வாழ்க்கையை வெகுவாகப்பாதித்தது. நீர்பாசன முறையில் திருப்தியான சீர்திருத்தம் இப்பிரதேச நெல் விவசாயத்தில் துரித அபிவிருத்தியை ஏற்படுத்தக்கூடியது.

பருவ காலத்தில் நீரைத் தேக்கிவைத்து நெல் விவசாயத்திற்கு வழங்கக் கூடிய பெரிய ஆழமான கிராமக் குளங்களை அண்டியே இப்பிரதேசத்தின் குடியிருப்புகள் காணப்பட்டன. இப்பிரதேசத்தின் முக்கிய குடியிருப்புகள் வேப்பங்குளம், இத்திக்குளம், வண்ணாகுளம் ஆகிய மூன்று பெரிய குளங்களின் நீர்ப்பாசனச் சூழலில் அமைந்திருந்தன.

வேப்பங்குளப் பிரதேச மக்களின் விவசாயம் நூர்கேனிக்குளம், சாஹிபு புளியங்குளம், கள்ளியடைஞ்சான், கோட்டைக்குளம், சோனகநெடுங்குளம், ஆலாச்சுக்குளம், செய்யது அஹமது குளம், கிங்கிணியக் குளம், கருங்காலிக்குளம், பள்ளாலங்குளம், நாசுவன்குளம், வட்டவான் குளம், புதுக்குளம், வேப்பங்குளம், வண்ணாகுளம், கருங்காலித்தாழ்வு, பணிக்கப்பத்தான் குளம் ஆகிய 19 சிறிய, பெரிய குளங்களின் கீழ் பல நூற்றுக் கணக்கான ஏக்கர் நெற்காணிகள் காணப்பட்டன.

வேப்பங்குளக் கிராமத்தில் 1990 ஆம் ஆண்டளவில் வாழ்ந்த மொத்தக் குடும்பங்கள் 300 ஆகும். இக்கிராமத்தின் சனத் தொகைப் பரம்பலில் செல்வாக்குச் செலுத்திய மற்றுமொரு அம்சம் முசலிப் பிரதேசத்தை இம் மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களோடு இணைக்கும் பிரதான பாதையாகும். அதனால் இக்கிராமச் சனச் செறிவு ஏனைய விவசாயக் கிராமங்களைப் போல் இப்பிரதான பாதையின் இருமருங்கிலும் செறிவாக அமைவுறக் காரணமாயிற்று.

வேப்பங்குளக் கிராமம் இப்பிரதேசத்தின் பெரிய கிராமம் மட்டுமல்ல தாய்க் கிராமமுமாகும். இப்பிரதேசத்தின் வடபுறமாகக் காணப்படும் 4 ஆம் கட்டையும் கிழக்காகக் காணப்படும் பிச்சைவாணிபன்குளமும் கல்வி, சமூக, பொருளாதார ரீதியாக வேப்பங்குளக் கிராமத்துடன் தொடர்புடையனவாகக் காணப்பட்டன. இக்கிராமங்களுக்கிடையில் குடும்பரீதியான தொடர்புகளும் காணப்பட்டன. வேப்பங்குள சமூக-பொருளாதாரப் பிரதேசத்துக்குட்பட்ட மக்கள் தமது பிரதேசத்திற்கு அப்பாலும் குடும்ப உறவுகளையும், சமூக-பொருளாதாரத் தொடர்புகளையும் கொண்டிருந்தார்கள்.



நெற்செய்கையோடு பல பகுதிநேரத் தொழில்களுக்கான வாய்ப்புகளும் இப் பிரதேசத்தில் காணப்பட்டன. இப்பிரதேசத்தில் ஏறக்குறைய 189 ஏக்கர் நிலத்தில் சேனைச் செய்கையும், 160 ஏக்கர் நிலத்தில் மேட்டுநிலப் பயிர்ச் செய்கையும் 240 ஏக்கர் நிலத்தில் மந்தை மேய்த்தல் நடவடிக்கைகளும் காணப்பட்டன (அட்டவணை 5). இதைவிட காட்டுவள பொருளாதார நடவடிக்கைகளான வேட்டையாடுதல், தேன் எடுத்தல் போன்றவற்றில் இப்பிரதேச மக்கள் ஈடுபடுவது வழமை.

இப்பிரதேசத்தில் எதிர்கால அபிவிருத்தி நோக்கில் பல அம்சங்கள் சிந்திக்கப்பட வேண்டியவைகளாகும். நெல் விவசாயத்தின் அடிப்படைப் பிரச்சினையான நீர்ப்பாசன நீர் கிடைக்கச் செய்யக் கூடிய வழி முறைகள் மேற்கொள்ளப்பட்டால் இப்பிரதேசத்தின் பொருளாதாரம் தன்னியக்கம் கொண்டதாக வளர்ச்சிபெற வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

இந்தக் கண்ணோட்டத்தில் இப்பிரதேசத்தின் நீர்ப்பாசன விருத்திக்காக 1984ஆம் ஆண்டு மன்னார் மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்த முன்வைக்கப்பட்ட சோனக நெடுங்குள நீர்ப்பாசனத்திட்டம் திரும்பவும் எதிர்காலத்தில் செயற்படுத்தப்பட்டால் இப்பிரதேசத்தில் நீர்ப்பாசன நீர்ப்பற்றாக்குறை வெகுவாகக் குறைய வாய்ப்புண்டு. இந்த அடிப்படையில் தேக்கத்திலிருந்து வருகின்ற நீர்ப்பாசனக் கால்வாய் சோனக நெடுங்குளமூடாக இப்பிரதேசத்தின் இத்திக்குளம், பிச்சைவாணிபன்குளம், வண்ணாகுளம் வரை மேலதிக நீர்ப்பாசன நீரை வழங்கும் திட்டம் ஒன்று நடைமுறைப் படுத்த இருந்தது என்பது இங்கு குறிப்பிடப்பட்டது. இது போல இப்பிரதேசத்தில் நிலப்பயன்பாட்டு விருத்தித் திட்டங்கள் மேலும் தீட்டப்படுவதற்கு ஏற்ற வளங்கள் இப்பிரதேசத்தில் நிறையக் காணப்படுகின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

## 4.3 அகத்திமுறிப்புப் பிரதேசம்

வேப்பங்குளப்பிரதேசம் கிழக்கு-மேற்காக நீண்டு காணப்பட்டது. ஆனால் அகத்திமுறிப்புப் பிரதேசம் வடக்கு-தெற்கான போக்கில் காணப்படுகின்றது. இப்பிரதேசத்தில் குளம்-நெல்-குடியிருப்புகளின் பரம்பலமைப்பே இதற்கு காரணமாகும். ஏனைய பிரதேசங்களைப்போல் அகத்திமுறிப்புப் பிரதேசமும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படம் 9 : முசலியின் அகத்திமுறிப்புப் பிரதேசம்




மூலம்: வெளிக்கள ஆய்வு. 1996. இலங்கை இடவிளக்கப்படம். 1972.



## அட்டவணை-6

**அகத்திமுறிப்புப் பிரதேசம்: குடிசனமும் விவசாயமும்.**

| கிராமம் | குடும்பங்கள் | குளங்கள் | குளப் பரப்பு | நெற் பரப்பு |
|---|---|---|---|---|
| 1. அகத்தி முறிப்பு | 230 | 1. அகத்தி முறிப்பு | 820 | 340 |
| 2. பொற்கேணி | 300 | 2. தாண்டிக்குளம் | 140 | 120 |
| 3. பூநொச்சி | 230 | 3. பெருங்காட்டுசிறுக்குளம் | 48 | 72 |
| 4. தமிழ்குடியிருப்பு | 40 | 4. பொற்கேணிகுளம் | 120 | 210 |
| | | 5. கருங்காலி மோட்டை | 84 | 120 |
| | | 6. பணிக்கப்பத்தான் குளம் | 32 | 76 |
| | | 7. மரைக்காயருர் குளம் | 162 | 260 |
| | | 8. பூநொச்சிகுளம் | 12 | 62 |
| மொத்தம் | 800 | | 1418 | 1260 |

*மூலம்:* இலங்கை ஓரங்குலப் படங்களும் வெளிக்கள ஆய்வும்.

## அட்டவணை-7

**அகத்திமுறிப்புப் பிரதேசம்: நிலப் பயன்பாடு**

| நிலப் பயன்பாடு | பரப்பளவு (ஏக்கர்) | வீதாசாரம் (%) |
|---|---|---|
| குளப்பரப்பு | 1418 | 26.2 |
| நெற்பரப்பு | 1260 | 23.3 |
| நெற்செய்கைக்குப் பொருத்தமான நிலம் | 160 | 3.0 |
| மேட்டுநிலப் பயிர்ப் பரப்பு | 140 | 2.5 |
| சேனைச் செய்கை நிலப்பரப்பு | 1200 | 22.2 |
| மேய்ச்சல் நிலப் பரப்பு | 1227 | 22.7 |
| மொத்த நிலப்பரப்பு | 5405 | 100 |

*மூலம்:* இலங்கை ஓரங்குலப் படங்களும் வெளிக்கள ஆய்வும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அருவியாற்றை தனது வட எல்லையாகக் கொண்டிருக்கின்றது. இப்பிரதேசத்தின் கிழக்கு மேற்கு எல்லைகளின் குளம்-நெல்-குடியிருப்பு தனித்துவம் பற்றி இவ்வத்தியாயத்தின் அறிமுகப்பகுதியில் விளங்கப்படுத்தினோம்.

அகத்திமுறிப்புப் பிரதேசம் ஏறக்குறைய 5000 ஏக்கர் பரப்பினைக் கொண்டது. இப்பிரதேசத்தில் விவசாயப் பொருளாதார அடிப்படைகளில் ஒன்று கிராம நீர்ப்பாசனக் குளங்களாகும். இங்கு 8 நீர்ப்பாசனக் குளங்கள் காணப்படுகின்றன. அவை தெற்கிலிருந்து வடக்காக தாண்டிக்குளம், அகத்திமுறிப்பு, பெருங்காட்டுச் சிறுக்குளம், பொற்கேணிக்குளம், கருங்காலிமோட்டை, மரைக்காயூர், பணிக்கப்பத்தான்குளம், பூநொச்சிகுளம் ஆகியவைகளாகும் (படம்-9).

இக்குளங்களில் அகத்திமுறிப்புக்குளம், பெருங்காட்டுச் சிறுக்குளம், பொற்கேணிக்குளம் ஆகியவை கிராம நீர்ப்பாசனக் குளங்களாக மட்டுமல்லாமல் தேக்கத்திலிருந்து கால்வாயின்மூலம் வருகின்ற நீரைச் சில குறிப்பிட்ட காலத்திற்குத் தேக்கிவைத்து பின்னர் விவசாயத்திற்கு வழங்குகின்றவைகளாகவும் காணப்படுகின்றன.

ஆனால் காலப்போக்கில் துரதிஷ்டவசமாக இந்நீர்ப்பாசனத் திட்டங்கள் சீரமைக்கப் படாமையால் அதன் நீர்ப்பாசனத் தகுதித்தன்மை குறைக்கப்பட்டது. இதனால் நெல்விவசாயத்தால் பொன்கொழிக்க வேண்டிய அகத்திமுறிப்புப் பிரதேசத்தில் ஏறக்குறைய 2000 ஏக்கருக்கும் அதிகமான வளமான நிலம் சேனைச் செய்கைக்காகவும் மேய்ச்சல் பாவனைக்காகவும் பயன்படுத்தப்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. அது மட்டுமன்றி வருடாவருடம் விவசாயத்திற்குட்பட்டு வந்த 1260 ஏக்கர் நெல் நிலமும் நீர்பற்றாக்குறையால் ஒரு போக விவசாயம் கூட செய்ய முடியாதிருந்தன.

இதன் விளைவு 5000 ஏக்கர்களைக் கொண்ட அகத்திமுறிப்புப் பிரதேசத்தின் பொருளாதார நடவடிக்கை விஸ்தரிப்பை மட்டுப்படுத்திவிட்டமையாகும். இப்பிரதேசத்தில் முக்கிய குடியிருப்பு பொற்கேணியாகும். இது பிரதான பாதைக்கு வடக்காகவும், தெற்காகவும் பரந்து காணப்பட்டது. பாதைக்கு வடக்கான பகுதி சின்னபுள்ளச்சி பொற்கேணி என்றும், தெற்கான பகுதி பெரிய புள்ளச்சி பொற்கேணியென்றும் அழைக்கப்பட்டன. பொற்கேணி வளமான விவசாய நிலத்தில் அமைந்துள்ளது. கிராமக்குளத்திலிருந்தும், கால்வாயிலிருந்தும் நீர்ப்பாசனத்தை பெறக்கூடிய



சூழலில் இக்கிராமம் காணப்பட்டது. பொற்கேணிக் கிராமச் சூழலில் தெற்காக பழைய தமிழ் குடியிருப்பு ஒன்றும் காணப்பட்டது. அத்தமிழ்க் குடியிருப்பில் ஏறக்குறைய 40 குடும்பங்கள் (1990 ஆம் ஆண்டளவில்) வாழ்ந்தன. பொற்கேணிக்கு வடக்காக பூநொச்சிக்குளம் என்ற முஸ்லிம் குடியிருப்பு காணப்பட்டது. அங்கு 230 குடும்பங்கள் வாழ்ந்தன. பொற்கேணிக்குத் தெற்காக அகத்திமுறிப்புக் கிராமத்தில் 160 குடும்பங்கள் வாழ்ந்தன.

அகத்திமுறிப்புப் பிரதேச பொருளாதாரத்தில் உச்சப் பயனைப் பெறச் செய்யப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் பல. அதில் மிக முக்கியமானது தேக்கத்திலிருந்து வரும் நீரின் அளவை அதிகரிக்கச் செய்வதோடு கால்வாயின் நீர்ப்பாசன நீர் கொண்டு செல்லும் வழிகளையும் சீர் செய்யப்பட வேண்டும். அடுத்து கிராம குளங்களின் நீர் தேக்கி வைக்கும் அளவைக் கூட்டுவதற்கு இப்பிரதேச எட்டுக் குளங்களும் புனரமைக்கப்பட வேண்டியது அவசியம். மேற்குறித்த நீர்ப்பாசனப் புனரமைப்பும் அகத்திமுறிப்புப் பிரதேசத்திற்கு மட்டுமல்ல, முசலியின் ஏனைய பிரதேச விவசாய அபிவிருத்திக்கும் அவசியமாகும்.

## 4.4. புதுவெளி-கொண்டச்சிப் பிரதேசம்

புதுவெளி-கொண்டச்சிப்பிரதேசத்தின் சமூக-பொருளாதார அடிப்படைகளை தெளிவாக அறிந்து கொள்வதற்கு முசலியின் வடபுற நீர்ப்பாசனத் தொகுதியின் கட்டம், கட்டமான நீர்ப்பாசன ஒழுங்குகளை சரியாக விளங்கிக் கொள்ள வேண்டியது அவசியமாகும். புதுவெளி-கொண்டச்சிப்பிரதேசம் மேற்குறிப்பிட்ட நீர்ப்பாசனத் தொகுதியின் மூன்றாம் கட்டத்தில் காணப்படுகின்றது (படம் 10). இம்மூன்றாம் கட்டத்தை வடக்கிலிருந்து தெற்கு நோக்கித் தொடர்ச்சியாகக் காணப்படும் கிராமக்குளங்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இக்கிராமக் குளத்தொகுதி வடக்கே இலந்தைமோட்டைக் குளத்திலிருந்து தெற்கே கொண்டச்சிக்குளம் வரை தொடர்ச்சியாகக் காணப்படுகின்றது. மழை காலத்தில் இக்குளத்தில் நீர் தேக்கி வைக்கப்பட்டிருக்கும். கால்வாய்கள் மூலமும் நீர்ப்பாசன நீரைப்பெறக் கூடிய முறையில் முன்னர் திட்டமிடப்பட்டு இருந்தது. அக்காலத்தில் இந்நீர்ப்பாசனத் தொகுதி ஒரு வெற்றிகரமான விவசாயப் பிரதேசமாகக் காணப்பட்டது.

பிற்கால முசலிப் பிரதேசப் புறக்கணிப்பு இப்பிரதேச நீர்ப்பாசன திட்டங்களின் அழிவிற்கும், பொருளாதார அபிவிருத்தியின்மைக்கும் காரணமாயிற்று.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படம் 10 முசலியின் புதுவெளி-கொண்டச்சிப் பிரதேசம்




மூலம்: வெளிக்கள ஆய்வு. 1996. இலங்கை இடவிளக்கப்படம். 1973.



## அட்டவணை-8

**புதுவெளி-கெண்டச்சிப் பிரதேசம்: குடிசனமும் விவசாயமும்.**

| கிராமம் | குடும்பங்கள் | குளங்கள் | குளப் பரப்பு | நெற பரப்பு |
|---|---|---|---|---|
| 1. கொண்டச்சி | 250 | 1. பல்சோதி கண்டல் | 24 | 26 |
| 2. த.மு. கட்டு | 150 | 2. கிளவந்தால் மோட்டை | 12 | 18 |
| 3. கூளாங்குளம் | 225 | 3. நவடந்தாழ்வு | 16 | 32 |
| 4. புதுவெளி | 200 | 4. புளியடி மோட்டை புலவு | 20 | 82 |
| 5. சிலாவத்துறை | 180 | 5. செம்மண் குண்டு | 75 | 60 |
| 6. கொக்குப்படையான் | 60 | 6. கொண்டச்சி | 240 | 175 |
| 7. கஜு வத்தை | 200 | 7. கொக்குப்படையான் குளம் | 120 | 140 |
| | | 8. இலக்கரிகுளம் | 60 | 72 |
| | | 9. தம்பட்ட முதலி கட்டு | 150 | 260 |
| | | 10. பெரிய நொச்சி | 75 | 125 |
| | | 11. கூளாங்குளம் | 105 | 145 |
| | | 12. பாலையடி சிறுக்குளம் | 16 | 29 |
| | | 13. புதுவெளிக்குளம் | 130 | 108 |
| | | 14. சடையப்பன் குளம் | 48 | 64 |
| | | 15. இலந்தை மோட்டை | 18 | 48 |
| மொத்தம் | 1265 | | 1109 | 1384 |

*மூலம்:* இலங்கை ஓரங்குலப் படங்களும் வெளிக்கள ஆய்வும்.

## அட்டவணை-9

**புதுவெளி-கொண்டச்சிப் பிரதேசம் : நிலப்பயன்பாடு.**

| நிலப் பயன்பாடு | பரப்பளவு (ஏக்கர்) | வீதாசாரம் (%) |
|---|---|---|
| குளப்பரப்பு | 1109 | 31.5 |
| நெல்பரப்பு | 1378 | 39.0 |
| நெற்செய்கைக்குப் பொருத்தமான நிலம் | 240 | - |
| மேட்டுநிலப் பயிர் பரப்பு | 60 | 6.8 |
| சேனைச் செய்கைநிலப் பரப்பு | 85 | 2.4 |
| மேய்ச்சல் நிலப் பரப்பு | 647 | 18.4 |
| மொத்த நிலப்பரப்பு | 3520 | 100 |

*மூலம்:* இலங்கை ஓரங்குலப் படங்களும் வெளிக்கள ஆய்வும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புதுவெளி–கொண்டச்சிப் பிரதேசத்தின் மொத்தப் பரப்பு 3520 ஏக்கராகும். இம்மொத்தப் பரப்பின் மூன்றில் ஒரு பகுதி குளமாகக் காணப்படுகின்றது. ஏறக்குறைய 40% மான பகுதி நெல்விவசாயத்திற்கு உட்பட்டிருந்தது. இங்கு நீர் பற்றாக்குறை பொதுவான பிரச்சினையாகக் காணப்பட்டது. உதாரணமாக சடைப்பன் குளம், கூளாங்குளம், கொண்டச்சிக் குளங்களுக்கான நீர்ப்பாசனக் கால்வாய் (படம் 6 ஐப் பார்க்க) அதிகமான காலங்களில் நெற்செய்கைக்குத் தேவையான நீரைக் கொடுக்கவில்லை. அதனால், கிராமக் குளங்களின் மட்டுப்படுத்தப்பட்ட நீரைப் பயன்படுத்தியே விவசாயிகள் தமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர்.

ஆயினும், புதுவெளி–கொண்டச்சிப் பிரதேசத்தின் சிறப்பான அம்சங்களில் ஒன்று, இப்பிரதேசம் கடல்வரை வியாபித்துக் காணப்படுகின்றமையாகும். ஏறக்குறைய 4 மைல் கடற்கரையினைக் கொண்ட இப்பிரதேசத்தில் கடல்சார் நடவடிக்கைகளில் மக்கள் ஈடுபட்டனர். வரலாற்று ரீதியாக இக்கடற்கரைப் பிரதேசம் முத்துக்கும் சங்கிற்கும் பிரபல்யமானதாகக் காணப்பட்டது. சங்கின் முக்கியத்துவம் இன்றும் இக்கடல் வலயத்தில் காணப்படுகின்றது. ஆனால் அதைவிட கரையோர, ஆழ்கடல் மீன்பிடி வெகுவாக இப்பிரதேசத்தில் வளர்ச்சியுற்றுக் காணப்படுகின்றது. இப்பிரதேசத்தில் அமைந்துள்ள சிலாவத்துறை முக்கியமான மீன்பிடி மையமாக அண்மைக் காலத்தில் வளர்ச்சியுற்றது. வெளியூர் மீனவர்களும் பருவ கால மீன்பிடிக்காக இப்பிரதேசம் வந்து சென்றார்கள் (படம் 11 ஐப் பார்க்க).

புதுவெளி–கொண்டச்சி சமூக–பொருளாதாரப் பிரதேசத்தில் பல தனித்துவமான கிராமச் செறிவுகளும் காணப்பட்டன. உதாரணமாக, இப்பிரதேசத்தில் புதுவெளி, கூழாங்குளம், தம்பட்டமுதலிகட்டு ஆகிய மூன்று கிராமங்களின் சமூக முறை தனித்துவமானதாகும். இம்மூன்று கிராமங்களும் ஒரு தனித்துவமான நீர்ப்பாசனத் தொகுதி முறையுள் வருகின்றன. இவற்றின் கிராமக்குளங்கள், நெல்நிலங்கள், குடியிருப்புகள் தொடர்புற்ற வகையில் காணப்பட்டன. இப்பொருளாதாரப் பொதுத் தன்மை சமூக அமைப்பிலும் பிரதிபலிப்பைக் காட்டுகின்றன. இம்மூன்று கிராம மக்களும் குடும்ப அடிப்படையிலும், சமூக பழக்க வழக்கங்களிலிலும் பல ஒத்த பண்புகளைக் கொண்டிருந்தன.

மேலே குறிப்பிடப்பட்ட கொண்டச்சி பொருளாதார–சமூக கிராமத் தொகுதியிலிருந்து வேறுபட்டுக் காணப்பட்டது. தனித்துவமான சமூக பழக்கவழக்கங்கள் கொண்டச்சியில் காணப்பட்டன. கொண்டச்சிக்கும்



படம் 11 முசலி சிலாவத்துறையின் வர்த்தக மையங்கள்






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேற்குறிப்பிட்ட மூன்று கிராமத் தொகுதிக்கும் இடையில் கொக்குப்படையான் என்ற தமிழ்க் கிராமம் அமைந்திருந்தது. கொக்குப்படையானில் 60 குடும்பங்கள் வாழ்ந்தன. இதைவிட சிலாவத்துறை குடியிருப்பிலும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை கொண்ட தமிழ் மக்களும் வாழ்ந்தார்கள்.

இப்பிரதேசத்தின் சமூக அமைப்பிலுள்ள மற்றுமொரு சிறப்பம்சம் இப்பிரதேசத்தில் வாழ்ந்த சிங்கள மக்களாகும். சிலாவத்துறை சார்ந்த கடற்கரையோரம் மிக நீண்ட காலமாக தென்பகுதி சிங்கள மீனவர்களின் பருவகால மீன்பிடிப் பிரதேசமாக இருந்து வந்துள்ளது. கடற்கரையில் தற்காலிக சிங்கள மீனவக் குடிசைகள் பருவத்திற்குப் பருவம் தோன்றுவதும், மறைவதும் இப்பிரதேசத்தில் வழமையாகக் காணப்பட்டது. 1975 ஆம் ஆண்டிற்கு பிறகு மரமுந்திரிகைச் செய்கையோடு நூற்றுக்கணக்கான சிங்கள மக்கள் இப்பிரதேசததில் குடியேற்றப்பட்டார்கள். இம்மக்களின் வாழ்க்கை முறை இப்பிரதேசத்தின் ஏனைய மக்கிளிலிருந்து வேறுபட்டுக் காணப்பட்டது. இம்மக்களின் வாழ்விட பொருளாதாரப் பிரதேசம் உள்ளூர் கிராமங்களிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டு அமைக்கப்பட்டிருந்தது. உள்ளூர் சிங்கள மக்களோடு தொடர்பற்றவர்களாக இக்குடியிருப்பாளர்கள் வாழ்ந்து வந்தார்கள்.

இப்பிரதேசத்தின் வளங்கள் திட்டமிட்டு அபிவிருத்தி செய்யப்படுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. விவசாயத்திற்கான நீர்ப்பாசன நீர் கிடைப்புத் தன்மை நிச்சயப் படுத்தப்பட்டால், ஏறக்குறைய ஆயிரம் ஏக்கர் நிலத்தில் நெல் விவசாயம் இரு பருவத்திலும் வெற்றிகரமாகச் செய்கை பண்ண முடியும். இன்னும் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலம் நெல் விவசாயத்தின் கீழ் புதிதாக கொண்டுவரவும் முடியும். இப்பிரதேசத்தின் தென்பகுதி மேய்ச்சல் நில விருத்திக்கும், மிருக வளர்ப்பிற்கும் மிகவும் பொருத்தமான பிரதேசமாகும். மறுபுறத்தில் கடல்வளத்தை மேலும் விருத்தி செய்யக் கூடிய எல்லா வாய்ப்புக்களும் இங்கு காணப்படுகின்றன.

## 4.5. மணற்குளம்-முசலிப்பிரதேசம்

இப்பிரதேசம் ஏறக்குறைய 3026 ஏக்கர் பரப்பைக் கொண்டது. இப்பிரதேசத்தில் விவசாயமும், கடல்வளத் தேட்டமும் முக்கிய பொருளாதார நடவடிக்கைகளாகக் காணப்பட்டன. விவசாயத்தில் நெல் விவசாயமே முக்கியமாக






*மூலம்: வெளிக்கள ஆய்வு, 1996. இலங்கை இடவிளக்கப்படம். 1972.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அட்டவணை-10

**மணற்குளம்-முசலிப் பிரதேசம்: குடிசனமும் விவசாயமும்.**

| ஊர் | குடும்ப எண்ணிக்கை | குளங்கள் பரப்பு | குளப் பரப்பு | நெற் |
|---|---|---|---|---|
| 1. முசலி | 45 | 1. சின்ன நொச்சி | 10 | 52 |
| 2. வாரிவெளி | 32 | 2. முசலி | 38 | 86 |
| 3. சிறுக்குளம் | 65 | 3. கிட்டயான் குளம் | 4 | 4 |
| 4. மேத்தன் வெளி | 65 | 4. வாரிவெளி | 56 | 142 |
| 5. பண்டாரவெளி | 500 | 5. சிறுக்குளம் | 34 | 64 |
| 6. மணற்குளம் | 88 | 6. மேத்தன்வெளி | 66 | 80 |
| 7. இலந்தைக் குளம் | 45 | 7. பண்டாரவெளி | 142 | 86 |
| 8. அரிப்பு | 400 | 8. மணற்குளம் | 126 | 65 |
| | | 9. இலந்தைக்குளம் | 108 | 145 |
| | | 10. பேமறித்தான் குளம் | 54 | 16 |
| | | 11. திமில குளம் | 10 | 6 |
| | | 12. அந்தோனி மெலிஞ்சி | 48 | 76 |
| | | 13. கொக்குமடு | 14 | 8 |
| | | 14. சோலைக்குளம் | 12 | - |
| | | 15. அளவாக்குளம் | 14 | 8 |
| | | 16. கள்ளிக்குளம் | 8 | 12 |
| | | 17. கைலங்குளம் | 18 | 24 |
| | | 18. பாலையடிக்குளம் | 6 | 8 |
| | | 19. தானாப்பாடகுளம் | 7 | 12 |
| | | 20. கோனாங்குளம் | 12 | 30 |
| | | 21. தாமரைக்குளம் | 4 | 9 |
| | | 22. கோரைக்குளம் | 6 | 4 |
| | | 23. மூத்திரப்பான் குளம் | 4 | 8 |
| மொத்தம் | 1240 | | 801 | 945 |

*மூலம்:* இலங்கை ஓரங்குலப் படங்களும் வெளிக்கள ஆய்வும்.



## அட்டவணை-11

**மணற்குளம்-முசலிப் பிரதேசம்: நிலப்பயன்பாடு**

| நிலப் பயன்பாடு | பரப்பளவு (ஏக்கர்) | வீதாசாரம் (%) |
|---|---|---|
| குளப்பரப்பு | 801 | 26.5 |
| நெற்பரப்பு | 945 | 31.2 |
| நெற்செய்கைக்குப் பொருத்தமான நிலம் | 650 | 21.5 |
| மேட்டுநிலப் பயிர் பரப்பு | 120 | 4.0 |
| சேனைச் செய்கை நிலப் பரப்பு | 160 | 5.3 |
| மேய்ச்சல் நிலப் பரப்பு | 350 | 11.5 |
| மொத்த நிலப்பரப்பு | 3026 | 100 |

*மூலம்:* இலங்கை ஓரங்குலப் படங்களும் வெளிக்கள ஆய்வும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருந்தது. ஏறக்குறைய 1000 ஏக்கர் நிலம் நெற்செய்கைக்குட்பட்டிருந்தது. இந்நெற்செய்கை நிலங்கள் 22 கிராமியக் குளங்களிலிருந்து நீர்ப்பாசன நீரைப் பெற்றன.

முசலியின் வட பிரதேச நீர்ப்பாசனத் தொகுதியின் இறுதிக் கட்டத்தில் மணற் குளம்-முசலிப் பிரதேசம் காணப்பட்டது. இப்பிரதேச விவசாயப் பொருளாதாரத்தின் தனித்துவத்தை சரியாக விளங்கிக் கொள்ள படம் 12 இன் விவசாய பொருளாதார அடிப்படைகளை சற்றுக் கவனமாக நோக்க வேண்டும். இப்பிரதேசத்தில் கிழக்குப் புறமாக 6 கிராமக் குளங்கள் தொடர்ச்சியாகக் காணப்பட, இவ் ஆறு குள நீர்ப்பாசனத்திற்குட்பட்ட விவசாய நிலங்களும் அந்நிலங்களில் விவசாயத்தில் ஈடுபடுகின்ற மக்களின் குடியிருப்புக்களும் தொடர்ச்சியாக அமைந்து ஒரு தனித்துவமான சமூக-பொருளாதார அலகாக இப்பிரதேசம் உருவாகக் காரணமாயிற்று. சமூக-பொருளாதார அலகு முழு முசலிப் பிரதேசத்தினதும் தனித்துவமான அலகாக இருப்பதற்குப் பொருத்தமான வகையில் இப்பிரதேசத்தின் நீர்ப்பாசனத் திட்ட ஒழுங்குகள் ஆரம்பத்தில் செய்யப்பட்டுள்ளன. அதன்படி மேலே குறிப்பிடப்பட்ட 6 கிராமக் குளங்களும் இத்திக்குளக்கால்வாய், பெருங்காட்டுச் சிறுக்குளக் கால்வாய் ஆகிய நீர்ப்பாசனக் கால்வாய்களின் மூலம் நெற்செய்கைக்குத் தேவையான மேலதிக நீரைப் பெறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன. இத்திட்டம் ஆரம்ப காலங்களில் மிகச் சிறப்பான முறையில் நடைமுறையில் இருந்திருக்க வேண்டும்.

ஆனால் ஏனைய பிரதேசங்கள் பற்றிய விளக்கங்களில் குறிப்பிட்டதைப் போல் மணற்குளம்-முசலிப் பிரதேசமும் முசலிப் பிரதேச நீர்ப்பாசனத் திட்டத்தின் உச்சப் பயனைப் பெறவில்லை. இப்பிரதேசத்தில் கிணற்று நீர்ப்பாசனம் பயன்படுத்தப்பட்டது. நில அடித்தள நீர் வசதி இப்பிரதேசத்தில் கிடைக்கக் கூடியதாக இருந்ததே இதற்குக் காரணமாகும். ஒப்பீட்டு ரீதியாக இப்பிரதேச நெல் விவசாயம் வெற்றிகரமாகக் காணப்பட்டது. இப்பிரதேச மக்களின் வாழ்க்கைத் தரமும் உயர்ந்ததாகக் காணப்பட்டது.

மணற்குளம்-முசலி சமூக-பொருளாதாரப் பிரதேசத்திலும் 7 முஸ்லிம் கிராமங்கள் காணப்பட்டன. அவை இலந்தைக்குளம், மணற்குளம், பண்டாரவெளி, மேத்தன்வெளி, சிறுக்குளம், வாரிவெளி, முசலி ஆகியவைகளாகும். இக்கிராமத்தவர்கள் மிக நெருங்கிய குடும்ப உறவுகளைக்



கொண்டிருந்தனர். இப்பிரதேசத்தின் பழையதும் பெரியதுமான முஸ்லிம் கிராமம் பண்டாரவெளியாகும். இப்பிரதேசத்திலுள்ள ஏனைய கிராமத்தவர்கள் பண்டாரவெளியோடு குடும்பத் தொடர்புடையவர்களாகக் காணப்பட்டனர்.

இப்பிரதேச முஸ்லிம்களின் பொருளாதார நடவடிக்கைகளில் நெல் விவசாயம் முக்கிய இடத்தினைப் பெற்றாலும் மேட்டுநிலப் பயிர்ச் செய்கையும், சேனைச்செய்கையும், கரையோர மீன்பிடியும், பருவகால மற்றும் பகுதி நேரத் தொழிலாகக் காணப்பட்டன.

மணற்குளம்-முசலிப் பிரதேசத்தின் மற்றுமொரு தனித்துவ அம்சம் இப்பிரதேசத்தில் காணப்படுகின்ற வரலாற்றுப் புகழ் மிக்க கத்தோலிக்க தமிழ்க் கிராமமாகும். இக்கிராமம் அரிப்பு என்று அழைக்கப் பட்டது. முத்துக்குளிப்புடனான தொடர்பை இக்கிராமத்தின் பெயர் குறிக்கின்றது. இக்கிராமம் பிரபல்யமான மீன்பிடிக் கிராமமாகக் காணப்படுகின்றது. இக்கிராமம் ஏனைய கிறிஸ்தவக் கிராமங்களோடு குடும்ப, சமூக, சமய அடிப்படையில் தொடர்பினைக் கொண்டது. அதுமட்டுமன்றி இப்பிரதேச முஸ்லிம்களோடும் மிக இணக்கமான உறவுகளைக் கொண்டிருந்த மக்களாகவும் அரிப்பு கிராம தமிழ் மக்கள் காணப்பட்டார்கள்.

மணற்குளம் முசலிப் பிரதேசம் பொருளாதார ரீதியாகப் பல வளங்களைக் கொண்டிருந்தது. நில வளம், நில அடித்தள நீர் வளம் இப்பிரதேசத்தில் காணப்பட்டது. விவசாயப் பொருளாதார வளங்கள் முறைப்படி திட்டமிடப்பட்டு விருத்தி செய்யப்பட்டால் இப்பிரதேசத்தின் பொருளாதாரம் மேலும் விருத்தியடைவதற்கு வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. இப்பிரதேசத்தில் பிரதான நீர்ப்பாசனத் திட்டங்களோடு இணைக்கப்படாத முறையில் பல குளங்கள் காணப்படுகின்றன. அவை சோலைக்குளம், தானாப்பாகுளம், கள்ளிக்குளம், கோணாங்குளம், கொக்குமடு, அளவாக்குளம், கோரைக்குளம், தாமரைக்குளம் ஆகியவையாகும். இவை பிரதான நீர்ப்பாசனத் திட்டத்தோடு இணைக்கப்பட்டால் புதிய நிலங்களை விவசாயச் செய்கைக்குக்கீழ் கொண்டு வரக்கூடிய வாய்ப்புகள் எதிர்காலத்தில் காணப்படுகின்றன.

## 4.6 மறிச்சுக்கட்டிப் பிரதேசம்:

அத்தியாயம் 3 இல் வியாயடி நீர்ப்பாசனத் திட்டத்திற்குட்பட்ட பிரதேசம் என்று விளக்கப்பட்ட பிரதேசமே இங்கு மறிச்சுக்கட்டி பிரதேம் என்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அழைக்கப்படுகின்றது. மறிச்சுக்கட்டி சமூக–பொருளாதாரப் பிரதேசம் 3950 ஏக்கர் மொத்த பரப்பைக் கொண்டது. இப்பிரதேசத்தின் தெற்காக மோதரகம ஆறும் வடக்கிலும், கிழக்கிலும் அடர்ந்த காடும் எல்லைகளாகக் காணப்படுகின்றன.

இங்கு நெல், சேனை, மேட்டுநில பயிர்கள் செய்கை பண்ணப்பட்டன. நெல் விவசாயம் பருவகால மழையையும், குள நீர்ப்பாசனத்தையும். கால்வாய் நீர்ப்பாசனத்தையும் நம்பி செய்கை பண்ணப்பட்டது. 17 குளங்கள் இப்பிரதேசத்தில் காணப்பட்டன. மோதரகம ஆற்றில் இருந்து கால்வாய் நீர்ப்பாசனம் செய்யப்பட்டது. இப்பிரதேசத்தில் மொத்தமாக 1670 ஏக்கர் நிலம் நெல் விவசாயத்திற்குள்ளும் இன்னும் 850 ஏக்கர் நிலம் மேலதிகமாக நெற்செய்கைக்குள் கொண்டுவரக்கூடிய நிலையிலும் காணப்பட்டன. இப்பிரதேசத்தின் நெற்செய்கையில் உச்சப் பயன்பாட்டைப் பெறக்கூடிய நீர்ப்பாசன வசதி வாய்ப்புகள் இல்லா விட்டாலும் பயிர் செய்யக்கூடியதாக இருந்த நிலத்தில் பயனுள்ள விளைவுகளைப் பெறக்கூடிய தன்மை காணப்பட்டது.

இப்பிரதேசத்தின் பரந்த நிலப்பகுதி சேனைச்செய்கைக்கும், மேட்டுநிலப்பயிர்ச் செய்கைக்கும் பொருத்தமானதாகக் காணப்பட்டது. இப்பிரதேசத்தில் மறிச்சுக்கட்டி, பாலைக்குளி, கரடிக்குளி ஆகிய கிராமங்கள் காணப்பட்டன. கிராம நீர்ப்பாசனக் குளங்கள் இம்மக்களின் விவசாய நடவடிக்கைகளுக்கு நீரை வழங்கின. மோதரகம ஆற்றிலிருந்து வரும் நீர்ப்பாசனக் கால்வாய் இலந்தைக்குளம், ஆலாச்சிக்குளம், பாலைக்குளிக்குளம் வழியாக மறிச்சுக்கட்டிக்குளம் வரையான நெல் நிலங்களுக்கு நீர்ப்பாசன நீரை வழங்கியது.

கடல்வளப் பொருளாதாரத்தை எடுத்துக் கொண்டால் வரலாற்றுக் காலத்தில் முத்தும் பிற்காலத்தில் மீன்பிடி, சங்கு குளித்தல் போன்ற கடல்வள நடவடிக்கைகளும் இப்பிரதேசத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்தன. கடல்வள தொழில் நடவடிக்கையோடு கரடிக்குளியும், முள்ளிக்குளம் என்ற தமிழ்க்கிராமமும் ஈடுபட்டிருந்தன.

முள்ளிக்குள தமிழ் கிராமமத்தின் முக்கியத்துவம் பற்றியும் சில வார்த்தைகள் குறிப்பிட வேண்டியது அவசியமாகும். முள்ளிக்குளம் தமிழ் கத்தோலிக்கக் கிராமமாகும். இப்பிரதேச முஸ்லிம் கிராமங்களுக்கு சமமான








தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அட்டவணை-12

**மறிச்சுக்கட்டிப் பிரதேசம்: குடிசனமும் விவசாயமும்**

| கிராமம் | குடும்பம் | குளங்கள் | குளப் பரப்பு | நெற் பரப்பு |
|---|---|---|---|---|
| 1. மறிச்சுக் கட்டி | 200 | 1. வியாயடிக்குளம் | 76 | 120 |
| 2. பாலைக்குளி | 145 | 2. கூமாகுளம் | 32 | 160 |
| 3. கரடிக்குளி | 190 | 3. ஆத்திக்குழி | 16 | 140 |
| 4. முள்ளிக்குளம் | 160 | 4. ஆலந்தாகுளம் | 8 | 12 |
| | | 5. ஆலாச்சிக்குளம் | 28 | 62 |
| | | 6. பாலைக்குழி குளம் | 76 | 118 |
| | | 7. புளியங்குளம் | 74 | 240 |
| | | 8. அடைப்பான்குளம் | 22 | 12 |
| | | 9. கோரை மோட்டை | 24 | 125 |
| | | 10. கரடிக்குழி குளம் | 28 | 85 |
| | | 11. மறிச்சுக்கட்டி குளம் | 52 | 125 |
| | | 12. மோட்டயகுளம் | 16 | 20 |
| | | 13. சுண்டிக்குழி | 15 | 16 |
| | | 14. வண்ணாமோட்டை | 12 | 30 |
| | | 15. பால் குளம் | 12 | 25 |
| | | 16. கத்தான் கண்டல் | 120 | 300 |
| | | 18. இலந்தைக்குளம் | 42 | 60 |
| மொத்தம் | 695 | | 6531 | 650 |

*மூலம்:* **வெளிக்கள ஆய்வு, 1991**

## அட்டவணை-13

**மறிச்சுக்கட்டிப் பிரதேசம்: நிலப்பயன்பாட்டுப் பரம்பல்.**

| நிலப் பயன்பாடு | பரப்பளவு (ஏக்கர்) | வீதாசாரம் (%) |
|---|---|---|
| குளப்பரப்பு | 670 | 17.0 |
| நெற்பரப்பு | 1670 | 42.0 |
| நெற்செய்கைக்குப் பொருத்தமான நிலம் | 850 | 21.5 |
| மேட்டுநிலப் பயிர் பரப்பு | 450 | 11.4 |
| சேனைச்செய்கைநிலப் பரப்பு | 70 | 2.0 |
| மேய்ச்சல் நிலப் பரப்பு | 240 | 6.0 |
| மொத்த நிலப்பரப்பு | 3950 | 100 |

*மூலம்:* **இலங்கை ஓரங்குலப் படங்களும் வெளிக்கள ஆய்வும்.**



வரலாற்றுக் கலாசார, பாரம்பரியங்களைக் கொண்ட கிராமமாக இது காணப்பட்டது. முள்ளிக்குள தமிழ் மக்களுக்கும் இப்பிரதேசத்தில் வாழ்கின்ற ஏனைய கிராம முஸ்லிம்களுக்கும் இடையில் அன்னியோன்ய உறவு மிக நீண்ட காலமாக இருந்து வந்தது. 1985ஆம் ஆண்டு இலங்கை இராணுவப் படையெடுப்பால் பாதிக்கப்பட்ட முள்ளிக்குள தமிழ் மக்களுக்கு முஸ்லிம் கிராமத்தவர்கள் பாதுகாப்பையும், ஏனைய அடிப்படைத் தேவைகளையும் வழங்கினர். நாம் மதத்தால் வேறுபட்டிருந்தாலும் மொழியில் ஒன்றுபட்டவர்கள் என தமிழர்களும், முஸ்லிம்களும் மாறிமாறிச் சொல்லிக்கொள்கின்ற வழமை இப்பிரதேசத்தில் காணப்பட்டது என்று கூறப்படுகின்றது.

இப்பிரதேசத்தில் மற்றுமொரு சிறப்பு யானை பிடித்தலாகும். இதில் முஸ்லிம்கள் ஈடுபட்டார்கள். இப்பிரதேசத்தின் யானை பிடித்தலுடன் தொடர்புடைய விடயங்கள் பின்னிணைப்பில் விளக்கப்பட்டுள்ளன.

புவியியலால் ஏனைய நாகரீகப் பிரதேசங்களிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டதாக மறிச்சுக்கட்டிப் பிரதேசம் காணப்பட்டாலும் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான எல்லா வளங்களையும் கொண்டு காணப்பட்டது. போக்குவரத்து விருத்தியின் மூலமாக இப்பிரதேசத்தின் தனிப்படுத்தப்பட்ட தன்மை நீக்கப்படுவதோடு உள்ளூர் பொருளாதார வளர்ச்சிக்கான ஊக்குவிப்புக்கள் செய்யப்படுமானால், இப்பிரதேசம் இலங்கையின் மிக வளமான பிரதேசங்களில் ஒன்றாக மாறக் கூடிய உள்ளார்ந்த வளங்களைத் தன்னகத்தே கொண்டு காணப்படுகின்றது.

முடிவாக, முசலியில் அடையாளம் காணப்பட்ட ஐந்து பிரதேங்களும் தனித்துவமான சமூக-பொருளாதார பண்புகளைக் கொண்டிருந்தமையை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இப்பிரதேசப் பொருளாதாரங்களின் உள்ளார்ந்த சிறப்புத் தன்மைகள் புறக்கணிக்கப்பட்டதால் இப்பிரதேசங்கள் அடைந்திருக்க வேண்டிய பொருளாதார வளர்ச்சியை அடைய முடியாது போயிற்று என்பதுவும் குறிப்பிடத்தக்கது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 5. இலங்கையின் இனப்பிரச்சினையும் முசலிப் பிரதேசமும்

முசலி முஸ்லிம்கள் தமது பூர்வீக இடங்களில் இப்போது இல்லை. இம்மக்கள் 1990ஆம் ஆண்டு பலவந்தமாக தமது சொந்த இடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். ஏன் முஸ்லிம்கள் முசலியிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள்?, எத்தகைய அரசியல் அத்துடன் இராணுவ சூழ் நிலைகள் இம்மக்களின் பலவந்த வெளியேற்றத்திற்கு காரணமாக இருந்தன?, வெளியேற்றப்பட்டதிலிருந்து கடந்த ஏழு வருடங்களாக ஏன் தமது பாரம்பரிய இடங்களுக்குத் திரும்பிச் செல்ல முடியாத நிலையில் இம் மக்கள் காணப்படுகின்றார்கள்? போன்ற வினாக்களுக்குத் தெளிவான விளக்கங்கள் தேவைப்படுகின்றன. இதில் தெளிவு பெறும் நோக்கில் முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றத்திற்கு முந்திய முசலிப் பிரதேசத்தின் அரசியல், இன உறவு, இராணுவ மாற்றங்களை அறிய வேண்டியது அவசியமாகும். இவ்வத்தியாயம் முசலிப்பிரதேச மட்டத்தில் இலங்கையின் இனப் பிரச்சினையின் பிரதிபலிப்புக்களை கவனமாகப் பரிசீலிக்கின்றது.

## 5.1 முசலியில் இன உறவு

முசலியில் முஸ்லிம், தமிழ், சிங்களம் ஆகிய மூவின மக்களும் மிக நெடுங்காலமாக வாழ்ந்து வந்தார்கள். இனங்களுக்கிடையிலான பொருளாதார வளத்திற்கான போட்டியும் இனப்பிரச்சினையைத் தூண்ட முடியும். மாறாக, முசலியில் இனங்களுக்கிடையில் பொருளாதார வாய்ப்பிற்கான போட்டியும், முரண்பாடும் குறைவாகக் காணப்பட்டன. உதாரணமாக, முசலியில் வாழ்ந்த மக்கள் குழுக்களுக்கிடையில் இன இணக்கப்பாடும், ஒற்றுமையும் காணப்பட்டன. முஸ்லிம்களில் மிகப் பெரும்பான்மையினர் விவசாயிகளாவர். தமிழர்கள் கரையோர மீன்பிடியில் ஈடுபட்டார்கள். சிறிய தொகையினரான சிங்கள மக்கள் பருவகால மீனவர்களாகவும், மரமுந்திரிகைச் செய்கைக் குடியேற்றக்காரர்களாகவும் இருந்தார்கள். பொருளாதார ரீதியாக மட்டுமல்லாமல் அரசியல் ரீதியாகவும் முசலிப்பிரதேச மட்டத்தில் இன முரண்பாடுகள் மிகக் குறைவாகவே காணப்பட்டன.



### முஸ்லிம்-தமிழ் உறவு

முஸ்லிம்-தமிழ் உறவு மிகவும் போற்றத்தக்க வகையில் முசலியில் காணப்பட்டது. முஸ்லிம்களும் தமிழ் மக்களும் தொழில் ரீதியாக பொருளாதார கொடுக்கல் வாங்கல் அடிப்படையில் மிக நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்தார்கள்.

இப்பிரதேச தமிழ்-முஸ்லிம் மக்களின் ஒற்றுமையைத் தீர்மானித்த காரணிகளில் முக்கியமானது இவ்விரு மக்களினதும் முரண்பாடற்ற தனித்துவமான பொருளாதார நடவடிக்கைகளாகும். தமிழ்க் கிராமங்கள் புவியியல் ரீதியாக கரையோரத்தை அண்டிக் காணப்பட்டன. கடல்வள ஈடுபாடும், மீன்பிடியும் இம்மக்களின் பிரதான பொருளாதார நடவடிக்கைகளாகக் காணப்பட்டன. முஸ்லிம் கிராமங்களோ உள்நாடு நோக்கி குள நீர்ப்பாசன அடிப்படையிலான நெல் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு காணப்பட்டன. முஸ்லிம்-தமிழ் மக்களின் இத் தனித்துவமான பொருளாதார உறவுகள் மக்களுக்கிடையில் பரஸ்பர பொருளாதார பண்டமாற்று அடிப்படையிலான இன உறவுக்குக் காரணமாக அமைந்தது. இவ்வின ஐக்கியத்தை முசலிப் பிரதேசம் முழுவதும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

முஸ்லிம்களும்-தமிழர்களும் பிரதேச மட்டத்தில் மாத்திரமல்லாமல் கிராம மட்டத்திலும் நெருங்கி உறவாடி வாழ்ந்தார்கள். இதற்கு பல உதாரணங்களைக் குறிப்பிடலாம். சிலாவத்துறை முஸ்லிம்-தமிழ் மக்கள் ஒன்றாக வாழ்ந்த கிராமமாகும். கொண்டச்சி, கூழாங்குளம் ஆகிய முஸ்லிம் கிராமங்களால் சூழப்பட்டுக் காணப்பட்ட கொக்குப்படையான் தமிழ்க் கிராமம் முஸ்லிம்-தமிழ்க் இணக்கப்பாட்டு அடிப்படைக்கு மற்றுமொரு உதாரணமாகும். முசலியின் வட-மேற்குப் புறத்தே அமைந்திருந்த பெரிய தமிழ்க் கிராமமான அரிப்பும், அதற்கு அண்மையில் காணப்பட்ட பண்டாரவெளி முஸ்லிம் கிராமமும் பொருளாதார பண்டமாற்று அடிப்படையில், மொழி, காலாசார அடிப்படையில் மிக இணக்கமாக வாழ்ந்த இரு சமூகங்களாகும். இதே உதாரணத்தை முள்ளிக்குள தமிழ் கிராமச் சூழலிலும் அவதானிக்கக் கூடியதாகவிருந்தது.

மொழித் தொடர்பும் முஸ்லிம்-தமிழ் இன உறவை உறுதியாக்கக் காரணமாக இருந்தது. முஸ்லிம்-தமிழ் மக்களின் பொது மொழியாக தமிழ் காணப்பட்டது. தமிழ் மொழி இவ்விரு இன மக்களையும் இணைத்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒருவரை மற்றவர் புரிந்து கொள்ள வைத்தது. பாடசாலைகளில், உயர் கல்விக் கூடங்களில் ஒன்றாகக் கற்க, வாய்ப்பளித்தது. இது ஒருவரோடொருவர் கலந்து பழகும் சந்தர்ப்பத்தைக் கொடுத்தது. இத்தகைய மொழி அடிப்படையிலான முஸ்லிம் தமிழ் மக்களுக்கிடையிலான சிநேக உறவு இன்று நேற்றல்ல மிக நீண்ட காலமாகக் காணப்பட்டிருக்கின்றது.

இச்சந்தர்ப்பத்தில் முஸ்லிம் தமிழ் மக்களுக்கிடையிலான மொழி ரீதியிலான தொடர்புக்கு ஒரு சிறந்த உதாரணமாக இந்நூற்றாண்டின் ஆரம்பகாலப் பகுதியில் பண்டாரவெளியில் வாழ்ந்த கவிப்புலமை கொண்ட க. நெய்னாமுகம்மது லெப்பை மரைக்காயர் புலவர் நொத்தாரிசு அவர்கள் வங்காலை தமிழ் கிராமத்தைச் சேர்ந்த தொப்பையின் மகன் பத்தேஸ் கூஞை என்பவரிடம் இரண்டு குதிரை கேட்டு அனுப்பிய சீட்டுக்கவியை குறிப்பிடலாம். அக்கவிதையில் சில அடிகளை இங்கு நினைவுகூர்வது பொருத்தமானதாகும்.

பார்த்தறிந்துற்றவன் கப்பநெய்னா வென்போன்
பார்மீதிலீன்ற சுதன்
பாவலன் சிரோன்மணி நெய்னாமுகம்மது
பாவலனாவதுடனே
நலமுடைய நிருபர் வளர் மன்னாரெனும் பதியா
நகரதற்குரிமையான்
நாடெலாம் விளையு செஞ்சாலிகளடங்கலும்
நயமுறச் சேர்ந்து மிகவாய்
நற்பேறு வங்காலையிற்காலகாலமும்
நன்மையுறவே வாழ்பவன்..........

அட்டலெட்சுமி வளரகத்தன் மத்தேஸ் கூஞை
அகமகிழயெழுதுநிருபம்
ஆண்குதிரையென்றி லொன்றானதாலன் னதற்
காம்பெரியதான பேடு
அழகிய நிறத்தோடு பழகிய குணத்துள்ள
வச்சுவமொன்றுங்கள் பால்



அனுதின முனது பேரினிறும் படியதாய்
அனுப்புக உமக்குமென்ன
ஆதியருள் பொருதினும் வாதிமிக வளரும்
ஆரோக்யமுறும் வாக்ய மிதுவே.

(விபரம்: என்.எம். ஹபீப் முஹம்மது)

## முஸ்லிம்-சிங்கள உறவு

சிலாவத்துறை கடற்கரையில் பருவ காலத்தில் மீன்பிடியில் ஈடுபட்டு வந்த சிங்கள மீனவர்கள் இப்பிரதேசத்தில் வாழ்ந்த முஸ்லிம்களுடன் இணக்கமாக வாழ்ந்து வந்தார்கள். சிலாவத்துறையில் சிங்கள மீனவர்களின் ஆழ்கடல் மீன்பிடி இப்பிரதேசத்தில் மீன்பிடியுடன் தொடர்புடைய சேவைத்துறை வளர்ச்சிக்குக் காரணமாகவிருந்தது. முஸ்லிம்கள் மீன்பிடியுடன் தொடர்புடைய வர்த்தக நடவடிக்கையிலும், மீன்பிடி உபகரணங்கள் விற்பனை வர்த்தகத்திலும் ஈடுபட இது தூண்டுகோலாகக் காணப்பட்டது. அதேபோல மரமுந்திரிகைக் குடியேற்றம் கொண்டச்சி முஸ்லிம்களுக்கு பகுதிநேர தொழில் வாய்ப்பினை அளித்தது. இப்புதிய விவசாயக் குடியேற்றத்திற்காக ஏற்படுத்தப்பட்ட வீதிகளும் ஏனைய பொது அபிவிருத்திகளும் இப்பிரதேச முஸ்லிம்–தமிழ் மக்களுக்கும் பயனுடையதாகக் காணப்பட்டன.

எனினும், இப்பிரதேசத்தில் நாளுக்கு நாள் எண்ணிக்கை ரீதியாக அதிகரித்து வந்த சிங்கள குடியிருப்பாளர்கள் இப்பிரதேச முஸ்லிம்–தமிழ் மக்களின் தனித்துவத்தில் பாதிப்பை ஏற்படுத்தி விடுவார்களோ என்ற அச்சம் இப்பிரதேச முஸ்லிம்–தமிழ் மக்கள் மத்தியில் பரவலாகக் காணப்பட்டது. என்றாலும், முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றம் வரை முஸ்லிம்–சிங்கள, தமிழ்–சிங்கள இன முரண்பாடு ஏதும் இப்பிரதேசத்தில் ஏற்பட்டிருக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## 5.2 இலங்கையின் இனப் பிரச்சினை

இன உறவு நிலை முசலிப்பிரதேசத்தில் சுமுகமாகக் காணப்பட்ட காலத்தில் இலங்கையில் நாளாந்தம் இன விரிசல்கள் கூடிக்கொண்டு சென்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் சிங்கள மக்களால் தமிழ் மக்களுக்கு எதிராகச் செய்யப்பட்ட வன்செயல்கள் தமிழ் மக்கள் ஆயுதப் போராட்டத்தில் குதிக்க காரணமாயிற்று. வடக்கிலும் கிழக்கிலும் இலங்கை அரசுக்கு எதிராக தமிழ் இளைஞர்கள் தமது ஆயுதப் போராட்டத்தை படிப்படியாக தீவிரப்படுத்தினார்கள். அதே நேரத்தில் இலங்கை அரசு தமிழ் இளைஞர்களின் ஆயுத அச்சுறுத்தலுக்குச் சமனாக அல்லது அதற்கு மேலாக தமது ஆயுத ஆதிக்கத்தை வடக்கு-கிழக்குப் பிரதேசத்தில் ஏற்படுத்த முயற்சித்து வந்தது.

இந்த சிங்கள-தமிழ் மேலாதிக்கப் போட்டியில் முஸ்லிம் சிறுபான்மையினர் பக்கம் சாரா நிலைப்பாட்டைக் கடைப்பிடித்த தன்மை காணப்பட்டது. முஸ்லிம்களின் இந்தப் பக்கம் சாரா நிலைப்பாடு ஒரு வகையான தற்காப்பு முயற்சியாக இருந்தது. தேசிய ரீதியாக சிங்களவரும், பிரதேச ரீதியாக தமிழரும் முஸ்லிம்களின் சகபாடிகளாக இருந்தனர். ஆனால் முஸ்லிம்களின் நிலைப்பாட்டில் இடத்திற்கிடம் வேறுபாடு காணப்பட்டது. குறிப்பாக, முஸ்லிமகள் செறிவாக வாழ்ந்த பிரதேசங்களில் அவர்கள் தமது பிரதேச தனித்துவத்தை நிச்சயப்படுத்த விரும்பிய போக்கையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அவ்வாறான முஸ்லிம் பிரதேச செறிவு கொண்ட முசலியில் இனப்பிரச்சினைக் காலகட்டத்தில் முஸ்லிம்களின் நிலைப்பாட்டை பரிசீலனை செய்ய வேண்டியது அவசியமானதாகும்.

வட மாகாணத்தில் இலங்கை இராணுவமும் தமிழ் ஆயுதக் குழுக்களும் நேரடியாக மோதிக்கொண்டன. இந்நிலை மன்னார் மாவட்ட முசலிப்பிரதேசத்திலும் காணப்பட்டது. முசலியிலான உள்நாட்டு யுத்தத்தில் முஸ்லிம்களும் ஈர்க்கப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்பட்டன. உள்நாட்டு யுத்தத்தில் எவ்வாறான நிலைப்பாட்டை முசலி முஸ்லிம்கள் கொண்டிருந்தார்கள் என்பதை முதலில் நோக்குவோம். அந்த அடிப்படையில் முசலிப் பிரதேசத்தில் இலங்கை இராணுவத்தின் செயற்பாடுகளை அறிய வேண்டியது அவசியமாகும்.

## 5.3 இலங்கை இராணுவம்

இலங்கை இராணுவ முகாம்கள் மன்னாரில் மிக நீண்ட காலமாகக் காணப்பட்டன. கரையோரப் பாதுகாப்பு நோக்கில் அவை ஏற்படுத்தப்பட்டன. அதில் முசலிப் பிரதேச சிலாவத்துறையில் அமைந்திருந்த இராணுவ முகாமும் ஒன்றாகும்.



சிலாவத்துறை இராணுவ முகாம் தமிழ் ஆயுதக் குழக்களின் நடவடிக்கைகளை இப்பிரதேசதில் மட்டுப்படுத்துவதற்காக மேலும் பலப்படுத்தப்பட்டது. அத்துடன் சிலாவத்துறை இராணுவ முகாம் மூலம் மன்னார்த் தீவு-புத்தளம் பிரதேசங்களுக்கு இடையிலான தரை மூல இராணுவ இணைப்பை ஏற்படுத்தி இப் பிரதேசத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவும் வில்பத்துக் காட்டுப் பகுதியில் தமிழ் ஆயுதக் குழுக்களின் அரசுக்கெதிரான அச்சுறுத்தலை பலவீனமடையச் செய்யவும் முசலிப் பிரதேச சிங்கள குடியேற்றங்களுக்கு பாதுகாப்பு வழங்கும் நோக்கத்திலும் மேலும் பலப்படுத்தப்பட்டது.

1960ஆம் ஆண்டளவில் 50 க்குக் குறைவான இராணுவத்தினரைக் கொண்டிருந்த சிலாவத்துறை இராணுவ முகாம் 1985 ஆம் ஆண்டில் 300 பேராகவும், 1990ல் 500 பேராகவும் அதிகரித்தது. இராணுவ முகாம் எண்ணிக்கை ரீதியாக மட்டுமல்லாமல் ஆயுத ரீதியாகவும் பலப்படுத்தப்பட்டது. அது மட்டுமன்றி, 1989ஆம் ஆண்டு மரமுந்திரிகை சிங்களக் குடியேற்றத் திட்டத்தில் ஒரு உப இராணுவ நிலையமும் அமைக்கப்பட்டு ஏறக்குறைய 100 இராணுவத்தினர் இக்குடியேற்றத்திட்டத்தில் பாதுகாப்பிற்காக அங்கே வைக்கப்பட்டிருந்தனர்.

முசலிப் பிரதேசத்தில் இவ்விராணுவ விஸ்தரிப்பு இப்பிரதேச மக்களைப் பலவகையில் அச்சுறுத்தியது. இவ்வச்சுறுத்தல் இப்பிரதேச தமிழ்-முஸ்லிம் மக்களிடையில் வித்தியாசமான முறையில் நோக்கப்பட்டது. முசலிப்பிரதேசத்தில் அமைவுற்றிருந்த இரண்டு இராணுவ முகாம்களும் முஸ்லிம்கள் செறிவாக வாழ்ந்த சூழலில் காணப்பட்டன. ஒரு கண்ணோட்டத்தில் இவ் இராணுவ விஸ்தரிப்பு தமிழ் ஆயுதக் குழுக்களின் அச்சுறுத்தலுக்கு எதிரான பாதுகாப்பை முஸ்லிம்களுக்கு அளிப்பதாகக் கருதப்பட்டது. ஆனால், முஸ்லிம்களில் பெரும்பான்மையினர் இக்கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. காரணம், முஸ்லிம்-இராணுவ உடன்பாடு முஸ்லிம்-தமிழ் உறவைப் பாதிக்கும் எனக் கருதினர். தமிழ் ஆயுதக் குழுக்கள் முஸ்லிம்களின் பக்கம் சாரா நிலைப்பாட்டை பிழையாகப் புரிந்து கொள்ளச் செய்யும் என்றும் கொள்ளப்பட்டது. ஆனால் இப்பிரதேச முஸ்லிம் மக்கள் தமது பக்கம் சாரா நிலைப்பாட்டில் மிக உறுதியாக இருக்க எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இச்சந்தர்ப்பத்தில் முசலிப் பிரதேச இராணுவ விஸ்தரிப்பால் இப்பிரதேச தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் ஏராளம். இராணுவப் படையெடுப்பின் போதும், தேடுதல் வேட்டையின் போதும் அப்பாவிப் பொதுமக்கள் குறிப்பாக தமிழ் மக்கள் இம்சிக்கப்பட்டார்கள். இராணுவ சித்திரவதைகளும், உயிர் இழப்புக்களும் தமிழ் மக்கள் மத்தியில் அடிக்கடி நிகழ்ந்து வந்தன.

## 5.4 தமிழ் ஆயுதக் குழுக்கள்

தமிழ் ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகள் முசலியில் பரவலாகக் காணப்பட்டன. இவ்வாயுதக் குழுக்களின் ஆதிக்கம் முசலியின் வட பிரதேசத்தில் தென் பிரதேசத்தை விடக் குறைவாகக் காணப்பட்டது.

ஆனால், முசலியின் தென் பகுதியின் (வியாயடிப் பிரதேசம்) நிலை வித்தியாசமானதாகக் காணப்பட்டது. வியாயடிப் பிரதேசத்தில் மூன்று முஸ்லிம் கிராமங்களும் ஒரு தமிழ் கிராமமும் காணப்பட்டன. இக் கிராமங்களின் பின் நிலப்பகுதி அடர்ந்த காடாகக் காணப்பட்டது. இக் காட்டுப் பகுதி தமிழ் ஆயுதக் குழுக்களின் பாசறையாகவும், பதுங்கு பிரதேசமாகவும் காணப்பட்டது. இனப்பிரச்சினையின் ஆரம்ப காலங்களில் பல ஆயுதக் குழுக்கள் தமிழர் மத்தியில் இயங்கி வந்தன. அவை ஒன்று மாறி மற்றொன்று தமது மேலாதிக்கத்தை நிலைநாட்ட முற்பட்டன. முசலியின் தென்பகுதி இதற்கு ஒரு தளமாகக் காணப்பட்டது. உதாரணமாக ஆரம்பத்தில் புளொட் இயக்கம் ஆயுத ரீதியாக மேற்குறிப்பிட்ட பிரதேசத்தில் செல்வாக்கு வகித்து வந்தது. 1989ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் புளொட்டை முற்றாக விரட்டித் தமது மேலாதிக்கத்தை இப்பிரதேசத்தில் உறுதிப்படுத்தினர். இவ்வாயுதக் குழுக்களின் போராட்டத்தால் இப்பிரதேசத்தில் வாழ்ந்த தமிழ்-முஸ்லிம் மக்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டார்கள்.

தமிழ் ஆயுதக் குழுக்கள் தமது கெரில்லா நிலைகளை உறுதிப்படுத்தவும், அரசுக்கெதிரான ஆயுத நடவடிக்கைகளை அதிகரிக்கவும் இப்பிரதேசத்தைப் பயன்படுத்தின. இந்த நோக்கத்தில் இவ்வாயுதக் குழுக்கள் தமக்குத் தேவையான பணம், உணவு, ஆளுதவியை இப்பிரதேச மக்களிடமிருந்து பெற்றுக் கொள்ள முயற்சித்தன. இதனால் இப்பிரதேசத்தில் வாழ்ந்த தமிழ்-முஸ்லிம் மக்களுக்கு பல கஷ்டங்கள் ஏற்பட்டன. இக் கஷ்டங்களை இப் பிரதேசத்தில் வாழ்ந்த முஸ்லிம் ஒருவர் பின்வருமாறு கூறுகின்றார்.



"அவர்களின் (தமிழ் ஆயுதக் குழு) துப்பாக்கி முனையால் பயமுறுத்தி எங்களிடமிருந்து பல்வேறு (பண, பொருள், சேவை) உதவிகளையும் பலவந்தமாகவே பெற்று வந்தார்கள். தாங்கமுடியாத வரிகளைச் சுமத்தியதோடு மரமரிதல், பதுங்கு குழிகள், காவலரண்கள், முகாம்கள் அமைப்பதற்கும் மண்மூடைகளை அடுக்குவதற்கும் எமது கிராம மக்களை கட்டாய வற்புறுத்தலுக்கு உள்ளாக்கினர்" (Refugee Family Information, 1994).

தமிழ் ஆயுதக் குழுக்களின் செல்வாக்குக்குட்பட்டிருந்த முசலியின் தென் பகுதி இலங்கை இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டது. இந்திய இராணுவத்தினர் சில காலம் இப்பிரதேசத்தைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தனர். அக்காலத்தில் இந்திய இராணுவ-தமிழ் குழுக்களுக்கிடையில் ஆயுத மோதல்கள் அடிக்கடி நடைபெற்றன. இம் மோதல்களில் அதிகமாகப் பாதிக்கப்பட்டவர்கள் அப்பாவித் தமிழ்-முஸ்லிம் மக்களாவர்.

இப்பிரதேச யுத்த நடவடிக்கைகள் அப்பாவி முஸ்லிம்-தமிழ் மக்களின் உயிர்களுக்கும் உடமைகளுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தின. பல இளைஞர்கள் ஆயுதக் குழுக்களால் கொல்லப்பட்டார்கள் (அட்டவணை 14). வேறு பலர் கடத்திச் செல்லப்பட்டார்கள் (அட்டவணை 15). பலர் இராணுவத்தினரால் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டார்கள். இதைவிட யுத்த சூழ்நிலையால் இப்பிரதேசம் ஏனைய பிரதேசங்களுடன் தொடர்பற்றுக் காணப்பட்டது. அவசர மருத்துவ தேவைகளைக் கூட உரிய காலத்தில் பெற முடியாத சூழ்நிலை இப்பகுதி மக்களுக்கு ஏற்பட்டது. தமிழ்-முஸ்லிம் மக்கள் இதனால் பாதிக்கப்பட்டார்கள்.

## 5.5. முஸ்லிம் ஊர்காவற் படை

முசலி முஸ்லிம்கள் தாமும் தமது பிரதேசமும் தனித்துவமானது என நம்பினார்கள். அருவியாற்றைக் கடந்து முசலிப் பிரதேசத்திற்குள் நுழைபவர்கள் முசலியின் தனித்துவத்தை மதிக்க வேண்டும் என்று விரும்பினார்கள். இவ்வுணர்விற்கான பின்னணி, முசலிப் பிரதேசம் இதன் சூழல் பிரதேசத்திலிருந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அட்டவணை-14

## முசலியில் இனப் பிரச்சினையால் உயிர் இழந்தவர்கள், 1986-90.

| | பெயர் | வயது | இடம் | காரணம் | ஆண்டு | யாரால் |
|---|---|---|---|---|---|---|
| 1. | M.அனிபா | 38 | மறிச்சுக்கட்டி | சூடு | 1986 | L.T.T.E |
| 2. | A.மஹ்ரூப் | 30 | மறிச்சுக்கட்டி | சூடு | 1988 | PLOT |
| 3 | S.H.M.M.தாசிம் | 19 | வேப்பங்குளம் | சூடு | 1988 | EPRLF |
| 4. | K.M.அப்துர் ரசாக் | 43 | வேப்பங்குளம் | சூடு | 1988 | EPRLF |
| 5. | மஜீது | 45 | அகத்திமுறிப்பு | சூடு | 1988 | இல-இராணுவம் |
| 6 | A.C.மஹருன்னிசா | 22 | வேப்பங்குளம் | சூடு | 1989 | IPKF |
| 7 | M.ஹாதீம் | 35 | சிலாவத்துறை | சூடு | 1989 | LTTE |
| 8 | M.கலீல் | 16 | மறிச்சுக்கட்டி | சூடு | 1989 | இனம் தெரியாது |
| 9 | A.C மகூத் | 22 | மறிச்சுக்கட்டி | சூடு | 1989 | இனம் தெரியாது |
| 10 | Z.சாதிக் | 24 | மறிச்சுக்கட்டி | சூடு | 1989 | இனம் தெரியாது |
| 11 | A.ஜலால் | 30 | மறிச்சுக்கட்டி | சூடு | 1989 | இனம் தெரியாது |
| 12 | M.முஹம்மது | 35 | மறிச்சுக்கட்டி | சூடு | 1990 | LTTE |
| 13 | A.அமான் | 35 | மறிச்சுக்கட்டி | சூடு | 1990 | இனம் தெரியாது |
| 14 | A.சாலி | 40 | மறிச்சுக்கட்டி | சூடு | 1990 | இனம் தெரியாது |
| 15 | M.அப்துல் காதர் | 45 | மறிச்சுக்கட்டி | சூடு | 1990 | இனம் தெரியாது |
| 16 | அபூ ஹனீபா | 32 | மறிச்சுக்கட்டி | மிதிவெடி | 1990 | இனம் தெரியாது |
| 17 | M.புஹாரி | 24 | சிறுக்குளம் | சூடு | 1990 | இனம் தெரியாது |
| 18 | மஹ்முதா | 24 | சிலாத்துறை | செல் | 1990 | இடைமோதல் |

*மூலம்:* **வெளிக்கள ஆய்வு, 1991**



# அட்டவணை-15

## தமிழ் ஆயுதக் குழுக்களால் கடத்தப்பட்டு இது வரை திரும்பி வராதவர்கள்:

| தொடர் இல | பெயர் | வயது | சொந்த | கடத்தப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|---|
| 1 | M.A.றாசிக் | - | மறிச்சுக்கட்டி | 1987 |
| 2 | M. முகைதீன் | - | மறிச்சுக்கட்டி | 1987 |
| 3 | M. உடையார் | - | மறிச்சுக்கட்டி | 1987 |
| 4 | செய்னுலாப்தீன் | 34 | சிலாவத்துறை | 1988 |
| 5 | T.M.ஜனாப் | 32 | பண்டாரவெளி | 1989 |
| 6 | றஹீம் | 28 | பொற்கேணி | 1989 |
| 7 | A.சாஹுல் ஹமீது | - | மறிச்சுக்கட்டி | 1990 |
| 8 | S.பாதும்மா | - | மறிச்சுக்கட்டி | 1990 |
| 9 | J.M.நௌபர் | 18 | சிறுக்குளம் | 1990 |
| 10 | G.M.முனாப் | 19 | சிறுக்குளம் | 1990 |
| 11 | S.M.ஜவாஹிர் | 17 | சிறுக்குளம் | 1990 |

**"-" விபரமில்லை**

*மூலம்:* **வெளிக்கள ஆய்வு, 1991**

www.tamilarangam.net

புவியியல் ரீதியாக தனித்திருந்தமையும், முஸ்லிம்கள் இப்பிரதேசத்தில் செறிவாக வாழ்ந்தமையும் ஆகும். அதனால் உள்நாட்டு யுத்த காலத்திலும் தமது பிரதேச தனித்துவத்தைப் பேண முசலி முஸ்லிம்கள் விரும்பினார்கள்.

முஸ்லிம்களின் இவ் எண்ணப்பாங்கை தமிழ் ஆயுதக் குழுக்கள் புரிந்திருந்தன. அதனால் தமிழ் ஆயுதக் குழுக்கள் அருவியாற்றுக்குத் தெற்காக முஸ்லிம் செறிவுகளில் தமது ஆயுத அரசியல் செல்வாக்கினைப் பலப்படுத்த முயற்சிக்கவில்லை. பிரச்சினையான காலகட்டத்தில் தமிழ்-முஸ்லிம் உறவு வழமை போல நீடிக்க இப்பரஸ்பர புரிந்துணர்வுத் தன்மை காரணமாக இருந்தது.

இதே நேரத்தில் வடக்குக் கிழக்கில் வேறு பல சட்ட-சமூக மாற்றங்களும் ஏற்பட்டு வரலாயின. அதில் ஒன்று, இப்பிரதேசத்தில் உள்நாட்டு யுத்தத்தால் சட்டமும், நீதியும் சீர் குலைந்து காணப்பட்டமையாகும். பொலிஸ் நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப் பட்டிருந்தன. கிராம மக்கள் தமது சமூக நலன்களையும், பிரச்சினைகளையும் உள்ளூர் மட்டத்தில் தீர்க்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். அந்த அடிப்படையில் முஸ்லிம் கிராமங்களில் பள்ளிவாயில் நிருவாகச் சபையினர் தத்தமது கிராம நிருவாகங்களில் தலையிட்டு, தமது சமூகம் நிலைகுலைந்து விடாமல் இருக்க நடவடிக்கைகளை எடுத்து வந்தனர்.

சில பிரதேசங்களில் பள்ளிவாயில் நிர்வாகத்தவர்கள் இணைந்தும் செயலில் ஈடுபட்டனர். இவ்வாறான கிராமக் கூட்டமைப்பு "பள்ளிவாயில் சமாஜம்" என்று அக்காலத்தில் அழைக்கக்கட்டது. சிவில் நிர்வாகமற்ற இக்காலக்கட்டத்தில் பள்ளிவாயில் நிர்வாகத்தினரின் மேற்குறித்த நடவடிக்கைகள் கிராமச் சமூகங்களை ஓரளவு கட்டுக் கோப்பாக வைத்திருக்க உதவியது. பள்ளிவாயில் நிருவாகத்தினரின் செயற்பாடுகள் அதிகமாக சமயம், சமூகம் சார்பானதாகக் காணப்பட்டன. ஆனால் ஆயுதக் கலாசாரக் காலக்கட்டத்தில் பள்ளிவாயில் நிருவாகத்தின் மேற்குறித்த நடவடிக்கைகள் மட்டப்படுத்தப்பட்ட விளைவுகளையே தரக் கூடியதாக இருந்தன. ஆயுதக் குழுக்களின் ஆதிக்கமே மேலோங்கிக் காணப்பட்டது.

இச்சூழ்நிலையிற்றான், ஊர்காவற்படையினர் முறை இலங்கை அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டது. ஆயுத அச்சுறுத்தலுக்கு எதிராக கிராம மட்டத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதை நோக்கமாகக்



கொண்டே ஊர்காவற் படையினர் உருவாக்கப்பட்டார்கள். ஆரம்பத்தில் எல்லையோர சிங்களக் கிராம மக்களுக்கு தமிழ் ஆயுதக்குழுக்களின் அச்சுறுத்தலுக்கு எதிராகப் பாதுகாப்பு அளிக்கும் நோக்கத்திலேயே இது உருவாக்கப்பட்டது. ஆனால், வடக்குக் கிழக்கில் தமிழ் ஆயுதக்குழுக்களை முஸ்லிம்கள் மூலமாகப் பலவீனப்படுத்தும் நோக்கிலேயே அரசால் ஊர்காவற் படையினர் உருவாக்கப்பட்டனர்.

முஸ்லிம்களைப் பொறுத்தவரை ஊர்காவற் படையினர் வேறுவகையில் சாதகமான விளைவுகளைத் தமது கிராம மட்டத்தில் ஏற்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. சட்டமும் நீதியும் இல்லாத தமது கிராமத்தில் அநியாயங்களும், அட்டூழியங்களும் ஏற்படாமல் இவ்வாயுதக் குழுக்கள் தடுக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அத்துடன் கட்டுப்பாடும் ஒழுங்குமற்ற சிறு சிறு தமிழ் ஆயுதக் குழுக்கள் முஸ்லிம் கிராமங்களில் தன்னிச்சையாக நடவடிக்கைகள் எடுப்பதற்கு முஸ்லிம் ஆயுதக் குழுக்கள் தடையாக இருக்கும் என்றும் கருதப்பட்டது. வட-கிழக்கின் பல பிரதேசங்களில் முஸ்லிம் ஊர் காவற் படையினர் பள்ளிவாயில் நிருவாகத்தினருடன் இணைந்த அடிப்படையில் செயற்பட்டு வந்தார்கள்.

இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தில் முஸ்லிம் ஊர்காவற் படையின் ஈடுபாடு ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும். முஸ்லிம்களின் கண்ணோட்டத்தில் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் முஸ்லிம் ஊர்காவற் படையினரின் தமிழ் மக்களுக்கெதிரான நடவடிக்கைகள் மிகைப்படுத்தப்பட்டுள்ளன என்று கருதப்படுகின்றது. கிடைக்கப் பெறுகின்ற விபரங்களிலிருந்து வடக்கு-கிழக்கில் ஊர்காவற்படை முறை முஸ்லிம்கள் மத்தியில் பரவலாகக் காணப்பட்டிருக்கவில்லை. ஐந்து மாவட்டங்களைக் கொண்ட வட மாகாணத்தில் மன்னாரில் அதுவும் ஒரு சில முஸ்லிம் கிராமங்களில் மாத்திரமே ஊர்காவற்படை முறை நடை முறையில் இருந்தது.

இந்த அடிப்படையில் முசலியின் வட எல்லைப்புற முஸ்லிம் கிராமங்களில் அரசால் மட்டுப்படுத்தப்பட்ட இராணுவப் பயிற்சி கொடுக்கப்பட்ட முஸ்லிம் இளைஞர்கள் சில சக்தி குறைந்த ஆயுதங்கள் கொடுக்கப்பட்டு உள்ளூர் பாதுகாப்புக்கு நியமிக்கப்பட்டார்கள். முசலிப் பிரதேசம் முழுவதும் இம் முஸ்லிம் ஊர்காவற் படைகளின் மொத்த எண்ணிக்கை 100 பேருக்குக் குறைவாகக் காணப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ் ஆயுதக் குழுக்கள் மத்தியில் பல போட்டி இயக்கங்கள் காணப்பட்டன. முஸ்லிம்களின் தற்பாதுகாப்புக்காக எடுக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட ஆயுத முயற்சியே முஸ்லிம் ஊர்காவற்படை என்ற கருத்து மன்னார் மாவட்ட தமிழ் ஆயுதக் குழுக்கள் மத்தியில் காணப்பட்டது. இந்தப் பின்னணியில் முஸ்லிம் கிராமங்கள் சிலவற்றின் பாதுகாப்புக்காக தமது பொறுப்புக்களை மட்டுப்படுத்திக் கொண்ட முஸ்லிம் ஆயுதக் குழுவினர் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்திற்கு எதிரானவர்கள் என்று இக்காலக் கட்டத்தில் கருதப்படவில்லை. முசலிப் பிரதேசத்திலோ அல்லது மன்னார் மாவட்டத்திலோ முஸ்லிம் ஊர்காவற் படையினர் தமிழ்-முஸ்லிம் உறவுக்கு பங்கமான நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்கான ஆதாரங்கள் இல்லை. அதே போல் 1990 ஆம் ஆண்டின் ஆரம்ப காலப் பகுதியில் நிராயுத பாணிகளான முஸ்லிம் ஊர்காவற் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பிணக்குகள் எதுவும் காணப்படவில்லை. மாறாக இவ்விரு அமைப்புக்களுக்கும் இடையில் பரஸ்பர நம்பிக்கையும் நல்லுறவுமே காணப்பட்டது.

## 5.6. இரண்டாவது ஈழப்போரும், முசலி முஸ்லிம்களும்

1989ல் இந்திய அமைதிகாக்கும் படையினரின் (IPKF) இலங்கை வருகையோடு வடக்கு-கிழக்கின் யுத்த சமநிலையில் மாற்றம் ஏற்பட்டது. இந்திய இராணுவம் வடக்கு-கிழக்கில் தன்னைப் பலப்படுத்திக் கொள்ள எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. இந்திய இராணுவம் முசலிப் பிரதேசத்தில் தனது இராணுவ முகாம்களை ஏற்படுத்தி இருக்காவிட்டாலும் தனது ஆயுதக் கட்டுப்பாட்டை இப்பிரதேசத்தில் உறுதிப்படுத்த எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. அதில் ஒரு அம்சமாக இப்பிரதேச முஸ்லிம் ஊர்காவற் படையினர் தமக்கு இலங்கை இராணுவத்தால் கிராம பாதுகாப்பிற்கென்று கொடுக்கப்பட்ட ஆயுதங்களைத் திரும்பவும் இந்திய இராணுவத்தினரிடம் ஒப்படைக்கும்படி வற்புறுத்தப்பட்டார்கள். இது இலங்கை இராணுவத்தினரின் நோக்கத்திலிருந்து வித்தியாசமாகக் காணப்பட்டது. இந்திய இராணுவம் இவ்வாறான முடிவை எடுக்க இந்திய இராணுவத்தோடு இணைந்து செயற்பட்ட தமிழ் ஆயுதக் குழுக்கள் காரணமாக இருந்தன. ஏனெனில்,



அருவி ஆற்றுக்கு வடக்கான பிரதேசத்தில் இத்தமிழ் ஆயுதக் குழு இக்காலத்தில் செல்வாக்குப் பெற்றுக் காணப்பட்டது. இவ்வகைக் குழுவின் செல்வாக்கு ஆற்றுக்குத் தெற்காக முஸ்லிம் பிரதேசத்தில் வியாபிக்க முஸ்லிம் ஊர்காவற் படையினரின் அச்சுறுத்தல் காரணமாக இருந்திருக்கலாம். முஸ்லிம் ஊர்காவற்படைகளின் ஆயுதங்கள் மீளப் பெறப்பட்டமையால், முஸ்லிம் கிராம தற்பாதுகாப்புக்காக செய்யப்பட்ட ஏற்பாடுகள் செயலிழந்தன. ஆயினும் இந்திய இராணுவத்தினர் தனது ஆயுத மேலாதிக்கதின் மூலம் தமிழ் ஆயுதக் குழு, முஸ்லிம் ஊர்காவற்படை ஆயுத மோதல்களைக் கட்டுப்படுத்தி இப்பிரதேசத்தில் ஒரு இடைக்கால சமாதானத்தை உருவாக்குவதில் வெற்றி கண்டிருந்தார்கள்.

இக்காலத்தில்தான் விடுதலைப் புலிகள் முசலியின் தென் பகுதியான வில்பத்துக் காட்டுப் பகுதியில் தமது ஆயுதப்பலத்தினை அதிகரித்துக் கொண்டிருந்தனர். படிப்படியாக வில்பத்துக் காடு விடுதலைப் புலியினரின் முக்கிய தளமாகவும் மாறியது. 1990ஆம் ஆண்டு ஆரம்பப் பகுதியில் இந்தியப் படைகள் இலங்கையிலிருந்து சென்று விட்டனர். இந்திய இராணுவத்தினரின் வெளியேற்றத்தினால் இப்பிரதேசத்தில் உருவாக்கப்பட்ட ஆயுதப்பல வெற்றிடம் விடுதலைப் புலியினரால் நிரப்பப்பட்டது.

இதனைத்தொடர்ந்து அதே ஆண்டு ஜூன் மாதம் "இரண்டாவது ஈழப் போர்" என்று அழைக்கப்படுகின்ற இலங்கை இராணுவ-விடுதலைப் புலிகளுக்கிடையிலான முழு அளவிலான ஆயுத மோதல்கள் ஆரம்பித்தன. இப்போரினால் முசலி முஸ்லிம்களும் பாதிப்புக்குள்ளானார்கள். வடக்கு முழுவதும் பரவலாக நடைபெற்ற இவ்யுத்தம் பல பாரதூரமான பாதிப்புக்களை அப்பாவி தமிழ்-முஸ்லிம் மக்களுக்கு ஏற்படுத்தியது. முசலி முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களைப் பின்வரும் சில உதாரணங்கள் மூலம் விளக்கலாம்.

1990 ஜூலை 3ஆம் திகதி விடுதலைப் புலியினரின் வில்பத்து ஆயுதப் பலத்தை அழிக்கும் நோக்கத்தில் புத்தளத்திலிருந்து சிலாவத்துறைக்கான இலங்கை இராணுவத்தின் படையெடுப்பு ஒன்று நடைபெற்றது. இதில் ஏறக்குறைய 5000 இராணுவ வீரர்கள் நவீன ஆயுதங்களுடன் ஈடுபட்டனர். இலங்கை இராணுவத்தின் வடக்கு நோக்கிய இப் படையெடுப்பு 1990 ஆம் ஆண்டு ஜூலை 5ஆம் திகதி முசலியின் தென் பகுதியை அடைந்தது. மறிச்சிக்கட்டி, பாலைக்குளி, கரடிக்குளி, முள்ளிக்குளம் ஆகிய கிராமங்களை இலங்கை இராணுவத்தினர் தமது கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தி அழித்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமது படையெடுப்பை மேற்கொண்டார்கள். இதனால் இப்பிரதேச மக்களின் வீடுகள், சொத்துக்கள் பெரும் அழிவுக்குள்ளாகின. இலங்கை இராணுவத்தின் இப்படையெடுப்பைப் பற்றி கரடிக்குளி கிராமத்தைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் பின்வருமாறு துயரத்துடன் குறிப்பிட்டார்.

> "இலங்கை இராணுவத்தினர் தமது சீற்றத்தை அப்பாவி மக்களின் பொருட்களிலும் சொத்துக்களிலும், வளங்களிலும் தான் காட்டினர். எவ்வாறெனின் இளநீர் பெறுவதற்காக தென்னை மரங்களை புல்டோசர் கொண்டு நாசமாக்கினார்கள். வீடுகள், கடைகளை தள்ளிக் கொண்டு புதிய பாதை அமைத்தார்கள், வீடுகளில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த நெல், அரிசி மூடைகளை லொறிகொண்டு ஏற்றிச் சென்றார்கள். கடைகள், வீடுகளையெல்லாம் உடைத்து பொருட்களை கொள்ளையடித்தார்கள். எடுத்துச் செல்ல முடியாத பட்டறை முறையிலான நெல் போன்ற பொருட்களுக்கு தீ வைத்தார்கள். மாடு ஆடு போன்ற மிருகங்களை சுட்டுக் கொன்றார்கள். இவ்வாறான கொடூரங்களைப் புரிந்த இராணுவம் புலிகள் மீது குற்றம் சாட்டியது. இதனை நேரில் கண்ட ஊர் மக்கள் அதிகமானோர் உள்ளனர்" (Refugee Family Information, 1994).

படையெடுப்பால் தமது வீடு உடமைகள் பாதிக்கப்பட்ட இப்பிரதேச முஸ்லிம்கள் தமது கிராமங்களை விட்டு ஜுலை 6ஆம் திகதி பாதுகாப்பான சிலாவத்துறை பிரதேச முஸ்லிம் செறிவை நோக்கி இடம்பெயர்ந்தார்கள். இவ்வாறு இடம்பெயர்ந்த முஸ்லிம்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 2000 ஆகும்.

இராணுவம் சிலாவத்துறையைக் கடந்த 13 நாட்களுக்குப் பிறகு முஸ்லிம்கள் தமது கிராமத்திற்குத் திரும்பிவந்த போது, தமது வீடுகளுக்கும், சொத்துக்களுக்கும் பொதுக் கட்டிடங்களுக்கும் இலங்கை இராணுவத்தால் இழைக்கப்பட்ட அழிவைக் கண்டு அதிர்ச்சியடைந்தார்கள். அதனை இப் பிரதேச மக்களில் ஒருவரின் வார்த்தையில் கூறுவதானால்



> "யுத்தம் முடிவடைந்து 13 நாட்கள் கழிந்த பின்னர் மீண்டும் சொந்த ஊரையடைந்து பார்க்கும் போது பெறுமதியான பொருட்கள் எதுவும் இல்லாத நிலையில் வீடுகள், கடைகள், உடைந்த நிலையிலும் வாகனங்கள், நெல்லு மூடைகள் எரிந்து கொண்டிருக்கும் நிலையிலும், மாடு ஆடுகள் சுடப்பட்டு இறந்த நிலையிலும் காணப்பட்டன. பொதுவாகச் சொன்னால் இலங்கை இராணுவம் எல்லா வீடுகளையும் பொருட்களற்ற வெறும் வீடாக்கி வைத்ததோடு ஊர் வெறிச்சோடிக் கிடந்தது" (Regfugee Family Information 1994).

அதனால் இப்பிரதேசத்தில் வாழ முடியாத சூழ்நிலையில் முஸ்லிம்கள் திரும்பவும் சிலாவத்துறைக்குச் சென்று அகதியாக வாழ்ந்து வந்தார்கள். வேறு சிலர் தெற்காக புத்தளம் சென்று அகதியானார்கள்.

## 5.7. முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றத்திற்கு முன்னர்

யாரும் எதிர் பாராத வகையில் முசலி முஸ்லிம்களின் வெளியேற்ற உத்தரவு விடுதலைப் புலிகளால் அறிவிக்கப்பட்டது. இப்பலவந்த வெளியேற்றத்தின் பின்னணியினை அறிந்து கொள்ள முசலியின் அன்றைய கால கட்ட நிகழ்வுகளைப் பரிசீலிப்பது அவசியமானதாகும்.

முசலி முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றத்தோடு தொடர்புடைய முக்கியமான ஒரு நிகழ்வு வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற இரு முக்கியமான தேர்தல்களாகும். இவ்விரு பொதுத் தேர்தல்களையும் வெற்றிகரமாக நடாத்தி இனப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வைக் கொண்டு வர இந்திய இராணுவம் முயற்சித்தது.

இந்திய சமாதானப் படை இலங்கையில் இருந்த போது மாகாண சபைத் தேர்தலும், பாராளுமன்றப் பொதுத் தேர்தலும் நடைபெற்றன. இவ்விரு தேர்தல்களும் வட-கிழக்கு மாகாண மக்களுக்கு நீண்ட இடை வெளிக்குப் பின்னர் கிடைத்த தேர்தல் வாய்ப்பாகும். விடுதலைப் புலியினர் இத் தேர்தலை அரசியல் காரணங்களுக்காகப் பகிஷ்கரித்தனர். வேறு சில தமிழ் ஆயுதக் குழுக்களும், தமிழ் அரசியல் கட்சிகளும் இத்தேர்தல்களைப் பயன்படுத்தி தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுக்க முற்பட்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் இத்தேர்தல் வேறொரு கண்ணோட்டத்தில் நோக்கப்பட்டது. இலங்கையின் இனப்பிரச்சினையில் வட-கிழக்கு முஸ்லிம்கள் அரசியல் அபிலாசைகளை வெளிக்கொணர்வதற்கு கொடுக்கப்பட்ட ஒரு வாய்ப்பாக இது கருதப்பட்டது. அதிலும் குறிப்பாக இந்திய-இலங்கை ஒப்பந்தம் வட-கிழக்கு முஸ்லிம்களின் நலன்களைக் கருத்திற்கெடுக்கவில்லை என்று முஸ்லிம்கள் கருதியதால் வட-கிழக்கில் தமது அபிலாசைகளும், நலன்களும் என்ன என்பதை இத் தேர்தல் மூலம் வெளிக்கொணர இப்பிரதேச முஸ்லிம்கள் விரும்பினர். முஸ்லிம்களின் இவ்வுணர்வுகளின் பிரதிபலிப்பாக உருவாகியதே ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற அரசியல் கட்சியாகும்.

முஸ்லிம்களின் அபிலாசைகள் முஸ்லிம் காங்கிரஸ் மூலம் இக் காலத்தில் வெளியிடப்பட்டன. இவ் அரசியல் கட்சி வடக்கு-கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் தனித்துவத்தை தனது கட்சியின் தலைமைத்துவத்தின் கீழ் கொண்டு வருவதற்கு முயற்சி எடுத்தது. அதற்காக இக்காலக்கட்டத் தேர்தல்களில் தனியாகப் போட்டியும் இட்டது.

முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களின் மத்தியில் தமக்கிருக்கும் செல்வாக்கை மேற்குறிப்பிட்ட இரு தேர்தல்களிலும் நிரூபித்துக் காட்டியது. மாகாண சபைத் தேர்தலில் இக்கட்சி வடக்கு-கிழக்கு மாகாண சபையின் எதிர்க் கட்சியாகியது. பாராளுமன்றத் தேர்தலில் நான்கு பிரதிநிதிகளை இக்கட்சி பெற்றுக் கொண்டது.

இந்நான்கு பாராளுமன்ற அங்கத்துவத்தில் வன்னித் தேர்தல் தொகுதிக்கான ஒரு பிரதிநிதித்துவமும் உள்ளடங்கும். இத்தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினரைத் தேர்ந்தெடுப்பதில் வன்னியின் மிக முக்கியமான முஸ்லிம் செறிவுகளில் ஒன்றான முசலிப்பிரதேசத்தின் பங்களிப்பு முக்கியமானதாகும். மறுவார்த்தையில் கூறின் கடந்த காலங்களில் இலங்கையின் இனப்பிரச்சினையில் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டனர். முஸ்லிம்களின் நியாயமான உரிமைகள் இனப்பிரச்சினையில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என முஸ்லிம் காங்கிரஸ் முன் வைத்த கருத்தில் முசலி முஸ்லிம்கள் உடன்பாடு உடையவர்களாகக் காணப்பட்டார்கள் என்பதை இத்தேர்தல் தெளிவுபடுத்தியது.

இவ்விரு தேர்தல்களின் மூலமாக முஸ்லிம்களின் அரசியல் விழிப்புணர்ச்சியை தமக்குப் பயன்படுத்திக் கொண்ட முஸ்லிம் காங்கிரஸ்



வடக்குக்--கிழக்குப் பிரதேசத்திற்கான அதிகாரப் பகிர்விலும் முஸ்லிம்களுக்கு தனித்த அரசியல் அலகு ஒன்று வேண்டுமென்ற கருத்தையும் முன்வைத்தனர். இக் கட்சியின் வாக்குத் தளமான அம்பாறைப் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு முஸ்லிம் மாகாண சபை உருவாக்கப்பட வேண்டும் என்ற முன்மொழிவு இக் கட்சியினால் தேசிய மட்டத்தில் முன்வைக்கப்பட்டது. அம் முஸ்லிம் மாகாண சபை அம்பாறையை அடிப்படையாகக் கொண்டதாகவும், வடக்கு-கிழக்கில் முஸ்லிம்கள் செறிந்து வாழ்கின்ற பிரதேசங்களை இணைத்த அலகாகவும் இருக்க வேண்டும் என்று இந்த முன்மொழிவு குறிப்பிட்டது. இந் நிலத் தொடர்பற்ற முஸ்லிம் செறிவுகளில் முசலி முஸ்லிம் செறிவு அதாவது முசலி உதவி அரசாங்க அதிபர் பிரிவும் ஒன்றாகும். இக் கோரிக்கை வடக்கு-கிழக்கின் அரசியல் சமநிலையில் முஸ்லிம் பிரச்சினை என்பதுவும் சேர்த்துக் கொள்ளப்படக் காரணமாயிற்று. ஆனால் முஸ்லிம் காங்கிரசின் முஸ்லிம் மாகாண சபை முன்மொழிவில் முசலிப் பிரதேசமும் சேர்த்துக் கொள்ளப்படுவது பற்றி முசலி முஸ்லிம்களின் அபிப்பிராயம் என்ன என்று முஸ்லிம் காங்கிரஸ் அறிய முற்படவில்லை. அவ்வாறான ஒரு அபிப்பிராயத்தில் முசலி முஸ்லிம்கள் என்ன நிலைப்பாட்டை எடுத்திருப்பார்கள் என்பது ஆய்வுக்குரிய வினாவாகும்.

எனினும் விடுதலைப் புலிகளால் வடக்கிலிருந்து முஸ்லிம்கள் விரட்டப்பட்டதற்கும் முஸ்லிம் காங்கிரஸின் முஸ்லிம் மாகாண சபை முன்மொழிவுக்கும் இடையில் தொடர்பு காணப்படுகின்றது என்ற ஊகங்கள் அறிஞர்களாலும், அரசியல்வாதிகளாலும் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. வடக்கு-கிழக்கில் முஸ்லிம் மாகாண சபை என்ற முன்மொழிவு வடக்கு முஸ்லிம்கள் பற்றிய விடுதலைப் புலிகளின் அபிப்பிராயத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கலாமா? என்பதை நாம் சற்று ஆராய வேண்டும். முஸ்லிம் காங்கிரஸின் முஸ்லிம் மாகாண சபை முன்மொழிவின் ஒரு பகுதி மன்னார் மாவட்ட முசலி, மன்னார்த் தீவுப் பகுதிகளை உள்ளடக்குகின்றது. பரப்பளவில் இப்பிரதேசம் மன்னார் மாவட்டத்தின் மொத்தப் பரப்பில் ஏறக்குறைய பாதியளவாகக் காணப்பட்டது. இட அமைவில் இப்பிரதேசம் தெற்குப் புற சிங்களப் பிரதேசத்துடன் (புத்தளம் மாவட்டம்) இணைந்ததாக இருக்கின்றது. சிங்கள இராணுவ ஆதிக்கம் மன்னார் மாவட்ட முஸ்லிம் செறிவினூடாக தமிழீழ தாயகக் கோட்பாட்டை பலவீனப்படச் செய்து விடலாம் என்று விடுதலைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புலிகள் அக்காலத்தில் கருதியிருக்க நியாயமிருக்கின்றது. காரணம் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் செறிவுகளில் தமது இராணுவ முகாம்களை அமைப்பதன் மூலமாக விடுதலைப் புலிகளை இலங்கை இராணுவம் பலவீனப்படுத்த முயன்றமை. வடக்கிலிருந்து முஸ்லிம்களை பலவந்தமாக வெளியேற்றுவதற்குச் சற்று முன்னர் நிகழ்ந்ததாகும்.

சமகாலத்தில் முசலிப்பிரதேசத்தில் ஏற்பட்ட மற்றுமொரு மாற்றம் விடுதலைப் புலிகளின் செல்வாக்குப் படிப்படியாக இப்பிரதேசத்தில் அதிகரித்து வந்தமையாகும். விடுதலைப் புலியினரின் கொரில்லா யுத்த முறையால் இலங்கை இராணுவம் இப்பிரதேசத்தில் பலவீனப்படுத்தப்பட்டது. இப்பிரதேசத்தில் காணப்பட்ட இரு இராணுவ முகாம்களும் விடுதலைப் புலிகளின் தாக்குதலை எதிர்நோக்கிய வண்ணம் இருந்து வந்தன. அதனால், இவ்விரு இராணுவ முகாம் சூழலில் வாழ்ந்த சிங்கள மக்கள் தமது பாதுகாப்புக்காக இப்பிரதேசத்தை விட்டு வெளியேறி தமது பூர்வீக இடங்களுக்குச் சென்று விட்டார்கள்.

இக்காலக்கட்டத்தில், அருவியாற்றுக்கு தெற்கான விடுதலைப் புலிகளின் ஊடுருவல்கள் முஸ்லிம் செறிவுகளில் நாளாந்தம் அதிகரித்து வந்தன. முஸ்லிம் ஊர்காவற் படையில் முன்னர் அங்கத்தவர்களாக இருந்த முஸ்லிம்கள் விடுதலைப் புலியினரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டு விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டோம் என்று உறுதிமொழி பெறப்பட்டார்கள். விடுதலைப் புலிகளின் இந்த விசாரணைக்கு செல்ல விரும்பாதவர்கள் தமது பாதுகாப்பிற்காக முசலியை விட்டு வெளியேறி கொழும்பு போன்ற இடங்களுக்கு வந்து சேர்ந்தனர்.

அதுமட்டுமன்றி, அரசியல் ரீதியாக முசலி முஸ்லிம்கள் மத்தியில் விடுதலைப் புலியினர் ''பிரஜைகள் குழுக்களை'' ஏற்படுத்தி தமது கட்டளைகளை முசலியில் நிறைவேற்றவும், தமக்குரிய வரிகளை அறவிடவும் ஒழுங்குகளைச் செய்தனர். மறுவார்த்தையில் சிலாவத்துறையில் இராணுவ முகாமின் உடனடி சூழலைத் தவிர முசலியின் ஏனைய எல்லாப் பிரதேசங்களையும் விடுதலைப் புலியினர் தமது கட்டுப்பாட்டிற்குக் கீழ் கொண்டு வந்திருந்தனர். இவ்வாறான விடுதலைப் புலியினரின் மேலாதிக்கம் முசலியில் உறுதிப்படுத்தப்பட்ட இக்காலக் கட்டத்திலும்கூட இப்பிரதேச



முஸ்லிம்–தமிழ் உறவு என்றும் போல் சிநேக பூர்வமாக, ஐக்கியமாகக் காணப்பட்டது.

இக்காலக்கட்டத்தில் முசலியில் முஸ்லிம்களுக்கு எதிரான மற்றுமொரு நிகழ்வையும் குறிப்பிட வேண்டும். முஸ்லிம்கள் பலவந்தமாக வெளியேற்றப்படுவதற்கு மூன்று வாரங்களுக்கு முன்னர், முசலிப் பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு தனவந்தர்கள் விடுதலைப் புலிகளினால் மாவட்டத் தலைமையகத்துக்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டு சிறைப் படுத்தப்பட்டார்கள். இவர்களை விடுவிப்பதற்கு தலா ஒவ்வொருவருக்கும் பல இலட்சங்கள் தரப்பட வேண்டும் என்று விடுதலைப் புலிகளால் கேட்கப்பட்டார்கள். இதே காலக் கட்டத்தில் மன்னாரில் ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்த வேறு பல முஸ்லிம் தனவந்தர்களும் தமிழ்த் தனவந்தர்கள் உட்பட பணயக் கைதிகளாக விடுதலைப் புலியினரால் தடுத்து வைக்கப்பட்டனர்.

சிறைப் பிடிக்கப்பட்ட முசலி முஸ்லிம்களை விடுவிப்பது தொடர்பாக இப்பிரதேச மக்கள் நடவடிக்கைகளை எடுத்து வந்துகொண்டிருந்த சூழ்நிலையில்தான் முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்ற உத்தரவு விடுதலைப் புலிகளால் அறிவிக்கப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 6. பலவந்த வெளியேற்றமும் அதன் தாக்கமும்

முஸ்லிம்கள் வட மாகாணத்திலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டார்கள். இது ஒக்டோபர் இறுதி வாரத்தில் நடைபெற்றது. விடுதலைப் புலிகள் முஸ்லிம்களின் இவ் வெளியேற்றத்திற்குக் காரணமாக இருந்தார்கள். மன்னார் மாவட்ட முஸ்லிம்களின் வெளியேற்றம் ஒக்டோபர் 23 தொடக்கம் 30ஆம் திகதி வரை இடம் பெற்றது. மன்னாரில் மூன்று பிரதேசங்களில் முஸ்லிம்கள் செறிந்து வாழ்ந்தார்கள். அதில் மன்னார்த்தீவில் வெளியேற்ற அறிவிப்பு ஒக்டோபர் 23 ஆம் திகதியும், முசலியில் 23ஆம் திகதியும், மாந்தையில் 24ஆம் திகதியும் செய்யப்பட்டது.

விடுதலைப் புலிகள் முசலி முஸ்லிம்களை வெளியேற வற்புறுத்தியபோது இப்பகுதி முஸ்லிம்கள் இவ்வுத்தரவை உடனடியாக அப்படியே ஏற்றுக் கொள்ள முன்வரவில்லை. சிலர் விடுதலைப் புலிகள் எம்மைப் பலவந்தமாக வெளியேற்ற என்ன அதிகாரம் இருக்கின்றது என்றனர். அவர்கள் வெளியேற்ற உத்தரவை எதிர்த்து நிற்கவும் தயாராக இருந்தார்கள். வேறுபலர் முசலி முஸ்லிம்களின் வெளியேற்றம் தவிர்க்கப்பட முடியாதது என்பதையும் உணர்ந்தவர்களாகக் காணப்பட்டார்கள். விடுதலைப் புலிகளின் வெளியேற்ற உத்தரவை மதிப்பது தமது மக்களைப் பாரிய ஆபத்திலிருந்து காப்பதாக இருக்கும் என்று எண்ணினார்கள். வெளியேற்றத்தை எதிர்ப்பதன் மூலம் முஸ்லிம்-தமிழ் உறவு பாரதூரமாகப் பாதிக்கப்படலாம் என்றும் சிந்தித்தார்கள்.

## 6.1. வெளியேற்ற உத்தரவு

முஸ்லிம்களின் வெளியேற்ற நிகழ்வு பின்வருமாறு நடந்தேறியது. ஒக்டோபர் மாதம் 23ஆம் திகதி காலை 8 மணிக்கு முசலியின் வடக்கு எல்லைக் கிராமமான வேப்பங்குளத்திற்கு விடுதலைப் புலிகள் ஆயுதங்களோடு வந்தனர். அவர்கள் மாவட்ட தலைமைப் பீடத்தின் கடிதம் ஒன்றை இக்கிராமப் பள்ளிவாயிலின் பிரதம தர்மகர்த்தாவிடம் ஒப்படைத்தார்கள். இக்கடிதத்தின் சாராம்சம் பின்வருமாறு காணப்பட்டது. முஸ்லிம்கள் முசலியிலிருந்து 48



மணித்தியாலத்திற்குள் வெளியேறிவிட வேண்டும். தமது வெளியேற்றத்திற்கு முன்னர் முஸ்லிம்கள் தமக்குச் சொந்தமான வாகனங்கள், றேடியோ, தையல் இயந்திரம், நீர் இறைக்கும் இயந்திரம் ஆகிய சொத்துக்களை விடுதலைப் புலிகளிடம் கையளிக்க வேண்டும். மேற்குறிப்பிட்ட பொருட்களின் கையளிப்பை வேப்பங்குளப் பாடசாலையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் பெற்றுக் கொள்வார்கள் என்பதாகும். மேற்குறித்த விடுதலைப் புலிகளின் உத்தரவைப் பள்ளிவாயில் ஒலி பெருக்கி மூலமாகப் பொது மக்கள் எல்லோருக்கும் அறிவிக்கும் படி ஆயுதம் தாங்கிய விடுதலைப் புலியினர் வேப்பங்குள பிரதம தர்மகர்த்தாவை வற்புறுத்தினார்கள். விடுதலைப் புலிகளின் இவ்வுத்தரவு பிரதம தர்மகர்த்தாவினால் மக்களுக்கு அறிவிக்கப்பட்டது.

வெளியேற்ற உத்தரவு வேப்பங்குள முஸ்லிம்களை அதிர்ச்சியடையச் செய்தது. எனினும் அவர்களை நிலைகுலையச் செய்யவில்லை. இக்கிராமப் பெரியார்கள் தமது மக்களினது அன்றைய காலகட்ட நிலையைக் கருத்திற் கொண்டு இவ்வெளியேற்ற உத்தரவை எவ்வாறு எதிர்கொள்வது என்று சிந்தித்தார்கள்.

வேப்பங்குளத்திற்கு அனுப்பப்பட்ட விடுதலைப் புலிகளின் செய்தி காட்டுத் தீ போல் அயல் முஸ்லிம் கிராமங்களுக்கும் பரவியது. அதே நேரத்தில், அகத்திமுறிப்பு, பண்டாரவெளி கிராங்களுக்கும் விடுதலைப் புலிகள் இதே வெளியேற்றச் செய்தியை அனுப்பியிருந்தனர். மேற்குறிப்பிட்ட கிராமங்கள் அருவியாற்றிற்குத் தெற்காகக் காணப்பட்டன. விடுதலைப் புலியினர் தமது பாதுகாப்பு நிலைகளில் இருந்து வந்து செல்லக் கூடியதாக அக்கிராமங்களின் அமைவிடங்கள் இருந்தன. ஆனால், மேற்குறித்த முஸ்லிம் செறிவுக்குத் தெற்காகக் காணப்பட்ட முசலி, சிலாவத்துறை போன்ற முஸ்லிம் கிராமங்களுக்கு விடுதலைப் புலிகள் நேரடியாகச் செய்தியை அனுப்பவில்லை. எனினும் வெளியேற்றச் செய்தி வேகமாக இப்பிரதேசங்களுக்கும் பரவியதோடு மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும், ஆத்திரத்தையும் தூண்டியது.

பலவந்த வெளியேற்ற உத்தரவை முசலி முஸ்லிம் பெரியார்கள் மிகவும் நிதானமாக அணுக முயற்சித்தனர். வேப்பங்குள முஸ்லிம்களின் நிலைப்பாடே அக்கால கட்டத்தைக் கருத்தில் கொள்ளும் போது பொருத்தமானதாக இவர்களுக்குக் காணப்பட்டது. இக்காலகட்டத்தில் இயங்கிக் கொண்டிருந்த முசலிப் பள்ளிவாசல் சமாஜம் தமது மக்கள் சார்பாக பொறுப்பான தீர்மானங்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எடுப்பதில் கண்ணுங் கருத்துமாக இருந்தது. விடுதலைப் புலிகளின் வெளியேற்ற உத்தரவு பல்வேறு கண்ணோட்டங்களில் மக்களால் நோக்கப்பட்டது.

## 6.2. வெளியேற்ற உத்தரவும் முஸ்லிம்களின் நிலைப்பாடும்

முசலியை முழுமையாக நோக்கும் போது விடுதலைப் புலியினரின் பலவந்த வெளியேற்றத்தை முஸ்லிம்களால் உதாசீனப்படுத்த முடியவில்லை. இதற்குப் பல காரணங்கள் இருந்தன. இக்காலக்கட்டத்தில் விடுதலைப் புலியினர் இப்பிரதேசத்தில் ஆயுத ரீதியாக மிகவும் பலம் வாய்ந்தவர்களாகக் காணப்பட்டார்கள். முசலியின் எந்தப் பிரதேசத்திற்கும் சென்று தமது கட்டளையை நிறைவேற்றக் கூடிய ஆயுத ரீதியான ஆற்றல் கொண்டவர்களாகவும் இவர்கள் இருந்தார்கள்.

விடுதலைப் புலிகளின் ஆயுதப் பயமுறுத்லுக் கெதிரான உடனடி நடவடிக்கை எடுக்கக் கூடிய ஆற்றல் முசலி முஸ்லிம்களிடம் அக்காலத்தில் இருக்கவில்லை. இலங்கை இராணுவத்தினரிடமிருந்து பாதுகாப்புப் பெறக் கூடிய வசதிகள் எல்லாப் பிரதேச முஸ்லிம்களுக்கும் இருக்கவில்லை. கடந்த கால அனுபவங்களைக் கொண்டு நோக்கும் போது அரசாங்கப்பாதுகாப்பில் முசலி முஸ்லிம்களுக்கு நம்பிக்கையும் இருக்கவில்லை. இதில் குறிப்பாக முசலியின் வட புற முஸ்லிம் செறிவு சிலாவத்துறை இராணுவ முகாமிலிருந்து தொலைவில் காணப்பட்டது. இப்பிரதேச முஸ்லிம்களிடம் தமது தற்பாதுகாப்பிற்கு ஆயுதங்களும் இருக்கவில்லை.

அதே நேரத்தில் வட புற முஸ்லிம் கிராம மக்கள் கடந்த காலங்களில் தமிழ் ஆயுதக் குழுக்களுடன் முரண்பாடுகளைக் கொண்டவர்களாகக் காணப்பட்டார்கள். தமது தற்பாதுகாப்பிற்காக வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் இந்திய இராணுவத்தால் பறிக்கப்பட்ட நிலையில் இக்காலத்தில் முஸ்லிம் மக்கள் இருந்தார்கள். நிராயுத பாணியான காலக் கட்டத்தில் விடுதலைப் புலியினரின் உத்தரவுக் கெதிரான எந்த முயற்சியும் தமக்கு மிகப் பாரதூரமான விளைவுகளைக் கொண்டு வரலாம் என முஸ்லிம்கள் அஞ்சினார்கள். கிழக்கு மாகாணத்தின் காத்தான்குடி, ஏறாவூர் ஆகிய முஸ்லிம் கிராமப் படுகொலைகள் பற்றிய செய்திகளை இம்மக்கள் நன்கு அறிந்திருந்தார்கள். விடுதலைப்



புலியினரால் பணயக் கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்ட முசலி முஸ்லிம் தனவந்தர்கள் பற்றிய எவ்வித செய்தியும் இல்லாத நிலையில் விடுதலைப் புலிகளுக்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபட சக்தியற்றிருந்தார்கள்.

அது அவ்வாறிருக்க வெளியேற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்ட மறுநாள் காலை 10 மணிக்கு முசலியின் வடஎல்லையில் தனித்து அமைவுற்றிருந்த முஸ்லிம் கிராமமான பூநொச்சிக் குளத்தில் விடுதலைப் புலியினர் ஆயுதங்களோடு உள்நுழைந்து அக் கிராம மக்களைத் தாக்கியதோடு, அம்மக்களின் சொத்துக்களையும் பறித்தார்கள். பூநொச்சிக் கிராம நிகழ்ச்சி முசலி முஸ்லிம் மக்களுக்கு குறிப்பாக வட எல்லைக் கிராம முஸ்லிம்களுக்கு பெரும் அச்சத்தை ஏற்படுத்தியது. வட எல்லைக் கிராமங்களான வேப்பங்குளம், பொற்கேணி, அகத்திமுறிப்பு, பிச்சைவாணிபன் குளம், பண்டாரவெளி ஆகியவையும் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உட்படலாம் என்று இக்கிராம மக்கள் அஞ்சினார்கள். விடுதலைப் புலியினரின் தாக்கத்திலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக முஸ்லிம்கள் தெற்கு நோக்கி அதாவது சிலாவத்துறை, கொண்டச்சி முஸ்லிம் கிராமங்களை நோக்கி செல்லத் தொடங்கினார்கள். சிலாவத்துறையிலும் கொண்டச்சி மரமுந்திரிகைக் குடியேற்றத்திலும் அமைந்திருந்த இலங்கை இராணுவ முகாம்கள் விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தலிலிருந்து தம்மைப் பாதுகாக்கலாம் என்று இம்மக்கள் அப்போது நம்பினார்கள்.

## 6.3 வட எல்லைக் கிராம முஸ்லிம்களின் தெற்கு நோக்கிய இடப்பெயர்வு

முசலி வடபுற முஸ்லிம் கிராம மக்கள் 25ஆம் திகதி காலையிலிருந்து சாரிசாரியாக சிலாவத்துறை நோக்கி இடம்பெயர ஆரம்பித்தார்கள். எந்தப் பாதையால் சிலாவத்துறைக்கு பாதுகாப்பாகச் செல்லலாம் என்பதிலும் பல கண்ணோட்டங்கள் காணப்பட்டன. காரணம் அக்காலத்தில் முருங்கன்–சிலாவத்துறை வீதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. அதனால் வேறு பாதுகாப்பான பாதைகள் மூலம் முஸ்லிம்கள் வெளியேறினார்கள். அதில் ஒரு பகுதியினர் (வேப்பங்குளம், பிச்சைவாணிபன் குளம், பொற்கேணி, அகத்திமுறிப்பு கிராம முஸ்லிம்கள்) அகத்திமுறிப்பு அணைக்கட்டின் வழியாகச் சென்று, சேறும் சகதிகளையும் கொண்ட கஷ்டமான ஒற்றையடிப் பாதையின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எடுப்பதில் கண்ணுங் கருத்துமாக இருந்தது. விடுதலைப் புலிகளின் வெளியேற்ற உத்தரவு பல்வேறு கண்ணோட்டங்களில் மக்களால் நோக்கப்பட்டது.

## 6.2. வெளியேற்ற உத்தரவும் முஸ்லிம்களின் நிலைப்பாடும்

முசலியை முழுமையாக நோக்கும் போது விடுதலைப் புலியினரின் பலவந்த வெளியேற்றத்தை முஸ்லிம்களால் உதாசீனப்படுத்த முடியவில்லை. இதற்குப் பல காரணங்கள் இருந்தன. இக்காலக்கட்டத்தில் விடுதலைப் புலியினர் இப்பிரதேசத்தில் ஆயுத ரீதியாக மிகவும் பலம் வாய்ந்தவர்களாகக் காணப்பட்டார்கள். முசலியின் எந்தப் பிரதேசத்திற்கும் சென்று தமது கட்டளையை நிறைவேற்றக் கூடிய ஆயுத ரீதியான ஆற்றல் கொண்டவர்களாகவும் இவர்கள் இருந்தார்கள்.

விடுதலைப் புலிகளின் ஆயுதப் பயமுறுத்லுக் கெதிரான உடனடி நடவடிக்கை எடுக்கக் கூடிய ஆற்றல் முசலி முஸ்லிம்களிடம் அக்காலத்தில் இருக்கவில்லை. இலங்கை இராணுவத்தினரிடமிருந்து பாதுகாப்புப் பெறக் கூடிய வசதிகள் எல்லாப் பிரதேச முஸ்லிம்களுக்கும் இருக்கவில்லை. கடந்த கால அனுபவங்களைக் கொண்டு நோக்கும் போது அரசாங்கப்பாதுகாப்பில் முசலி முஸ்லிம்களுக்கு நம்பிக்கையும் இருக்கவில்லை. இதில் குறிப்பாக முசலியின் வட புற முஸ்லிம் செறிவு சிலாவத்துறை இராணுவ முகாமிலிருந்து தொலைவில் காணப்பட்டது. இப்பிரதேச முஸ்லிம்களிடம் தமது தற்பாதுகாப்பிற்கு ஆயுதங்களும் இருக்கவில்லை.

அதே நேரத்தில் வட புற முஸ்லிம் கிராம மக்கள் கடந்த காலங்களில் தமிழ் ஆயுதக் குழுக்களுடன் முரண்பாடுகளைக் கொண்டவர்களாகக் காணப்பட்டார்கள். தமது தற்பாதுகாப்பிற்காக வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் இந்திய இராணுவத்தால் பறிக்கப்பட்ட நிலையில் இக்காலத்தில் முஸ்லிம் மக்கள் இருந்தார்கள். நிராயுத பாணியான காலக் கட்டத்தில் விடுதலைப் புலியினரின் உத்தரவுக் கெதிரான எந்த முயற்சியும் தமக்கு மிகப் பாரதூரமான விளைவுகளைக் கொண்டு வரலாம் என முஸ்லிம்கள் அஞ்சினார்கள். கிழக்கு மாகாணத்தின் காத்தான்குடி, ஏறாவூர் ஆகிய முஸ்லிம் கிராமப் படுகொலைகள் பற்றிய செய்திகளை இம்மக்கள் நன்கு அறிந்திருந்தார்கள். விடுதலைப்



புலியினரால் பணயக் கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்ட முசலி முஸ்லிம் தனவந்தர்கள் பற்றிய எவ்வித செய்தியும் இல்லாத நிலையில் விடுதலைப் புலிகளுக்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபட சக்தியற்றிருந்தார்கள்.

அது அவ்வாறிருக்க வெளியேற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்ட மறுநாள் காலை 10 மணிக்கு முசலியின் வடஎல்லையில் தனித்து அமைவுற்றிருந்த முஸ்லிம் கிராமமான பூநொச்சிக் குளத்தில் விடுதலைப் புலியினர் ஆயுதங்களோடு உள்நுழைந்து அக் கிராம மக்களைத் தாக்கியதோடு, அம்மக்களின் சொத்துக்களையும் பறித்தார்கள். பூநொச்சிக் கிராம நிகழ்ச்சி முசலி முஸ்லிம் மக்களுக்கு குறிப்பாக வட எல்லைக் கிராம முஸ்லிம்களுக்கு பெரும் அச்சத்தை ஏற்படுத்தியது. வட எல்லைக் கிராமங்களான வேப்பங்குளம், பொற்கேணி, அகத்திமுறிப்பு, பிச்சைவாணிபன் குளம், பண்டாரவெளி ஆகியவையும் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உட்படலாம் என்று இக்கிராம மக்கள் அஞ்சினார்கள். விடுதலைப் புலியினரின் தாக்கத்திலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக முஸ்லிம்கள் தெற்கு நோக்கி அதாவது சிலாவத்துறை, கொண்டச்சி முஸ்லிம் கிராமங்களை நோக்கி செல்லத் தொடங்கினார்கள். சிலாவத்துறையிலும் கொண்டச்சி மரமுந்திரிகைக் குடியேற்றத்திலும் அமைந்திருந்த இலங்கை இராணுவ முகாம்கள் விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தலிலிருந்து தம்மைப் பாதுகாக்கலாம் என்று இம்மக்கள் அப்போது நம்பினார்கள்.

## 6.3 வட எல்லைக் கிராம முஸ்லிம்களின் தெற்கு நோக்கிய இடப்பெயர்வு

முசலி வடபுற முஸ்லிம் கிராம மக்கள் 25ஆம் திகதி காலையிலிருந்து சாரிசாரியாக சிலாவத்துறை நோக்கி இடம்பெயர ஆரம்பித்தார்கள். எந்தப் பாதையால் சிலாவத்துறைக்கு பாதுகாப்பாகச் செல்லலாம் என்பதிலும் பல கண்ணோட்டங்கள் காணப்பட்டன. காரணம் அக்காலத்தில் முருங்கன்–சிலாவத்துறை வீதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. அதனால் வேறு பாதுகாப்பான பாதைகள் மூலம் முஸ்லிம்கள் வெளியேறினார்கள். அதில் ஒரு பகுதியினர் (வேப்பங்குளம், பிச்சைவாணிபன் குளம், பொற்கேணி, அகத்திமுறிப்பு கிராம முஸ்லிம்கள்) அகத்திமுறிப்பு அணைக்கட்டின் வழியாகச் சென்று, சேறும் சகதிகளையும் கொண்ட கஷ்டமான ஒற்றையடிப் பாதையின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மூலமாக தெற்கு நோக்கி வந்து கொண்டச்சி முஸ்லிம் கிராமத்தை அடைந்தார்கள். இவ்வாறு கொண்டச்சி வந்த அகதிகள் அங்குள்ள பாடசாலைகளிலும் பொதுக் கட்டிடங்களிலும் தங்கினார்கள். முன்னர் குறிப்பிட்டது போல, முஸ்லிம்கள் அபயம் தேடி வந்த கொண்டச்சி முஸ்லிம் கிராமத்திற்கு அண்மையில் இராணுவத் தளமொன்று அமைவுற்றிருந்தது. இத்தளம் தமக்குப் பாதுகாப்புத் தரலாம் என்ற நம்பிக்கையில் முஸ்லிம்கள் இங்கு வந்தார்கள்.

அதே நேரத்தில், பூநொச்சி, பண்டாரவெளி கிராமத்தவர்கள் ஒரு குறுக்குப் பாதையைப் பயன்படுத்தி சிலாவத்துறையை அடைந்தார்கள். இவ்வாறு வந்த மக்கள் சிலாவத்துறை இராணுவ முகாம் சூழலில் காணப்பட்ட பாடசாலைகள், பள்ளிவாயில்கள், தனியார் வீடுகளில் அபயம் பெற்றார்கள்.

## 6.4 ஒக்டோபர் 25ஆம் திகதி

முசலியிலிருந்து முஸ்லிம்கள் வெளியேறிவிட வேண்டும் என்ற விடுதலைப் புலியினரின் உத்தரவு மிகக் குறுகிய காலத்தில் இப்பிரதேசத்தில் ஒரு பெரிய மனித இடப்பெயர்வை ஏற்படுத்தக் காரணமாயிற்று. வெளியேற்ற உத்தரவு அறிவிக்கப்பட்டதிலிருந்து இரு தினங்களுக்குள் முசலியின் மொத்த முஸ்லிம்களில் 80 சத வீதத்திற்கும் அதிகமானவர்கள் தமது வீடுகளையும், கிராமங்களையும் கைவிட்டு சிலாவத்துறைப் பிரதேசத்திற்கு வந்து சேர்ந்தார்கள். சிலாவத்துறைப் பகுதி பல்லாயிரக்கணக்கான அகதி முஸ்லிம்களால் நிரம்பி வழிந்தது. அபயம் தேடி ஓடிவந்த முஸ்லிம்கள் இங்கு அமைந்திருந்த இலங்கை இராணுவ முகாம்கள், விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தலுக் கெதிராக தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தும் என நம்பினர்.

இச்சந்தர்ப்பத்தில் ஒக்டோபர் 25ஆம் திகதி காலை 11 மணிக்கு சிலாவத்துறையில் திடீரென ஒரு வதந்தி மிக வேகமாகப் பரவியது. அவ்வதந்தியாவது 'விடுதலைப் புலியினர் மிகப் பெரிய எண்ணிக்கையில் ஆயுதங்களுடன் முஸ்லிம்களைத் தாக்குவதற்கு சிலாவத்துறையை நோக்கி வந்து கொண்டிருக்கின்றார்கள்' என்பதாகும். இவ்வதந்தி முஸ்லிம்களின் அச்சத்தை மேலும் அதிகரிக்கச் செய்தது. முஸ்லிம் மக்கள் பாதுகாப்புத் தேடி சிலாவத்துறை இராணுவ முகாமுக்கு ஓடினார்கள். தம்மைப் பாதுகாக்கும் படி இலங்கை இராணுவத்தைக் கெஞ்சினார்கள்.



ஆனால் ஏறக்குறைய 500 இராணுவத்தினரையும் கனரக ஆயுதங்களையும் கொண்டிருந்த சிலாவத்துறை இராணுவ முகாமின் நிலையோ வேறாகக் காணப்பட்டது. விடுதலைப் புலிகள் சிலாவத்துறையை நோக்கி வருகின்றார்கள் என்ற வதந்தி இராணுவத்தையும் அச்சப்படுத்தியது. இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் தாக்குதலிருந்து தம்மை எவ்வாறு பாதுகாத்துக் கொள்ளலாம் என்பதில் கவனம் செலுத்தினர். முஸ்லிம்கள் தமது இராணுவ முகாமிற்கு வந்தால் அது தமக்கு ஆபத்தாக முடியலாம் என்று இராணுவத்தினர் கருதினர். முஸ்லிம் மக்களின் இரங்கலை இராணுவத்தினர் அசட்டை செய்ததுமல்லாமல், சிலாவத்துறை இராணுவ முகாம் வாயில்களை மூடிவிட்டதோடு, முகாமைச் சுற்றி பொருத்தப்பட்டிருந்த மின்சாரக் கம்பிகளையும் உயிரூட்டி விடுதலைப் புலிகளின் தாக்குதலை எதிர்பார்த்து பதுங்கு குழிக்குள் மறைந்து கொண்டார்கள். பாதுகாப்புத் தேடி வந்த முஸ்லிம்களை இராணுவ முகாம் வளவுக்குள் நுழைய வேண்டாம் என்று இராணுவத்தினர் எச்சரித்தார்கள். இராணுவத்தின் இவ்வச்ச நிலையை அறிந்த முஸ்லிம்கள் தம்மைத்தாமே பாதுகாத்துக்கொள்ள ஆயுதங்களையாவது தரும்படி இராணுவத்தினரிடம் கேட்டார்கள். இக் கோரிக்கையும் இராணுவத்தினரால் முற்றாக மறுக்கப்பட்டது. விடுதலைப் புலிகளின் தாக்குதலில் இருந்து இராணுவத்தினர் தம்மைப் பாதுகாப்பார்கள் என்ற நம்பிக்கை மேற்குறிப்பிட்ட நிகழ்வால் முஸ்லிம்களுக்கு இல்லாமல் போயிற்று.

இந்நிலையில், முசலி முஸ்லிம்களைப் பொறுத்தவரை விடுதலைப் புலிகளின் பலவந்த உத்தரவை ஏற்றுக்கொண்டு தமது வாழ்விடத்தைவிட்டு வெளியேறுவதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை.

மிகுந்த மனப் போராட்டத்தின் முடிவில், முசலியை விட்டு வெளியேறுவது என்ற முடிவுக்கு முசலி முஸ்லிம்கள் வந்தார்கள். அதே நேரத்தில், முசலி முஸ்லிம்களின் விருப்பமற்ற இவ்வெளியேற்ற முடிவை மேலும் உறுதிப்படுத்தக் கூடிய மற்றுமொரு சம்பவம் இப்பிரதேசத்தில் நிகழ்ந்தது. அதுவும் இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியது அவசியமாகும்.

ஏற்கனவே சுட்டிக்காட்டியதைப் போல, முசலியைப் போல் மன்னார் தீவு, மாந்தை, நானாட்டான் பிரதேச முஸ்லிம்களும் தமது குடியிருப்புக்களை விட்டு வெளியேறுவதற்கு விடுதலைப் புலிகளால் 48 மணித்தியால அவகாசம் கொடுக்கப்பட்டது. இப்பலவந்த வெளியேற்றத்திற்குட்பட்ட மேற்குறிப்பிட்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரதேசங்களை சேர்ந்த முஸ்லிம்களில் ஒரு பகுதியினர் சிறுபடகுகள் மூலம் தெற்காகக் கற்பிட்டிப் பிரதேசத்திற்கு விரைந்து கொண்டிருந்தார்கள். அகதிகளை ஏற்றிச் சென்ற சிறுபடகுகள் ஆழமற்ற கரையோர வழிகளைப் பயன்படுத்தி சென்று கொண்டிருந்தன. இப்படகுகளில் பல சிலாவத்துறையில் தரித்துச் சென்றன. மன்னார் மாவட்டத்தின் ஏனைய பிரதேச முஸ்லிம்களும் வெளியேறுவதை அவதானித்த முசலி முஸ்லிம்கள் தாமும் வெளியேறுவதைவிட வேறு மார்க்கம் இல்லை என்ற முடிவுக்கு வந்தார்கள்.

ஒக்டோபர் 25ஆம் திகதி ஒரு வெள்ளிக்கிழமையாகும். முஸ்லிம்கள் தாம் வாழ்ந்து வந்த பிரதேசத்தை விட்டு வெளியேறுவது என்று தீர்மானித்த தினமாகும். அன்றைய வெள்ளிக்கிழமை சிலாவத்துறை முகைதீன் ஜும்ஆப் பள்ளியில் தமது இறுதி ஜும்ஆத் தொழுகையை முசலி முஸ்லிம்கள் நிறைவேற்றினார்கள். அத்தொழுகையின் இறுதியில் தாம் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த பிரதேசத்தை விட்டு வெளியேறும் தீர்மானத்தை முஸ்லிம்கள் எடுத்தார்கள். தமது புனித பூமியை தாம் திரும்பவும் தரிசிப்பதற்கான எதிர்கால வாய்ப்புக்காகப் பிரார்த்தித்தார்கள்.

## 6.5. முசலி முஸ்லிம்களின் வெளியேற்றம்

தாம் பாரம்பரியமாக வாழ்ந்த பிரதேசத்தைவிட்டு வெளியேறுவதென்பது முசலி முஸ்லிம்களைப் பொறுத்தவரை ஒரு இலகுவான முடிவாக இருக்கவில்லை. தமது வீடு, உடமைகளை, பெருமளவு சொத்துக்களை கைவிட்டு விட்டு வெறுங்கையோடு வெளியேறுவது இம் மக்களின் மனதைப் பெரிதும் பாதித்தது. ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், வயது முதிர்ந்தவர்கள், நோயாளிகள் போன்றவர்களோடு அவசர அவசரமாக தமது இருப்பிடத்தை விட்டு ஓடுவதென்பது இலகுவில் செய்யக்கூடியதொன்றாகவும் இருக்கவில்லை. ஆனால் அதே நேரத்தில் தமது பிரதேசத்தை விட்டு வெளியேறுவதை விட வேறு வழியுமிருக்கவில்லை. தமது வெளியேற்றத்தை திட்டமிட்டுச் செயலாற்றக்கூடிய கால அவகாசமும் இவர்களுக்கு இருக்கவில்லை. ஒக்டோபர் 25ஆம் திகதி சிலாவத்துறையின் நிகழ்ச்சியால் அதிர்ச்சியடைந்த முசலி முஸ்லிம்கள் கிடைக்கக்கூடியதாக இருந்த முறைகள், பாதைகள் மூலமாக முசலியைவிட்டு வெளியேறத் தொடங்கினார்கள்.



### வில்பத்து வனாந்தரத்தினூடாக வெளியேற்றம்

முசலி முஸ்லிம்களில் ஒரு பகுதியினர் வில்பத்து அடர் காட்டினூடாக முசலியை விட்டு வெளியேறினார்கள் (படம் 14). இவர்கள் கொண்டச்சி முஸ்லிம் கிராமத்தில் அபயம் தேடி வந்த வேப்பங்குளம், பொற்கேணி, அகத்திமுறிப்பு கிராமத்தவர்களாவர். வேறு வழியின்றி முஸ்லிம்கள் அவசர அவசரமாக வில்பத்து வனாந்திரத்தினூடாக வெளியேறத் தீர்மானித்தார்கள். இவர்கள் வெளியேறத் தீர்மானித்த பாதை கொண்டச்சி மரமுந்திரிகைக் குடியேற்றத்திட்டத்தினூடாக அநுராதபுர மாவட்ட சிங்கள எல்லைக்கிராமமான வெலச்சிக்குச் செல்லும் பாதையாகும். இப்பாதை மிகுந்த அடர் காட்டினூடாகச் செல்லும் ஏறக்குறைய முப்பது மைல்கள் தூரத்தைக் கொண்டிருந்தது.

ஒக்டோபர் 26ஆம் திகதி காலை சிறு சிறு குழுக்களாக முஸ்லிம்கள் இப்பாதை வழியாக வெளியேற ஆயத்தமாயினர். அப்போது இங்கிருந்த இராணுவத்தினர் இப்பாதை நெடுகிலும் மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருப்பதனால் பயணம் செய்ய வேண்டாம் என்றும் கடல் வழியாக வெளியேறும்படியும் இம்மக்களிடம் கூறினார்கள். கடல் வழிப்பாதை இக்காட்டுவழிப் பாதையைவிடப் பயங்கரமானது என்று இம் மக்கள் கருதியதனால் மிதி வெடியிலிருந்து தம்மைப் பாதுகாக்க மிருகங்களை தமக்கு முன்னால் சாய்த்துக் கொண்டு தமது பயணத்தை தொடர்ந்தார்கள். 26ஆம் திகதியன்று இக் காட்டுப் பாதையில் ஏறக்குறைய 15 மைல் தூரத்தில் மர நிழலில் அமர்ந்து உணவும் ஓய்வும் எடுத்துக்கொண்டிருந்த போது இக் காட்டில் காவற் கடமைபுரிந்து கொண்டிருந்த இராணுவத்தினரும், சிங்கள ஊர்காவற் படையினரும் இம் மக்களை வழிமறித்து பரிசோதனையிட்டனர். இத் தொல்லைகளிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்ட இம் மக்கள் பாதுகாப்பாக அதே நாள் வெலச்சி சிங்களக் கிராமத்தையடைந்தார்கள். இக் கிராம சிங்கள மக்கள் முஸ்லிம் அகதிகளை அன்பாக வரவேற்று உணவளித்து பொதுக் கட்டிடங்களில் உறைவிடமும் கொடுத்தார்கள்.

### கடல்வழியினூடாக வெளியேற்றம்

பரபரப்பான ஒக்டோபர் 23, 24, 25ஆம் திகதிகளில் முசலி முஸ்லிம் அகதிகளின் எண்ணிக்கை மணித்தியாலத்திற்கு மணித்தியாலம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படம் 14 : முசலிப்பிரதேச முஸ்லிம்களின் வெளியேற்றப்பாதை, 25-30 ஒக்டோபர் 1990






அதிகரித்துக்கொண்டு சென்றது. ஒக்டோபர் 25ஆம் திகதி நிகழ்ந்த இராணுவ பாதுகாப்பில் ஏற்பட்ட அதிருப்தியோடு சிலாவத்துறைச் சூழலில் இருந்த முஸ்லிம்கள் கடல் மார்க்கமாக வெளியேறத் தீர்மானித்தார்கள். முசலியில் எஞ்சிய முஸ்லிம்கள் இக் கடல் வழியையே தமது வெளியேற்றத்திற்குப் பயன்படுத்தினார்கள். சிலாவத்துறை, கற்பிட்டிப் பகுதிகளில் மீன்பிடிப்புக்கு பயன்படுத்தப்பட்ட சிறு படகுகளை வாடகைக்கு அமர்த்தி குடும்பம் குடும்பமாக தெற்கே கற்பிட்டி நோக்கி இம் மக்கள் சென்றார்கள். 25ஆம் திகதியிலிருந்து ஒக்டோபர் 30ஆம் திகதிவரை இவ்வெளியேற்றம் நடைபெற்றது.

கடற் பிரயாண அனுபவம் இமக்களுக்கு மிகவும் பயங்கரமானதாகக் காணப்பட்டது. ஒவ்வொருபடகும் ஏறக்குறைய 15–20 பேரை சுமந்து சென்றது. இப்படகுகள் கற்பிட்டியிலும் கரைத்தீவிலும் அகதிகளை இறக்கிவிட்டு திரும்பவும் சிலாவத்துறை வந்து அகதிகளைக் கொண்டு சென்றன. இவ்வாறு ஆறு நாட்கள் தொடர்ச்சியாக இரவு பகலாக முசலி முஸ்லிம் அகதிகளின் வெளியேற்றம் நடைபெற்றது.

## 6.6. அபயம் தேடிய முஸ்லிம் அகதிகள்

வில்பத்துக் காட்டினூடாக விலச்சி சிங்களக் கிராமத்தை அடைந்த முஸ்லிம் அகதிகள் சில தினங்கள் சிங்கள மக்களால் உணவளித்து, உறைவிடமளித்துப் பராமரிக்கப்பட்டார்கள். இவ்வாறு தொடர்ச்சியாக வந்த முசலி முஸ்லிம் அகதிகள் நான்கு அல்லது ஐந்து நாட்கள் இச் சிங்களக் கிராமத்தில் தங்கி பின்னர் அரசாங்கத்தினதும் அரசசார்பற்ற நிறுவனங்களினதும் உதவியுடன் அநுராதபுர மாவட்ட கணேவல்பொல, கொல்லங்குட்டிகம, மருதங்கடவல, இஹலபுளியங்குளம் ஆகிய முஸ்லிம் கிராமங்களுக்கு பஸ்களில் ஏற்றிச் செல்லப்பட்டார்கள். இக் கிராமங்களிலுள்ள பாடசாலைகளிலும், தனியார் கட்டிடங்களிலும், வீடுகளிலும், சில வாரங்களைக் கழித்த பின்பு மேற் குறித்த கிராமச் சூழல்களில் அமைக்கப்பட்ட சிறு சிறு குடிசைகளைக் கொண்ட தற்காலிக முகாம்களில் அகதிகளாக வாழ்ந்து வந்தனர்.

அதே போல கடல் மார்க்கமாக வந்த முசலி முஸ்லிம் மக்கள் புத்தள மாவட்ட கற்பிட்டி மீன்பிடித் துறைமுகத்தையும், கரைத்தீவையும் அடைந்தார்கள். கற்பிட்டி இறங்கு துறையையே மிக அதிகமான அகதிப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படகுகள் வந்தடைந்தன. கற்பிட்டிக்கு அப்போது மன்னார்த் தீவிலிருந்தும் முஸ்லிம் அகதிகள் வந்து இறங்கிக் கொண்டிருந்தார்கள். ஒக்டோபர் 25ஆம் திகதியிலிருந்து கற்பிட்டி கரையை அடையும் அகதிகளின் எண்ணிக்கை வேகமாக அதிகரிக்கத் தொடங்கியது. பல்லாயிரக் கணக்கான மன்னார் மாவட்ட முஸ்லிம் அகதிகளுக்கு கற்பிட்டி நகரப் பாடசாலைகள், பள்ளிவாயில்கள், மதுரசாக்கள், தேவாலயங்கள், பொதுக் கட்டிடங்கள், தனியார் வீடுகளில் தற்காலிக அபயம் கொடுக்கப்பட்டது. நாட்கள் செல்லச் செல்ல அகதிகளின் எண்ணிக்கை கற்பிட்டியும் அதன் சூழலும் பராமரிக்க முடியாத எண்ணிக்கைக்குச் சென்றது. அதனால் கற்பிட்டியிலிருந்து முஸ்லிம் அகதிகள் அதன் அயலிலுள்ள குறிஞ்சிப்பிட்டி, கண்டக்குளி, பள்ளிவாசல்துறை, முசல்பிட்டி, திகளி, ஏத்தாளை, கண்டக்குடா, ஆலங்குடா, நுரைச்சோலை, பூலாச்சேனை ஆகிய முஸ்லிம் கிராமங்களுக்கும் அதற்கு அப்பாலும் தற்காலிக தங்குமிட வசதி ஒழுங்குகளுக்காக உள்ளூர் மக்களாலும், அரச சார்பற்ற நிறுவனங்களாலும், நண்பர்களாலும், உறவினர்களாலும் அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

## 6.7. பலவந்த வெளியேற்றமும் பொருளாதார இழப்புக்களும்:

முசலி முஸ்லிம்கள் தமது சொத்து சுகங்களை இழந்தவர்களாக முசலியை விட்டு வெளியேறினார்கள். பலவந்த வெளியேற்றத்தினால் இம்மக்களுக்கு ஏற்பட்ட பொருளாதார இழப்புக்கள் மதிப்பிடக் கூடியன. ஆனால் சமூக, கலாசார, உளவியல் தாக்கங்கள் இலகுவில் மதிப்பிடக் கூடியவையல்ல. பலவந்த வெளியேற்றத்தினால் முசலி முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட பொருளாதார இழப்புக்கள் இப்பகுதியில் விளக்கப்படுகின்றன.

முசலி, எல்லா வகையான பொருளாதார வளங்களையும் கொண்டிருந்தது. இவ்வளங்களை அவற்றின் உரிமை பயன்பாட்டு அடிப்படையில் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதலாவது இப்பிரதேச மக்களின் பொதுப்பயன்பாட்டிற்குட்பட்டிருந்த பொருளாதார வளங்கள். இவற்றுள் நீர்ப்பாசனக் குளங்கள், கால்வாய்கள், கடல், காட்டுவளங்கள் போன்றவை அடங்கும். பலவந்த வெளியேற்றத்திற்குட்பட்டு தமது சொந்த இடங்களிலிருந்து வெகு தொலைவில் வாழ்கின்ற முசலி முஸ்லிம்களால் தாம் காலா, காலமாக தமது பொருளாதார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தி வந்த மேற்குறிப்பிட்ட பொது வளங்களிலிருந்து தூர விலகிக் காணப்படுகின்றார்கள்.



இரண்டாவது வகையான வளமானது தனிப்பட்டவர்களுக்கும், குடும்பங்களுக்கும் உடமையாக இருந்த சொத்துக்களாகும். 1990 ஆம் ஆண்டு முசலியில் 3555 முஸ்லிம் குடும்பங்கள் வாழ்ந்தார்கள். விவசாயிகளான முசலி முஸ்லிம்கள் விவசாய நடவடிக்கையோடு தொடர்புடைய சொத்துக்களைக் உரிமையாகக் கொண்டிருந்தார்கள். அதில் விவசாய நிலம், கால்நடைகள், குடியிருப்பு, பணம், தளபாடங்கள், பொருட்கள், வாகனங்கள் போன்றவை உள்ளடங்கும். மீன்பிடியிலும், கைத்தொழில், வர்த்தகத்துறை நடவடிக்கைகளிலும் ஈடுபட்ட முஸ்லிம்களினது உடமைகளும் இதனோடு சேர்த்து நோக்கப்பட வேண்டியதாகும். இச்சொத்துக்கள் இன்று இம்மக்களால் இழக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. இச்சொத்துக்களில் அசையும் சொத்துக்களான (Movable Assets) பணம், நகை, கால்நடைகள், வாகனங்கள் போன்றன இம்மக்களின் வெளியேற்றத்தின் போது விடுதலைப் புலிகளினால் பறிமுதல் செய்யப்பட்டன என்று அறியக் கூடியதாக இருக்கின்றது. இவையல்லாத நிலம், வீடு, வர்த்தக, கைத்தொழில் ஸ்தாபனங்கள் ஆகிய அசையாத சொத்துக்களானவை (Immovable Assets) பலவந்த வெளியேற்றத்தால் கைவிடப்பட்டுக் காணப்படுகின்றன. இச்சொத்துக்களின் உரிமையாளர்களுக்கு இவை பயன்படாத நிலையில் உள்ளன.

முசலி முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட பொருளாதார இழப்புக்களில் சில மதிப்பிடப்பட்டுள்ளன. இவ்வாறு மதிப்பிடப்பட்டுள்ள இழப்புக்களின் தொகுப்பு அட்டவணை 16 இல் தரப்பட்டுள்ளது. இவ்விழப்பு மதிப்பீட்டுக்கான அடிப்படை விபரங்கள் 1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இந்நூலாசிரியரின் தலைமையில் செய்யப்பட்ட வடமாகாண முஸ்லிம் அகதிகளின் வெளிக்கள ஆய்வில் இருந்து பெறப்பட்டவையாகும். இவ்வாய்வில் பெறப்பட்ட இழப்பு விபரங்கள் A Report on the Loss of Movable and Immovable Assets of people ousted from the Northern Province. vol. 1-5 (வடமாகாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட மக்களின் அசையும், அசையாச் சொத்துக்களின் இழப்புப் பற்றிய அறிக்கை, பாகம் 1–5 வரை தரப்பட்டுள்ளது.)

இவ்வாய்வில் கிடைக்கப்பெற்ற விபரங்கள் முசலியைச் சேர்ந்த 2431 குடும்பங்களின் தரவுகளில் இருந்து பெறப்பட்டவையாகும். இது மொத்த முசலி முஸ்லிம்களில் 68% சதவீதமானதாகும். அட்டவணை 16



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அட்டவணை-16

## கிராம அடிப்படையில் முசலிப் பிரதேச முஸ்லிம் குடும்பங்களின் இழப்பு விபரம் பற்றிய சுருக்க அட்டவணை

| கிராமங்களின் பெயர் | விபரம் தந்த குடும்பங்களின் எண்ணிக்கை | மொத்த சனத் தொகை | கல் வீடு (%) | நகை (ஒரு குடும்பத்திற்கு) | சராசரி நிலம் (ஏக்கரில்) | உரிமையாயிருந்த கால்நடைகள் | | | தளபாடப் பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | மாடு | ஆடு | கோழி | |
| வேப்பங்குளம் | 289 | 1386 | 64 | 4 | 5 | 3169 | 1750 | 2082 | 16891 |
| பொற்கேணி | 272 | 1205 | 91 | 5 | 5 | 4122 | 1868 | 1307 | 16281 |
| கொண்டச்சி | 246 | 1101 | 64 | 5 | 5 | 1446 | 1857 | 1879 | 10408 |
| அகத்தி முறிப்பு | 215 | 997 | 71 | 4 | 5 | 1664 | 1249 | 2139 | 11462 |
| கரடிக்குழி | 181 | 855 | 77 | 3 | 5 | 2825 | 1795 | 2437 | 14233 |
| சிலாவத்துறை | 177 | 827 | 68 | 4 | 4 | 2091 | 461 | 1178 | 17881 |
| மறிச்சுக்கட்டி | 168 | 745 | 90 | 0 | 6 | 774 | 952 | 1568 | 17863 |
| பாலைக்குழி | 144 | 446 | 58 | 5 | 5 | 2308 | 2008 | 1062 | 10222 |
| பண்டாரவெளி | 151 | 632 | 74 | 3 | 6 | 1413 | 438 | 1220 | 17483 |
| புதுவெளி | 144 | 492 | 83 | 7 | 8 | 2238 | 1116 | 3330 | 25956 |
| த.மு.கட்டு | 100 | 468 | 82 | 3 | 3 | 902 | 169 | 1334 | 11135 |
| மணற்குளம் | 88 | 369 | 64 | 4 | 4 | 828 | 627 | 973 | 14130 |
| கூளாங்குளம் | 86 | 378 | 90 | 5 | 6 | 947 | 557 | 2257 | 13494 |
| பூநொச்சி குளம் | 60 | 276 | 77 | 7 | 6 | 952 | 250 | 737 | 16466 |
| பி.வா.குளம் | 48 | 259 | 48 | 5 | 4 | 500 | 314 | 255 | 13666 |
| முசலி | 38 | 175 | 68 | 4 | 6 | 1098 | 73 | 402 | 15486 |
| இலந்தைக்குளம் | 24 | 103 | 100 | 3 | 5 | 344 | 137 | 212 | 10458 |

**குறிப்பு:** சிறுக்குளம், 4ஆம் கட்டை, வாரிவெளி, மேத்தன்வெளி ஆகிய கிராமங்களுக்கான விபரங்கள் அண்மையிலுள்ள பெரிய கிராமங்களுடன் சேர்த்துத் தரப்பட்டுள்ளன.

***மூலம்:*** **வெளிக்கள ஆய்வு, 1991.**



தேர்ந்தெடுக்கப்பட்ட சில பொருட்களின் இழப்பு விபரங்களைத் தருகின்றது. இவ்வட்டவணையில் இம்மக்களுக்கு உரித்தாக இருந்த ஏனைய சொத்து விபரங்கள் உள்ளடக்கப்படவில்லை. அதுமட்டுமன்றி இம்மக்களுக்கேற்பட்ட இழப்பு விபரங்கள் 1991ஆண்டு பணப்பெறுமதி அடிப்படையில் இங்கு தரப்பட்டுள்ளன. என்றாலும் பலவந்த வெளியேற்றத்தோடு தொடர்புற்ற வகையில் முஸ்லிம் கிராம அடிப்படையில் இம்மக்களுக் கேற்பட்ட இழப்புக்கள் பற்றி ஒரு கண்ணோட்டத்தை இவ்வட்டவணை எமக்குத் தருகின்றது.

பலவந்த வெளியேற்றம் முசலி முஸ்லிம்களின் சமய, சமூக, கலாசார நிறுவனங்களுக்கும், அவற்றுக்கு உரிமையாக இருந்த காணிகள், கட்டிடங்கள், சொத்துக்களின் இழப்புக்கும் காரணமாக இருந்தது. இவ்வகையான இழப்புக்கள் இங்கு மதிப்பிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அது போல முசலிப் பிரதேச முஸ்லிம்களுக்கு உரிமையாக இருந்த வர்த்தக, கைத்தொழில் ஸ்தாபனங்களினது இழப்பு விபரங்களும் மதிப்பிடப்பட வேண்டியவைகளாகும். பின்னிணைப்பு 5 இல் சிலாவத்துறையின் முஸ்லிம்களுக்கு உரிமையாக இருந்த வர்த்தக நிலையங்கள் பற்றிய சில அடிப்படை விபரங்கள் தரப்பட்டுள்ளன.

முசலி முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட இப்பொருளாதார இழப்புக்குப் பொருத்தமான பரிகாரம் தேடப்பட வேண்டியது அவசியமாகும். அதனை இரண்டு கண்ணோட்டங்களில் இங்கு குறிப்பிடலாம். ஒன்று, இம்மக்களின் சொந்த இடத்திலான மீள்குடியேற்றத்தின் மூலமாக இம்மக்களால் பரம்பரை பரம்பரையாகப் பயன்படுத்தப்பட்டு வந்த குளம், நீர்ப்பாசனக் கால்வாய், கடல், காட்டுவளங்கள் போன்றவற்றைத் திரும்பவும் இம்மக்கள் பயன்படுத்துவதற்கான வாய்ப்பை உருவாக்கிக் கொடுப்பதாகும். ஆனால் கடந்த 7 வருடங்களாக அப்போதுச் சொத்துக்கள் கைவிடப்பட்டதால் ஏற்பட்ட பாதிப்புக்களுக்குப் பொருத்தமான புனர்நிர்மாண நடவடிக்கைகள் செய்யப்பட வேண்டியது அவசியமாகும். இப்புனர் நிர்மாணத்தில் இம்மக்களுக்கு உரிமையாக இருந்த விவசாய நிலங்கள், கட்டிடங்கள் போன்ற அசையாத சொத்துக்களும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டியது அவசியமானதாகும். அதே நேரத்தில் இம்மக்கள் பொருத்தமான சூழ்நிலையொன்று ஏற்படுகின்ற போது முசலிக்கு மீளச் செல்வதற்கு முன்னர் இம்மக்களுக்கு உரிமையாக இருந்த பலவந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளியேற்றத்தினால் இழந்த பணம், நகை, கால்நடைகள் போன்ற உடமைகளுக்கான பொருத்தமான மாற்று ஒழுங்குகள் செய்யப்பட்டு இம்மக்கள் தமது வாழ்க்கையை ஸ்திரப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.



# 7. முசலி முஸ்லிம் அகதிகள்

1990ஆம் ஆண்டு ஒக்டோபர் மாத பலவந்த வெளியேற்றத்தால் முசலியைச் சேர்ந்த முஸ்லிம்கள் அனைவரும் அகதிகளாக்கப்பட்டார்கள். கடந்த ஏழு வருடங்களாக தமது சொந்த இடங்களிலிருந்து மிக நீண்ட தூரத்தில் அகதி முகாம்களில் இவர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். பலவந்த வெளியேற்றத்தால் இவர்கள் தமது பொருளாதார அடிப்படைகளிலிருந்து பிரிக்கப்பட்டது மட்டுமல்லாமல் அப்பொருளாதார அடிப்படைகளைத் திரும்பவும் பெற்றுக் கொள்ளவோ, அவைகளிலிருந்து நேரடியாக அல்லது மறைமுகமாகப் பயன் பெறவோ முடியாத நிலையிலும் காணப்படுகின்றார்கள்.

அதே நேரத்தில் கடந்த ஏழு வருடகால அகதி நிலை இம் மக்களின் வாழ்க்கை முறையில், தரத்தில் பல பாதிப்புக்களை ஏற்படுத்தியிருக்கின்றது. இவ்வத்தியாயம் முசலி முஸ்லிம்களின் அகதி வாழ்க்கை பற்றியும் அதன் தாக்கம் பற்றியும் விளக்குகின்றது.

## 7.1 அகதிகளின் பரம்பல்

முசலி முஸ்லிம்களில் மிகப் பெரும்பான்மையனவர்கள் புத்தளம் மாவட்டத்திலும், எஞ்சியவர்கள் அநுராதபுரம், குருநாகல் மாவட்டங்களிலும் அகதிகளாக வாழ்கின்றார்கள். முசலி முஸ்லிம் அகதிகளின் இன்றைய பரம்பலை இம்மக்கள் தமது சொந்த இடங்களிலிருந்து வெளியேறிய பாதைகள் தீர்மானித்தன. (படம் 15)

புத்தளம் மாவட்டத்தில் இரண்டு பிரதேசங்களில் முசலி முஸ்லிம் அகதிகள் செறிந்து வாழ்கின்றனர். அதில் ஒன்று கற்பிட்டி குடாநாட்டுப் பிரதேசமாகும். முசலி முஸ்லிம்கள் அகதிகளாக கடல் வழியாக கற்பிட்டிக் கரையை அடைந்த போது அவர்கள் உள்ளூர் மக்களால் கற்பிட்டிச் சூழலிலுள்ள முஸ்லிம் கிராமங்களுக்கு உடனடி தங்குமிட வசதியளிக்கும் நோக்கத்தில் அழைத்துச் செல்லப்பட்டார்கள். அந்த அடிப்படையில், கற்பிட்டி நகரிலிருந்து ஏறக்குறைய 10 மைல் தூரத்திற்குள் காணப்பட்ட குறிஞ்சிப்பிட்டி, கண்டக்குளி,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பள்ளிவாசல்துறை, ஏத்தாளை, திகழி, பூலாச்சேனை போன்ற முஸ்லிம் கிராமங்களின் பாடசாலைக் கட்டிடங்கள், பள்ளிவாசல் வளவுகள், மதுரசாக்கள், தனிப்பட்டவர்களின் வீடுகள் ஆகியவற்றில் இம்மக்கள் தங்குவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டது. கற்பிட்டிக் குடாநாட்டுப் பிரதேச மக்கள் அகதிகளை அரவணைத்து அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைத் தமது கிராமங்களில் செய்து கொடுத்தார்கள்.

அந்த வகையில் 1991ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படவேண்டிய உள்ளூர்ப் பாடசாலைகள் முஸ்லிம் அகதிகளின் நலன் கருதி மார்ச் மாத இறுதி வரை பிற்போடப்பட்டிருந்தன. அதற்கு மேலும் பாடசாலைகள் திறக்கப்படுவதை பின்போட முடியாத சூழ்நிலையில் அகதிகளுக்கான மாற்று வாழ்விட ஒழுங்குகளை உள்ளூர் மக்கள் செய்து கொடுத்தார்கள். பாடசாலைகளிலும் பள்ளிவாசல் வளவுகளிலும் அகதிகளாக இருந்த மக்களுக்கு தனியார் காணிகளில் சிறு குடிசைகளை அமைத்து அங்கு வாழ்வதற்கு ஒழுங்குகள் செய்து கொடுக்கப்பட்டன.

வாழ்விடம் அமைப்பதற்கு வசதியான காணிகள் தாராளமாகக் கிடைக்காமையாலும், மலசலகூடம் போன்ற பொது வசதிகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே அரசசாரா நிறுவனங்களால் வழங்கப்பட்டமையாலும் அகதிக் குடும்பங்களுக்கான குடிசைகள் குறுகிய நிலப்பரப்பில் நெருக்கமாக அமைக்கப்பட வேண்டியதாயிற்று. சராசரி ஒரு குடிசை 12X10 அடிகளைக் கொண்டதாக இருந்தது. அதன் உயரம் ஏறக்குறைய 5 இலிருந்து 6 அடியாகவும் காணப்பட்டது. மொத்தத்தில் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட வசதிகளுடன் தற்காலிக வாழ்விட வசதிகள் உள்ளூர் மக்களின் இடையறாத முயற்சியாலும் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடனும் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

முசலி முஸ்லிம்கள் அகதிகளாக செறிந்து வாழ்ந்த மற்றுமொரு பிரதேசம் புத்தளம் நகரத்திற்கு வடக்கான பிரதேசமாகும். வெளியேற்றத்தின் போது தெற்காக நில வழி மூலமாகவும், கடல்வழியாகவும் புத்தள மாவட்டத்தின் வட எல்லையில் அமைந்துள்ள கரைத்தீவு என்ற முஸ்லிம் கிராமத்தை அடைந்தனர். சிலர் இக்கிராமத்தில் தங்கி நிற்க ஏனையவர்கள் தெற்கு நோக்கி அபயம் தேடிச் சென்றனர். இவ்வாறு தெற்கு நோக்கி வந்த முசலி முஸ்லிம்கள் இவ்வீதியின் முஸ்லிம் கிராமச் சூழலிலும் வேறு பொருத்தமான இடங்களிலும்



படம் 15 :




மூலம்: வெளிக்கள ஆய்வு. 1996



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அகதிகளாக வாழ முற்பட்டனர். இப்பாதையில் முசலி முஸ்லிம்கள் வாழ்ந்த பல முகாம்கள் காணப்பட்டன. அவற்றுள் ரெட்பானா, வட்டக்கண்டல் என்பனவும் புத்தளம்-கரைத்தீவு வீதியில் 2ஆம், 4ஆம், 6ஆம் கட்டை முகாம்களும் முக்கியமானவையாகும். இவற்றில் மிகப் பெரும்பான்மையானவை இன்னும் முகாம்களாகவே காணப்படுகின்றன.

## 7.2 ஏனைய வடமாகாண முஸ்லிம் அகதிகளுடன் முசலி முஸ்லிம் அகதிகள் சேர்தல்

முசலி முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட சம காலத்தில் வட மாகாணத்தின் ஏனைய பிரதேசங்களில் வாழ்ந்த முஸ்லிம்களும் விடுதலைப் புலிகளினால் பலவந்தமாக வெளியேற்றப்பட்டார்கள். வட மாகாணத்தின் மன்னார் தீவு, வவுனியா, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட முஸ்லிம்களும் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். அவர்களில் மிகப் பெரும்பான்மையினர் புத்தளம் மாவட்டத்திற்கே தஞ்சம் தேடி வந்தனர். இம் முஸ்லிம்களில் குறிப்பிடத்தக்க விகிதாசாரத்தினர் கற்பிட்டிப் பிரதேசத்திலும், மன்னார் வீதிப் பிரதேசத்திலும் அகதிகளாக வந்தனர். ஆரம்பகாலங்களில் மேற்குறிப்பிட்ட அகதிகள் எவ்லோரும் கிராம பிரதேச் வேறுபாடுகள் இல்லாமல் தற்காலிக முகாம்களில் ஒன்றாக வாழ வேண்டியிருந்தது. தற்காலிக இருப்பிட வசதிகள் நிரந்தர அகதி முகாம்களாக மாற்றப்பட்டபோது முகாம்களில் அகதி முஸ்லிம்களும், ஊரவர்களும் ஒன்றி வாழ்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது.

முசலியில் முஸ்லிம்கள் ஒரு தனித்துவமான சமூகமாக வாழ்ந்தார்கள். முசலிக்கிராமங்கள் ஒழுக்கத்திற்கும், சமூக கட்டுப்பாட்டிற்கும் பெயர் பெற்றிருந்தன. அகதி வாழ்க்கை கட்டுக்கோப்பான முசலிப் பிரதேச கிராம மக்களின் வாழ்க்கையை சின்னாபின்னமாக்கியது. முகாம்களில் குடும்ப அங்கத்தவர்களும் ஊரவர்களும், பிரதேசத்தவர்களும் சிதறி வாழ வேண்டிய சூழ்நிலைக்கும் உள்ளானார்கள். முசலியினது பிரதேச, கிராம தனித்துவம் இதனால் சீரழிந்து போனது ஒருபுறமிருக்க அகதி வாழ்க்கையின் ஒரு கஷ்டமான காலக்கட்டத்தில் முன்னர் அறிமுகமில்லாத பல புதிய பிரதேச, கிராம மக்களோடு வாழ வேண்டிய சூழ்நிலைக்கு இம் மக்கள் தள்ளப்பட்டார்கள். தமது கஷ்டங்களைப் பகிர்ந்து கொள்ள ஊரவர்கள், உறவினர்கள்,



பிரதேசத்தவர்கள் இல்லாமல் இருந்தது. இது முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட முதற் பாதிப்பு மட்டுமல்லாமல் பின்னர் தொடர்ந்த ஏனைய பாதிப்புகளுக்கும் அடிப்படையாக அமைந்தது.

முசலிப் பிரதேசத்தின் ஒரே கிராமத்தைச் சேர்ந்த முஸ்லிம்கள் இன்று பல்வேறு அகதி முகாம்களில் காணப்படுகின்றார்கள். உதாரணமாக வேப்பங்குள முஸ்லிம்கள் புத்தளம் மாவட்டத்தில் ஆலங்குடா, கண்டக்குழி, கரைத்தீவு அகதி முகாம்களிலும் அனுராதபுர மாவட்டத்தில் கோழிபந்தாவ, கொட்டியாவ அகதி முகாம்களிலும் சிதறி வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது. அதே போல் பாலைக்குளி, கரடிக்குளி, மறிச்சுக்கட்டி மக்களும் இன்று உறவினர்களை விட்டு பல இடங்களில் பிரிந்து வாழ்கின்றனர். அவர்கள் புத்தளம் மன்னார் வீதி, 6ஆம் கட்டை, 5ஆம் கட்டை, 4ஆம் கட்டை, கற்பிட்டி, திகழி, பூலாச்சேனை, கண்டக்குடா, போன்ற பிரதேசங்களில் சிதறுண்டு வாழ்கின்றனர்.

அதே நேரத்தில் வேப்பங்குள முஸ்லிம்களும் வாழ்கின்ற ஆலங்குடா முகாமை எடுத்துக்கொண்டால் அதற்குள் பண்டாரவெளி, மன்னார், எருக்கலம்பிட்டி, முல்லைத்தீவு, ஆகிய பிரதேச மக்களோடும், இதுபோல் அகத்திமுறிப்பு முஸ்லிம்கள் வாழுகின்ற 90 ஏக்கர் முகாமை நோக்கின் அங்கு மன்னார், எருக்கலம்பிட்டி, புதுக்குடியிருப்பு, நானாட்டான்போன்ற கிராம முஸ்லிம்களில் சிலராக இப்புதிய அகதி முகாம் வாழ்க்கையின் பங்காளிகளாக மாறவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

## 7.3. முகாம் சூழல்

இனப்பிரச்சினையால் அகதியாக்கப்பட்ட மக்களுக்கு தற்காலிக வாழ்விட ஒழுங்குகள் செய்து கொடுக்கப்பட வேண்டியது அரசாங்கத்தினதும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் கடமையாகக் கருதப்படுகின்றது. அகதிகளுக்கான தற்காலிக வாழ்விடம் 'முகாம்' என்று அழைக்கப்படுகின்றது. இவ்வகதி முகாமில் அகதி மக்களை மழை, வெயிலிலிருந்து பாதுகாப்பதற்கு தங்குமிட வசதிகளும், அத்துடன் ஏனைய பொது அடிப்படை வசதிகளான நீர், மலசலகூடங்களும் மேற்குறிப்பிட்ட ஸ்தாபனங்களினால் செய்து கொடுக்கப்படுகின்றன. இதற்குப் புறம்பாக மட்டுப்படுத்தப்பட்ட அளவு நிவாரணமும் அகதிக் குடும்பங்களுக்கு அளிக்கப்படுகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முசலி முஸ்லிம் அகதிகளுக்கும் இவ்வாறான அடிப்படை வசதி ஒழுங்குகள் செய்து கொடுக்கப்பட்டிருந்தன. அகதி முகாம் சூழலில் முசலி முஸ்லிம்களின் வாழ்க்கை முறையை சில உதாரணங்களோடு பின்வரும் பகுதியில் நோக்குவோம்.

## கண்டக்குழி அகதி முகாம்

கற்பிட்டிக் குடாநாட்டில் கற்பிட்டி நகரத்திற்குத் தெற்காக இரண்டு மைல் தொலைவில் கண்டக்குழி அகதி முகாம் அமைந்துள்ளது. அகதிகள் இப்பகுதியில் குடியேற்றப்படுவதற்கு முன்னர் இப்பிரதேசம் தென்னந் தோட்டமாக இருந்தது. தனியாருக்கு உரிமையாக இருந்த இத்தென்னந் தோட்டத்தில் கற்பிட்டிக் கரையை அடைந்த அகதிகளில் ஒரு பகுதியினர் குடியமர்த்தப்பட்டார்கள்.

இம்முகாமில் ஆரம்பத்தில் ஏறக்குறைய 400 குடும்பங்கள் அதாவது 2000 அகதிகள் குடியமர்த்தப்பட்டனர். ஆரம்பத்தில் சுமார் 40 மீற்றர் நீளமும் 6 மீற்றர் அகலமும் கொண்ட பச்சை நிறத்திலான பொலித்தீன் கூடாரங்கள் கொடுக்கப்பட்டு தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. இவ்வாறான ஒரு கூடாரத்துக்குள் 8 குடும்பங்கள் ஒன்றாகத் தங்கின. பின்னர் இவ்வாறான வாழ்விட வசதி முறை இம்மக்களுக்குப் பொருத்தமாக இல்லாமையால் குடும்பத்திற்கொரு குடிசை அமைப்பதற்கான அடிப்படைப் பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்த அடிப்படையில் ஒரு குடும்பத்திற்கு ஒரு குடிசை என்றவாறு அமைக்கப்பட்ட இம்முகாம் குடிசைகளின் அமைப்பையும் அதன் பரப்பையும் படம்- காட்டுகின்றது. இவை 10x12 அடி அளவுகளைக் கொண்ட சிறிய குடிசைகளாகும். வயது வந்த ஒருவர் இக்குடிசைக்குள் எழுந்து நின்றால் தலை முட்டக் கூடியளவு உயரம் குறைவாகக் குடிசைகள் காணப்பட்டன. ஒரு குடிசையின் கூரை மறு குடிசையைத் தொடுமளவுக்கு நெருக்கமாக குடிசைகள் அமைக்கப்பட்டிருந்தன. 2000 அகதிகளுக்கு 4 பொது மலசல கூடங்களும், 6 கிணறுகளும் முகாம் குடிசைகளின் பரம்பலுக்கேற்ப அமைத்துக் கொடுக்கப்பட்டன (படம் 16).



இம்முகாமில் வட மாகாணத்தின் பல பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்தார்கள். இவர்களில் சிலாவத்துறை, கூளாங்குளம், முசலி, வாரிவெளி, சிறுக்குளம், பண்டாரவெளி போன்ற கிராம மக்களும் வாழ்ந்தார்கள். இம்முகாம் மொத்த அகதிகளில் ஏறக்குறைய 60 சதவீதமானவர்கள் முசலிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர். முசலி அகதிகள் இம் முகாமின் கிழக்குப் பகுதிகளில் செறிவாக வாழ்ந்தார்கள்.

முகாம் வாழ்க்கை அகதிகளுக்குப் பல வகையில் சவாலாகக் காணப்பட்டது. மிக நெருங்கிய குடிசை அமைப்பும், மட்டுப்படுத்தப்பட்ட முகாம் வசதிகளும், அகதியாக்கப்பட்டதால் ஏற்பட்ட உளவியல் தாக்கமும் அகதிகள் எதிர் நோக்கிய வாழ்க்கைப் பிரச்சினைகளின் அடிப்படைகளாகும்.

முகாமில் ஒழுக்க ரீதியாக மறைவாகச் செய்யப்பட வேண்டிய பல நடவடிக்கைகளை அவ்வாறு செய்ய முடியாத இக்கட்டான சூழ்நிலை இம்மக்களுக்குக் காணப்பட்டது. நெருக்கமான குடிசை அமைப்பு மக்களுக்கு பல அசௌகரியங்களை ஏற்படுத்தியது. உணவு நிவாரணம் அகதிகளில் சிறுவர் தொடங்கி முதியவர் வரை முகாமில் கைதிகளாக முழு நேரத்தைப் போக்கும் வழமைக்கு காரணமாயிற்று. அகதிகளின் மனச் சுமையும், பொருளாதாரக் கஷ்டங்களும் குடும்பத்துக்குள் பிணக்குகளை ஏற்படுத்தின. அத்துடன் அகதிகளுக்கிடையிலும் பல்வேறு மனத்தாங்கல்களையும், கைகலப்புக்களையும் ஏற்படுத்த அடிப்டைக் காரணமாயிற்று.

இத்தகைய பாதகமான வாழ்க்கை அமைப்பைக் கண்டக்குளி முகாம் சூழல் கொண்டிருந்தாலும் வேறு சில சாதகமான பின்னணிச் சூழலும் காணப்பட்டதை இங்கு குறிப்பிட வேண்டும். முகாமிலிருந்து கூப்பிடு தூரத்தில் கண்டக்குளிக் கிராமம் அமைந்திருந்தது. (படம் 16) இக்கிராமத்தில் கல்வி,சமய, கலாசார நடவடிக்கைகளுக்கான வசதிகள் காணப்பட்டன. இவ்வசதிகளை அகதி மக்கள் பயன்படுத்தக் கூடிய சமூக சூழல் அங்கு காணப்பட்டது.

கண்டக்குளி கிராம மக்கள் அகதி முஸ்லிம்களின் நலன்களில் மிக அக்கறையோடு உதவி வந்தார்கள். ஆரம்ப காலங்களில் அகதிகளுக்கு உடனடி தங்குமிட வசதிகள் மாத்திரமன்றி உணவு, குடிநீர் வசதிகளும் செய்து கொடுத்தார்கள். (படம் 16) அகதிகளுக்கு அவ்வப்போது ஏற்படும் இன்னல்களின் போது பொருள், போக்குவரத்து உதவிகளும் அளித்தார்கள். தமது பாடசாலை, பள்ளிவாசல், மதுரசா போன்ற சமூக-கலாசார நிலையங்களில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



படம் 16: கண்டக்குளி அகதி முகாம், 1995

தமதூர் மக்களைப் போல் சமமாக இடம் கொடுத்து ஒத்தாசை புரிந்தார்கள். இதுமட்டுமன்றி தமது தொழில் வாய்ப்புகளிலும் பங்காளிகளாக்கி ஆதரவு வழங்கியமை இம்மக்களின் பெருந்தன்மைக்கு சிறந்த எடுத்துக்காட்டுக்களாக உள்ளன. வேறு பல அகதி முகாம்களோடு ஒப்பிடுகின்ற போது கண்டக்குளி முகாம் அகதிகளைப் பொறுத்த வரையில் உள்ளூர் மக்களின் உதவி ஒத்தாசை ஒரு பெரும் பாக்கியம் என்றே குறிப்பிடலாம்.

கண்டக்குளி முகாமின் பொருளாதார சூழல் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் அகதி மக்களுக்கு தொழில் வாய்ப்புக்களையும் அளிக்கக் கூடியதாக இருந்தமை இம்முகாம் இட அமைவின் மற்றுமொரு சாதகமான அம்சமாகக் காணப்பட்டது. முகாமில் வாழ்ந்த அகதி மீனவர்கள் கண்டக்குளிக் கரையோர மீன்பிடித் துறையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொண்டனர். அகதிப் பெண்களும், சிறுமிகளும் இப்பிரதேசத்தில் பணப்பயிராக செய்யப்பட்டு வந்த வெங்காயத் தோட்டங்களில் பருவகாலத் தொழில்வாய்ப்பினைப் பெறக்கூடியதாகவும் இருந்தது. மேற்குறித்த வழிகளிலான வருமானம் அகதிகளின் பொருளாதாரப் பளுவைச் சற்று குறைக்க உதவியது.

கடந்த ஏழு வருடங்களாக கண்டக்குளி முகாம் ஏறக்குறைய அதே அமைப்பில் மட்டுப்படுத்தப்பட்ட வசதிகளோடு பெருகிவரும் அகதி மக்களுக்கு வாழ்விடம் வழங்கி வருகின்றது. முசலிப் பிரதேச முஸ்லிம் அகதிகள் உட்பட இம்முகாமில் வாழும் ஏனைய அகதிகலும் தமது எதிர்காலம் பற்றி எவ்வித நிச்சயமுமற்றவர்களாக தமது வாழ்க்கையைக் கொண்டு செல்கின்றார்கள்.

## மில்லடி அகதி முகாம்

இம்முகாம் புத்தள நகரத்திலிருந்து வடக்காக 6 மைல் தொலைவில் புத்தளம்-கரைத்தீவு பிரதான வீதியோரமாக அமைந்திருந்தது. இம்முகாமிற்குத் தெற்காக நெல் பதனிடப்படும் ஒரு ஆலை அல்லது மில் அமைவுற்றிருந்ததால் இம்முகாம் மில்லடி முகாம் என்று அழைக்கப்பட்டது. இம்முகாமில் முசலிப் பிரதேசத்தைச் சேர்ந்த கரடிக்குளி முஸ்லிம்கள் வாழ்ந்து வந்தார்கள். இம்முகாமில் வாழ்ந்த மொத்தக் குடும்பங்கள் 180 ஆகும்.

கரடிக்குளி வில்பத்துக் காட்டுக்கு வடக்காக முசலியின் தென் அந்தத்தில் அமைந்திருந்த கிராமமாகும். இனப் பிரச்சினை காரணமாக தமது கிராமத்தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விட்டு வெளியேறிய கரடிக்குளி முஸ்லிம்கள் கால்நடையாகத் தெற்கு நோக்கி புத்தள மாவட்டத்திற்கு வந்தார்கள். கரடிக்குளியையும், புத்தள நகரத்தையும் புத்தளம்-கரைத்தீவு வீதியின் தொடர்ச்சி இணைக்கின்றது. இவ்வீதியினூடாக வந்த கரடிக்குளி அகதிகளுக்கு மில்லடியில் முகாம் அமைத்துக் கொடுக்கப்பட்டது. முகாம் அமைக்கப்பட்ட பகுதி அரச காணியாக இருந்தமையே இக்குறித்த இடத்தில் முகாம் அமைக்கப்பட பிரதான காரணமாகும்.

கண்டக்குளியைப் போலல்லாமல் மில்லடி முகாம் ஒரு சதுப்பு நிலத்தில் அமைவுற்றுள்ளது. படம் 17 இல் மில்லடி முகாமின் இட அமைவும் அதன் உடனடிச் சூழலும் காட்டப்பட்டுள்ளது. இச்சூழல் வாழ்க்கைக்குப் பல வகையில் பொருத்தமற்ற தொன்றாகக் காணப்பட்டது. மழை காலத்தில் இம்முகாம் சூழலில் நீர் தேங்கி சேறும் சகதியுமாகக் காணப்பட்டது. நுளம்புத் தொல்லை இம்மக்களை வாட்டியது. உவர்த்தன்மை கொண்ட சதுப்பு நிலத்தில் குடிநீர் பெறுவதற்கு வசதிகளின்மையால் அகதி மக்கள் மிக நீண்ட தூரம் (ஏறக்குறைய ஒரு மைல்) சென்று குடிநீர் பெற்று வர வேண்டிய நிலையில் காணப்பட்டார்கள்.

ஏனைய முகாம்களைப் போல மில்லடி முகாமிலும் குடிசைகள் மிக நெருக்கமாக அமைக்கப்பட்டிருந்தன. இதனைப் படம் 17 காட்டுகின்றது. இம்முகாம் மில்லடி-ஏ, மில்லடி-பி என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டு முகாம் மக்களாலும், முகாம் நல வசதிகளுடன் தொடர்புடையவர்களாலும் நோக்கப்பட்டு வந்தது. இதற்கான அடிப்படைக் காரணம் இம்மக்கள் கரடிக்குளியாகிய தமது சொந்தக் கிராமத்தில் வழமையிலிருந்த குடும்பம் மற்றும் பிரதேச வேறுபாடு அடிப்டையில் தமது குடிசைகளை இம்முகாமில் அமைத்துக் கொண்டமையும், பழைய வேறுபட்ட தன்மையை முகாம் வாழ்க்கை மட்டத்திலும் கடைப்பிடிக்க விரும்பியமையுமாகும்.

மில்லடி அகதி முகாம் முஸ்லிம்கள் ஏற்கனவே குறிப்பிட்ட முகாம் சூழற் பிரச்சினை, குடிநீர் இன்மைப் பிரச்சினை ஆகியவற்றோடு பாடசாலை, மருத்துவம் போன்ற அடிப்படை வசதிகள் முகாம் சூழலிலும், கிட்டிய இடங்களிலும் அற்றவர்களாகக் காணப்பட்டார்கள். இதனால் பல சமூக, கல்வி, உடல்நல பாதிப்புக்களுக்கும் இம்மக்கள் உள்ளானார்கள்.





படம்-17 : மில்லடி அகதி முகாம்கள், 1995

மூலம்: வெளிக்கள ஆய்வு 1996



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அகதியாக்கப்பட்டதிலிருந்து ஆறு வருட கால முகாம் வாழ்க்கையில் சோர்வடைந்த மில்லடி முகாம் அகதிகள் தமது முகாமைக் கைவிட வேண்டிய கட்டத்திற்கு உள்ளானார்கள். இவ்வாறான பிரச்சினையைக் கடந்த ஆறு வருடங்களாக மில்லடி முகாம் மக்கள் எதிர் நோக்கிய போதும் அரசோ, அரசசார்பற்ற நிறுவனங்களோ இம்மக்களுக்கு ஒரு வாழ்க்கை வசதியை ஏற்படுத்திக் கொடுக்க முன்வரவில்லை. இறுதியில் இம்மக்கள் தாமாகவே முகாமை விட்டு வெளியேறி புதிய இடங்களில் தமது சொந்த முயற்சியின் மூலமாக குடிசைகளை அமைத்து வாழ்ந்து வருகின்றார்கள். இவ்வகையில் மில்லடி முகாம் அகதிகள் இன்று பள்ளிவாசல்துறையிலும், கண்டக்குடாவிலும் அகதிகளாக வாழ்கின்றார்கள்.

## 7.4 இயற்கை, செயற்கை அனர்த்தங்கள்

முசலி முஸ்லிம்கள் தமது அகதி வாழ்க்கையில் பல்வேறு வகையான இன்னல்களுக்கு உள்ளாகினார்கள். இம்மக்கள் எதிர்நோக்கிய சமூக, பொருளாதார, கலாசார, ஒழுக்க பாதிப்புக்களும் ஒருபுறமிருக்க இயற்கை, செயற்கை அனர்த்தங்களாலும் பாதிப்புக்களுக்குள்ளானார்கள். இவ்வாறு ஏற்பட்ட பாதிப்புக்களில் ஒன்று இம்மக்கள் வாழ்ந்த அகதி முகாம்கள் தீ விபத்துக்களினால் முற்று முழுதாக எரிந்து சாம்பலாகியதாகும். இம்மக்கள் அகதி வாழ்க்கையின் ஆரம்பத்திலிருந்து சிறிய அளவில் தீ விபத்துக்களை எதிர்நோக்கியிருந்தனர். எனினும் பிற்காலத்தில் பல பெரிய தீ விபத்துக்களினால் இம்மக்களின் குடிசைகளும், உடமைகளும் எரிந்து சாம்பலாகின. இதனால் இம்மக்கள் நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்ட பல சம்பவங்கள் இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியவையாகும்.

இவ்வாறு பெரிய அளவிலான தீ விபத்தால் பாதிக்கப்பட்ட முசலி முஸ்லிம் அகதிகள் வாழ்ந்த முகாம்களில் ஒன்று ஆனைவாசல் அகதி முகாமாகும். இம்முகாம் கற்பிட்டி நகருக்கு மேற்காக அமைந்துள்ளது. இங்கு ஏறக்குறைய 250 அகதிகள் வாழ்ந்தார்கள். இவர்களுள் மிகப் பெரும்பான்மையினர் முசலியைச் சேர்ந்தவர்களாகவும் அதிலும் குறிப்பாக சிலாவத்துறைக் கிராம மக்களாகவும் இருந்தார்கள். இம்முகாம் ஏப்ரல் மாதம் 1994 ஆம் ஆண்டு அறியப்படாத காரணத்தினால் திடீரெனத் தீப்பற்றி முற்று



முழுதாக எரிந்து சாம்பலாகியது. இத் தீ விபத்தில் அகதி மக்கள் சேமித்து வைத்திருந்த உணவு, உடை, ஏனைய அடிப்படைத் தேவைக்கான பொருட்கள் அனைத்தும் முற்று முழுதாக எரிந்தன. இத் தீவிபத்தால் மக்கள் பரிதவித்துப் போனார்கள். இதில் பாதிக்கப்பட்ட அகதிகள் இச் சூழலில் காணப்பட்ட ஏனைய அகதி முகாம்களில் சில நாட்கள் வாழ்ந்தனர். பின்னர் கற்பிட்டி நகருக்குக் கிழக்காக வன்னிமுந்தல் என்ற இடத்தில் அமைக்கப்பட்ட புதிய முகாமில் இம்மக்களுக்கு இடமளிக்கப்பட்டது.

இதற்குச் சமனான தீ விபத்து நிகழ்ச்சிகள் ஏனைய அகதி முகாம்கள் பலவற்றில் நிகழ்ந்துள்ளன. அவற்றில் குறிஞ்சிப்பிட்டி தெற்கு பள்ளிவாசல் முகாமும் ஒன்றாகும். இம்முகாம் தீ விபத்தில் முசலிப் பிரதேச சிலாவத்துறை முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டார்கள். ஆலங்குடா முகாம் பிரதேசத்தில் நிகழ்ந்த மற்றுமொரு பெரிய தீ விபத்தில் முசலிப் பிரதேசத்தைச் சேர்ந்த அகத்திமுறிப்பு அகதி முஸ்லிம்களின் குடிசைகள் முற்றாக எரிந்தன. இதே போல கண்டக்குடா 90 ஏக்கர் முகாம் எரிந்து சாம்பலாகிய போது இம்முகாமில் வாழ்ந்த முசலிப் பிரதேச அகத்தி முறிப்பு, மணற்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த முஸ்லிம் அகதிகளின் குடிசைகளும், உடமைகளும் எரிந்து இம்மக்கள் நிர்க்கதியானார்கள்.

தீவிபத்தினால் மட்டுமல்லாமல் வெள்ளப்பெருக்காலும், நிலக்கசிவினாலும் முகாம்களும், அகதி முஸ்லிம்களும் பாதிக்கப்பட்டனர். இவ்வாறான பாதிப்புக்களுக்கு பல உதாரணங்கள் உள்ளன. அநுராதபுர மாவட்டத்தில் முசலி முஸ்லிம்கள் வாழ்ந்த சில முகாம்கள் மழைக்கால நிலக்கசிவினால் பாதிக்கப்பட்டு பின்னர் முழு முகாமும் இடமாற்றம் செய்யப்பட வேண்டிய இக்கட்டான சூழ்நிலை அம்மக்களுக்கு ஏற்பட்டது.

## 7.5 மாற்றுவழி தேடி

முகாம் சூழலில் தொடர்ந்தும் தமது வாழ்க்கையைக் கொண்டு செல்ல முடியாத உளவியல் நிலையை முசலி முஸ்லிம் அகதிகள் அடைந்தார்கள். பொருத்தமான மாற்று வழி இவர்களுக்குத் தெரிந்திருந்கவில்லை. அரசியல் மற்றும் சமூக தலைமைத்துவ வழிகாட்டலும் இல்லாதிருந்தார்கள். மன்னார்த்தீவு, வவுனியா தெற்கு முஸ்லிம்களைப் போல சுயமாக தமது சொந்த இடங்களில் குடியேறக்கூடிய வாய்ப்பும் இவர்களுக்கிருக்கவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இச்சூழ்நிலையில் இம்மக்கள் தனிப்பட்ட குடும்ப மட்டத்தில் மாற்று வழிகளைத் தேடத் தொடங்கினார்கள். சிலர் ஊரவர்களும், உறவினர்களும் வாழ்ந்த கல்வி, தொழில், மருத்துவ, போக்குவரத்து வசதிகளைக் கொண்ட அகதி முகாம்களுக்கு இடம் மாறி வாழ முயற்சித்தார்கள். வேறு பல குடும்பங்கள் தமது தகுதிக்கேற்ப தனிப்பட்ட குடிசையையும், நீர், மலசல கூட வசதிகளையும் ஏற்படுத்தி முகாமின் பொது ஒழுக்கப் பிரச்சினையிலிருந்து விலகி வாழ முயற்சித்தார்கள். இது போல குடும்பக் காரணங்களுக்காக, முகாம் பிரச்சினை, போக்குவரத்துப் பிரச்சினை போன்ற காரணங்களுக்காக முகாம்களுக்கிடையில் இடம் மாறி தமது வாழ்விடச் சூழலில் முன்னேற்றத்தை ஏற்படுத்த முசலி முஸ்லிம்கள் தொடர்ச்சியாக முயற்சித்து வந்திருக்கின்ற தன்மையை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இவ்வாறான அகதிகளின் அகதி நிலைமைக்குட்பட்ட இடப் பெயர்வுகளுக்கு பல உதாரணங்களைக் குறிப்பிடலாம். புத்தளம் நகரத்துக்கு அண்மையில் அமைவுற்றிருந்த உப்பளம் எனப்படும் அகதி முகாமில் வாழ்ந்த கொண்டச்சி முஸ்லிம்கள் 1993 ஆம் ஆண்டு பள்ளிவாசல்துறைப் பகுதிக்கு இடம் பெயர்ந்தார்கள். இது போல விருதோடையில் வாழ்ந்த கூளாங்குள முஸ்லிம்கள் குறிஞ்சிப்பிட்டிக்கும், ஏத்தாளை- திகழியில் வாழ்ந்த புதுவெளி, சிறுக்குளம் ஆகிய முசலிப் பிரதேச முஸ்லிம்கள் குறிஞ்சிப்பிட்டிக்கும் இடம் பெயர்ந்தார்கள். மேலே குறிப்பிட்ட அதிக எண்ணிக்கையான அகதிகளின் இடப்பெயர்வை விட சிறிய அளவிலான பல அகதி இடப் பெயர்வுகள் கடந்த ஆறுவருட காலத்தில் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. மேலே அடையாளம் கண்ட அகதி இடப் பெயர்வுகளெல்லாம் புத்தளம் மாவட்டத்திற்குள் இடம் பெற்றவையாகும்.

ஆனால் இது போன்ற இடப் பெயர்வுகள் மாவட்டங்களுக்கு இடையிலும் ஏற்பட்டதற்குப் பல உதாரணங்கள் காணப்படுகின்றன. அநுராதபுர மாவட்டத்தில் பல பிரதேசங்களிலும் சிதறி அகதிகளாக வாழ்ந்த முசலி முஸ்லிம்கள் தமது ஊரவரும் உறவினர்களும் செறிவாக வாழ்ந்த புத்தளம் மாவட்டத்திற்கு இடம் பெயர்ந்து வருவதற்கு மிக நீண்ட காலம் முயற்சித்து வந்திருக்கின்றார்கள். சிலர் இதில் வெற்றியும் கண்டார்கள். ஆனால் துரதிஷ்டவசமாக முகாம்களுக்கிடையிலும், அதில் குறிப்பாக மாவட்டங்களுக்கு இடையிலுமான அகதி இடப் பெயர்வுகள் அரசாங்க அதிகாரிகளினால்



கட்டுப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. இதற்கான குறிப்பான காரணம் நிர்வாகச் சிக்கல்கள் என்று அரசாங்க தரப்பில் கூறப்பட்டது. எனினும் அகதி மக்களின் முகாம் வாழ்க்கைச் சூழல் உளவியல் காரணங்களுக்காக மேற்குறிப்பிட்ட வகையான அகதி இடப் பெயர்வுகளுக்கு அரசாங்க ஆதரவு கொடுக்க வேண்டும், அவ்வாறான ஆதரவு கொடுக்கப்பட்டிருந்தால் அகதிகளின் மனச்சுமையில் சற்றுத் திருப்திகரமான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கலாம். முகாம் விட்டு முகாம் மாறுவதால் அகதி நிவாரணங்களை இழக்க வேண்டிய நிலை ஏற்பட நேரிடும் என்பதால் அகதி முஸ்லிம்களும் மாற்று வழியின்றி தமது விருப்பத்திலில்லாத அகதி முகாம்களில் கைதிகளாக வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

## 7.6 சொந்தக் குடியேற்றம் அமைக்கும் முயற்சி

அகதியாக்கப்பட்டதிலிருந்து ஏறக்குறைய ஐந்து ஆண்டுகளில் முசலி முஸ்லிம்கள் தமது அகதி வாழ்க்கை அதிருப்தியின் உச்சக்கட்டத்தை அடைந்தார்கள். இதற்குக் காரணங்கள் பல. அகதிகளுக்கு வழங்கப்பட்ட உணவு நிவாரணத்தில் எவ்வித முன்னேற்றமும் செய்யப்படவில்லை. குடும்ப வருமானத்தைப் பெறுவதற்குரிய சுய தொழில் முயற்சிகள் ஊக்குவிக்கப்படவில்லை. ஐந்து வருடங்களுக்கு முன்னர் அவசர அவசரமாகக் கிடைத்த மூலப் பொருட்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட குடிசைகள் பாவிக்கப்பட முடியாத கட்டத்திற்கு வந்தன. அகதி முகாமில் உருவாக்கிக் கொடுக்கப்பட்ட தற்காலிக நீர் மலசல கூடங்கள் தமது செயற்பாட்டை இழந்தன. தமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியை இன்னும் பிற்போட முடியாத சூழ்நிலை உருவானது. இவை யாவும் முசலி முஸ்லிம் அகதிகளைத் தமது மாற்று வாழ்விட ஒழுங்கு எது கிடைத்தாலும் அதனை ஏற்றுக்கொள்ளும் மனோபாவத்துக்குத் தள்ளியது.

1995ஆம் ஆண்டு அரசாங்கமும், அரசசார்பற்ற நிறுவனங்களும் முகாம்களைப் புனரமைக்க முன்வந்தன. இப்புனரமைப்பு பல வழிகளில் செய்யப்பட்டது. தனிப்பட்ட குடும்பங்களின் குடிசைகளைப் புனரமைப்பதற்கு நிவாரணம் கொடுக்கப்பட்டதும் இவற்றுள் ஒன்று. இவ்வாய்ப்பில் அகதி முஸ்லிம்கள் தமது நீண்ட கால எதிர்பார்ப்பிற்கு ஏற்ற வகையில் புதிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குடிசைகளை அமைக்க முற்பட்டனர். முசலி முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் தமது வாழ்க்கைக்கு புதிய இடங்களைத் தேடி குடிசைகள் அமைத்துக் கொண்டார்கள். இதற்கான உதாரணங்கள் புத்தளம் மாவட்டத்திலும், அநுராதபுரம் மாவட்டத்திலும் நிறையக் காணப்பட்டன.

முகாம் மீளமைப்பின் மற்றுமொரு அம்சம் முகாமை முற்று முழுதாக மற்றோரிடத்தில் (Relocation) மாற்றியமைப்பதாகவும் இருந்தது. முகாம் வாழ்க்கைக்கு மாற்று வழியில்லாத நிலையில் காணப்பட்ட முசலி முஸ்லிம்கள் பலருக்கு இது நல்லதொரு சந்தர்ப்பமாகக் காணப்பட்டது. கற்பிட்டிப் பிரதேச அகதி முகாம்களில் பலர் கரம்பைப் பகுதியில் அமைக்கப்பட்ட இட அமைவு முகாமுக்கு இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வந்து குடியேறினார்கள். புத்தளத்தில் வாழ்ந்த தமது ஊரார், உறவினர்கள், அயல் கிராமத்தவர்களிலிருந்து மிகத் தூரத்தில் குருநாகல் பகுதியில் வாழ்ந்து வந்த வேப்பங்குள முஸ்லிம்கள் புத்தளம் நகருக்குத் தெற்காக புதிதாக அமைக்கப்பட்ட தம்பபன்னி என்ற மீளமைவு முகாமுக்கு இடம் மாறி வாழ்ந்தார்கள். இது போல முசலி பாலைக்குளி முஸ்லிம்கள் புத்தளம்-கரைத்தீவு வீதி ஆறாம் மைலில் அமைக்கப்பட்ட சலாமாபாத், முஜாஹிதீன் புரம் போன்ற இடங்களுக்கு இடம் மாறி வாழ்ந்தார்கள். முசலி மறிச்சுக்கட்டி முஸ்லிம்கள் மேற்கூறிய அதே வீதியில் 6ஆம் கட்டை, 4ஆம் கட்டை, றஹ்மத்புரத்திலும், பள்ளிவாசல்துறையிலும் குடியேறினார்கள். முசலியைச் சேர்ந்த வேறுபல கிராமத்தவர்கள் இவ்வாறான வாய்ப்புக்களை எதிர் பார்த்துக் காத்திருந்தார்கள்.

## 7.7 அரசின் மீள்குடியேற்றத்திட்டம்

முசலி முஸ்லிம்களின் அகதி வாழ்க்கை தொடர்ந்து கொண்டிருந்ததால் இலங்கை அரசாங்கம் இம்மக்களின் அகதி வாழ்க்கைக்கு ஒரு மாற்றுத் திட்டத்தை முன்வைத்தது (Ministry of Shipping, Ports, Rehabilitation and Reconstruction, 1996) அது மீள்குடியேற்றத் திட்டம் என்று அழைக்கப்பட்டது. இம்மக்களின் மீள்குடியேற்றத் திட்டத்தை இவர்கள் அகதிகளாக வாழும் பிரதேசங்களில் ஏற்படுத்திக் கொடுப்பதாகவும் அரசால் தீர்மானிக்கப்பட்டது.

இச்சந்தர்ப்பத்தில் அகதிகளோடு தொடர்புடைய மீள்குடியேற்றம் என்ற பதம் அகதிகளின் சொந்த இடங்களில் அவர்களின் வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பதையே குறிக்கின்றது என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.



அத்துடன் இலங்கையில் இனப் பிரச்சினையால் பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான அகதிக் குடும்பங்களுக்குக் கடந்த காலங்களில் இந்த அடிப்படையிலேயே மீள்குடியேற்றங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

ஆனால் வட மாகாணத்திலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம் அகதிகளுக்கு வழமையிலிருந்து வந்த மீள் குடியேற்றத் திட்டத்தின் கொள்கையில் சில மாற்றங்களைச் செய்து நடைமுறைப்படுத்துவது என அரசும் அரச சார்பற்ற நிறுவனங்களும் முன் வந்தன. இவ்வாறான ஒரு மீள் குடியேற்றத்திட்டம் முஸ்லிம்கள் அகதிகளாக வாழும் புத்தளம் மாவட்டத்தில் செயல்படுத்தப்படுவதற்கான எல்லா முயற்சிகளும் சம்மந்தப்பட்டவர்களால் எடுக்கப்பட்டன. 1996 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து இத்திட்டத்தை நிதர்சனப் படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அகதி முகாம் வாழ்க்கைக்கு ஒரு மாற்றுத் திட்டத்தை எதிர் பார்த்திருந்த முஸ்லிம் அகதிகளுக்கு இம்மீள் குடியேற்றத் திட்டம் கவர்ச்சியாகக் காணப்பட்டது. அதே நேரத்தில் இவ்வாறான ஒரு மீள்குடியேற்றத் திட்டம் தம்மை தமது பூர்வீக இடங்களுக்குத் திரும்பிச் செல்லாது தடுத்துவிடுமோ என்ற அச்சமும் ஒரே நேரத்தில் இம்மக்கள் மனதில் ஏற்பட்டது.

வட மாகாணத்தைச் சேர்ந்த எருக்கலம்பிட்டி, தாராபுரம், விடத்தல்தீவு, பெரியமடு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களில் ஒரு பகுதியினர் அரசின் மீள்குடியேற்றத் திட்டத்தினை ஏற்றுப் பயன்பெற முன்வந்தார்கள். அந்த வகையில் பாலாவியில் எருக்கலம்பிட்டி மக்களுக்கும், கரம்பையில் விடத்தல்தீவு மக்களுக்கும், உளுக்காப்பள்ளத்தில் பெரயமடு மக்களுக்கும், கொத்தான் தீவில் தாறாபுர மக்களுக்கும் மீள் குடியேற்றத் திட்டங்கள் அரசாங்கத்தால் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

முசலி முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் புத்தளத்தில் மீள்குடியேற்றம் ஒரு இடைக்கால மாற்று வழியாகக் கொள்ளப்படினும் அதனைச் சாத்தியப் படுத்துவதில் பல பிரச்சினைகளை எதிர் நோக்கினார்கள். முசலியைச் சேர்ந்த வேப்பங்குளம், அகத்தி முறிப்பு போன்ற கிராமத்தவர்கள் மீள்குடியேற்றத் திட்டங்களுக்குப் பதிலாக மீள் இடஅமைவு முகாம்களைத் தேர்ந்தெடுக்க விரும்பினர். அவ்வாறு தேர்ந்தெடுத்தமைக்கான காரணிகளில் ஒன்று, முசலியில் தமது சொந்த இடம் மீள்வதற்கு இம் மீள்குடியேற்றத் திட்டங்கள் தடையாக இருக்கக் கூடாது என்பதாகும். முசலியின் ஏனைய பிரதேச



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் மீள் குடியேற்றத்துக்கான பொருத்தமான காணிகளைப் பெறுவதிலும், அதற்கான கொடுப்பனவுகளை அரசிடமிருந்து பெற்றுக் கொள்வதிலும், மீள்குடியேற்றங்களுக்குத் தேவையான கல்வி, போக்குவரத்து, மற்றும் ஏனைய அடிப்படை வசதிகளை அரச, அரசசார்பற்ற நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்வதிலும் பாரிய பிரச்சினைகளை எதிர் நோக்கியவர்களாகக் காணப்பட்டார்கள். இவ்வாறான பிரச்சனைகளுக்கு மத்தியிலும் முசலிப் பிரதேச பண்டாரவெளிக் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் நுரைச்சோலைப் பிரதேசத்தில் ஒரு மீள் குடியேற்றத்தை ஏற்படுத்தினார்கள்.

இது போல இந்நூல் எழுதிக் கொண்டிருக்கின்ற போது முசலியைச் சேர்ந்த கொண்டச்சி, சிறுக்குளம், அகத்திமுறிப்பு போன்ற கிராம முஸ்லிம்கள் பள்ளிவாசல்துறையிலும், கூளாங்குளம், புதுவெளி, முசலி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த எஞ்சிய முஸ்லிம்கள் கண்டக்குளி கொளனி என்ற இடத்திலும் மீள்குடியேற்றக் கிராமங்களை அமைத்து வருகின்றனர். இம் மீள்குடியேற்றத் திட்டங்களின் அண்மைக்கால மாற்றங்களையும் முஸ்லிம் அகதிகளின் எண்ணப்பாட்டிலான மாற்றங்களையும் அடுத்த அத்தியாயத்தில் நோக்குவோம்.



# 8. அண்மைக்கால மாற்றங்கள்

இவ்வத்தியாயத்தில் முசலி முஸ்லிம்களின் எதிர்காலம் பற்றி விளக்கப்படுகின்றது. எதிர்காலத்தில் முசலியில் இம்மக்களுக்கான மீள்குடியேற்றம் ஏற்படுத்துதற்கான சூழல்களையும், அதன் சாத்தியங்களையும் பற்றி ஆராய்கின்றது. அந்த அடிப்படையில், இம்மக்களின் அகதியாக வாழும் பிரதேசத்திலான வாழ்க்கை அமைப்பும் அங்கிருந்து எவ்வாறு சொந்த இடத்திலான மீள்குடியேற்றம் ஒன்றுக்கான அடிப்படைகளை உருவாக்கலாம் என்பதும் ஒரு விமர்சனக் கண்ணோட்டத்தில் ஆராயப்படுகின்றன.

முசலி முஸ்லிம்கள் இன்று தமது சொந்த இடங்களில் இருந்து மிகத் தொலை தூரத்தில் அகதிகளாகத் வாழ்கின்றார்கள். இது இம்மக்களின் கடந்த ஏழு வருடகால அகதி வாழ்க்கையின் தொடர்ச்சியாகும். இலங்கையின் இனப் பிரச்சினையிலும், உள்நாட்டு யுத்த சூழ்நிலையிலும் பாரியதொரு மாற்றம் ஏற்படாதவரை, இம்மக்களின் அகதி நிலை மேலும் பல வருடங்கள் நீடிப்பதற்குரிய வாய்ப்புக்களே காணப்படுகின்றன. அதே போல, அகதி முகாம் வாழ்க்கையின் மூலமாக இம்மக்களுக்கு கடந்த ஏழுவருட காலத்தில் ஏற்பட்ட சமூக-பொருளாதார, கலாசாரப் பின்னடைவுகள் மேலும் தொடரக்கூடிய வாய்ப்புக்களும் காணப்படுகின்றன.

## 8.1 அரசின் மீள்குடியேற்றத்திட்டம்: ஒரு பரிசீலனை

இம்மக்களின் நீடித்த அகதிமுகாம் வாழ்க்கைக்கு மாற்று வாழ்விடத் திட்டமொன்று அண்மையில் இலங்கை அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டது. இத்திட்டம், முசலி முஸ்லிம்களை அவர்கள் அகதிகளாக வாழும் பிரதேசங்களில் மீள்குடியேற்றுவதாகும்.

இப்புதிய மீள்குடியேற்றத்திட்டம் இம்மக்களின் அகதி வாழ்க்கையில் இட அமைவு ரீதியான சில மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றது. ஆனால், இம்மக்களின் பலவந்த வெளியேற்றத்தினால் உருவாக்கப்பட்ட அகதி நிலையிலிருந்து இம்மக்களுக்கு முழுமையான விமோசனத்தை இத்திட்டம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அளிக்கவில்லை. அதே நேரத்தில், எதிர்காலத்தில் இப்புதிய குடியேற்ற ஒழுங்கு இவ்வகதிகள் மத்தியில் பொருளாதார சமூக ரீதியாகக் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய பண்புகளையும் கூடக் கொண்டதாக இல்லை.

மாறாக அரசாங்கத்தின் இம்மீள்குடியேற்ற முயற்சி அகதி மக்கள் மத்தியில் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்ல வேண்டும் என்ற மன ஆர்வத்தையும் காலப் போக்கில் குறைந்துவிடக் கூடிய பண்புகளைக் கொண்டதாக இருக்கின்றது. காரணம் சொந்தக் காணி அடிப்படையிலான இம்மீள்குடியேற்றத்திட்டம் மூலமாக அகதி மக்கள் விரும்பியோ, விரும்பாமலோ தாம் அகதியாக வாழும் பிரதேசத்தின் பொருளாதார, சமூக, கலாசார, அரசியல் முறைமைகளோடு தம்மை இணைத்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலைக்கும் உள்ளாகின்றார்கள். அவ்வாறான மாற்றம் அகதிகளின் ஸ்திரமான எதிர்காலம் என்ற நோக்கில் சாதகமானதொன்றல்ல. அதுமட்டுமன்றி இனப்பிரச்சினையால் பாதிக்கப்பட்ட வட மாகாண முஸ்லிம்களுக்குப் பொருத்தமான ஒரு பரிகாரமும் அல்ல. தமது சொந்த இடங்களில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டு அகதியான முசலி முஸ்லிம்கள் உட்பட ஏனைய வட மாகாண முஸ்லிம்களுக்கு நீங்கள் உங்கள் சொந்த இடம் மீள்வது சாத்தியமில்லை என்ற அடிப்படையில் மாற்று வாழ்க்கைத் திட்டத்தை முன்வைப்பது நியாயமில்லை. பலவந்த வெளியேற்றத்திற்கு முன்னர் தாம் வாழ்ந்து வந்த பிரதேசத்தில் காணப்பட்ட வாழ்க்கை, பொருளாதார, கலாசார சூழலையும், சொத்துக்களையும் மறந்துவிடும்படி இம்மீள்குடியேற்றத் திட்டத்தின் மூலம், மறைமுகமாக வற்புறுத்துவது நியாயம் இல்லை. அத்துடன், அகதிகளாக வாழுகின்ற பிரதேசங்களின் வளப் பற்றாக்குறை, வறுமை, வேலையின்மை, இனமுரண்பாடு ஆகியவற்றுடன் இம்மீள்குடியேற்றத் திட்டம் மூலம் இம்மக்களையும் இணைப்பது பொருத்தமானதல்ல.

சுருக்கமாக வடமாகாண முஸ்லிம் அகதிகளை அவர்கள் தற்போது அகதிகளாக வாழும் அகதி முகாம் சூழலில் நிரந்தரமாகக் குடியேற்ற இலங்கை அரசாங்கம் எடுத்து வரும் தற்போதைய முயற்சி குடியேற்றப்பட இருக்கும் இவ்வகதி மக்களுக்கும் அவ்வகதிகள் குடியேற்றப்படவிருக்கும் பிரதேசத்திற்கும் அல்லது இவ்வகதிகளின் சொந்த இடங்களில் ஏற்படப் போகின்ற இன தனித்துவத்தோடு தொடர்புடைய சமூக, அரசியல் சூழலுக்கும் பொருத்தமானதொன்றாகத் தெரியவில்லை.



## 8.2 மீள்குடியேற்றம் அறிமுகப்படுத்தப்பட்ட சூழ்நிலை

இத்தகைய பல கண்ணோட்டங்களிலும் பாதகமான பிரதிபலன்களைத் தரக்கூடிய மீள்குடியேற்றத் திட்டம் ஒன்றை இலங்கை அரசும் இலங்கை அகதிகளுக்காகத் தொண்டாற்றிவரும் அரசசார்பற்ற நிறுவனங்களும் ஏன்முன்னின்று நடைமுறைப்படுத்த முற்பட்டு வருகின்றன என்பதனை நாம் மிகக் கவனமாகப் பரிசீலிக்க வேண்டும்.

இந்நாட்டின் இனப்பிரச்சினையால் தமிழ் மக்கள், முஸ்லிம்கள். சிங்களவர்கள் அகதியாக்கப்பட்டிருக்கின்றார்கள். அகதியாக்கப்பட்ட பிரதேசம், அகதியாக்கப்பட்ட சூழ்நிலை, எண்ணிக்கை, தாக்கம் என்பன இடத்திற்கிடம், வேறுபட்டுக் காணப்படுகின்றன.

இவ்வாறு இருக்க, இலங்கை அரசாங்கமும், அரசசார்பற்ற நிறுவனங்களும் இந்நாட்டின் பத்து லட்சம் அகதிகளுக்கும் ஒரு பொதுவான அகதிக் கொள்கையை முன்வைத்து அவர்களின் பிரச்சினையை எதிர்கொண்டு வருகின்றன. அகதிப் பிரச்சினை பற்றிய இவ்வணுகு முறை மக்கள் அகதியாக்கப்பட்டதுடன் தொடர்புடைய தனித்துவமான காரணங்களை அடையாளம் காணவோ, அவ்வாறு அடையாளம் காணப்பட்ட அடிப்படையில் குறித்த அகதிப் பிரச்சினைக்கான குறுங்கால, நீண்ட காலத் தீர்வுகளை முன்வைக்கவோ முயலவில்லை.

இவ்வுண்மையை வடமாகாணத்தில் இருந்து 1990ஆம் ஆண்டு பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களின் அகதிப் பிரச்சினையில் மிகத் தெளிவாக அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கின்றது. அகதியாக்கப்பட்டதில் இருந்து இன்றுவரையான கடந்த ஏழுவருடங்களில் மேற்குறித்த அகதி மக்கள் ஏன் தமது சொந்த இடங்களுக்கு மீள முடியாமல் இருக்கின்றார்கள் என்ற அம்சம் இம்மக்களைப் பராமரித்து வருபவர்களால் கருத்துக்கு எடுக்கப்படாமலே இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்திருக்கின்றது. மறு வார்த்தையில், மேற்குறிப்பிட்ட மக்களில் பலருக்கு தமது சொந்த இடங்களில் மீளக் குடியேறக் கூடியதான பாதுகாப்பு ரீதியான சூழ்நிலைகள் காணப்பட்டிருந்தும் ஏன் இம்மக்கள் சொந்த இடம் மீள முயற்சிக்கவில்லை என்ற அம்சம் இம்மக்களின் பாதுகாவலர்களான மேற்குறிப்பிட்ட நிறுவனங்களால் கருத்தில் எடுக்கப்படவில்லை. இத்தகைய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தெளிவற்ற சூழ்நிலையில்தான் இம்மக்கள் அகதிகளாக வாழும் பிரதேசங்களில் திட்டமிடப்படாத மீள்குடியேற்றத்திட்டம் ஒன்று முன்வைக்கப்பட்டது.

அதனால் வடமாகாண முஸ்லிம் அகதிகளின் தனித்துவமான பிரச்சினைகள் முறைப்படி அணுகப்படாத நிலையிலேயே இதுவரை இவ்வகதி மக்கள் சார்பான நடவடிக்கைகள் இருந்து வந்திருக்கின்றன என்பது புலனாகின்றது.

## 8.3 பலவந்த வெளியேற்றத்திற்குட்பட்ட மக்களின் தனித்துவப் பிரச்சினைகள்

இச்சந்தர்ப்பத்தில் வடகாமாகண முஸ்லிம் அகதிகளின் அகதித் தன்மையுடன் தொடர்புடைய தனித்துவமான பண்புகள் சிலவற்றை இங்கு குறிப்பிட்டுக் காட்ட வேண்டியது அவசியமானதாகும். பல்வேறு சூழ்நிலைகளினால் இலங்கையில் மக்கள் அகதியாக்கப்பட்டிருக்கின்றார்கள். இராணுவப்படையெடுப்புக்கள், விமானத் தாக்குதல்கள், யுத்தப் பிரதேச உணவு அத்துடன் அடிப்படைத் தேவைகளின் பற்றாக்குறை, ஆயுதக்குழுக்களின் அச்சுறுத்தல் போன்றவை பொதுவாக அடையாளப் படுத்தக் கூடிய காரணங்களாகக் காணப்படுகின்றன.

வடமாகாணத்தில் வாழ்ந்த முஸ்லிம்கள் யுத்த சூழ்நிலையால் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறவில்லை. அது போல உணவுப் பிரச்சினையாலோ, தற்காலிக நிவாரணம் தேடியோ தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறவில்லை. ஆனால் 75000க்கும் அதிகமான முஸ்லிம் மக்கள் நூற்றுக்கும் அதிகமான கிராமங்களில் இருந்து சில தினங்களுக்குள் உடுத்திய உடையோடு பதறிப் பதறி வெளியேற வேண்டிய சூழ்நிலைக்குள்ளானார்கள்.

நாம் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் முஸ்லிம்களை வெளியேறும்படி வற்புறுத்தி வெளியேற்றினார்கள். விடுதலைப் புலிகளின் ஆயுதப் பலமும் தமது தீர்மானத்தை நிறைவேற்றுவதில் இவ்வமைப்பிற்கிருந்த ஆற்றலும் 75000 வடக்கு முஸ்லிம்களை சில தினங்களுக்குள் வெளியேற வைத்தது.

விடுதலைப் புலிகளின் பலத்திலும் ஆற்றலிலும் அச்சத்தை ஏற்படுத்தும் பலாத்காரத்திலும் இதுவரை பெரிய மாற்றம் ஏற்படவில்லை என்பதை உலகமும்



வடமாகாண முஸ்லிம் அகதிகளும் முசலி முஸ்லிம் அகதிகளும் அறிவர். தமது சொந்த இடங்களில் தம்மை வெளியேற்றியவர்கள் ஆயுதப் பலத்துடன், கொள்கைப் பலத்துடன் இருந்து வருகின்ற கடந்த ஏழு வருட காலத்திலும் முஸ்லிம் அகதிகளால் தமது சொந்த இடம் மீள்வதுடன் தொடர்புடைய அடிப்படைப் பிரச்சினை மாற்றமற்றதாகவே காணப்படுகின்றது என்பது உண்மையாகும்.

அதே நேரத்தில் வடக்கு முஸ்லிம் அகதிகளைப் பொறுத்தவரை அகதி வாழ்க்கையில் அடைந்த அனுபவங்கள் எல்லாம், இலங்கையில் ஏனைய இன, மத, பிரதேச அகதி மக்களின் அனுபவத்துக்கு சமமானதாகும். இன்னும் பல வருடங்கள் இம்மக்கள் அகதிகளாக நிருவகிக்கப்பட்டு வந்திருக்கலாம். அதில் எவ்வித பாரிய பிரச்சினைகளும் தோன்றியிராது. ஆனால், இம்மக்கள் அகதியாக்கப்பட்ட ஆறாவது வருடத்தில் அகதியாக வாழும் பிரதேசத்தில் மீளக்குடியேற்றத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்த முயற்சிக்கப்பட்டது. இவ்வாறு இம்மக்களை அகதி நிலையில் இருந்து மாற்றி சாதாரண வாழ்க்கைக்குக் கொண்டு செல்வதாக இருந்தால், அதற்குப் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஏற்கனவே குறிப்பிட்டது போல இம்மக்கள் சார்பாக இது வரையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் இம்மக்களின் அகதிப் பிரச்சினையுடன் தொடர்புடைய அம்சங்கள் சரியாக அடையாளப் படுத்தப்படாத அடிப்படையிலேயே நடைமுறைப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. அதுபோலவே இன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற மீள்குடியேற்றத் திட்டமுமாகும்.

## 8.4 மீள்குடியேற்றம் பற்றிய மற்றுமொரு சிந்தனை

அவ்வாறாயின் இக்குறிப்பிட்ட அகதி மக்களைப் பொறுத்தவரையில் எவ்வகையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வேண்டும்? இவ்வகதிகளின் தனித்துவமான பிரச்சினைகள் என்ன? என்ற அம்சங்கள் முறைப்படி அணுகப்பட வேண்டியவையாகக் காணப்படுகின்றன.

முசலி முஸ்லிம் அகதிகளைப் பற்றிய இந்நூலில் இவ்வகதிகளுக்குப் பொருத்தமான மீள்குடியேற்றத் திட்டத்துடன் தொடர்புடைய அம்சங்கள் கவனமாக ஆராயப் பட்டிருக்கின்றன. இவ்வத்தியாயம் முசலி முஸ்லிம்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அகதியாக்கப்பட்டதன் அடிப்படைக் காரணத்தை ஆராய்ந்து அறிந்து அதனடிப்படையில் எவ்வாறான நீண்ட காலத் திட்டம் ஒன்று இம்மக்களின் எதிர்கால நன்மைக்காக முன்வைக்கப்படலாம் என்பதனை விளக்குகின்றது.

இம்மக்களின் நீண்டகால நிரந்தரத் தீர்வாக இம்மக்களை மீளக் குடியேற்றி புதுவாழ்க்கையை ஆரம்பிக்க வைக்க வேண்டியது அவசியமானது என்பதை யாரும் மறுக்க முடியாது. இம்மக்களுக்கான மிள்குடியேற்றத் திட்டம் ஒன்றை ஏற்கனவே இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்தி வருகின்றது. இம்மீள்குடியேற்றத் திட்டம் நடைமுறைப்படுத்த ஆரம்பித்ததிலிருந்தே பல பாரிய நடைமுறைப் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றமை இன்று அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அதுமட்டுமன்றி, ஏற்கனவே குறிப்பிடப்பட்டது போல் இம்மக்களின் பலவந்த வெளியேற்றத்தால் உருவாக்கப்பட்ட தனித்துவமான அகதிப் பிரச்சினைக்கு இது ஒரு பொருத்தமான தீர்வுமில்லை.

அதனால், அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட மீள்குடியேற்றத்திட்டத்திற்கு ஒரு மாற்று மீள்குடியேற்றத் திட்டத்தை இந்நூல் முன்வைக்கின்றது. முசலிப் பிரதேச முஸ்லிம்களுக்கு அவர்கள் அகதியாக வாழும் பிரதேசத்திலில்லாமல் சொந்தப் பிரதேசத்தில் எவ்வாறு மீள்குடியேற்றப்படலாம் என்பதையும், அதற்கான வழிமுறைகளையும் இந்நூல் விளக்குகின்றது.

அத்தியாயம் 9இல் இம்மாற்று மீள்குடியேற்றத் திட்டம் இலங்கையின் அகதிப் பிரச்சினையைப் பொதுவாகவும் முசலி முஸ்லிம்களின் அகதிப் பிரச்சினையை தனித்துவமாக நோக்கிய அடிப்படையிலும் முன்வைக்கப்படுகின்றது. இம்மாற்றுத் திட்டத்தை தீட்டுவதற்கு இலங்கையில் இது வரையில் பின்பற்றப்பட்டு வந்த மீள்குடியேற்றக் கொள்கைகள் அவற்றின் குறைநிறைகள் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டன. அந்த அடிப்படையில் இம்மாற்று மீள்குடியேற்றத்திட்டம் முன்வைக்கப்படுகின்றது. இம்மாற்று மீள்குடியேற்றத் திட்டத்தின் நடைமுறைச் சாத்தியம் பற்றி இங்கு விளக்கப்படுகின்றது. அதுமட்டுமன்றி முசலி முஸ்லிம்களுக்காக இங்கு முன்வைக்கப்பட்டுள்ள மாற்று மீள்குடியேற்றத் திட்டம் அப்பிரதேச மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் வகையில் உருவாக்கப்பட்டிருக்கின்றது. மறுவார்த்தையில் சொல்வதானால் 1997 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத காலத்தில் மீள்குடியேற்றம் பற்றிய முசலி முஸ்லிம்களின் அபிலாசைகளை நாட்டின் இன, இராணுவ அம்சங்களோடு தொடர்புபடுத்தி ஒரு சாத்தியமான மீள்குடியேற்ற மாதிரி இங்கு முன்வைக்கப்படுகின்றது.



## 8.5 புதிய மாற்றங்கள்:

இச்சந்தர்ப்பத்தில் முசலி முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்துடன் தொடர்பாக மிக அண்மைக்காலத்தில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் பற்றியும் இங்கு எடுத்துக் கூற வேண்டியது அவசியமாகும். அதில், 1997ஆம் ஆண்டு மார்ச் மாதம் எடிபல என்ற இராணுவ நடவடிக்கை மூலம் மன்னார் மாவட்டத்தின் சில பகுதிகள் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டமை முக்கியமான நிகழ்வாகும். இதில் குறிப்பாக மன்னார்-வவுனியா பிரதான வீதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து இலங்கை இராணுவத்தால் மீட்கப்பட்டது. அதனால் இவ்வீதிக்குத் தெற்காகக் காணப்பட்ட முசலிப் பிரதேசம் சிவில் நிர்வாகத்திற்குட்பட்ட பிரதேசமாக அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்டது.

சிவில் நிர்வாகம் என்பது இலங்கையின் இனப்பிரச்சினையுடன் தொடர்புற்ற வகையில் பல கண்ணோட்டங்களுடன் நோக்கப்படுகின்றது. அதில் ஒன்று வடக்குக் கிழக்கின் ஒரு பகுதி விடுதலைப் புலிகளின் ஆயுதச் செல்வாக்கில் இருந்து அகற்றப்பட்டு அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படுவதைக் குறிக்கின்றது. அந்த அடிப்படையில் விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தலால் அகதியாக்கப்பட்ட மக்கள் சிவில் நிர்வாகத்தில் கொண்டு வரப்பட்ட பகுதியினுள் தமது சொந்த இடங்களுக்கு மீளக் கூடிய சூழ்நிலை உருவாக்கப்படுகின்றது என்பதாகும்.

அரசாங்கத்தின் கண்ணோட்டத்தில் முசலிப் பிரதேசம் மேற்குறித்த சிவில் நிர்வாக நிலையில் காணப்படுகின்றது. அப்பிரதேசம் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் தமது சொந்த இடம் மீண்டு சாதாரண வாழ்க்கையை ஆரம்பிப்பதற்குத் தயார் நிலையில் இருக்கின்றது என்பது பொருள்படுகின்றது.

ஆயுத அச்சுறுத்தலால் அகதியாக்கப்பட்ட முசலி முஸ்லிம்களின் கண்ணோட்டத்தில் இராணுவ வெற்றியின் மூலமாக சிவில் நிர்வாகப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட முசலி இங்கு வாழ்ந்த மக்கள் சாதாரண வாழ்க்கையை ஆரம்பிப்பதற்கு எந்த அளவு பொருத்தமானது என்ற அம்சமும் கருத்துக்கு எடுக்கப்பட வேண்டியதொன்றாகும்.

முசலி முஸ்லிம்களின் நிலைப்பாட்டை சரியாக அறிந்து கொள்ள முசலிக்குச் சமமான மற்றும் ஒரு உதாரணம் ஒன்றை ஒப்பிட்டு நோக்குவது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவ்வம்சம் பற்றி மேலதிக தெளிவைத் தரும். அந்த அடிப்படையில் மன்னார் மாவட்டத்தின் தீவுப் பிரதேசத்தை எடுத்துக் கொள்வோம். முசலி முஸ்லிம்களைப் போல தீவுப் பிரதேச முஸ்லிம்களும் 1990 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் விடுதலைப் புலிகளால் பலவந்தமாக வெளியேற்றப்பட்டார்கள். 1991 ஆம் ஆண்டு மன்னார் தீவு இராணுவ கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டு சிவில் நிர்வாகப் பகுதியாக அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்டது. ஆயுத அச்சுறுத்தலால் வெளியேறிப் பிற மாவட்டங்களில் அகதிகளாக வாழ்ந்த தீவு முஸ்லிம்களை சொந்த இடம் மீளும்படி அரசாங்கம் ஆர்வப்படுத்தியது. மீள்குடியேற்ற நிவாரணங்களும் ஏனைய சலுகைகளும் இம்மக்களின் மீள்குடியேற்றத்தை ஆர்வப்படுத்த வழங்கப்பட்டன.

துரதிஷ்டவசமாக மன்னார் தீவில் அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்ட சிவில் நிர்வாகச் சூழ்நிலை தீவில் இருந்து வெளியேறிய மொத்த முஸ்லிம் அகதிகளில் ஆகப் 10 சதவீதமானவர்கள் மாத்திரமே மீளக்குடியேற உதவக் கூடியதாக இருந்தது. கடந்த ஆறு வருடங்களாக மன்னார் தீவு சிவில் நிர்வாகத்திற்குட்பட்ட பகுதியாக அரசாங்கக் கட்டுப்பாட்டின்கீழ் இருந்தும் மன்னார் தீவு முஸ்லிம்களில் 90 வீதமானவர்கள் தமது சொந்த இடம் மீள்வதற்குப் பொருத்தமான சூழ்நிலைகள் உருவாக்கப்படவில்லை என்ற கண்ணோட்டத்தில் தொடர்ந்தும் அகதி முகாம்களில் அல்லல் பட்ட வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றார்கள்.

மன்னார் தீவு முஸ்லிம்களின் கண்ணோட்டத்தில் தமது சொந்த இடம் மீளுவதற்கான சூழ்நிலைகளில் முக்கியமானதொன்று அச்சமின்றி மற்றுமொரு பலவந்த சூழ்நிலை இன்றி நிம்மதியாக வாழ வேண்டும் என்பதாகும். முசலி முஸ்லிம்களைப் பொறுத்தவரைமிலும் இந்நிலைப்பாட்டில் இருந்து வேறுபாடு காணப்பட நியாயம் இல்லை. பொதுவாக பலவந்தமாக வெளியேற்றப்பட்ட வடக்கு முஸ்லிம்களை எடுத்துக்கொண்டாலும் தம்மை வெளியேற்றிய விடுதலைப் புலிகளின் ஆயுதப்பலம் என்ற காரணி தமது சொந்த இடம் மீள்வதோடு தொடர்பாக மிகவும் முக்கியமானதொன்றாகக் கருதப்பட நியாயம் இருக்கின்றது. மன்னார் வவுனியா வீதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து மீட்டெடுக்கப்பட்டிருக்கின்றது என்பது வடமாகாணத்திலும், இம்மாகாணத்தின் ஒரு பகுதியான முசலியிலும் விடுதலைப் புலிகளின் செல்வாக்கு இல்லையென பொருள்படாது.



அதனால் அரசாங்கத்தின் இராணுவ வெற்றி நிரந்தரமானதொன்று என்னும் மனோபாவம் முசலி முஸ்லிம்கள் மத்தியில் ஏற்பட நியாயம் இல்லை. இராணுவ வெற்றியின் மூலமான முசலி முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட இம்மக்களின் நீடித்த சமாதான வாழ்க்கைக்கு அடிப்படையாக அமையாது. அந்த அடிப்படையில் இராணுவ வெற்றியல்லாத ஏனைய வழிகள் மூலம் வடக்கு முஸ்லிம்களின் தமது சொந்த இடங்களுக்கு மீழ்வதற்கான நடவடிக்கைகளை முசலி மக்கள் எடுக்கவேண்டியது அவசியமாகும்.

## 8.6 முசலியின் சிவில் நிர்வாகமும் முஸ்லிம் அகதிகளும்

முசலி சிவில் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது என்ற அறிவித்தல் முசலி முஸ்லிம்களை பல்வேறு வகையில் கவர்ந்தது. அவற்றில் சிலவற்றை இங்கு பார்ப்போம். முசலி முஸ்லிம்கள் வாழ்ந்த முகாம்கள் தோறும் தமது சொந்த இடத்திலான மீள்குடியேற்றம் எப்போது சாத்தியம் என்ற வினா பரவலாகக் காணப்பட்டது. முகாம் வாழ்க்கையிலிருந்து விடிவு பெறுவதற்குக் கிடைத்த வாய்ப்பாக பலர் சிந்திக்கத் தொடங்கினர். அரசாங்கத்தின் மீள்குடியேற்றத் திட்டத்தில் வாழ்ந்த வேறுபலர் முசலிக்குத் திரும்பச் செல்லும் சந்தர்ப்பம் உருவாக இருக்கின்றது என்பதால் தம்மை அகதிகளாக வாழும் பிரதேசங்களில் ஸ்திரப்படுத்தும் நடவடிக்கைகளான நிரந்தர வீடுகட்டுதல், மற்றும் ஏனைய நடவடிக்கைகளை தற்காலிகமாக இடைநிறுத்தி ஏற்பட்டு வந்த மாற்றங்களை மிகக் கவனமாக அவதானிக்கத் தொடங்கினர். முசலிப் பிரதேச அரசாங்க ஊழியர்கள் முசலியில் வாழ்விட வசதியற்ற நிலையில் தாங்கள் கடமைக்கு அழைக்கப்படலாம் என்பதில் கரிசனையாக இருந்தார்கள். அதில் குறிப்பாக முசலி முஸ்லிம் அரசாங்க ஊழியர்கள் இருவர் தமது கடமையை மன்னார் அரசாங்க அதிபரிடம் பதிவு செய்யச் சென்றபோது 1997ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முசலிப் பிரதேசத்திற்குச் சென்று தமது கிராமங்களைப் பார்வையிட்டும் திரும்பினர்.

மேற்கூறியவாறு முசலிக்கு மீளச் செல்லவேண்டும் என்ற அவா பரவலாக முசலி முஸ்லிம்கள் மத்தியில் காணப்பட்டது. அதன் நடைமுறைச் சாத்தியம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பற்றிப் பரவலாக முசலி முஸ்லிம்கள் மத்தியில் சந்தேகங்கள் காணப்பட்டன. முசலி முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்தை நடைமுறைச் சாத்தியமற்ற ஒன்றாக விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு ஏற்படுத்தலாம் என்பதில் முசலி முஸ்லிம்கள் கரிசனையாக இருந்தார்கள். இதைவிட மீள்குடியேற்றத்துடன் தொடர்புடைய ஏனைய புனர் நிர்மாணம் போன்ற சவால்கள் பற்றி கவலைப்படாத மனோபாவம் முசலி முஸ்லிம்கள் மத்தியில் காணப்பட்டது.

இச்சந்தர்ப்பத்தில் முசலி முஸ்லிம்களின் நலன்களில் அக்கறை கொண்ட பலர் முசலி முஸ்லிம்களின் அபிலாசைகளை சாத்தியப்படுத்த பல முயற்சிகளை மேற்கொள்ள முற்பட்டனர். இம்முயற்சிகளில் இரண்டை இங்கு குறிப்பிட வேண்டியது அவசியமாகும். 1997 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முசலிப்பிரதேச இளைஞர்கள் சிலரின் முயற்சியினால் 1997-3-12 திகதி நுரைச்சோலை என்ற இடத்தில் முசலி முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் பற்றிய கலந்துரையாடல் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டது. இக்கூட்டத்திற்கு தேந்தெடுக்கப்பட்ட முசலிப் பிரதேச கல்விமான்ககளும் சமூகப் பிரமுகர்களும் கலந்து கொண்டதன் பிரதிபலனாக திரும்பவும் முசலி மக்களை கிராம மட்டத்தில் அழைத்து முசலியின் மீள்குடியேற்றம் சம்பந்தமான கலந்துரையாடல் செய்யப்பட்டது. இதன் முடிவாக முசலிக்குத் திரும்பிச் செல்வது என்ற முடிவு எடுக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட திகதியில் கூட்டப்பட்ட கூட்டத்தில் முசலியின் மீள்குடியேற்றத்தை முறைப்படி செய்ய கிராம மட்டத்திலான பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு மகாசபை ஏற்படுத்த வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பல கலந்துரையாடல்கள் சில மாதங்கங்களுக்குள் தொடர்ச்சியாக நடைபெற்றது. மேற்குறிப்பிட்ட குழுவினர் அரசியலுக்கப்பால் ஒரு சமூக தலைமைத்துவத்தை ஏற்படுத்தி அதன் மூலமாக முசலி முஸ்லிம்களை அவர்களின் சொந்த இடங்களில் மீளக் குடியேற்ற முயற்சிகள் எடுத்து வருகின்றனர்.

சம காலத்தில் முசலி முஸ்லிம்களின் நடைமுறை அரசியல் பிரச்சினைகளையும் அரசாங்க ஊழியர்களது நஷ்டயீட்டுக் கொடுப்பனவுகளையும் சிவில் நிர்வாகத்திற்கு உட்பட்ட முசலிக்கு முஸ்லிம் அரசாங்க ஊழியர்கள் செல்வதிலுள்ள நடைமுறைச் சிக்கல்களையும் பற்றிக் கலந்துரையாடுவதற்காக மற்றுமொரு ஆலோசனைக் கூட்டம் புத்தளம் நகரில் கூட்டப்பட்டது.



இக்கூட்டத்தின் முடிவில் வன்னிப் பிரதேச பாராளுமன்ற அங்கத்தவரும் உதவி அமைச்சருமான அபூபக்கர் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு குழு மேற்குறிப்பிட்ட நோக்கங்களை செயல்முறைப் படுத்துவதற்காக நியமிக்கப்பட்டது. இக்குழு பின்னர் பல முறை கூடி தமது செயல் திட்டங்கள் பற்றியும் நடவடிக்கைகள் பற்றியும் கலந்துரையாடியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 9. எதிர் காலம்

முன் அத்தியாயத்தில் முசலி முஸ்லிம்கள் மத்தியில் அண்மைக்காலமாக ஏற்பட்டு வருகின்ற மாற்றங்கள் பற்றி விளக்கினோம். இம்மாற்றங்களில் முக்கியமானது முசலி முஸ்லிம்கள் தமது எதிர்காலம் பற்றிப் பிரதேச மட்டத்தில் மேற்கொண்டு வரும் கலந்துரையாடல்களாகும். பிரதேச மட்டத்தில் முசலி முஸ்லிம்கள் ஒன்றுபட்டு தமது எதிர்காலம் பற்றி இன்று சிந்தித்து வருவது ஆச்சரியத்துக்குரிய விடயம் ஒன்றல்ல.

## 9.1 முசலி முஸ்லிம்கள் எதிர் நோக்கும் சவால்கள்

முசலி முஸ்லிம்கள் கடந்த காலத்தில் எதிர் நோக்கிய சவால்கள், பிரதேச மட்டத்தில் ஒற்றுமையாக எதிர் கொள்ளப்பட்டிருக்கின்றன. இதற்கு மிக அண்மைக்கால அனுபவமொன்றை உதாரணமாகக் குறிப்பிடலாம். முஸ்லிம்களின் வெளியேற்றத்திற்கு சற்று முந்திய காலத்தில் இப்பிரதேசச் செயற்பாடுகள் ஒரு ஸ்திரமற்ற நிலையில் காணப்பட்டன. இது முசலி முஸ்லிம்களின் நாளாந்த வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாக இருந்தது. இச்சந்தர்ப்பத்தில் முஸ்லிம்கள் கிராம அடிப்படையில் ஒன்றிணைந்து தமது சமூகம் அந்நேரத்தில் எதிர் நோக்கியிருந்த சவாலை எதிர் கொண்டார்கள். அக்காலத்தில் முசலிப் பிரதேசத்தில் நடைமுறையிலிருந்த "பள்ளிவாயில் சமாஜம்" முஸ்லிம் கிராமங்களுக்கு இடையிலான ஒருமைப்பாடான செயற்பாட்டிற்கு ஒரு உதாரணமாகும்.

இன்றும் ஏறக்குறைய அவ்வாறான ஒரு சவாலையே முசலி முஸ்லிம்கள் எதிர்கொண்டிருக்கின்றார்கள். இம்மக்கள் எதிர்நோக்குகின்ற இன்றைய சவால் தாம் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட தமது சொந்த இடங்களுக்கு மீளத் திரும்புவதற்குப் பொருத்தமான சூழ்நிலைகளை உருவாக்குவதுடன் தொடர்புடையதாகும்.

முன் அத்தியாயத்தில் குறிப்பிட்டதைப் போல "எடிபல" இராணுவ நடவடிக்கையோடு மன்னார் மாவட்டத்திலும் குறிப்பாக முசலிப் பிரதேசத்திலும்



அரசியல் மற்றும் சிவில் நிர்வாகத்துடன் தொடர்புடைய அம்சங்களில் பல பாரிய மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இம்மாற்றங்கள் முசலி முஸ்லிம் மக்களை தமது எதிர்காலத்தைப் பற்றி புதிய கோணத்தில் நோக்குவதற்குத் தூண்டியிருக்கின்றது.

அந்த அடிப்படையில் தமது எதிர்காலத்தைப் பற்றித் தீர்மானம் எடுக்க வேண்டியவர்கள் முசலி முஸ்லிம்களேயாவர். பொருத்தமற்ற தீர்மானங்களை இம்மக்கள் மத்தியில் திணிக்க முடியாது. அது வெற்றியும் அளிக்காது. அதே நேரத்தில் முசலி முஸ்லிம்கள் தமது எதிர்காலம் பற்றி தாம் எடுக்க வேண்டிய தீர்மானத்தில் பொறுப்பற்ற முறையிலும் இருக்க முடியாது.

### அகதி வாழ்க்கைக்கான காலக்கெடு

அகதிகளாக ஏழு வருடங்கள் கடந்து விட்டன. இனிவருவது அகதி வாழ்க்கையின் எட்டாவது வருடமாகும். அரசாங்க வரைவிலக்கணப்படி இம்மக்கள் அகதிகளாக எதிர்காலத்தில் கருதப்படுவார்களா என்பதில் நிறைய சந்தேகங்கள் இருக்கின்றன. அரசாங்க வரைவிலக்கணப்படியான அகதி அந்தஸ்தை (உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள்) இழந்தால் இம்மக்கள் தற்போது வாழ்கின்ற பிரதேசங்களில் அகதிகள் என்று கருதப்பட்டு, வழங்கப்பட்டு வருகின்ற நிவாரணம் மற்றும் ஏனைய பாதுகாப்புக்கள் எதிர்காலத்தில் இல்லாமல் போய்விடும். அது மட்டுமன்றி இம்மக்களில் மிகப் பெரும்பான்மையோர் மீள்குடியேற்றம் என்ற போலியான மாற்று வாழ்விடத் திட்டம் மூலமாக அகதியாக வாழும் இடங்களில் குடியேற்றப்படுவார்களாக இருந்தால் இம்மக்கள் தமது சொந்த இடமான முசலியிலுள்ள நலன்களைப் பாதுகாக்க முடியாத சூழ்நிலையும் உருவாகும்.

இவ்வாறான ஒரு முக்கியமான காலக்கட்டத்தில் முசலி முஸ்லிம்கள் இரண்டு சவால்களை எதிர் நோக்குகின்றார்கள். அதில் ஒன்று கடந்த ஏழுவருட வாழ்க்கையை முதலீடாக வைத்து அகதிகளாகத் தாம் வாழும் இடங்களில் தம்மைப் படிப்படியாக ஸ்திரப்படுத்திக் கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வது, அல்லது முசலிப் பிரதேசத்தில் புதிதாக ஏற்பட்டு வரும் அரசியல், சிவில் நிர்வாக அடிப்படையிலான சாதகமான சூழ்நிலைகளைப் பயன்படுத்தி சொந்த இடம் மீள்வதற்கான முயற்சிகளை எடுப்பது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேற்குறிப்பிட்ட இருமுனைப்பட்ட நிலைப்பாட்டில் எவ்வகையான தீர்மானங்களை எடுக்க வேண்டும் என்பது முசலி முஸ்லிம்களின் பொறுப்பாகும். அவ்வாறான ஒரு தீர்மானம் தனிப்பட்டவர்களால் அல்லது குழுக்களால் எடுக்கப்பட்டால் அது பயனுள்ள தாக்கத்தைப் பரவலாக இம்மக்கள் மத்தியில் ஏற்படுத்தாது. முசலி முஸ்லிம்கள் இணைந்த அடிப்படையிலான ஒரு கூட்டுத் தீர்மானம் நிச்சயமாக இம்மக்களின் அநேகருக்கு பயனுள்ள விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது. கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் நோக்கும் போது முசலிப் பிரதேசக் கிராமங்கள் இணைந்த அடிப்படையிலான ஒரு பொது உடன்பாடு எல்லா மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாக இருக்கும்.

## கூட்டுத்தீர்மானம்

கிராமங்கள் இணைந்த அடிப்படையில் ஒரு பொதுத் தீர்மானத்தை முசலி முஸ்லிம் மக்கள் எடுக்கக் கூடியதாக இருந்தால் அதனை செயற்படுத்துவதற்குரிய வாய்ப்புக்கள் இம்மக்களுக்கு நிறையக் காணப்படுகின்றன. இவ்வாறான ஒரு கூட்டுத் தீர்மானம் மூலமாக தமது சொந்த இடங்களுக்குச் செல்ல வேண்டும் என்ற முடிவோ அல்லது சொந்த இடங்களுக்குத் தற்போதைக்குச் செல்ல முடியாது என்ற தீர்மானமோ இம்மக்கள் தமக்காக எடுக்கும் தீர்மானமாக இருக்கும். அதன் பிரதிபலன்களுக்கு இம்மக்களே பொறுப்பாளிகளாக இருப்பர்.

இவ்வாறான கூட்டுத் தீர்மானத்தில் உள்ள பயன்கள் பல. உதாரணதாக சொந்த இடம் செல்வது என்ற இக்கூட்டுமுடிவு மக்களின் தீர்க்கமான முடிவாக இருக்குமானால், அக் கூட்டுத் தீர்மானம் தேசிய சர்வதேச மட்டங்களில் மதிக்கப்படக் கூடியதொன்றாக இருக்கும். விடுதலைப் புலிகளும், தமிழ் அரசியல்வாதிகளும் இம்மக்களின் தீர்மானத்தைக் கருத்தில் எடுப்பதற்கு வற்புறுத்தப்படுவார்கள். கூட்டான முடிவும், ஒற்றுமையான நடவடிக்கைகளும் இம்மக்களுக்குத் தமது சொந்த இடம் மீள்வதுடன் தொடர்புடைய பாதுகாப்பையும், நன்மையையும் தரக் கூடியது. இத்தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் போது சில எதிர்பாராத சவால்களை இம்மக்கள் எதிர் நோக்க வேண்டியிருந்தாலும் மக்கள் ஒருவருக்கொருவர் ஒத்தாசையாக



இருந்து அப்பாதிப்பின் தாக்கத்தைக் குறைக்கக் கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன.

மறுபுறமாக, கூட்டுத் தீர்மானம் மூலமாக தமது சொந்த இடங்களுக்குச் செல்லமுடியாத சூழ்நிலை இம் மக்களுக்கு ஏற்பட்டாலும் அக்கட்டத்திலும் இம்மக்களின் கூட்டு முயற்சியின் மூலமாக புதிய எதிர்காலத் திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்தவும் முடியும். அந்த வகையில் தாம் அகதிகளாக வாழ்கின்ற பிரதேசத்தில் தமது நலன்களைப் பாதுகாக்கவும் நீண்ட காலத்தில் அங்கு தம்மை ஸ்திரப் படுத்தவும் முசலி முஸ்லிம்கள் கூட்டாக முயற்சிக்கலாம்.

ஆகவே, முசலி முஸ்லிம்கள் தமது எதிர்காலத்தைப் பற்றி தாமே தீர்மானிக்கும் நிலைக்கு வரவேண்டும். தமது எதிர்கால சந்ததியினரின் நலனைக் கருத்திற்கொண்டு தமக்கென ஒரு எதிர்காலத்தை இம்மக்கள் கட்டியெழுப்ப வேண்டும். இவ்வாறு இம்மக்கள் கூட்டாக எடுக்கக் கூடிய செயற்பாடுகள் அவர்களுக்கு எதிர்காலத்திலும் நீண்ட காலத்திலும் பயன் தரக்கூடியது.

முசலி முஸ்லிம்கள் தமது எதிர்காலம் பற்றிய தீர்மானத்தில், அவதானமாகவும் அத்துடன் அவசரமாகவும் முடிவெடுக்க வேண்டிய அம்சம் தமது சொந்த இடமான முசலியில் மீளக் குடியேறுவதற்கான முன் ஆயத்தங்களைச் செய்வதா? இல்லையா? என்பதாகும். இவ்வாறு சொந்த இடத்திலான மீள்குடியேற்றத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பது பற்றி குறிப்பிடுகின்ற போது முசலி முஸ்லிம்கள் இன்றைய நடைமுறை வாழ்க்கையில் அகதிச் சூழலில் ஒரு கௌரவமான வாழ்க்கை முறையை ஏற்படுத்திக் கொள்ள முயற்சிக்கின்ற அம்சம் முக்கியத்துவமற்றது என்பது பொருளல்ல. மாறாக முசலியோடு தம்மைத் தொடர்பு படுத்தி உருவாகியிருக்கின்ற புதிய சூழ்நிலைகளை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முடியாத ஒரு துரதிஷ்ட நிலை இம்மக்களுக்கு உருவாகக் கூடாது என்பதே பொருளாகும்.

## 9.2 சொந்த இடம் மீள்வது பற்றிய முசலி முஸ்லிம்களின் அபிப்பிராயம்.

முசலி முஸ்லிம்கள் மத்தியில் அண்மைக்காலத்தில் ஏற்பட்டு வரும் இம்மாற்றங்களை இம்மக்களோடு மிக நெருக்கமாகப் பழகி அவதானிக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாய்ப்பு இந்நூலாசிரியருக்குக் கிடைத்தது. இவ்வவதானிப்பில் இம்மக்களின் எதிர்காலம் பற்றி அடையாளம் கண்ட சில உண்மைகளை இம்மக்கள் பற்றிய இந்நூலில் குறிப்பிட வேண்டியது அவசியமாகும்.

அண்மைக் காலத்தில் மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்டு வருகின்ற சாதகமான மாற்றங்கள் முசலி முஸ்லிம்களை தமது சொந்த இடங்களில் மீளக் குடியேறுவதற்கான சிந்தனையைத் தூண்டியிருக்கின்றது. சொந்த இடம் மீள்வது பற்றிய தமது கருத்துக்களை இம்மக்கள் கலந்துரையாடல்கள் மூலம் பரிசீலித்து வருகின்றார்கள். இக்கலந்துரையாடல்கள் முசலிப் பிரதேசக் கிராம மக்கள் மத்தியிலும், கிராமப் பிரதிநிதிகளுக்கிடையிலும் நடைபெற்று வருகின்றன.

இக்கலந்துரையாடல்கள் பலவற்றில் கலந்து கொள்ளக் கூடிய வாய்ப்பு இந்நூலாசிரியருக்குக் கிடைத்தது. இக்கலந்துரையாடல்களில் முசலி முஸ்லிம்கள் தமது சொந்த இடம் மீள்வது பற்றிய பல முக்கியமான கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர்.

முசலி முஸ்லிம்களின் சொந்த இடத்திலான மீள்குடியேற்றம் பற்றிய அபிப்பிராயத்தில் மேலும் தெளிவைப் பெறும் நோக்கில், நூலாசிரியரால் மீள்குடியேற்றம் பற்றிய அபிப்பிராய ஆய்வு ஒன்றும் இம்மக்கள் மத்தியில் செய்யப்பட்டது. இவ்வாய்வு 1997 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் செய்யப்பட்டது. இவ்வாய்வுக்கு முசலிப் பிராந்திய மக்கள் ஒன்றியப் பிரதிநிதிகள் உதவினர். இவ்வாய்வில் முசலியின் 21 கிராமங்களைச் சேர்ந்த 52 முக்கியஸ்தர்களிடமிருந்து விபரங்கள் பெறப்பட்டன. இவ்வாய்வின் சாராம்சம் பின்வருமாறு:

## பாதுகாப்பு

மீள்குடியேற்றத்துடன் தொடர்புடைய முக்கிய பிரச்சினை பாதுகாப்பு என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. இப்பாதுகாப்புப் பிரச்சினை முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றத்தோடு தொடர்புபடுத்தி நோக்கப்பட்டது. இம்மக்களை விடுதலைப் புலிகள் தமது சொந்த இடங்களில் இருந்து வெளியேறும்படி கட்டளையிட்டனர். விடுதலைப் புலிகள் வடக்கில் தொடர்ந்தும் ஆயுதப் பலத்துடன் இருக்கும் இக்கால கட்டத்தில் சொந்த இடம் மீள்வது என்பது தமது எதிர்காலப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருக்கும் என்ற கருத்து



இம்மக்களால் முன்வைக்கப்பட்டது. சொந்த இடம் மீளச்செல்வது பற்றி முசலி முஸ்லிம்கள் சிந்திப்பதாக இருந்தால் முஸ்லிம்களின் சொந்த இடம் திரும்புவது பற்றிய விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டில் சாதகமான மாற்றங்கள் ஏற்பட வேண்டும் என்று விரும்புகின்றார்கள்.

விடுதலைப் புலிகள் முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றம் பற்றித் தமது மனவருத்தத்தை தெரிவித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கைகள் முசலி முஸ்லிம்களை தமது சொந்த இடம் மீள்வது பற்றிய தீர்மானத்தில் தைரியப்படுத்துகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. ஆகவே தேசிய, சர்வதேச மட்டத்தில் பொருத்தமான முயற்சிகள் எடுக்கப்பட்டால் முசலி முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் பற்றிய சம்மதத்தை விடுதலைப் புலிகளிடம் பெறக்கூடிய வாய்ப்பு உண்டு என்று இம்மக்கள் நம்பியிருக்கின்றார்கள். முஸ்லிம்கள் பற்றிய விடுதலைப் புலிகளின் சாதககமான கண்ணோக்கு மறுபடியும் முஸ்லிம்கள் தமது சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றப்பட மாட்டார்கள் என்ற உறுதிப்பாடாக அமையும். முஸ்லிம்களின் சொந்த இடம் மீள்வது சம்மந்தமான விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை சாதகமான கண்ணோக்கில் தேசிய, சர்வதேச மட்டத்தில் அறியக் கூடியதாக இருந்தால் மீளக் குடியேறும் மக்கள் மனதில் தைரியம் ஏற்படும் சூழ்நிலை உருவாகும். முசலி முஸ்லிம்களின் கண்ணோட்டத்தில் விடுதலைப் புலிகளின் இவ்வுறுதிப்பாடு, தேசிய, சர்வதேச சமூகத்தால் உத்தரவாதப்படுத்தப்படுவது அவசியமானது என்பதாகவும் காணப்பட்டது.

## சமூக தலைமைத்துவம்

சொந்த இடத்திலான முசலி முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்திற்கு விடுதலைப் புலிகளின் சாதகமான பதிலைப் பெறுவதும் இது சம்மந்தமாக தேசிய, சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்ப்பதும் இலகுவான விடயங்கள் அல்ல. இம்முயற்சிகளில் வெற்றிபெறக் கூடிய சரியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது அவசியமாகும். முசலியை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகத் தலைமைத்துவத்தால் இவ்வாறான முயற்சிகளைச் சாத்தியப்படுத்த முடியும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனால், மேற்குறிப்பிட்ட பிரதேச மட்டத்திலான முஸ்லிம்களுக்கான சமூகத் தலைமைத்துவம் முசலியின் எல்லாப் பிரதேச மக்கள் நலன்களிலும் கவனம் செலுத்தக் கூடியதாக இருக்க வேண்டும் என்ற வேண்டுகோள் முன்வைக்கப்பட்டது. இதில் குறிப்பாக முசலியின் தெற்குப்புற முஸ்லிம் கிராமச் செறிவைச் சேர்ந்தவர்களின் கண்ணோட்டம் முக்கியமானதாகும். இப்பிரதேசத்தில் மூன்று முஸ்லிம் கிராமங்கள் வடபுற முஸ்லிம் செறிவில் இருந்து விலகிக் காணப்படுகின்றன. முசலியில் மீள்குடியேற்றத்திற்கான முயற்சிகள் எடுக்கப்படுகின்ற போது புவியியல் ரீதியாகத் தனித்துக் காணப்படும் இப்பிரதேசக் கிராமங்களான மறிச்சுக்கட்டி, கரடிக்குளி, பாலைக்குளி ஆகியவற்றின் பாதுகாப்பு, கிராமக் குடியிருப்புப் புனரமைப்பு, பிரதேசப் பொருளாதாரப் புனரமைப்பு ஆகிய அம்சங்களுக்கு விஷேட கவனம் செலுத்தப்படுவது இம்மக்கள் மத்தியில் சொந்த இடத்திலான மீள்குடியேற்ற ஆர்வத்தைத் தூண்ட உதவும் என்ற கருத்து இப்பிரதேசத்தைச் சேர்ந்த கிராம முக்கியஸ்தர்களால் முன்வைக்கப்பட்டது.

## முசலி மீளமைப்பில் முஸ்லிம்களின் பங்களிப்பு

முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்திற்காக முசலி புனர் நிர்மாணிக்கப்படுகின்ற போது அப்புனர்நிர்மாண நடவடிக்கைகளில் முசலி முஸ்லிம்களும் பங்காளிகளாக இருக்க வேண்டும் என்ற கருத்தையும் இவ்வபிப்பிராயக் கணிப்பில் அறியக் கூடியதாக இருந்தது.

## பொருளாதார புனரமைப்பு

தமது சொந்தப் பிரதேசமான முசலியின் புனர்நிர்மாணத்தில் வேறுபல முக்கிய கருத்துக்களும் முசலி முஸ்லிம்களால் முன்வைக்கப்பட்டன. முசலி ஒரு பரந்த புவியியல் பிரதேசம். இப்பிரதேசம் கடந்த ஏழு வருடங்களாகக் கைவிடப்பட்டிருந்தது. முசலியில் முஸ்லிம்களின் வெற்றிகரமான மீள்குடியேற்றத்திற்கு பல பாரிய திருத்த வேலைகள் செய்யப்பட வேண்டிய தேவைகள் இப்பிரதேசத்தில் காணப்படுகின்றன. கிராமிய குடியிருப்புச் சூழலில் அகதிகளின் வாழ்விட வசதிகளை ஏற்படுத்த எடுக்கப்பட இருந்த



முயற்சி ஒரு புறமிருக்க, இப்பிரதேசத்தின் பொருளாதார சூழலில் அதிலும் குறிப்பாக கிராமியக் குளங்கள், நீர்ப்பாசனக் கால்வாய்கள் போன்றவற்றை புனரமைப்பதற்குப் பாரிய அளவிலான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டி இருக்கின்றன. இப்பாரிய முயற்சிகளுக்கு சர்வதேச உதவிகள் அவசியம் என்ற கருத்தும் இவர்களால் முன்வைக்கப்பட்டது.

## கட்டம் கட்டமான மீள்குடியேற்றம்

புனரமைப்பு முசலியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற சம காலத்தில் கட்டங்கட்டமாக முஸ்லிம்களை மீள்குடியேற்ற வேண்டும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது.

## நவீன முறையிலான மீள்குடியேற்றம்

பண்டாரவெளியைச் சேர்ந்த கிராமத் தலைவர் ஒருவர் முசலியின் விவசாயப் பொருளாதாரமும், முஸ்லிம்களின் சமயக் கலாசாரப் பாரம்பரியமும், கல்வி, மருத்துவம் அத்துடன் ஏனைய தேவைகளும் குறுங்காலப் பாதுகாப்பையும், நீண்டகால பிரதேச அபிவிருத்தியையும் கருத்தில் கொண்ட அடிப்படையில் புனரமைக்கப்பட வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தார்.

## பின்தங்கிய பிரதேச சமூக, மருத்துவ வசதிகள்

கடந்த காலங்களில் பிரதேசப் புறக்கணிப்பால் முசலிப்பிரதேசத்தின் கல்வி சமூக அபிவிருத்தியில் ஏற்பட்ட குறைபாடுகள் எதிர்காலத்தில் தீர்க்கப்படக் கூடியதான மீள்குடியேற்றத் திட்டம் முசலிக்கு அவசியம் என்ற கருத்தும் இம்மக்களால் முன்வைக்கப்பட்டது. இங்கு முசலியின் போக்கு வரத்து வசதி, வைத்தியசாலை, தரமான பாடசாலை, அதுபோன்ற சமூக–பொருளாதார அடிப்படையான வசதிகள் திட்டமிடப்பட்ட அடிப்படையில் செயற்படுத்த வேண்டிய அவசியம் வற்புறுத்தப்பட்டது. முசலிப் பிரதேசத்தினை மன்னாரின் ஏனைய பிரதேசங்களோடும் இணைத்து முசலியின் எதிர்கால பொருளாதார, சமூக அபிவிருத்திகள் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்டுகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முசலி முஸ்லிம்களின் சொந்த இடத்திலான மீள்குடியேற்றம் பற்றிய மேற்குறிப்பிட்ட கருத்துக்கள் மேலும் பரிசீலனைக்குட்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

## 9.3 முஸ்லிம்களின் அபிலாசைகளை நிறைவேற்றக் கூடிய ஒரு மீள்குடியேற்றம் பற்றிய முன்மொழிவு

மேலே அடையாளம் காணப்பட்ட முசலி முஸ்லிம்களின் அபிலாசைகள் நியாயமானவையாகவும், நிதர்சனமானவையாகவும் காணப்படுகின்றன. இம்மக்கள் மத்தியில் அங்கும் இங்குமாகச் சிதறிக் கிடக்கின்ற ஆக்க பூர்வமான சிந்தனைகளை ஒருங்கிணைத்து இலங்கையின் இன்றைய அரசியல் மற்றும் இனப் பிரச்சினை மாற்றத்திற்கு ஏற்ப இம்மக்களின் அபிலாசைகளுக்கு அறிவு பூர்வமான ஒரு அணுகு முறை கொடுக்க வேண்டியது அவசியமானதாகக் காணப்படுகின்றது. அவ்வாறான ஒரு அணுகு முறை பின்வரும் பகுதியில் விளக்கப்படுகின்றது.

சொந்த இடத்திலான மீள்குடியேற்றம் பற்றிய அம்சம் இரண்டு கண்ணோட்டங்களில் நோக்கப்படக் கூடியது. ஒன்று இலங்கையில் இனப்பிரச்சினையால் பாதிக்கப்பட்ட சொந்த இடத்தை விட்டு இடம்பெயர்ந்த மக்களுக்கான ஒரு பொதுவான கண்ணோக்கு. இரண்டாவது பலவந்த வெளியேற்றத்திற்குட்பட்ட முஸ்லிம்களுக்கான மிள்குடியேற்றம் பற்றிய கண்ணோக்கு.

இவ்விரண்டு கண்ணோக்குகளும் படம் 18 மூலமாகவும், படம் 19 மூலமாகவும் விளக்கப்படுகின்றன. இலகுவில் விளங்கிக் கொள்ளக் கூடிய முறையில் இவ்வரைபடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. சொந்த இடத்திலான மீள்குடியேற்றம் பற்றிய இம்முன்மொழிவுகள் பின்வரும் பகுதியில் சுருக்கமாக விளக்கப்படுகின்றன.

## இனப்பிரச்சினையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மீள்குடியேற்றத்திட்டம்

இன்று இலங்கையில் பத்து லட்சத்துக்கும் அதிகமான மக்கள் அகதிகளாகக் காணப்படுகின்றார்கள். இவர்களில் மிகப் பெரும்பான்மையினர்






படம்-18: இனப்பிரச்சினையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மீள்குடியேற்றம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வடக்குக் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்தவர்களாவர். தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் ஆகிய மூவின மக்களும் அகதிகளாக உள்ளனர். இவ்வகதிகள் வாழும் இடம், காலம் என்பன பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபட்டுக் காணப்படுகின்றது.

அகதிகளாக்கப்பட்டு சொத்து, சுகம் இழந்த மக்கள் தமது சாதாரண வாழ்க்கையை சுயமாக ஆரம்பிக்க முடியாது. பொருத்தமான சமூக, பொருளாதார, குடியிருப்புச் சூழல்கள் உருவாக்கப்பட்டு இம்மக்களின் அகதி நிலை சாதாரண வாழ்க்கை நிலையாக மாற்றப்பட வேண்டும். இவ்வாறான முயற்சிகள் அகதிகளுக்கான மீள்குடியேற்றத் திட்டம் என்று பொதுவாக அழைக்கப்படுகின்றது. அவ்வாறான ஒரு மீள்குடியேற்றத்திட்டம் அகதிகளின் புனர்வாழ்க்கையின் ஆரம்பமாகக் காணப்படும்.

இவ்வகதிகளின் எதிர்கால நலன்களே ஒரு மீள்குடியேற்றத்திட்டத்தின் அடிப்படை நோக்காகக் கொள்ளத்தக்கதாகும். இவ்வகதிகளுக்காக அவர்களின் எதிர்கால நலனுக்காக, சாதாரண வாழ்க்கைக்கு இவ்வகதிகளைக் கொண்டுவருவதற்காக மீள்குடியேற்றத்திட்டம் ஏற்படுத்தப்படுகின்றது. ஒரு மீள்குடியேற்றத் திட்டத்தின் நடைமுறையில் பல்வேறு அரசியல், பொருளாதார, சமூக, கலாசார. நிவாரண காரணிகள் செல்வாக்குச் செலுத்துவதாகக் காணப்படுகின்றது.

மீள்குடியேற்றத்துடன் தொடர்புடைய மற்றுமொரு அம்சம் அகதிகள் மீள்குடியேற்றப்பட இருக்கும் பிரதேசம் பற்றியதாகும். இப்பிரதேசம் அகதிகளை மீளக் குடியேற்றுவதற்குப் பொருத்தமான பொருளாதார, சமூக, குடியிருப்பு சூழலைக் கொண்டதாக இருக்க வேண்டும். அகதிகளின் சொந்த இடங்கள் இப்பண்புகளை ஏற்கனவே கொண்டிருந்தமையினால் அப்பிரதேசத்திலே அகதிகளைக் குடியேற்றுவது மிகப் பொருத்தமானதாகக் கொள்ளப்படுகின்றது.

## மீள்குடியேற்றத்தில் செல்வாக்குச் செலுத்தும் பின்னணிக் காரணிகள்

மீள்குடியேற்றமொன்றில் மீள்குடியேற்றப்பட இருக்கும் அகதிகளும், மீள்குடியேற்றபட இருக்கும் பிரதேசமும் மிக அடிப்படையான அம்சங்களாகும். அதே நேரத்தில் மீள்குடியேற்றத்துடன் தொடர்புடைய வேறு பல பின்னணிக் காரணிகளும் காணப்படுகின்றன. இப்பின்னணிக் காரணிகள் மீள்குடியேற்றத்துக்கான அரசியல், பொருளாதார, சமூக சூழற் தன்மைகளில் இருந்து மீள்குடியேற்றப்பட்ட மக்களின் நீண்டு நிலைத்திருக்கக் கூடிய



சமூக உறுதிப்பாடு வரையில் வேறுபடுகின்றன. இப்பின்னணிக் காரணிகள் அதன் முக்கியத்துவம் பொறுத்து மீள்குடியேற்றத்திட்ட செயல் முறையில் முன்னணி வகிக்கின்றன.

## மீள்குடியேற்றக் காலக் கட்டங்கள்

அகதிகளுக்கான மீள்குடியேற்றம் குறுங்காலத்தில் செய்து முடிக்கக் கூடியதொன்றல்ல. இது திட்டமிட்ட அடிப்படையில் காலகட்டங்களாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டியதாகும். இந்த அடிப்படையில் மீள்குடியேற்றத்துடன் தொடர்புடைய மூன்று காலக்கட்டங்களை அடையாளப்படுத்தக் கூடியதாக இருக்கின்றது. அவை மீள்குடியேற்றத்திற்கு முந்திய காலக்கட்டமென்றும், மீள்குடியேற்றக் காலம் என்றும், மீள்குடியேற்றத்திற்குப் பிந்திய காலம் என்றும் இங்கு வரையறுக்கப்படுகின்றன.

மீள்குடியேற்றக் காலக்கட்டம் ஒவ்வொன்றிலும் இங்கு ஏற்கனவே அடையாளப்படுத்தப்பட்ட மீள்குடியேற்றத்துடன் தொடர்புடைய அடிப்படைக் காரணிகளும் பின்னணிக் காரணிகளும் எவ்வாறு தொடர்புற்ற அடிப்படையில் செயற்படுகின்றன என்பதை நாம் சற்று நோக்குவோம்.

## 1. தயார்படுத்தல் காலக்கட்டம்

மீள்குடியேற்றத்திற்கு அகதிகளும், அகதிகள் குடியேற இருக்கின்ற பிரதேசமும் தயார்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். காரணம் மக்கள் அகதியாக்கப்பட்ட சூழ்நிலையிலிருந்து அகதியாக்கப்பட்ட காலக்கட்டம் வரை அகதிகளைத் தயார் படுத்தல் அம்சமும், பிரதேசத்தில் குடியிருப்பு சூழலை ஏற்படுத்தும் அம்சமும் முக்கியமானவையாகக் காணப்படுகின்றன.

இக்காலக்கட்டத்தில் அகதிகள் உளவியல் ரீதியாகத் தமது பிரதேசம் செல்வதற்குத் தயார்நிலைப் படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். குடியேற இருக்கும் பிரதேசத்தின் வாழ்விட, பொருளாதார சூழல்கள் தயார்படுத்தப்படுகின்ற நிலையில் மீள்குடியேற்றமொன்று சாத்தியமானதாகக் காணப்படும்.

மீள்குடியேற்றத்திட்டத்தை இலங்கையின் இனப் பிரச்சினையுடன் தொடர்புபட்ட வகையில் அணுகி உரிய நடவடிக்கைகளை எடுப்பது மீள்குடியேற்றத்திட்டத்தின் வெற்றிக்கு மிக அத்தியாவசியமானதாகும். அவ்வாறான சூழ்நிலையில் இனப்பிரச்சினைக்கான அரசியற் தீர்வு அல்லது மீள்குடியேற்றத்திற்கான சர்வதேச உத்தரவாதம் அவசியமானதொன்றாகக் காணப்படுகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## 2. மீள்குடியேறிய காலக்கட்டம்

அகதிகளின் மீள்குடியேற்றத்திற்கு பொருத்தமான சூழ்நிலைகள் உருவாக்கப்படும் போது மீள்குடியேற்றம் சாத்தியமானதாக அமைகின்றது. இச்சந்தர்ப்பத்தில் மீள்குடியேற்றத்திற்காக தயாரிக்கப்பட்ட இடத்தில் அல்லது பிரதேசத்தில் அகதிகள் தமது சாதாரண வாழ்க்கையை ஆரம்பிப்பர். இக்காலக்கட்டம் மிக முக்கியமானதாகும். மக்கள் தமது அகதி நிலையை மறந்து தமது பழைய நிலைமைக்குத் திரும்புவதற்குப் பொருத்தமான அரசியல், பொருளாதார, சமூக சூழல்கள் உருவாக்கப்பட வேண்டும். இக்கட்டத்தில் பிரதேச, குடியிருப்பு, பொருளாதார புனரமைப்பு மிகவும் அத்தியவசியமானவையாகக் காணப்படுகின்றன. இப்புனரமைப்புக்குத் தேசிய, சர்வதேச சமாதான சக்திகள் அதிகம் பங்காற்றக்கூடிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

## 3. ஸ்திர சமூக காலக்கட்டம்

இது மீள்குடியேற்றத்துக்கு பிந்திய காலக்கட்டமாகும். அகதியாக்கப்பட்ட சமூகம் இந்நிலையில் தனது சாதாரண வாழ்க்கையை வெற்றிகரமாகத் தொடரும் வாய்ப்பினைப் பெறுகின்றது. முன்னர் அகதியாக்கப்பட்டதைப் போன்ற மற்றுமொரு சூழ்நிலை உருவாகாத அரசியல், இன, இராணுவ சூழ்நிலைகள் இக்கால கட்டத்திற்கு அவசியமானதாகும். மக்கள் தமது அகதி வாழ்க்கையால் ஏற்பட்ட பாதிப்புக்களில்இருந்து நிவாரணம் பெற்ற அடிப்படையில் இக்காலக் கட்டத்தில் வாழ்க்கையைத் தொடர்வர். இதற்கு இச்சமூகத்தின் சுயமுயற்சியும் ஆர்வமுமே மிக முக்கியமானவையாகும்.

## பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முசலி முஸ்லிம்களுக்கான மீள்குடியேற்றம்

படம் 18 இல் காட்டப்பட்டுள்ள பொதுமைப்படுத்தப்பட்டுள்ள மீள்குடியேற்ற மாதிரியிலிருந்து முசலிக்கான அணுகு முறை சில அம்சங்களில் வேறுபடுகின்றது. இவ்வணுகு முறையில் முசலி முஸ்லிம்களை மீள் குடியேற்றத்திற்காகத் தயார் படுத்தும் அம்சமும் முஸ்லிம்களுக்காக






படம் 19 : பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முசலி முஸ்லிம்களுக்கான மீள்குடியேற்றம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரதேசத்தைத் தயார் படுத்தும் அம்சமும் சமமான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டவையாகும் (படம் 19). முசலி முஸ்லிம்களைத் தயார்படுத்தல் என்பது உளவியல் ரீதியாக விடுதலைப் புலிகள் பற்றிய இம்மக்களின் அச்சத்தை இல்லாமல் செய்து மன உறுதியோடு தமது சொந்த வாழ்விடங்களில் புதிய வாழக்கையை இம்மக்கள் ஆரம்பிப்பதைக் குறிக்கின்றது.

முசலிப் பிரதேசத்தைத் தயார் படுத்துதல் என்னும் போது முசலியின் பௌதீக, சமூக, குடியிருப்பு சூழலை பாரிய வேலைத்திட்டத்தின் மூலமாகத் தயார் படுத்தி முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்தை நிதர்சனப் படுத்த எடுக்கப்படுகின்ற முயற்சிகளைக் குறிக்கின்றது. இவை மிகத் திட்டமிடப்பட்ட அடிப்படையில் காலக்கட்டங்களாகச் செய்யப்பட வேண்டிய வேலைத்திட்டங்களாகும்.

## முசலி முஸ்லிம்களின் அபிலாசைகளை நிறைவேற்ற எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள்

இவ்வத்தியாயத்தின் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல் முசலி முஸ்லிம்களின் எதிர் காலத்தைக் கருத்திற் கொண்டு அவதானமாகவும், ஒற்றுமையாகவும், திட்டமிடப்பட்ட அடிப்படையிலும் இம்மக்களின் எதிர் கால நலன்களுக்குப் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமாகும். அவ்வாறான முயற்சியில் முசலி மக்களின் முழுமையான பங்களிப்பு அவசியமானதாகும். மக்களின் பங்களிப்பு என்று இங்கு கருதப்படுவது கிராம மட்டத்தில் ஒரு சமூகமாக எடுக்கப்படுகின்ற தீர்மானங்களைக் குறிக்கின்றது. அவ்வாறான முயற்சி மேற்கொள்ளப்படாவிட்டால் மீள்குடியேற்றம் என்பது இம்மக்களைப் பொறுத்தவரையில் ஒரு கற்பனையாக மாறிவிடும். இதற்கு உதாரணங்கள் மன்னார் மாவட்ட ஏனைய பிரதேச மீள்குடியேற்றத் திட்டங்களில் நிறையக் காணப்படுகின்றன. அவ்வாறான ஒரு தோல்வியான முயற்சியில் முசலி முஸ்லிம்களும் ஈடுபடக் கூடாது. முசலிப் பிரதேச கிராம சமூகங்கள் இணைந்த பிரதேச மட்டத்திலான ஒன்றுபட்ட முயற்சி வெற்றியளிக்கக் கூடிய எல்லாவகையான சாத்தியங்களும் காணப்படுகின்றன.



# விபரம் தந்தவர்கள்

1. ஏ. முகம்மது கௌது (வயது 70)
   பூர்வீக இடம்: சிறுக்குளம்
   தற்போது வாழும் இடம்: பள்ளிவாசல் துறை.

2. எம். ஹபீப் முகம்மகது (வயது 75)
   பூர்வீக இடம்: சிறுக்குளம்
   தற்போது வாழும் இடம்: பள்ளிவாசல்துறை.

3. ஏ. எச். பளுலூன் மரைக்கார் (வயது 55)
   பூர்வீக இடம்: பண்டாரவெளி
   தற்போது வாழும் இடம்: கொய்யாவாடி, நுரைச்சோலை.

4. சேது அப்துல் காதர் (வயது 65)
   பூர்வீக இடம்: ம்ணற் குளம்
   தற்போது வாழும் இடம்: கொய்யாவாடி, நுரைச்சோலை.

5. எம். சம்சுதீன் (வயது 72)
   பூர்விக இடம்: புதுவெளி
   தற்போது வாழும் இடம்: கல்முனைக்குடி, நுரைச்சோலை.

6. ஜகுபர் சாதிக் (வயது 66)
   பூர்வீக இடம்: புதுவெளி
   தற்போது வாழும் இடம்: குறிஞ்சிப்பிட்டி, கற்பிட்டி.

7. சாகுல் ஹமீது (வயது 62)
   பூர்வீக இடம்: புதுவெளி
   தற்போது வாழும் இடம்: குறிஞ்சிப்பிட்டி, கற்பிட்டி.

8. என். எம். கபீபு முகம்மது (வயது 70)
   பூர்வீக இடம்: சிலாவத்துறை
   தற்போது வாழும் இடம்: நுரைச்சோலை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உசாத்துணை நூல்கள்


Arumugam, S., 1969.
Water Resources of Ceylon: Its Utilization and Development Colombo: Water Resource Board Publication.

Boake, W.J.S., 1888.
Mannar: A Monograph Colombo: G.J.A. Skeen Government Printer.

Brohier, R.L., 1934.
Ancient Irrigation Works in Ceylon. Part II. Colombo: Government Press (Reprinted in 1979).

-------, 1929.
"Notes on Ancient Habitation Near Kudiramalai" Journal of Ceylon Branch of the Royal Asiatic Society XXXI (82): 388-397.

Cannon, Teresa and Peter Davis, 1995.
Aliya: Stories of Elephants of Sri Lanka Melbourne: Aravata Press.

Chitty, C.S., 1834.
The Ceylon Gazetteer Colombo: Cotta Church Mission Press.

Codrington, H.W., 1925.
"Mediaeval Topography" Ceylon Historical Association Leaflet (4)

Deng, Francis, 1993.
"Protecting the Internally Displaced: A Challenge for the United Nations" A Paper Presented at the Conference on Displacement and Democracy on 18th and 19th August 1993 in Colombo.

Denham, 1902
Mannar Gazeteer, Colombo : Government Press:

Department of Census and Statistics, Various Years.
Censuses of Sri Lanka, 1953, 1963, 1971 and 1981 Colombo: Department of Census and Statistics.





Department of Census and Statistics, 1984.
Sri Lanka Census of Population and Housing, 1981. Volume - 1, Part XIII Mullaitivu District Report Colombo: Department of Census and Statistics.

Deraniyagala, P.F.P, 1955.
Some Extinct Elephants Their Relatives and Two Living Species Colombo: Government Press.

De Silva, C.R., 1977.
"The Portuguese and Pearl Fishery Off South India" Ceylon Studies Seminar 1976/77, No. 6, Serial No. 67.

De Silva, K.M., 1981
A History of Sri Lanka Delhi: Oxford University Press.

Government of Ceylon, Various Years,
Censuses of Ceylon, 1871, 1881, 1891, 1901, 1911, 1921, 1931 and 1946 Colombo: Government Printers.

Hasbullah, S.H., 1991.
"The Political Future of the Northern Province Muslims of Sri Lanka" A Paper Presented at Colombo Islamic Centre of Sri Lanka on 10th December 1991.

——, 1992.
A Report on the Loss of Movable and Immovable Assets of Muslims Ousted from the Northern Province in 1990 A Report Submitted to the Parliament of Sri Lanka in May 1992. Hansard Vol 79, No. 14.

——, 1993.
"A Preliminary Report on the Conditions of the Muslim Refugees" A Paper Presented at the Conference on Displacement and Democracy Organized by the University of Colombo on 18th and 19th August 1993 in Colombo.

——, 1994.
"Refugee Migration" A Paper Presented at National Geographical Conference held at the Department of Geography, University of Peradeniya, 7-9 August 1992.

——, 1996a.
We Want to Go Home (Presidential Address Delivered at the Public Meeting) Colombo: The Northern Muslims' Rights Organization.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

——, 1996b.
Refugees are People: Proceedings of the Workshop on the Resettlement Program for the Forcibly Evicted Muslims of the Northern Province Colombo: The Northern Muslims' Rights Organization.

——, 1996c.
"Recent Refugee Migration in Sri Lanka" A paper presented at the Seminar on Migration, Organized under UGC/UNFPA Project held at the University of Kelaniya (23-24 August 1996).

——, 1996d.
"Ethnic Conflict and Displacement in Sri Lanka" A paper presented at the International Workshop on Causes of Conflict and Conflict Resolution held in Kandy (15-17 July 1996).

Hocart, A.M, 1924/28
" Archaelogical Summary" Ceylon Journal of Science 1928

IRDP, 1980.
Integrated Rural Development Program: Mannar District Report Unpublished.

Jayewardene, Jayantha, 1994.
Elephants in Sri Lanka Colombo: Mortalake Press.

Lahiri, Choudhory, K. 1995
Gajah (Journal of the Asian Elephant Specialist Group)
No.14 June 1995 (28-31)

Lewis, J.P., 1993.
A Manual of the Vanni District , Ceylon Colombo: Lake House Book Shop.

Ministry of Shipping, Ports, Rehabilitation and Reconstruction, 1996.
Performance, Policy, Strategies and Programme Colombo: Ministry.
Muthaliyar, R.C.,Proctor, 1930.

"The Invasion of Ceylon by Muslims" Journal of Ceylon Branch of Royal Asiatic Society XXXI (83): 583-585.



Muthar, Hari Mohan, 1995.
"Introduction" in Development, Displacement and Resettlement edited by Hari Mohan Muthar with the Collaboration of Michael M. Corea Delhi: Vikas Publishing House.

Navaratnam, C.S., 1960.
Vanni & Vanniyas Jaffna: Eelanadu Limited.

Nicholas, C.W., 1963.
"Historical Topography of Ancient and Medieval Ceylon" Journal of Ceylon Branch of Royal Asiatic Society (New Series, Special Number) 7

North-East Provincial Council, 1996.
Statistical Information of the North-East Province Trincomalee: NEPC.

Perera, B.J., 1951/52.
"The Ports of Ancient Ceylon" CHJI (2).

Raheem, M.S., 1979.
History and Culture of Jaffna Muslims (Tamil) Jaffna: Mamakal Printers.

Rahman, S.H.M., 1995.
Muslim Education of Musali Divisional Secretariat in Mannar District A Diploma Dissertation Submitted to the Faculty of Education, University of Colombo.

Rajeratnam, V.N., 1971.
Administration Report of the Director of Irrigation for the Financial Year 1968/69. Colombo: Department of Irrigation.
Refugee Family Information, 1994.

"The Family Information of the Muslim Refugees Ousted from the Northern Province in October, 1990" Volume 1 - 23 (A Compilation of the Refugee Family Information of 9000 Families by S.H. Hasbullah and Others) Colombo: Jama'ath-e-Islami (Colombo).

Ribeyro, Juan (Captain), 1685.
The History of the Island of Ceylon Colombo: Government Press.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Seneviratne, Moureen, 1979.
Some Mahavamsa Places Colombo: Lake House Investment Ltd.

Sitrambalam, S.K., 1992.
Kingdom of Jaffna (Tamil) Thirunelvely: University of Jaffna Publication.

——, 1993.
Jaffna Ancient History (Tamil) Thirunelvely: University of Jaffna Publication.

Stevart, James, 1843.
An Account of the Pearl Fisheries of Ceylon Colombo: Cotta, Church Mission Press.

Survey Department, 1936.
Mullaitivu One-Inch Map Colombo: Survey Department

Twynam, W.C. 1902.
Report on the Ceylon Pearl Fisheries Colombo: H.C. Cotte, Government Printers.

United Nations, 1994.
Internally Displaced Persons (E/CN.4/1994/44) Geneva: UN.

——, (No Date Given).
Human Rights and Refugees Fact Sheet-20 Geneva: UN.

US Committee for Refugees, 1991.
Issue Paper: Sri Lanka, Island of Refugees October, Washington, D.C.: American Council for Nationalities Service.

Van, G., 1888.
"The Pearl Fisheries of Ceylon" The Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society, 1887 X(34):14-40.



# பின்னிணைப்பு 1
## முசலிப் பிரதேச முஸ்லிம் கிராமங்கள்

இப்பின்னிணைப்பு 1 இல் முசலிப் பிரதேச முஸ்லிம் கிராமங்கள் பற்றியும் அக்கிராமங்களில் வாழ்ந்த முஸ்லிம் மக்கள் பற்றியும், விளக்கப்படுகின்றது. 1990ஆம் ஆண்டளவில் முசலிப் பிரதேசத்தில் 27 நிரந்தரக் குடியிருப்புக்கள் காணப்பட்டன. அவற்றில், 21 முஸ்லிம் குடியிருப்புக்களாகும். ஏனையவற்றில் 5 தமிழ்க் குடியிருப்புகள். ஒன்று சிங்களக் குடியிருப்பு.

இப்பிரதேசத்திலுள்ள சிங்களக் குடியிருப்பு மரமுந்திரிகைச் செய்கையை அடிப்படையாகக் கொண்ட ஒரு குடியேற்றத் திட்டமாகும். இப்பிரதேச 5 தமிழ்க் குடியிருப்புக்களும் மிகவும் பழைமையானவைகளாகும். அவை அரிப்பு, கொக்குப்படையான், கோவிலடி, முள்ளிக்குளம், மருதமடு என்ற பெயர்களைக் கொண்டு அழைக்கப்பட்டன. இப்பின்னிணைப்பில் முஸ்லிம் கிராமங்கள் பற்றிய விபரங்களே தரப்பட்டுள்ளன. தமிழ், சிங்களக் கிராமங்கள் பற்றி இந்நூலின் வேறு பகுதிகளில் பொருத்தமான இட்ங்களில் விளக்கப்பட்டுள்ளன. இந்நூல் எழுதப்படும் போது (1997 ஆரம்பப் பகுதி) முசலியில் அரிப்பு கிராமத்தில் மாத்திரமே மக்கள் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். ஏனைய எல்லாக் கிராம மக்களும் இனப் பிரச்சினை காரணமாக முசலியை விட்டு வெளியேறி வேறு இடங்களில் அகதிகளாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

முசலிப்பிரதேச முஸ்லிம் கிராமங்கள் பல தனித்துவமான பண்புகளை கொண்டிருந்தன. சிலாவத்துறையைத் தவிர மற்ற எல்லாக் கிராமங்களும் விவசாயத்தை அடிப்படைப் பொருளாதார நடவடிக்கையாக கொண்டிருந்தன. இங்கு நெல் பிரதான விவசாய நடவடிக்கையாகும். கிராமக் குளங்களிலிருந்து நெற்செய்கைக்கு நீர் வழங்கப்பட்டது. குளத்தை அண்டி கிராமம் காணப்பட்டது. கிராமங்கள் கிராமக் குளத்தின் பெயரால் அழைக்கப்படுவது வழமை. முஸ்லிம் குடியிருப்புகள் விவசாயப் பொருளாதார அடிப்படைகளையும் இஸ்லாமிய சமய பின்னணியையும் கொண்டிருந்தன. சமய அடிப்படையான பள்ளிவாயிலும் அதனோடு ஒன்றிய ஏனைய இஸ்லாமியச் சூழலும் முஸ்லிம் கிராமங்களில் ஒருங்கிணைந்து காணப்பட்டன. விவசாய நடவடிக்கை எந்த அளவு இக்கிராம மக்களின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்ததோ அந்த அளவு இஸ்லாமிய சமய, கலாசாரப் பாரம்பரியங்களும் இம்மக்களின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்ததாகக் காணப்பட்டது.

முசலிப் பிரதேச முஸ்லிம் கிராமங்கள் இரண்டு தொகுதிகளாகக் காணப்பட்டன. வடக்கே அகத்திமுறிப்பு நீர்ப்பாசனத் தொகுதியினுள் 18 முஸ்லிம் கிராமங்களும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



படம் 20 : வடமுசலிப் பிரதேசத்தில் முஸ்லிம், தமிழ், சிங்கள குடியிருப்புக்களின் இட அமைவு



தெற்கே வியாயடி நீர்ப்பாசனத் தொகுதியினுள் 3 முஸ்லிம் கிராமங்களும் காணப்பட்டன. கிராம மட்டத்தில் தனித்துவமான சமூக-பொருளாதார அடிப்படைகளை கொண்டவர்களாக இம்மக்கள் காணப்பட்டனர். பிரதேச மட்டத்தில் இப்பிரதேச முஸ்லிம் மக்களிடையில் குடும்ப உறவுகள் காணப்பட்டன. சமய-கலாச்சார அடிப்படையிலும் மிக நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தார்கள்.

முசலி முஸ்லிம் கிராமங்கள் பற்றிய இவ்விளக்கத்திற்கு பல ஆய்வு மூலங்களில் இருந்து விபரங்கள் பெறப்பட்டன. 1989 ஆம் ஆண்டு இந்நூலாசிரியரால் இப்பிரதேசத்தில் செய்யப்பட்ட கிராமமட்டத்திலான வெளிக்கள ஆய்வில் இருந்து விபரங்கள் திரட்டப்பட்டன. ஆசிரியரது, 1991 ஆம் ஆண்டின் முஸ்லிம் அகதிகள் பற்றிய ஆய்வானது இக்கிராம மக்களின் பொருளாதார இழப்புக்கள் பற்றியும் அகதி வாழ்க்கையோடு தொடர்புடைய விபரங்களையும் தந்தது. இதை விட, இப்பிரதேசம் பற்றிய மேலதிக விபரங்கள் வரலாற்று நூல்களிலிருந்தும் ஓரங்குலப் படங்களிலிருந்தும் பெறப்பட்டன. அத்துடன் முசலிக் கிராமங்கள் பற்றிய வாய்மூல விளக்கங்கள் அக்கிராமங்களை முழுமையாக நோக்குவதற்கும், அம்மக்களின் சமூக வாழ்க்கை பற்றி நல்ல தெளிவைப் பெறவும் உதவின.

இப்பகுதியில் கிராமங்கள் ஒவ்வொன்றாக விபரிக்கப்படுகின்றன. அத்தியாயம் 3 இல் முசலிப் பிரதேச ஆய்வில் பின்பற்றப்பட்ட பிரதேச விளக்க வரிசை முறையும், கிராம விளக்க வரிசை முறையும் இங்கும் பின்பற்றப்பட்டிருக்கின்றன. அத்துடன் அத்தியாயம் 3 இல் தரப்பட்டுள்ள கிராம மட்டத்திலான புள்ளிவிபரங்கள் இவ்விளக்கத்தை மேலும் அறிந்து கொள்ள உதவக் கூடியது. படம் 18 இக்கிராமங்களின் அமைவிடங்களைக் காட்டுகின்றது.

## 1. வேப்பங்குளம்

வேப்பங்குளம் கிராமம் முசலிப்பிரதேசத்தின் நுழைவாயிலில் அமைந்துள்ளது. அருவி ஆற்றைக் கடந்து முசலியினுள் நுழையும் போது வருகின்ற முதலாவது முக்கிய கிராமம் இதுவாகும். இது ஒரு பெரிய முஸ்லிம் கிராமமாகும். இக்கிராமத்தை ஊடறுத்துச் செல்லும் முருங்கன்-சிலாவத்துறை பிரதான வீதியிலிருந்து இக்கிராமத்தைப் பார்க்கின்ற போது வேப்பங்குளம் ஒரு விவசாயக் கிராமமாகத் தென்படவில்லை. வர்த்தகக் கடைகளும், பொதுக்கட்டிடங்களும் இக்கிராமத்தின் பிரதான வீதியின் இரு மருங்கிலும் காணப்பட்டன. இக்கிராமத்தின் ஜும்ஆப் பள்ளிவாயிலும், அரசாங்கப் பாடசாலையும் பிரதான வீதியில் காணப்பட்ட உள்ளூர் சார்ந்த நிறுவனக் கட்டிடங்களாகும். இதை விட முசலிப்பிரதேச கூட்டுறவுச் சங்கத் தலைமை அலுவலகம், நீர்ப்பாசன இலாகா தலைமை அலுவலகம், கமநல சேவை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிலையம், நெல் சந்தைப்படுத்தும் சபை, களஞ்சிய சாலைகள் ஆகியன இங்கு அமைவுற்றிருந்த பொதுக்கட்டிடங்களாகும். இவை இக்கிராம மையத்தை ஒரு கலகலப்பான குடியிருப்பாக மாற்றியிருந்தன. வேப்பங்குளம் ஒரு பெரிய கிராமம் மட்டுமல்ல பழைய கிராமமுமாகும். 300 பேர் நின்று தொழக்கூடிய ஜும்ஆப் பள்ளிவாசல் ஒன்று இக்கிராமத்தின் முக்கியத்துவத்தைச் சுட்டிக் காட்டி நிற்கின்றது. இப்பள்ளிவாயில் மொஹிதீன் ஜும்ஆம் பள்ளிவாயில் என்று அழைக்கப்பட்டது. இப்பள்ளிவாயிலில்தான் முதன் முதலாக விடுதலைப் புலிகளால் முசலிப்பிரதேச முஸ்லிம்களுக்கு பலவந்த வெளியேற்றம் பற்றிய செய்தியை அறிவிக்கும்படி வற்புறுத்தப்பட்டது.

பலவந்த வெளியேற்றத்தின் போது இக்கிராமத்தில் ஏறக்குறைய 300 குடும்பங்கள் வாழ்ந்தன. இந்நூற்றாண்டின் ஆரம்ப காலங்களில் இக்கிராமம் வண்ணாகுளம், வேப்பங்குளம் என குள அடிப்படையில் இரண்டாகப் பிரிக்கப்பட்டு அரசாங்கப் பதிவேடுகளில் காட்டப்பட்டிருந்தது (அட்டவணை 2 ஐப்பார்க்க).

கிராமத்தின் உட் பகுதியில் நீர்ப்பாசனக் குளங்களும், பரந்த வயல் நிலங்களும், அதனிடையே விவசாயிகளின் குடியிருப்புக்களும் காணப்பட்டன. கிராமத்தின் இப்பகுதியானது வேப்பங்குளத்தை ஒரு விவசாயக் கிராமம் என உறுதிப்படுத்தி நிற்கின்றது.

இக்கிராமத்தின் மொத்தத் தொழிலாளர்களில் 75 வீதமானவர்கள் விவசாயிகளாவர். நெல் விவசாயிகளே அதில் முக்கியமானவர்கள். பிரதான பாதையின் இரு மருங்கிலும் கண்ணுக்கெட்டிய தூரம் வரை பசுமையான நெல்வயல்கள் காணப்பட்டன. அதற்கப்பால் இடைவிட்ட காடுகளைக் கொண்ட சேனை நிலங்களும், மேட்டுநிலப் பயிர் நிலங்களும் காணப்பட்டன.

வேப்பங்குள மக்கள் ஆரம்ப காலம் தொட்டு கல்வி கேள்விகளில் சிறப்பாகக் காணப்பட்டனர். இதற்கு ஆதாரமாக புலமையில் சிறப்புப் பெற்ற காதர் உசன் புலவர், அவரது மகன் கச்சுமுகம்மது புலவர், அவரது மகன் அப்துல் அசீஸ் புலவர் ஆகியோருடன் இதே குடும்பத்தைச் சேர்ந்த மா.மு.நெய்னா புலவர், அவரது மகன் சுலைமான் புலவர் ஆகியோரும் இங்குதான் பிறந்து வாழ்ந்திருக்கின்றனர். சுலைமான் புலவர் என்பவர் அவர் இறக்கும் வரை வேப்பங்குள மக்களால் பெரிதும் மதிக்கப்பட்ட பெரியாராவார். இப்பகுதி மக்களின் களிகம்பு, கோலாட்டங்களில் சுலைமான் புலவரால் இயற்றிப் பாடப்பட்ட பாட்டுக்கள் இன்றும் பாடப்படுகின்றன. இக்கிராம மக்களின் மார்க்க சடங்கு வைபவங்களில் களிகம்பு கோலாட்டம் 1990 ஆம் ஆண்டு இவர்கள் வெளியேறும் வரை ஒரு மரபு வழி விளையாட்டாக இருந்திருக்கின்றது. அதே போன்று இக்கிராம மக்கள் யானை பிடித்தலிலும் பிரபல்யம் பெற்றிருந்திருக்கின்றனர். யானை பிடித்தலில் முசலிப்பகுதியில் அக்காலத்தில் பிரபல்யம்



பெற்றிருந்தவர்களில் லெப்பைத்தம்பி பணிக்கர் என்பவரும் ஒருவர். இவரது மகன்தான் அலி முகம்மது மரைக்காயர் என்பவர். இவர் வேப்பங்குளத்தின் மூத்த தலைவர்களில் முதன்மையான ஊர்த்தலைவராக இருந்திருக்கின்றார். இவரும் அக்காலத்தில் கல்விகேள்விகளில் சிறந்தவராகக் காணப்பட்டார்.

பலவந்த வெளியேற்றம் இம்மக்களை பல திக்குகளில் அகதிகளாக வாழ வேண்டிய சூழ்நிலைக்கு உள்ளாக்கியது. 1990ஆம் ஆண்டு வெளியேற்றத்தின் பின்பு வேப்பங்குள மக்களில் 50% மான மக்கள் ஆலங்குடா 'சி' அகதி முகாமில் வாழ்ந்தார்கள். எஞ்சியவர்கள் குருநாகல் மாவட்ட வெல்பத்துவெவ, இகல கினியெம, எலபடகம ஆகிய முஸ்லிம் கிராமங்களிலும் அகதிகளாக வாழ்ந்து வந்தனர். இவர்களில் அநேகர் 1995ஆம் ஆண்டு கடைசிப்பகுதியில் புத்தளம் தம்பபண்ணி என்னும் மீள இட அமர்வு முகாமில் குடியேறினர். வேப்பங்குள முஸ்லிம்கள் வாழ்ந்த முகாம்கள் அரச காணியாகவும், அடிப்படை வசதிகள் இன்றியும் காணப்படுகின்றன. இன்று வேப்பங்குளம் மக்களிடையே சொந்த மண்ணில் மீளக் குடியேற வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கிக் காணப்படுகின்றது. இதன் காரணமாகவே இவர்கள் சொந்தமாகக் காணி வாங்கி மீண்டும் குடியேறாமல் இருப்பதாகக் கூறுகின்றனர்.

## 2. பிச்சைவாணிப நெடுங்குளம்

கிராமக்குளத்தால் பெயர் வழங்கப்பட்ட மற்றுமொரு கிராமம் இதுவாகும். இக்குடியிருப்பு பிரதான வீதியிலிருந்து (சிலாவத்துறை-முருங்கன்) விலகி வேப்பங்குளக் கிராமத்திற்கு தென்கிழக்காக ஒரு மைல் தொலைவில் அமைந்துள்ளது. இது இயற்கைச் சூழலில் அமைந்த மிக அழகான ஊராகும். வேப்பங்குளத்தோடு மிக நெருங்கிய தொடர்புகளை இக்கிராமம் கொண்டுள்ளது. வேப்பங்குளத்திற்குச் சமமான பழமையான வரலாற்றையும் இக்கிராமம் கொண்டுள்ளது.

இக்கிராம மக்களில் ஏறக்குறைய 90 சதவீதமான மக்கள் விவசாயத்துடன் தொடர்புடைய தொழில்களில் ஈடுபட்டு வந்தனர். இக்கிராம நீர்ப்பாசனத்திற்குட்பட்ட 130 ஏக்கர் நெல் வயல் நிலம் வருடாவருடம் செய்கை பண்ணப்பட்டது. நெல் விவசாயத்திற்கு ஈடாக மிருக வளர்ப்பும், குறிப்பாக எருமை வளர்ப்பு முக்கியமான பொருளாதார நடவடிக்கையாகக் காணப்பட்டது. இக்கிராமத்தில் 55 முஸ்லிம் குடும்பங்கள் வாழ்ந்தன. இக்கிராமத்தவர்களின் வீடுகளில் 50 சதவீதமானவை கல் வீடுகளாகும். இக்கிராமத்தைச் சேர்ந்த மக்கள் தற்போது புத்தளம் முசல்பிட்டியில் அகதிகளாக வாழ்கின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## 3. நாலாங்கட்டை

நாலாங்கட்டைக் கிராமம் முருங்கன் நகரிலிருந்து தெற்காக சிலாவத்துறை நகரை நோக்கிய பிரதான பாதையில் நான்காம் மைலில் அமைந்துள்ளது. முசலியின் ஏனைய கிராமங்களைப் போல இது குள நீர்ப்பாசனத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல.

நாலாங்கட்டை முசலியின் வடக்கொல்லையில் அமைந்துள்ள கொடியிறகு என்று அழைக்கப்படும் அருவியாற்று பாலவோரமாக அமைந்துள்ளது. இப்பிரதேசம் மேட்டு நிலப் பயிர்ச்செய்கைக்குப் பிரபல்யமானதாகும். இக் கிராமத்தில் ஏறக்குறைய 60 குடும்பங்கள் வாழ்ந்தன. இக் கிராமச் சூழலில் செங்கல் உற்பத்தி, பாயிழைத்தல் போன்ற சிறு கைத்தொழில் நடவடிக்கைகளும் காணப்பட்டன. சமய, கல்வி, சந்தை ஆகிய தேவைகளுக்கு இக்கிராமம் ஒரு மைல் தெற்கேயுள்ள வேப்பங்குளக் கிராமத்தில் தங்கியிருந்தது. இக் கிராமம் வேப்பங்குளத்தின் ஒரு துணைக்கிராமம் என்று கருதப்படுகின்றது. இங்கு குடியிருந்த மக்களில் பெரும்பாலானவர்கள் அம்பாறை மாவட்டத்தில் இருந்து 1960 ஆம் ஆண்டு காலத்தில் வந்து குடியேறியவர்களின் சந்ததிகளாவர்.

## 4. பொற்கேணி

பொற்கேணி என்பது பொன்தரும் குளம் எனப் பொருள்படும். இது பெரிய புள்ளச்சி பொற்கேணி என்று முன்னர் அழைக்கப்பட்டது. இக்காரணப் பெயருக்கான பொருள் அறிய முடியவில்லை. முசலிப் பிரதேசத்திலேயே மிகப் பெரிய கிராமங்களில் பொற்கேணியுமொன்று. 1921 ஆம் ஆண்டில் ஏறக்குறைய 220 பேர் இக்கிராமத்தில் வாழ்ந்தார்கள். 1990ஆம் ஆண்டு ஏறக்குறைய 300 குடும்பங்கள் இக்கிராமத்தில் வாழ்ந்தன.

இக் கிராமம் சிலாவத்துறை–வேப்பங்குள பிரதான வீதியில் வேப்பங்குளத்திற்கு தெற்காக ஒன்றரை மைல் தூரத்தில் அமைந்துள்ளது. பொற்கேணி என்ற கிராமக் குளத்தின் மேற்காக இக்குடியிருப்புப் பரந்து காணப்படுகின்றது. வேப்பங் குளத்தைப் போல், வீதியின் இரு மருங்கிலும் குடியிருப்புக்கள், பொதுக்கட்டிடங்கள், வர்த்தக நிலையங்கள் செறிவாகக் காணப்பட்டன.

ஆரம்பகாலப்பகுதியில் பொற்கேணிக் கிராமமே முசலி வடக்கு மக்களின் முக்கிய வியாபாரத் தளமாகக் காணப்பட்டது. இங்குதான் ஆங்கிலேயர் காலத்து அதிகாரமுடைய அரச நிருவாகியாகிய முகம்மது காசிம் உடையார் என்பவர் வாழ்ந்து வந்திருக்கின்றார். முகம்மது காசிம் உடையாரே முசலிப் பகுதியில் பல



பள்ளிவாயில்களை நிருமானித்தவராவார். இவரது கடைசி மகனான மீராசாகிபு (சமாதான நீதவான்) என்பவர் 15 வருட காலமாக முசலி வடக்கு கிராமசபைத் தலைவராக இருந்து வந்திருக்கின்றார். இவர் தற்போது புளிச்சாக் குளத்தில் அகதி முகாமில் வாழ்ந்து வருகின்றார்.

இக் கிராமம் மூன்று தனியாக்கப்பட்ட செறிவுகளாகக் காணப்பட்டது. பிரதான வீதியின் இரு மருங்கிலுமான பகுதி பெரிய புள்ளச்சி பொற்கேணி என்றழைக்கப்பட்டது. பெரிய புள்ளச்சி பொற்கேணியில் காணப்பட்ட மிக அதிகமான வீடுகள் கல் வீடுகளாகும். விவசாயமும், வாணிபமும் இப்பகுதி மக்களின் பிரதான தொழிலாகக் காணப்பட்டன. இக்கிராமத்தில் இம்மக்களின் சமயக் கடமைகளுக்காக இரண்டு பள்ளிவாயில்கள் இருந்தன. அத்துடன் இக்கிராமத்தின் வரலாற்றுச் சிறப்பைக் காட்டும் இஸ்லாமியப் பெரியார் ஒருவரின் அடக்கஸ்தலம் ஒன்றும் இக்கிராமத்தில் காணப்பட்டது.

இரண்டாவது செறிவு சின்னப் புள்ளச்சி பொற்கேணி என்று அரசாங்க ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் உள்ளூரில் இதனை கடைசிகுடா என்று அழைத்தார்கள். இது முதலாவது சந்திக் குடியிருப்புக்குக் கிழக்காக அமைந்துள்ளது. இது சனச்செறிவு மிக்க குடியிருப்புப் பகுதியாகும். பொற்கேணியின் ஜும்ஆப் பள்ளிவாசல் இங்குதான் காணப்பட்டது. இங்கு வாழ்ந்த மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டார்கள்.

கடைசிகுடாவிற்குச் சற்று தெற்காக தமிழ் மக்கள் வாழ்ந்த பகுதியொன்று காணப்பட்டது. முன்னர் இங்கு தமிழ் மக்கள் செறிவாக வாழ்ந்தனர். இக்குடியிருப்பு நாசுவக் குடியிருப்பு என்று உள்ளூரில் அழைக்கப்பட்டது. இக்குடியிருப்பில் வாழ்ந்த தமிழ் மக்களும் சூழலில் வாழ்ந்த முஸ்லிம் மக்களும் அந்நியோன்னியமாக வாழ்ந்தனர். முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றத்திற்கு முன்னரே தமிழ் மக்கள் இக்கிராமத்தை விட்டு வெளியேறி வடக்காக நானாட்டான் பகுதிக்குச் சென்றார்கள்.

முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றத்தோடு பொற்கேணி மக்கள் இலங்கையின் தென் பகுதியில் பல பிரதேசங்களில் அகதிகளாக வாழ்ந்து வந்தார்கள். இம்மக்களின் செறிவு ஒன்று புளிச்சாக்குள அகதி முகாமில் காணப்பட்டது. பொற்கேணி மக்களில் பலர் புத்தளம்–சிலாபம் வீதியில் கீரியங்கள்ளி சந்தி என்ற இடத்தில் சொந்தக் குடியேற்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். என்றாலும் சொந்த மண்ணில் மீளக் குடியேறுவதை இவர்கள் மிகவும் விரும்புகின்றனர். வேப்பங்குளம் மக்களைப் போன்றே இவர்களும் காணி வாங்கிக் குடியேறாது அகதி முகாம்களில் கூடுதலாக வாழ்கின்றனர். தாயகக் கோட்பாடு இவர்களிடையே மிகவும் மேலோங்கிக் காணப்படுகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## 5. அகத்தி முறிப்பு:

அகத்திமுறிப்பு முசலிப் பிரதேசத்தின் பழைய கிராமங்களில் ஒன்றாகும். இக்கிராமம் முசலிப் பிரதேசத்தின் பிரதான நீர்ப்பாசன தேக்கமான அகத்திமுறிப்பு குளத்தின் தென்மேற்கே கட்டு ஓரமாக அமைந்துள்ளது. இங்கு 230 குடும்பங்கள் வாழ்ந்தன. பிரதான நீர்ப்பாசனக் குளத்திற்கு அருகாமையில் காணப்பட்டமையால் நீர்ப்பாசன அடிப்படையிலான விவசாயச் செல்வாக்கு இக்கிராமம் பிரபல்யமாகக் காரணமாக அமைந்தது. ஏறக்குறைய 360 ஏக்கர் நிலம் அகத்திமுறிப்புக்குள நீர்ப்பாசனத்தால் செய்கை பண்ணப்பட்டது. அத்தோடு கூளான்குளம், பண்டாரவெளி, தம்பட்டமுதலிகட்டு, புதுவெளி, இலந்தைக்குளம், மணற்குளம், முசலி, வாரிவெளி, சிறுக்குளம், தாண்டிக்குளம், கொண்டச்சி, கொக்குப்படையான், இலக்கரிக்குளம், பாசித்தெண்டல் போன்ற இன்னும் பல குளங்களுக்கும் இக்குளத்தின் மூலமே நீர் பெறப்பட்டது. இதைவிட வேறு இடங்களில் இம்மக்களுக்கு உடமையாக இருந்த நூற்றுக்கணக்கான ஏக்கர் நெல் நிலம் இக்கிராம மக்களால் பயிர் செய்யப்பட்டு வந்தது. விவசாயத்தைத் தவிர காடு சார்ந்த தொழிலும், கால்நடை வளர்ப்பும், மீன்பிடியும் இங்கு காணப்பட்டன. இத்தோடு பெரிய பள்ளிவாயிலின் மேற்குப் புறமாக ஒரு வாசிகசாலையும் கிராம முன்னேற்றச் சங்கத்திற்குச் சொந்தமான ஒரு கட்டிடமும் உரக்களஞ்சியசாலை ஒன்றும் கூட்டுறவு விற்பனை நிலையமொன்றும் குர்ஆன் மத்ரசா ஒன்றும் காணப்பட்டன. கனிஷ்ட பாடசாலை (4 கட்டிடங்கள்) காணப்பட்டது.

இக்கிராமத்திற்கு தென்கிழக்கு மூலையில் தொட்டம் என்ற சிற்றூரும் உண்டு. ஆதி காலம் தொடுத்தே இங்கும் பத்துக் குடும்பத்திற்கு மேற்படாத மக்கள் வாழ்ந்து வந்தனர். இச்சிற்றூரிலிருந்தே அகத்திமுறிப்பில் மக்கள் குடியேறியதாகவும் கூறப்படுகின்றது. இங்கு தற்போது எவரும் குடியிருக்கவில்லையாயினும் அதற்கான அடையாளங்கள் (கிணறு, முருங்கை மரம் தென்னைமரம் போன்றவை) தற்போதும் காணப்படுகின்றன. இக்கிராமத்தின் ஒரு பகுதியில் முசலிப் பகுதி மக்களின் கத்னா (சுன்னத்து) நடத்தும் வைத்தியர்களின் பூர்வீகக் குடியிருப்பும் உண்டு. இவ்வைத்தியர்கள் வாழும் இப்பகுதியை இன்றும் முசலிப் பகுதி மக்கள் நாசுவவளவு (நாவிதன் வளவு) என்று அழைப்பதைப் பார்க்கலாம். இவ்வைத்தியர்கள்தான் அநுராதபுரம் வவுனியா மாவட்டங்களில் கத்னா நடத்தும் வைத்தியத் தொழிலில் பிரபல்யம் பெற்று விளங்குகின்றனர். அத்தோடு இக்கிராம மக்களின் ஒரு பகுதியினர் இக்கிராமத்தின் தெற்குப் புறமாகக் குடியேறி அதற்கு ஜின்னா நகர் எனப்



பெயரிட்டிருந்தனர். மேலே கூறப்பட்ட பள்ளிவாயில்களில் சிறியது இங்குதான் அமைந்திருந்தது.

இவ்வூர் கரப்பந்தாட்டத்தில் பிரபல்யம் பெற்று விளங்கியது. அக்கரப்பந்தாட்டக் குழுவுக்கும் ஜின்னா கரப்பந்தாட்டக்குழு என்றே பெயரிடப்பட்டிருந்தது. இத்தோடு இவ்வூர் மக்கள் கோலாட்டக் (களிகம்பு) கலையிலும் பிரபல்யம் பெற்று விளங்கினர். இதற்குச் சான்றாக இவர்கள் இலங்கையின் தேசிய விழாக்களிலும் பங்குபற்றித் தங்கள் திறமையைக் காட்டியுள்ளனர்.

அகத்திமுறிப்பு மக்களில் அநேகர், தற்போது 90 ஏக்கர், ஆலங்குடா, பள்ளிவாசல்துறை, மதவாக்குளம் போன்ற பல அகதி முகாம்களில்வாழ்கின்றனர்.

## 6. பூநொச்சிக்குளம்

இக்கிராமம் பொற்கேணிக்கு வட மேற்கே ஒரு மைல் தொலைவில் பொற்கேணி- நானாட்டான் வண்டிப்பாதை ஓரமாக அமைந்துள்ளது. 1964 ஆம் ஆண்டு முசலிப் பிரதேசத்தில் ஏற்பட்ட பெரும் வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்ட புதுவெளி, சிறுக்குளம் கிராமங்களைச் சேர்ந்த முஸ்லிம்கள் பலர் பாதுகாப்பிற்காக பூநொச்சிகுளச் சூழலில் தற்காலிகமாகக் குடியேறினர். இவர்களோடு அண்மைக் காலத்தில் கிழக்கு மாகாணத்தில் இருந்து முசலிப்பகுதிக்கு விவசாயத் தொழிலுக்காக வந்த பலரும் சேர்ந்து கொண்டனர்.

இவ்விரு மக்கள் குழுக்களாலும் உருவான புதுக் கிராமமே பூநொச்சிகுளமாகும். முசலிப் பிரதேசத்திலிருந்து வந்து குடியேறிய மக்கள் இக்கிராமத்தின் வடகிழக்குப் பகுதியில் செறிவாகவும், கிழக்கு மாகாணத்திலிருந்து வந்து குடியேறிய மக்கள் தெற்காகக் கிழக்குப் பகுதியில் செறிவாகவும் காணப்பட்டனர். பலவந்த வெளியேற்றத்தின் போது இக்கிராமத்தில் ஏறக்குறைய 230 குடும்பங்கள் வாழ்ந்தன.

இக்கிராமச் சூழல் பலவகையான பொருளாதார நடவடிக்கைகளுக்கு வாய்ப்பாகக் காணப்பட்டது. கிராமக் குள நீர்ப்பாசனத்தைக் கொண்டு ஏறக்குறைய 60 ஏக்கர் நிலத்தில் நெல் விவசாயம் செய்கை பண்ணப்பட்டது. அத்துடன் மரைக்காயரூர், இலந்தைமோட்டை, சடயப்பன் குளம் போன்ற இடங்களிலும் இவர்களுக்குச் சொந்தமான நெல்நிலங்கள் காணப்பட்டன. இக்கிராமத்திற்கு வடக்கில் உள்ள நிலப்பகுதி பரந்த அருவி ஆற்றுக் கரையோரப் பகுதியாகும். இங்கு மேட்டுநில, சேனைப் பயிர்ச்செய்கைகள் செய்யக் கூடியதாக இருந்தன. அத்துடன் ஆற்றோரம் மந்தை மேய்த்தலுக்கு வாய்ப்பாக இருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இப்பிரதேசத்தின் மற்றுமொரு முக்கிய பொருளாதார நடவடிக்கை சிறு அளவிலான செங்கல் உற்பத்தியாகும். ஆற்றோரக் களிமண் இக்கைத்தொழிலுக்கு வாய்ப்பாகக் காணப்பட்டது. புதிய கிராமமன பூநொச்சிகுளத்தில் 1978 ஆம் ஆண்டிலிருந்து ஜூம்ஆ தொழுகை நடைபெற்று வந்தது. இக்கிராம மக்கள் இன்று கற்பிட்டிக் குடாநாட்டுப் பிரதேச அகதி முகாம்களில் சிதறி வாழ்கின்றார்கள். இம்மக்களின் குறிப்பான செறிவு நுரைச்சோலையில் காணப்படுகின்றது.

## 7. புதுவெளி:

இக்கிராம நீர்ப்பாசனக் குளமும் புதுவெளிக் குளம் என்று அழைக்கப்படுகின்றது. முசலியின் முக்கியமான முஸ்லிம் கிராமங்களில் இதுவும் ஒன்று. புதுவெளிக்குள நீர்ப்பாசனத்திற்குட்பட்ட கிராமமாக இது காணப்படுகின்றது. இங்கு ஏறக்குறைய 200 குடும்பங்கள் வாழ்ந்தன. மொத்தமாக 100 ஏக்கர் நிலம் இக்கிராமக் குளத்திலிருந்து நீர்ப்பாசனத்தைப் பெற்றது. நெல் விவசாயம் முக்கியமாகக் காணப்பட்டது. அத்துடன் கால்நடை வளர்ப்பும் இங்கு காணப்பட்டது. இதைவிட இக்கிராமச் சூழலில் காணப்பட்ட ஏனைய நிலங்கள் மேட்டுநில விவசாயத்திற்கு உட்பட்டிருந்தது. வெளியேற்றத்திற்கு முன்பு ஏறக்குறைய 1500 மாடுகள், 500 ஆடுகள் இக்கிராம மக்களின் பராமரிப்பின் கீழ் இருந்தன. இக்கால்நடைகள் கோடையில் குளத்திற்குள்ளும், மாரியில் சிலாவத்துறை–அரிப்பு வீதியோரப் பிரதேசங்களிலும் மேயவிடப்படும். இக்கிராம மக்கள் சிலாவத்துறை கடலின் மீன் பிடியிலும் ஈடுபட்டனர். சிலாவத்துறையில் அமைந்துள்ள வியாபார நிலையங்களின் உரிமையாளர்களாகவும், வியாபாரிகளாகவும் புதுவெளி மக்களே கூடுதலாக இருந்திருக்கின்றார்கள்.

புதுவெளிக் கிராமத்திற்குத் தெற்காக ஒரு சிறு பழைய முஸ்லிம் குடியிருப்பும் காணப்பட்டது. இப்பழைய குடியிருப்பில் ஒரு சியாரம் நீண்ட காலமாக முஸ்லிம்களின் சமயக் கிரியைகளுக்கு பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இக்கிராம மக்கள் தற்போது குறிஞ்சிப்பிட்டிப் பகுதியில் காணப்படும் அகதி முகாம்களில் வாழ்கின்றனர்.

## 8. கூளாங்குளம்:

புதுவெளிக்கு தெற்காக இக்கிராமம் காணப்படுகிறது. இங்கு 225 குடும்பங்கள் வாழ்ந்தன. அகத்திமுறிப்பில் இருந்து பிரதான கால்வாய் மூலமாக இக்கிராமக்குளம் இணைக்கப்பட்டிருந்தமை. இப்பிரதேச நெல் விவசாயத்துக்கு நீர் கிடைக்கக் கூடியதாக இருந்தது. அதனால் நெற்செய்கையும் வெற்றிகரமாக நடைபெற்றது. ஏறக்குறைய 225 ஏக்கரில் இக்கிராம மக்கள் நெற்செய்கை செய்தார்கள். பல சந்தர்ப்பங்களில் இரு போக நெற்செய்கையும் இங்கு சாத்தியமாக இருந்தது. அது மட்டுமன்றி இப்பிரதேசத்தில் கிடைக்கக் கூடியதாக இருந்த தரை நீரைப்பயன்படுத்தி மிளகாய், வெண்டி, கத்தரி போன்ற மேட்டு நிலப் பயிர்களும் இங்கு செய்கை பண்ணப்பட்டன மிருக வளர்ப்பும் இங்கு நடைபெற்று வந்தது. ஏறக்குறைய 1000 மாடுகள் இக் கிராம மக்களுக்கு உரிமையாக இருந்தன. இதுபோக கரையோர மீன்பிடித்தொழிலிலும் இக்கிராமத்தவர்கள் ஈடுபட்டிருந்தார்கள். படகுகளும், மீன்பிடி உபகரணங்களும் இக்கிராமத்தவர்களுக்கு உரிமையாகவும் இருந்தன. சங்கு குளிப்பதிலும் இக்கிராம மக்கள் ஈடுபட்டார்கள்.

செல்வம் கொழித்த கூழாங்குளம் வரலாற்றுப் புகழ் மிக்கதொன்றாகவும் காணப்பட்டது. இக்கிராமம் பற்றிய வரலாற்று சான்றுகளில் எமக்கு கிடைக்கக் கூடியதாகவுள்ள ஒரு அம்சம் முன்னொரு காலத்தில் இக்கிராமத்தில் வந்த வளவு (குடும்ப) முறை பாரம்பரியம் வழமையிலிருந்து வந்தது என்பதாகும். இங்கு ஒன்பது குடும்பப் பாரம்பரியங்கள் காணப்பட்டன என்று கூறப்படுகின்றது. அவை பெரியவளவு, நெய்னாமரைக்கார் வளவு, காடியார் வளவு, உடையார் வளவு, கடத்தி மரைக்கார் வளவு, இஸ்மி மனுசி வளவு முதலியனவாகும். இவ்வகையான வளவு முறை முசலியின் ஏனைய கிராமங்களிலும் அவதானிக்கப்பட்டுள்ளது.

கூளாங்குளத்தில் பிரபல்யம் வாய்ந்த புலவர்களும், ஆயுள்வேத வைத்தியர்களும் வாழ்ந்திருக்கின்றார்கள். இந்தப் புலவர்களையும், வைத்தியர்களையும் தேடிப் பல பாகங்களிலிருந்தும் பலர் வந்து தமது தேவைகளை நிறைவேற்றிச் செல்வர். இந்த வகையில் ஜமால்தீன் புலவர் மிகக் குறிப்பிடத்தக்கவர். இவர் முசலிப் பகுதியை உள்ளடக்கிய ஊர்களை வைத்துப் பாடல்களை இயற்றியுள்ளார். கிராமியப்பாடல், கும்மிப் பாடல் என்ற தலைப்புக்களில் இரு நூல்களை வெளியிட்டும் இருக்கின்றார். தற்போது இவ்விரு நூல்களும் எம் கைவசமுள்ளன (பதிப்பு 1938) என்பது குறிப்பிடத்தக்கது.

முசலிப் பகுதி மக்களாலும் ஏனையவர்களாலும் மௌலானா என அழைக்கப்பட்ட முகம்மது சுல்தான் என்பவர் மார்க்க அறிவைப் புகட்டுவதிலும், மக்களிடையே ஏற்படும் பிரச்சினைகளை சமாதானப் படுத்துவதிலும் முழுமூச்சாக ஈடுபட்டவராவார். இதனால் முசலிப்பகுதி மக்கள் இவர் மேல் உயர்ந்த மரியாதை வைத்திருந்தனர். தற்போது இவரின் மகன் அப்துல் கபூர் என்பவர் குறிஞ்சிப்பிட்டி அகதி முகாமில் வாழ்ந்து வருகின்றார்.

## 9. தம்பட்ட முதலிகட்டு

சிலாவத்துறை–மறிச்சுக்கட்டி பிரதான வீதியில் சிலாவத்துறையில் இருந்து அரை மைல் தூரத்தில் கிழக்காக இக்கிராமம் அமைந்திருந்தது. இதன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நுழைவாயிலில் சிலாவத்துறை கமநல சேவை நிலையமும், மீன்பிடி இலாகா காரியாலயமும் அமைந்திருந்தன. இங்கு 150 குடும்பத்தினர் வாழ்ந்து வந்தனர். இக்கிராம மக்களுக்கு சொந்தமான சுமார் 260 ஏக்கர் நெற்காணியும் இதற்கான நீர்ப்பாசனக் குளமும் இங்கு காணப்பட்டன. இக்குளத்திற்கு அகத்தி முறிப்புத் தேக்கத்திலிருந்தும் நீர் கிடைத்தது. இம்மக்கள் விவசாயத்துடன் மீன்பிடி, கால்நடைவளர்ப்பு, காடு சார்ந்த தொழில்கள் ஆகியவற்றிலும் ஈடுபட்டு வந்தனர். இடம்பெயரும்போது இவர்கள் சுமார் 2000 ஆடு மாடுகளை இழந்தனர்.

இக்கிராமத்திற்கு மிக அண்மையில் அமைந்துள்ள கிராமம் கூழாங்குளமாகும். இக்கிராம மக்களுக்கும் சிலாவத்துறை, கூளாங்குள கிராம மக்களுக்குமிடையில் குடும்ப ரீதியிலான மிக அந்நியோன்னியமான உறவு காணப்பட்டது. அதுமட்டுமன்றி கூழாங்குளத்தைப் போல் தம்பட்டமுதலிகட்டிலும் வளவுப் பாரம்பரியம் காணப்பட்டது. இக்கிராமத்தில் அடையாளம் காணப்பட்ட வளவுகளாக மானாத்தம்பியார்வளவு, குளத்தார் வளவு, காதர்பிச்சை வளவு, லெப்பைத்தம்பி மரைக்கார் வளவு, உமர் லெப்பை வளவு, மொஹிதீன் பிச்சை வளவு, ஆகியவை காணப்பட்டன. இக்குடும்பப் பாரம்பரியம் பற்றிய விபரங்கள் 84 வயதையுடைய மொஹிதீன்கனி என்ற இக்கிராமப் பெரியார் மூலமாக பெறப்பட்டன. இப்பெரியாரின் கருத்துப்படி சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் இக்கிராம மக்களும் சூழலில் காணப்பட்ட முசலிப் பிரதேசக் கிராமத்தவர்களும் மிகவும் சிறப்பான வாழ்க்கை வாழ்ந்தார்கள்.

இக்கிராமத்தின் ஒரு பகுதியாக விளங்கிய இலக்கரிகுளம் என்னும் குடியிருப்புத்தான் முசலிப் பகுதி முஸ்லிம்களின் ஆரம்ப காலக் குடியிருப்பாக இருந்ததுடன் சில குடியிருப்புக்களும் தைக்காப்பள்ளிவாசலும் காணப்பட்டன. இப்பகுதி தீவுப்பிட்டி என அழைக்கப்பட்டது. இக்கிராமத்தின் மற்றுமொரு சிறப்பு "கப்புடையாரப்பா" என்ற இஸ்லாமிய ஆத்மஞானியின் அடக்கஸ்தலம் காணப்படுவதாகும். இது சிலாவத்துறை-மறிச்சிக்கட்டி பிரதான பாதையருகில் உள்ளது. அத்துடன் இக்கிராமத்தைச் சேர்ந்த அசீஸ் அண்ணாவி என்பவரிடம் பல மருத்துவ நூல்களும் இருந்தன. இவர் தற்போது பள்ளிவாசல்துறை முகாமில் வாழ்கின்றார். அத்துடன் இக்கிராமத்தில் முகம்மது காசிம் என்னும் புலவரும், முகம்மது அலி சாஹிபு என்னும் பிரபல பிறப்பு, இறப்பு, திருமண பதிவுகாரரும் பல தசாப்தங்களுக்கு முன்னர் வாழ்ந்து இக்கிராமத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர்,

தம்பட்டமுதலிகட்டில் ஏறக்குறைய 150 பேர் தொழக்கூடிய ஜும்ஆப் பள்ளிவாயிலும் குர்ஆன் மத்ரசாக் கட்டிடமும் காணப்பட்டன. இக்கிராம மக்கள் இன்று ஆலங்குடா, பள்ளிவாசல்துறை, நுரைச்சோலை ஆகிய இடங்களில் அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர்.



## 10. கொண்டச்சி:

முசலி வடக்கு குடிச்செறிவின் தெற்கு எல்லைக் கிராமம் கொண்டச்சியாகும். இங்கு ஏறக்குறைய 250 குடும்பத்தவர்கள் வாழ்ந்தார்கள். இங்கு பள்ளிவாயில் ஒன்று காணப்பட்டது. இக்கிராமம் மிக நீண்ட வரலாற்றுப் பெருமையினைக் கொண்டதாக இருந்தது. நெயினாமுகம்மது, அசனா லெப்பை மரைக்கார், நெடுங்குளத்தார், சேலாத்தம்பி ஆகிய குடும்பவழிப் பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்கள் இங்கு வாழ்ந்தார்கள்.

அகத்தி முறிப்பு நீர்ப்பாசனத் தொகுதியின் தென் அந்தத்தில் இக்கிராமக்குளம் காணப்பட்டது. அதனால், கால்வாய் மூலமான நீர்ப்பாசனம் பற்றாக்குறையாக இருந்தது. இதனால், இக்கிராமத்தில் நூற்றுக்கணக்கான எக்கர் நிலம் விவசாயத்தின் கீழ் கொண்டுவரமுடியாத தன்மை காணப்பட்டது. அதனால், இக்கிராம மக்கள் ஏனைய தொழில்களில் நாட்டம் கொள்ளத் தூண்டப்பட்டனர். காட்டுவளம் தேடல், சேனைப் பயிர்ச்செய்கை, மேட்டுநிலப் பயிர்ச்செய்கை என்பன இங்கு வழமையில் இருந்தன.

காட்டு வளத் தொழிலில் மிருக வேட்டைக்குச் செல்லல், இக்கிராமத்தில் ஒரு தொழிலாகவும் அத்துடன் பொழுதுபோக்காகவும் காணப்பட்டது. ஆனால் சென்ற நூற்றாண்டுகளில் காட்டு வளத்துடன் தொடர்புடைய பிரபல்யமான தொழில் யானை பிடித்தலாகும். கொண்டச்சி பணிக்கர் வழி வந்த குடும்பத்தினர் இதில் ஈடுபட்டனர்.

இதைவிட மீன்பிடியும் இக்கிராம மக்களின் பிரதான தொழில்களில் ஒன்றாகக் காணப்பட்டது. கொண்டச்சி மக்கள் அயல் கிராமத்தவர்களிடம் மிக அந்நியோன்யமாக வாழ்ந்தார்கள். இக்கிராமத்திற்கு வடக்கே கொக்குப்படையான் என்ற சிறிய தமிழ்க் கிராமம் காணப்பட்டது. கிழக்காக மரமுந்திரிகைக் குடியேற்றத் திட்டத்தில் சிங்கள மக்கள் வாழ்ந்தார்கள். இனப் பிணக்கு இப்பிரதேச சூழலில் காணப்படவில்லை. குறிப்பாக கொக்குப்படையான் தமிழ் மக்களோடு மிக நெருங்கிய இன உறவுடன் கொண்டச்சி மக்கள் வாழ்ந்தார்கள்.

கொண்டச்சியில் மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் அமைக்கப்பட்டு பெருமளவிலான சிங்கள மக்கள் இங்கு குடியமர்த்தப்பட்டார்கள். இவ்வாறு இங்கு குடியேறிய சிங்கள மக்கள் கொண்டச்சிக் கிராமத்து முஸ்லிம் மக்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருந்திருக்கின்றனர். இதற்குக் காரணம் சிங்கள இராணுவம் இங்கு முகாமிட்டிருந்தமையேயாகும். கொண்டச்சிக் கிராமத்தில்தான் வட மாகாணத்தில் பெரும் புகழ் பெற்று விளங்கிய நொண்டிப் புலவர் என்னும் முகம்மது சரீபுப் புலவர் வாழ்ந்திருக்கின்றார். இவர் இறக்கும் வரை மக்களால் பெரிதும் மதிக்கப்பட்டிருக்கின்றார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## 11. சிலாவத்துறை

சிலாவத்துறை முசலிப் பிரதேசத்தின் இறங்கு துறையாகும். அத்துடன் இது ஒரு மீன்பிடித் துறையுமாகும். முன்னொரு காலத்தில் இது முத்துச் சிலாபம் என்றும் அழைக்கப்பட்டது.

சிலாவத்துறை ஒரு கலகலப்பான குடியிருப்பு. இங்கு வர்த்தக நிலையங்களும் வாழ்விட குடியிருப்புகளும் கலந்து காணப்பட்டன. இக்குடியிருப்பு கிராமத்திற்கும் நகரத்திற்கும் இடைப்பட்ட பண்புகளைக் கொண்டதாக இருந்தது. ஒருபுறம் மீன்பிடியும் மறுபுறம் விவசாயமும் இக்குடியிருப்பின் இரு கண்களாகவும் காணப்பட்டன. (படம் 11 ஐப் பார்க்க).

முஸ்லிம்கள், தமிழர், சிங்களவர் ஆகிய மூவின மக்களும் சிலாவத்துறையில் வாழ்ந்தார்கள். முஸ்லிம்கள் பெரும்பான்மையாகவும், இக்குடியிருப்பின் பாரம்பரியக் குடிகளாகவும் காணப்பட்டனர். முஸ்லிம்கள் குடியிருப்பெங்கிலும் பரவலாக வாழ்ந்தார்கள். தமிழ் மக்கள் இக்குடியிருப்பில் கோவிலடி என்ற பகுதியில் செறிந்து வாழ்ந்தார்கள்.

சிங்கள மக்கள் கரையோரமாக தற்காலிக மீனவக் குடிசைகளில் வாழ்ந்து வந்தனர். சிலாவத்துறையில் முஸ்லிம் மக்களைப் பொறுத்த வரையில் பின் வரும் அம்சங்கள் குறிப்பிடப்பட வேண்டியனவாகும். இங்கு 180 முஸ்லிம் குடும்பங்கள் வாழ்ந்தன. ஜும்ஆ பள்ளிவாயில் ஒன்று இங்கு காணப்பட்டது. சிலாவத்துறையில் 54 வர்த்தக,சேவை நிலையங்கள் காணப்பட்டன (பின்னிணைப்பு 5ஐப் பார்க்க). இவற்றில் மிகப் பெரும்பான்மையானவை முஸ்லிம்களுக்கு உரிமையானவையாகும். அதே போல மீன்பிடித் தொழில் வர்த்தகத்தில் ஈடுபட்ட முஸ்லிம்களும் இங்கு வாழ்ந்தார்கள். மீன்பிடிப் படகுகள் அதற்குத் தேவையான மீன்பிடி உபகரணங்கள் என்பனவும் முஸ்லிம்களுக்கு உரிமையாக இருந்தன.

சிலாவத்துறை சூழலில் விவசாய நிலங்கள் காணப்பட்டன. இவை இக்கிராம முஸ்லிம்களுக்கு உடமையாக இருந்தன. இவ்விவசாய நிலங்கள் சூழலிலுள்ள கிராமக் குளங்களால் நீர்ப்பாய்ச்சல் செய்யப்பட்டன.

சிலாவத்துறையில் பாடசாலை, உதவி அரசாங்க அதிபர் காரியாலயம், நூல்நிலையம், இராணுவ முகாம் போன்றன காணப்பட்டன. முசலிப்பிரதேச வர்த்தக, சேவை மையமாக வளர்ச்சியடையக் கூடிய பண்புகளை சிலாவத்துறைக் குடியிருப்புக் கொண்டிருந்தது. சிலாவத்துறை கிராம முஸ்லிம் மக்கள் தற்போது நுரைச்சோலை, குறிஞ்சிப்பிட்டி ஆகிய கிராமங்களில் அகதிகளாக வாழ்கின்றனர்.

முசலிப் பகுதி முஸ்லிம்களின் காதிக்கோடும் ஆரம்ப காலம் தொட்டு சிலாவத்துறையிலேயே இயங்கி வந்துள்ளது. இக்காதிக் கோட்டின் காதி நீதவானாக



புதுவெளியைப் பிறப்பிடமாகக் கொண்ட சேகு ஜமாலுல்லா என்பவரும் அவருக்குப் பின்பு அவரது சகோதரர் என். எம். கபீபு முகம்மது மரைக்காயர் என்பவரும் காதி நீதவான்களாக 1990ஆம் ஆண்டு முசலிப் பகுதி முஸ்லிம்கள் வெளியேற்றப்படும் வரை இருந்திருக்கின்றார்கள். வெளியேற்றத்தின் பின் புத்தளம் மாவட்ட நுரைச்சோலையிலும் முசலிப்பகுதி முஸ்லிம்களின் காதி நீதிமன்றம் 1994 இறுதிப் பகுதிவரை இயங்கி இருக்கின்றது. இக்காதி நீதி மன்றத்தின் நீதவானாக கபீபு முகம்மது அவர்களே இருந்திருக்கின்றார்.

## 12. பண்டாரவெளி

அத்தியாயம் மூன்றில் முசலிப் பிரதேசத்தின் உப பிரதேசங்கள் பற்றி விளக்கப்பட்டுள்ளன. அதில் மணற்குளம்-முசலிப் பிரதேசம் பற்றிய கலந்துரையாடலில் அப்பிரதேசத்தின் விவசாய நீர்ப்பாசன முறையுடன் பின்னிப் பிணைந்த குடிசன குடியியல்பு ஒழுங்குகள் பற்றி விளக்கப்பட்டன. அதில் கிராமக் குள நீர்ப்பாசனத்தில் இப்பிரதேசக் குடியிருப்புகள் எவ்வாறு தங்கியிருந்தன என்பது விளக்கப்பட்டது.

இங்கு 6 கிராமங்கள் தொடர்ச்சியாகக் காணப்பட்டன. அதில் ஒன்றுதான் பண்டாரவெளியாகும். பண்டாரவெளி முசலிப் பிரதேசத்திலேயே மிகப் பெரிய குடியிருப்பாக (ஏறக்குறைய 500 குடும்பங்கள்) மட்டுமல்லாமல் இக்கிராமத் தொடர்ச்சியிலும் முக்கியமான குடியிருப்பாகக் காணப்படுகின்றது. இக்கிராமத் தொடரில் பண்டாரவெளியின் முக்கியத்துவம் மேற்குறிப்பிட்ட 6 கிராமங்களினதும் தாய்க் கிராமமாக அதாவது ஆரம்பக் குடியிருப்பாக இது காணப்படுவதாகும்.

பண்டாரவெளி மிகப் பழைய முஸ்லிம் குடியிருப்பொன்றாகும். இங்கு காணப்பட்ட பள்ளிவாயில் 200 வருடங்களுக்கு முன்னர் கட்டப்பட்டதொன்று. இக்கிராமத்தின் குடும்பப் பாரம்பரியங்கள் பல நூற்றாண்டுகளுக்கு பின்னோக்கிச் செல்லும் தன்மை காணப்படுகின்றது.

வரலாற்றுத் தொன்மையாலும் சனச் செறிவாலும் இக்கிராமம் முசலிப் பிரதேசத்திலேயே முக்கிய முஸ்லிம் மையமாகக் காணப்பட்டது. இங்கு 300 பேர் ஒரே நேரத்தில் தொழக்கூடிய பள்ளிவாயிலும் பல்வேறு இஸ்லாமிய நிறுவனங்களும் காணப்பட்டன. இங்கு காணப்பட்ட முஸ்லிம் பாடசாலையில் 4 கட்டடங்களும் 300க்கு மேற்பட்ட மாணவர்களும் கல்வி கற்றனர். பண்டாரவெளி ஒரு விவசாயக் கிராமமாகும். வயல்வெளிகளால் சூழப்பட்ட இக்கிராமத்தின் நுழைவாயிலில் குளம் காணப்பட்டது. மக்கள் குடியிருந்த பகுதிகளில் தென்னையும், மாவும், மற்றும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பயன்தரும் மேட்டுநிலப் பயிர்களும் செய்கை பண்ணப்பட்டிருந்தன. வரண்ட மன்னார் மாவட்டத்தில் நிழல் நிறைந்த ஒரு பசுஞ்சோலையாக இக்கிராமம் காணப்பட்டது.

இக்கிராமம் கல்வி, சமயம் தலைமைத்துவ ரீதியாக முசலிப் பிரதேசத்தில் முன்னின்ற கிராமங்களில் ஒன்றாக இருந்தது. முசலிப் பிரதேச மக்கள் மனதில் நீடித்து நிலைத்திருக்கும் காட்டுபாவா அதிகாரம், காதர் சாஹிபு, அசனா மரைக்கார், சாஹிபுத்தம்பி, மீராலெப்பை, சீட்டப்பா, இஸ்ஹாக் லெப்பை, சிக்கந்தர், பெரிய கலந்தர் ஆகிய பெரியார்கள் வாழ்ந்த கிராமம் பண்டாரவெளியாகும்.

பலவந்த வெளியேற்றத்தால் பாதிக்கப்பட்ட இக்கிராம மக்கள் புத்தளம், அநுராதபுர மாவட்டங்களில் காணப்பட்ட அகதி முகாம்களில் சிதறி வாழ்ந்தார்கள். 1996 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இம்மக்களை ஒன்றிணைக்க நுரைச்சோலையில் கொய்யாவாடி என்ற இடத்தில் ஒரு சொந்த குடியேற்றத் திட்டத்தை ஏற்படுத்தி அங்கு வாழ்ந்து வருகின்றார்கள். இக்கிராம மக்களின் விடிவுக்காக அயராது உழைத்து வரும் பளுலூான் மரைக்கார் என்ற இக்கிராமப் பெரியார் இக்கிராம மக்களால் என்றும் நினைவில் வைத்திருக்க வேண்டியவர்.

## 13. மணற்குளம்

இக்கிராமம் புவியியல் ரீதியாகவும் குடும்ப பாரம்பரிய அடிப்படையிலும் பண்டாரவெளி தாய்க்கிராமத்தின் துணைக்கிராமமாகும். இவ்விரண்டு கிராமங்களையும் ஒரு குறுகிய வயல்வெளிப்பிரதேசம் பிரிக்கின்றது. மணற்குளத்தில் 88 குடும்பங்கள் வாழ்ந்தனர். இக்கிராமத்தில் பல கலாசாரத் தனித்துவங்கள் காணப்பட்டன. முஸ்லிம்களின் கலை அம்சங்களில் சிலம்படி, களிகம்பு, ஆசைக்கவி என்பன இம்மக்கள் மத்தியில் மிக நீண்ட காலம் பிரபல்யமாக இருந்து வந்தன.

இக்கிராமம் நீர்ப்பாசன குளங்களால் சூழப்பட்டிருந்தது. குள நீர்ப்பாசனத்தை நம்பி நெற்செய்கை பண்ணப்பட்டது. ஏறக்குறைய 200 ஏக்கர் நிலம் விவசாயத்திற்குட் பட்டிருந்தது. இதை விட இக்கிராமத்திற்கு வடக்காகக் காணப்பட்ட பொருளாதார வளங்களும் இம்மக்களாலேயே பயன்படுத்தப்பட்டன. அதில் குறிப்பாக கோணாங்குளம், கொக்குமடுக்குளம், கள்ளிக்குளம் போன்ற குளங்களை அண்டிய நெற்செய்கை, மேட்டுநிலச் செய்கை என்பன இம்மக்களாலேயே மேற்கொள்ளப்பட்டது.

இக்கிராம மக்கள் புத்தளம் மாவட்டத்தில் பல முகாம்களில் அகதிகளாக சிதறி வாழ்ந்து 1996 ஏப்ரலில் இருந்து நுரைச்சோலை கொய்யாவாடியில் பண்டாரவெளி மக்களோடு சேர்ந்து வாழ்ந்து வருகின்றனர்.



## 14. இலந்தைக்குளம்

இதுவும் பண்டாரவெளி வழிவந்த கிராமமாகும். இக்கிராமத்தில் 45 குடும்பங்கள் வாழ்ந்தன. குளத்திற்கு மேற்காக குடியிருப்பு காணப்பட்டது. பண்டாரவெளியில் இருந்து அரிப்பு தமிழ்க் கிராமத்திற்கான பாதை இலந்தைக்குளம் ஊடாகச் செல்கின்றது. ஏறக்குறைய 150 ஏக்கர் நெல் நிலம் இக்கிராமச் சூழலில் விவசாயத்திற்குட்பட்டிருந்தது.

பொதுவாக நீர்ப்பாசன வசதிகள் குறைவாகக் காணப்பட்டாலும் கால்நடை வளர்ப்பு, மேட்டுநிலப் பயிர்ச் செய்கை பரவலாக இங்கு நடை பெற்றன. விவசாயத்தைப் போல் மீன் பிடியும் இக்கிராமத்தில் முக்கிய தொழிலாக இருந்தது. கடலும், அருவி ஆறும் இக்கிராமத்திற்கு அண்மையில் காணப்பட்டமை இத்தொழில் ஈடுபாட்டுக்கு காரணமாக அமைந்திருந்தது. இக்கிராமத்தில் தைக்காப் பள்ளிவாசல் ஒன்று காணப்பட்டது. இவர்களும் மணற்குளம் மக்களைப் போல் நுரைச்சோலை கொய்யாவாடியில் தமது பண்டாரவெளி உறவினரோடு தற்போது ஒன்றாக வாழ்கின்றனர்.

## 15. மேத்தன்வெளி

மேத்தன்வெளிக்கிராமம் பண்டாரவெளிக் கிராமத்திற்கு தெற்குப்பக்கமாக அமைந்துள்ளது. முசலிப் பகுதியில் பழமை வாய்ந்த கிராமங்களில் இதுவும் ஒன்றாகும். இங்கு ஏறக்குறைய 65 குடும்பங்கள்வரை வாழ்ந்துவந்தன. இக்கிராம மக்கள் பண்டாரவெளி மக்களுடன் மிக நெருங்கிய குடும்ப உறவினைக் கொண்டிருந்தனர். 1957ஆம் ஆண்டு ஏற்பட்ட பெரும் வெள்ளத்தினால் இங்குள்ள மக்கள் பண்டாரவெளி, அளவக்கைசிறுகுளம், பூநொச்சிகுளம் போன்ற கிராமங்களுக்கு இடம் பெயர்ந்து சென்றனர். இதனால் பண்டாரவெளி, மணற்குளம், இலந்தைக்குளம், அளவக்கைசிறுகுளம், வாரிவெளி, பூநொச்சி ஆகிய கிராமங்கள் ஒன்றிணைந்து 1983ஆம் ஆண்டுவரை மேத்தன்வெளி கிராம சேவகர் பிரிவாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது.

இங்குள்ள மக்களின் பிரதான தொழில் விவசாயமும், வர்த்தகமுமாகும். மேத்தன்வெளிக் கிராமம் 160 ஏக்கர் நெற்காணியையும், 110 ஏக்கர் மேட்டுநிலக் காணியையும் உள்ளடக்கியது. பெரும்போகக் காலங்களில் நெற்பயிர், மிளகாய் போன்ற மேட்டுநிலப் பயிர்களும், நிலநீர் மூலம் செய்கை பண்ணப்பட்டு செல்வம் கொழிக்கும் கிராமமாக இது திகழ்ந்து வந்தது.

இங்குள்ள சுல்தான் அப்துல் அசீஸ், மஃமூது, சேகுஅப்துல்காதர், கப்பநெய்னாலெப்பை, ஆகியோரின் குடும்பங்கள் பழைமையானவை. இவர்களில் அப்துல் அசீஸ் என்பவர் மன்னார் மாவட்டத்தின் நானாட்டான் கிழக்கு, முசலி வடக்கு-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தெற்குப் பகுதிகளின் விவசாயக் கணக்காளராகவும், நெல் ஏஜண்டாகவும், மீராப் பள்ளி நம்பிக்கையாளராகவும் சேவை புரிந்து வந்தார். மேத்தன்வெளியில்தான் முசலி வடக்கு இறப்புப் பிறப்பு பதிவாளர் காரியாலயம் அமைந்திருந்தது. 1972 முதல் 1990 வரை இதே கிராமத்தைச் சேர்ந்த அன்வர் ஹாஜியார் (நெய்னாமுகம்மது ஹாஜியார்) இறப்புப் பிறப்புப் பதிவாளராகக் கடமை புரிந்து வந்தார். இவர் புழுதிவயல் என்னும் இடத்தில் வசித்து தற்போது கொய்யாவாடி மீளமைவுக் கிராமத்தில் வாழ்கின்றார். மேத்தன்வெளிக் கிராமத்தில் உள்ள கிராமத்தில் உள்ள மக்கள் தற்போது கற்பிட்டிப் பகுதி பள்ளிவாசல்துறையிலும், நுரைச்சோலையிலும் வாழ்ந்து வருகின்றனர்.

## 16. சிறுக்குளம்

இது அளவக்கை சிறுக்குளம் என்றே பதியப்பட்டுள்ளது. மேத்தன் வெளிக்கு தெற்காக இக்கிராமம் அமைந்துள்ளது. இங்கு 65 குடும்பங்கள் வாழ்ந்தன. இவர்கள் சிறுக்குள குளக்கட்டிற்கு மேற்காக அரிப்பு வீதியின் இரு மருங்கிலும் செறிவாக வாழ்ந்தனர். நெல் விவசாயம் இம்மக்களின் முக்கியமான பொருளாதார நடவடிக்கையாக இருந்தது. சிறுக்குள முஸ்லிம்களுக்கு தமது கிராமச் சூழலிலும் வாரிவெளி, மேத்தன் வெளி, புதுவெளி கிராமங்களிலும் நெற்காணிகள் இருந்தன. வர்த்தகத்திலும் இம்மக்கள் ஈடுபட்டு வந்தார்கள். சிலாவத்துறை நகரின் பிரபல்யமான வர்த்தகர்கள் சிலர் இக்கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கிராமத்தில் ஜும்மாப் பள்ளிவாசல் ஒன்று இருந்தது. மேத்தன்வெளி, வாரிவெளி பிரதேச முஸ்லிம்களும் சிறுக்குள ஜும்ஆ பள்ளிவாசலையே தமது தொழுகைக்குப் பயன்படுத்தினார்கள். இக்கிராம மக்களில் மிகப் பெரும்பான்மையானவர்கள் பள்ளிவாசல்துறையில் சொந்தக் குடியேற்றமொன்றை ஏற்படுத்தி வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களில் மற்றுமொரு பகுதியினர் கண்டக்குழியில் வாழ்கின்றார்கள்.

முசலிப்பகுதியில் உள்ள பிரபலமான புலவர்களில் தற்போது உயிருடன் இருக்கும் ஒரேயொரு புலவர் கபீப் புலவராவார். கபீப் புலவரும் முஸ்லிம்கள் வெளியேறும்வரை சிறுக்குளத்தில் வசித்திருக்கின்றார். இவர் தற்பொழுது மிகவும் வயது முதிர்ந்து புலமைச் சக்தியை இழந்த நிலையில் பள்ளிவாசல்துறையில் வசிக்கின்றார்.

## 17. வாரிவெளி

இது ஒரு சிறிய கிராமம். இங்கு ஏறக்குறைய 32 குடும்பங்கள் வாழ்ந்தன. வாரிவெளி கிராமம் சிறுக்குள கிராமத்துடன் குடும்ப ரீதியான உறவுகளைக்



கொண்டிருந்தது. விவசாயப் பொருளாதாரத்தைக் கொண்ட இக்கிராமத்தில் 180 ஏக்கர் விவசாயக் காணி இம்மக்களால் பயிரிடப்பட்டது. முசலியின் மேற்கே கரையோரமாகக் காணப்பட்ட தென்னந் தோட்டங்கள் பல இவர்களுக்குச் சொந்தமாக இருந்தன. இங்கு மேட்டு நிலப்பயிர்ச் செய்கையும், மந்தை மேய்த்தலும் நடைபெற்றது. இக்கிராமத்தில் ஆடு மாடுகள் பெருமளவு வளர்க்கப்பட்டன. மீன் பிடியிலும் இவர்கள் ஈடுபட்டிருந்தார்கள்.

## 18. முசலி

முசலிப் பிரதேசத்தின் பெயரால் அழைக்கப்படும் கிராமம் இதுவாகும். இது வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு முஸ்லிம் கிராமமாகும். முசலிப்பிரதேச ஆரம்ப முஸ்லிம் குடியிருப்புகளில் இதுவும் ஒன்றாக இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. இக்கிராமத்திற்கு மிக அண்மைக்காலம் வரை அரேபியத் தீபகற்பத்தோடு தொடர்புகள் காணப்பட்டன. அரேபியப் பரம்பரையில் வந்த ஒருவர் இப்பிரதேச கிராம விதானையாக இருந்தார். மற்றுமொருவர் சட்டத்தரணியாக இருந்தார். வரலாற்றில் எக்காலத்தில் இக்கிராமச் சூழலில் முஸ்லிம் குடியிருப்புகள் ஆரம்பமாயின என்ற அம்சம் மேலும் ஆழமாக ஆராயப்பட வேண்டியதொன்றாகும்.

இக்கிராமத்தின் மற்றுமொரு சிறப்பு, உயர்தர வகுப்பு வரையான கல்வி வசதிகளைக் கொண்ட பாடசாலையொன்று காணப்பட்டமையாகும். இது முசலி மகா வித்தியாலயம் என அழைக்கப்பட்டது. முசலிப் பிரதேச கல்வி வளர்ச்சியில் இப்பாடசாலையின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். முசலிக் கிராம மக்கள் தற்போது கண்டக்குளி கொளனியில் சொந்தக் குடியேற்றம் ஒன்றை உருவாக்கி வாழ்ந்து வருகின்றனர்.

முசலிப் பகுதியிலுள்ள பல கல்விமான்களைப் பிற்காலத்தில் உருவாக்கிய பெருமை முசலி மகா வித்தியாலயத்திற்கு உண்டு. முசலிப் பகுதியில் அரசாங்க உத்தியோகம் பார்ப்போரில் பெரும்பாலானவர்கள் இங்குதான் கல்வி கற்றிருக்கின்றனர். ஆரம்ப காலந்தொட்டே இது ஒரு மகா வித்தியாலயமாக இயங்கியிருக்கின்றது.

## 19. மறிச்சுக்கட்டி

முசலியின் வியாயடி நீர்ப்பாசன தொகுதியில் மறிச்சுக்கட்டி முக்கியமான முஸ்லிம் கிராமமாகும். இங்கு 1990 ஆம் ஆண்டு 200 முஸ்லிம் குடும்பங்கள் வாழ்ந்தன. இவர்கள் பலவகையான பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர். இதில் விவசாயம் முக்கியமாகக் காணப்பட்டது. இதைவிட ஏறக்குறைய 40 சதவீதமானவர்கள் நெல், மேட்டுநிலச் செய்கை, மந்தை மேய்த்தலில் ஈடுபட்டார்கள். விவசாயத்தில் நெற்செய்கை மிக முக்கியமானதாகும். மறிச்சுக்கட்டி நெல் விவசாயம் குள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நீர்ப்பாசனத்தை அடிப்டையாகக் கொண்டிருந்தது. ஏறக்குறைய 220 ஏக்கர் நிலம் கடைசியாக விவசாயம் செய்யப்பட்டிருந்தது. நெல்லுக்கு ஈடாக மேட்டு நிலச் செய்கை, மந்தை மேய்ப்பு, காட்டுவளத்துடன் தொடர்புடைய தொழில்கள் பகுதி நேரத்தொழிலாகவும், முழு நேரத்தொழிலாகவும் இம்மக்கள் மத்தியில் முக்கியத்துவம் பெற்றிருந்தன.

இக்கிராமத்தில் மீன்பிடி மற்றுமொரு முக்கிய தொழிலாகும். ஏறக்குறைய 30 வீதமானவர்கள் இதில் ஈடுபட்டார்கள். அத்துடன் ஏறக்குறைய 10 சதவீதமானவர்கள் வர்த்தகத் தொழிலில் ஈடுபட்டார்கள். இக்கிராம நெல் விவசாயம் மறிச்சுக்கட்டி குள நீர்ப்பாசனத்தை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்டது. மறிச்சுக்கட்டியில் அமைந்திருந்த ஜும்ஆ பள்ளிவாசல் 120 பேர் ஒரே நேரத்தில் தொழக்கூடிய வசதியுடையதாக இருந்தது.

இக்கிராமம் வில்பத்து சரணாலயத்திற்கு மிக அருகாமையில் இருந்தமையால் காட்டு மிருகங்களின் இறைச்சியை மிக இலகுவாகப் பெறக் கூடியதாக இருந்தது. சடங்கு வைபவங்களில் கூட காட்டு மான், மரை இறைச்சிகள் தான் இங்கு பரிமாறப்படுவது வழக்கமாக இருந்தது. 1970 ஆம் ஆண்டுக்கு முன்பு இம்மக்கள் விவசாயத்தில் நாட்டம் குறைந்தவர்களாகக் காணப்பட்டார்கள். காரணம் இலங்கையிலேயே மிகவும் மழைவீழ்ச்சி குறைவான பகுதியாக இருந்தமையினால் போதிய நீரைப் பெற முடியாமையாகும். 1970 ஆம் ஆண்டுக்குப் பின்பு வியாயடிக் குளம் கட்டப்பட்டதைத் தொடர்ந்து இவர்களின் விவசாயம் மேலோங்கியது. இரண்டு போகம் வேளாண்மை செய்வதற்குப் போதுமான நீரை இத்தேக்கம் மூலம் இலகுவாகப் பெறக் கூடியதாக இருந்தது. மன்னார் மாவட்டத்தின் தென்பகுதி எல்லையான மோதரகம ஆறு மறிச்சுக்கட்டிக் கிராமத்தின் தெற்கு எல்லையாகவும் காணப்படுகின்றது.

1988ஆம் ஆண்டுக்குப் பின்பு இலவன்குளம்-மறிச்சுக்கட்டிப் பாதை அதாவது புத்தளம்-மன்னார் பாதை திருத்தப்பட்ட பின்பு மன்னார் மாவட்ட மக்கள் இப்பாதையூடாகவே புத்தளம் சென்று வந்தனர். இதன் காரணமாக மறிச்சுக்கட்டிக் கிராமம் பிரபல்யம் பெற்று விளங்கியது. இப்பாதையூடாகவே மறிச்சுக்கட்டி, பாலைக்குளி, கரடிக்குளி மக்கள் புலிகளினால் வெளியேற்றப்பட்ட பொழுது புத்தளத்தை வந்தடைந்தார்கள். இக்கிராம மக்கள் தற்போது புத்தளம் வெட்டக்கண்டல், வேப்பமடு, திகழி, ஏத்தாளை, பள்ளிவாசல்துறை, பூலாச்சேனை, கண்டக்குடா போன்ற இடங்களில் அமைந்துள்ள அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர்.

## 20. பாலைக்குளி

இக்கிராமம் மறிச்சுக்கட்டியில் இருந்து கிழக்காக முக்கால் மைல் தூரத்தில் காணப்படுகின்றது. இப்பிரதேச பழைய முஸ்லிம் கிராமங்களில் இதுவும் ஒன்றாகும்.



வியாயடி நீர்ப்பாசனக் கால்வாயில் இருந்து பாலைக்குளி குளம் மூலமாக இப்பிரதேச நெல் நிலங்கள் நீரைப் பெறுகின்றன. மொத்தமாக 218 ஏக்கர் நெல் நிலம் விவசாயத்திற்குட்பட்டிருந்தது. மழையையும், நீர்ப்பாசனத்தையும் நம்பிய ஒரு பருவ நெற்செய்கை இப்பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டது. ஏனைய காலங்களில் சேனைச் செய்கை நடைபெற்றது. கால்நடை வளர்ப்பும் இப்பிரதேசத்தில் காணப்பட்டது. காட்டுவளப் பயன்பாட்டில் இம்மக்களின் ஈடுபாடு குறிப்பிடத்தக்கது. இதில் மிக முக்கியமானது யானை பிடித்தல் ஆகும். இது ஒரு பாரம்பரிய தொழிலாக இக்கிராம மக்கள் மத்தியில் காணப்பட்டது.

145 குடும்பங்கள் வாழ்ந்த இக்கிராமத்தில் ஜும்மாப் பள்ளிவாசல் ஒன்று காணப்பட்டது. இக்கிராம மக்கள் தற்போது வெட்டக்கண்டல், முஜாஹிதீன் புரம் அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்றார்கள்.

## 21. கரடிக்குளி

இது வியாயடி நீர்ப்பாசனத் தொகுதியில் காணப்படும் மற்றுமொரு முஸ்லிம் கிராமமாகும். இங்கு 190 குடும்பங்கள் வாழ்ந்தன. இக்கிராமம் மறிச்சுக்கட்டி கிராமத்துடன் குடும்ப உறவுகளைக் கொண்டிருந்தது. கரடிக்குளி மறிச்சுக்கட்டிக் கிராமத்தில் இருந்து வட மேற்கே 2 மைல் தொலைவில் அமைந்திருந்தது. இக்கிராம மக்களினதும் பிரதான பொருளாதார நடவடிக்கையாக நெல் விவசாயம் காணப்பட்டது. இக்கிராம மக்கள் கரடிக்குளி குளத்திற்கு கீழுள்ள 85 ஏக்கர் நெல் நிலத்துடன் மோட்டய குளம், வண்ணாமோட்டை, சுண்டிக்குளி, பால்குளம் போன்ற அயற்புற குளங்களுக்கு கீழுள்ள காணிகளிலும் நெல் விவசாயம் செய்து வந்தனர். இதைவிட மேட்டுநில, சேனைப்பயிர்ச் செய்கையும் அயற்புறங்களில் மேற்கொண்டு வந்தனர்.

இக்கிராமத்தின் மற்றொரு முக்கிய பொருளாதார நடவடிக்கையாக மீன்பிடி காணப்பட்டது. இக்கிராமம் கடற்கரைக்கு அண்மையில் அமைந்திருந்தது. இம்மக்களுக்கு ஏறத்தாழ 40 மோட்டார் மீன்பிடிப் படகுகளும் அதற்குரிய உபகரணங்களும் உரிமையாக இருந்தன. இக்கிராமம் முசலிப் பிரதேசத்துக்குள்ளேயே யானை பிடித்தலுக்குப் பேர் பெற்றது. இங்கு ஜும்ஆ பள்ளிவாயில் ஒன்றும், கனிஷ்ட பாடசாலை ஒன்றும் இருந்தன. கரடிக்குளி கிராம மக்கள் தற்போது கற்பிட்டியிலும், வெட்டக்கண்டல் ரெட்பானா போன்ற இடங்களில் காணப்படும் அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்றார்கள்.

இக்கிராமத்தில்தான் வட மாகாணத்திலேயே தௌஹீத் ஜமாஅத் என்னும் இயக்கம் முதன் முதலாக உருவானது. இங்குள்ள மக்கள் இந்த ஜமாஅத்தைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர். இந்த ஜமாஅத்தின் மூத்த தலைவர்களில் ஒருவரான சாகுல் கமீது ஹொஜியார் என்பவர்தான் இங்கும் இந்த ஜமாஅத்தின் தலைவராக இருந்திருக்கின்றார். இவரது சொந்த ஊரும் கரடிக்குளிதான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பின்னிணைப்பு 2
# யானை பிடித்தல்

முசலியின் மற்றுமொரு சிறப்பம்சம் யானை பிடித்தலாகும். தென்னாசியாவில் யானையைப் பிடித்து மனித நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தும் வழமை கடந்த 5000 ஆண்டுகளாகக் காணப்பட்டிருக்கின்றது (Lahiri-Choudhry,1995). ஆனால் இந்தியாவில் இஸ்லாமிய ஆட்சிக் காலங்களில் (துருக்கி, ஆப்கானிஸ்தான், மொகலாய) யானை பிடித்தல் பிரபல்யமாகி இருந்தது. யானைகளை வீட்டுத் தேவைகளுக்கும், யுத்த நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தும் வழக்கமாக காணப்பட்டது. யானைகள் தொழிற் தேர்ச்சி பெற்ற யானை பிடிகாரர்களால் பிடிக்கப்படும். யானை பிடித்தலில் முஸ்லிம்களே இந்தியாவிலும், இலங்கையிலும் தேர்ச்சி பெற்று விளங்கினர். இவ்வாறு தேர்ச்சி பெற்ற முஸ்லிம்கள் பணிக்கர்கள் என்று அழைக்கப்பட்டனர் (Jeyewardene,1994).

பணிக்கர் எனப்பட்ட யானை பிடிக்கும் முஸ்லிம்களின் வரலாறு இலங்கையில் மிகத் தனித்துவமானது. இலங்கையில் பணிக்கர் முஸ்லிம்களின் ஆரம்பம் மன்னாரின் முசலிப் பற்றுப் பிரதேசமாகும். மிக நீண்ட காலத்திற்கு முன்னர் இம் முஸ்லிம்கள் இந்தியாவில் இருந்து முசலிக்கு வந்தார்கள். போர்த்துக்கேய, ஒல்லாந்தர் காலங்களில் இம்முஸ்லிம்கள் பலவிதமான கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் யானை பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டு வந்திருக்கின்றனர். பிரித்தானியர் காலத்தில் இக்கட்டுப்பாடுகள் தளர்த்தப் பட்டிருந்தன (Cannon and Davis,1995).

பிரித்தானிய அறிக்கைகளின் படி முசலிப் பிரதேசத்தில் முஸ்லிம்கள் யானை பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டு வந்தார்கள். Boake (1888) என்பவரின் படி 1800 ஆம் ஆண்டுகளில் 200க்கு மேற்பட்ட யானை பிடிக்கும் வல்லமை கொண்ட முஸ்லிம்கள் முசலிப் பிரதேசத்தில் வாழ்ந்ததாகக் குறிப்பிடுகின்றார். யானை பிடித்தலுக்கான அனுமதி அரசாங்கத்தால் வழங்கப்பட்டது. 1815 இல் முதன் முதலாக பிரித்தானிய அரசாங்கம் பணிக்கர் முஸ்லிம்களுக்கு யானை பிடிக்கும் அதிகாரத்தைக் கொடுத்தது. 1816, 1817, 1818, 1819 ஆகிய நான்கு ஆண்டுகளில் மொத்தமாக 49 பயனுள்ள யானைகளை முஸ்லிம்கள் பிடித்தனர். இவை இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. 1816ஆம் ஆண்டு யானை பிடித்தலுக்கான ஒரு முதலியாரை அரசாங்கம் நியமித்தது. அவரின் பெயர் மதுரசாமிப் மாக்கார் என்பதாகும். 1867 ஆம் ஆண்டு மாத்திரம் யானை ஏற்றுமதி மூலம் 23,286 ஸ்டேர்லிங் பவுணை அரசாங்கம் பெற்றது (Administrative Report, 1868).



யானை பிடிக்கும் வல்லமை கொண்ட முஸ்லிம்கள் முசலியின் பல கிராமங்களிலும் வாழ்ந்தார்கள். இவற்றில் மறிச்சுக்கட்டி, பாலைக்குளி, கரடிக்குளி, கொண்டச்சி, பொற்கேணி ஆகியன குறிப்பிடத்தக்கவையாகும். மேற்குறிப்பிட்ட கிராமங்கள் அடர்ந்த வில்பத்துக் காட்டிற்கு அருகாமையில் அமைந்திருந்தன. இக்காட்டில் யானைகள் வந்து நீர் அருந்தக் கூடிய வெளிகள், வில்லுகள் காணப்படுகின்றன. யானைகள் கொண்டச்சி, பொற்கேணி, அகத்திமுறிப்பு கிராமச் சூழலில் மாவில்லு, கொளிஞ்சிவில்லு, கல்லாறு, சேற்றுநாவில்லு போன்றவற்றிலும் மறிச்சுக்கட்டிப் பிரதேசத்தில் வெப்பல், ஒட்டி, யாலமோட்டை, ஆவாரவில்லு, மணவில்லு, கழுதைகட்டியவெளி, யானைபிடிமடு, மாங்குளிவட்டத்தா, கல்லாற்றுப்பகுதி போன்றவற்றிலும் யானைகள் அதிகம் பிடிக்கப்பட்டன. படம் 21 இதனை விளக்குகின்றது.

முசலிப் பிரதேசத்தில் வாழ்ந்த யானை பிடிப்பில் தேர்ச்சி பெற்ற முஸ்லிம்கள் இரண்டு முறைகளில் யானை பிடிப்பதுண்டு. முதலாவது முறை யானையைக் கண்ணி வைத்துப் பிடிப்பதாகும். இம்முறையின்படி யானைகள் வழமையாக வருகின்ற வழிகளில் இலை குழைகளால் கண்ணியை மறைத்து வைத்துப் யானைகள் அவ்வழியால் நடந்து செல்லும் போது, பொருத்தமான யானைகளைப் பிடிப்பதாகும்.

இரண்டாவது முறை மிகவும் ஆபத்தானதாகும். இம்முறைப்படி தைரியமும், தேர்ச்சியும் மிக்க யானை பிடிக்கும் முஸ்லிம் ஒருவர் ஒரு சிறு கயிற்றின் மூலம் யானையைப் பிடிப்பதைக் குறிக்கும். இம்முறைப்படி யானை பிடிப்பவர் தமது யானை பிடிக்கும் கண்ணியோடு யானைக் கூட்டத்தோடு கூட்டமாகச் சென்று பொருத்தமான நேரமும், இடமும் வருகின்ற போது மிகத் தைரியமாக யானையின் காலில் கண்ணியை இட்டு அக்கண்ணியை அருகிலுள்ள உறுதியான மரத்தோடு இணைத்து விடுவர்.

இவ்வாறாக யானை பிடித்தலுக்குத் தேவைப்பட்டதெல்லாம் மூன்று அடி விட்டமும் 25 அடி நீளமுமான மான்தோலினால் செய்யப்பட்ட ஒரு கண்ணிக் கயிறாகும். யானை பிடிப்பது பற்றி எழுதிய ஆய்வாளர்கள் முசலி முஸ்லிம்களின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படம் 21 முசலிப்பிரதேசத்தில் யானை பிடிக்கும் இடங்களும் அதில் ஈடுபட்ட முஸ்லிம் கிராமங்களும்




மூலம்: வெளிக்கள ஆய்வு. 1996. இலங்கை இடவிளக்கப்படம். 1972.



யானை பிடித் தேர்ச்சியை மிகவும் பிரதானமாகப் புகழ்கின்றார்கள். ஜெயவர்தனா (1995) என்பவர் முசலி முஸ்லிம் யானைபிடிப்பவர்களுக்கு ஒப்பானவர்கள் இலங்கையின் வேறு எந்தப் பிரதேசத்திலும் இருந்ததில்லை என்று குறிப்பிடுகின்றார்.

யானை பிடிக்கும் நடவடிக்கைகளுடன் பலர் தொடர்புற்றிருந்தாலும் யானை பிடிக்கின்றவர் தைரியமான வீரமிக்க, தேர்ச்சிபெற்ற ஒருவராகவே காணப்படுவார். அவ்வாறு வீரமும், தேர்ச்சியும் கொண்ட யானை பிடிக்கின்ற முசலி முஸ்லிம்கள் பலர் இன்னும் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்கள் தமது யானை பிடிக்கும் அனுபவத்தை விபரிக்கின்ற போது அது மிகவும் ஆச்சரியப்படக் கூடிய ஒரு நடவடிக்கையாகக் காணப்படுகின்றது.

முசலி முஸ்லிம்களால் பிடிக்கப்பட்ட யானைகள் பல வெளிநாடுகளுக்கும், இலங்கையின் பல பகுதிகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றன. பல நூற்றாண்டுகளாகக் கண்டி தலதா மாளிகைக்கான ராஜ யானை வழமையாக முசலியில் இருந்தே பெறப்படுவதுண்டு. முசலி முஸ்லிம்களால் அன்பளிப்புச் செய்யப்பட்ட ராஜ யானைகள் பற்றி கண்டி தலதா மாளிகையின் கல்வெட்டுக்களில் குறிப்புக்கள் காணப்படுகின்றன.

யானை பிடிப்பதில் தேர்ச்சி பெற்ற முஸ்லிம்கள் தமது திறமைக்கு ஏற்ற வெகுமதியை எப்போதும் பெற்றதில்லை. காலனித்துவ காலத்தில் யானைகளின் விலைகள் மிகக் குறைவாகக் காணப்பட்டன. இந்தியாவில் ரயில்வே போக்குவரத்து விருத்தியானதன் பின்பு யானைக்கான கேள்வியில் அதிகரிப்பு ஏற்பட்டாலும் விலையேற்றத்தினால் ஏற்படும் நன்மைகள் யானை பிடிக்கும் முஸ்லிம்களுக்குக் கிடைக்கவில்லை. யானை விற்ற விலையில் இடைத் தரகர்களும், அரசாங்கமுமே கூடுதலான நன்மையைப் பெற்றுக் கொண்டதாக வரலாற்று நூல்கள் விளக்குகின்றன.

யானை பிடிப்பதோடு முஸ்லிம்களுக்கு உள்ள தொடர்பு பற்றி மேலும் ஆராயப்பட வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பின்னிணைப்பு 3
# முத்துக்குளிப்பு

முசலிப் பிரதேச முத்துக் குளிப்புப் பற்றி இப்பகுதியில் விளக்கப்படுகின்றது. Van (1888) என்ற அறிஞரின்படி முத்துக் குளிப்பு உலகின் மிகப் பழைய கைத்தொழில்களில் ஒன்றாகக் காணப்பட்டது. இந்த நடவடிக்கை 2000–3000 ஆண்டுகள் பழமையானது. உலகின் ஏனைய பிரதேசங்களை விட இலங்கை முத்துக் குளிப்பே மிகப் பழமையானது என்று இவர் குறிப்பிடுகின்றார்.

இலங்கையில் முத்துக் குளிப்பு என்னும்போது மன்னார் குடாவின் முத்துக்குளிப்பையே குறிக்கின்றது. புவியியல் அடிப்படையில் மன்னார் குடாப் பிரதேசம் முத்துச்சிப்பிகளின் வளர்ச்சிக்கு மிகச் சாதகமாகக் காணப்படுகின்றது. முத்துச் சிப்பிகள் வளர்கின்ற இடங்கள் பார்கள் (Paars) என்று அழைக்கப்படுகின்றன. மன்னார்த் தீவில் இருந்து நீர்கொழும்புக்கு இடைப்பட்ட கடற்பிரதேசத்தில் முத்துச் சிப்பிகள் வளரக்கூடிய 19 பார்கள் அடையாளம் காணப்பட்டன. இப்பிரதேச முத்துக்குளிப்புக்குப் பிரபல்யம் பெற்ற பார்களாக கொண்டச்சிப்பார், கரைத்தீவுப்பார், அரிப்புப் பார், பெரியகரைப்பார், கல்லத்திடல் பார், ஆனைவிழுந்தான் பார், பெரியபார் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

மன்னார் கடலில் முத்துக் குளிப்பு மிக நீண்டகாலமாக நடைபெற்று வந்திருக்கின்றது. உலகின் ஆதி நாகரீகப் பிரதேசங்கள் மன்னார் குடா முத்துக்குளிப்புடன் தொடர்புற்றிருந்தமையைக் குறிப்பிடலாம். இலங்கையின் காவியத் தலைவியாகிய அல்லி ராணி அரசியின் ஆட்சி மன்னார் குடா முத்துக் குளிப்பின் முக்கியத்துவத்தால் உருவாகியதே என நம்பப்படுகின்றது.

மிக ஆரம்பகால மன்னார் குடா முத்துக் குளிப்புப் பற்றித் தெளிவான விபரங்கள் கிடைக்கப்பெறவில்லை. ஆனால் போர்த்துக்கேய காலனித்துவ ஆட்சியாளர் காலத்தில் இருந்து மன்னார் குடாவில் முத்துக்குளிப்பு தொடர்பான விபரங்கள் எமக்குக் கிடைத்திருக்கின்றன. ஒல்லாந்த ஆட்சியாளர்கள் 1661, 1667, 1746, 1747, 1748, 1749, 1753, 1754, 1768 போன்ற ஆண்டுகளில் முத்துக் குளித்திருக்கின்றார்கள். பிரித்தானிய ஆட்சியாளர்கள் 1796 இல் இருந்து 1887ஆம் ஆண்டுவரை பெரியளவில் மன்னார் குடாவில் முத்துக்குளிப்பில் ஈடுபட்டதாக Boake (1888) குறிப்பிடப்பட்டுள்ளார். இவரின் கருத்துப்படி மேற்குறித்த காலப்பகுதிக்குள் 30 முறை அதாவது 1796,



1797, 1798, 1799, 1803, 1804, 1806, 1808, 1809, 1814, 1829, 1830, 1831, 1832, 1833, 1835, 1836, 1837,1855, 1857, 1858, 1859, 1860, 1863, 1874, 1877, 1879, 1880, 1881, 1884, 1887 ஆகிய ஆண்டுகளில் முத்துக் குளித்து மொத்தமாக 4,372 985 ஸ்டேர்லிங் பவுன்களை வருமானமாகப் பிரித்தானியர் பெற்றார்கள் என்று அறியக் கூடியதாக இருக்கின்றது. மேற்குறிப்பிட்ட காலக் கட்டங்களுக்குப் பின்னரும் இப்பிரதேசத்தில் முத்துக்குளிக்கும் நடவடிக்கைகள் நடைபெற்றிருந்தாலும் இவை அதிக வெற்றியைத் தரவில்லை. காரணம் காலனித்துவ ஆட்சியாளர் காலத்தில் முத்துக்குளிப்பு தேவைக்கதிகமான அளவில் செய்யப்பட்டமை இளம் முத்துச் சிப்பிகளின் அழிவுக்குக் காரணமாகியது. இதனால் முத்துக்குளிப்புக்கு உலகப் பிரபல்யம் பெற்றிருந்த மன்னார் பிரதேசம் அதன் முக்கியத்துவத்தை இழக்க வேண்டிய நிலை உருவாகியது.

மன்னார் குடா முத்துக்குளிப்பில் முசலிக்கரையோர முத்துக் குளிப்பே முக்கியமான பிரதேசமாகக் காணப்பட்டது. முத்துச் சிப்பிகள் தரித்திருக்கும் பார்களில் மிக அதிகமானவை முசலிக் கரையை அண்டிக் காணப்பட்டன. அதனால் முத்துக்குளிப்பு நடவடிக்கைகள் முசலிக் கரையோரத்தைத் தளமாகக் கொண்டு வரலாற்றுக் காலத்திலிருந்து மிக அண்மைக் காலம் வரை நடைபெற்று வந்தது. முசலிப் பிரதேசக் கரையோரப் பகுதி மக்களும் நேரடியாகவும் மறைமுகமாகவும் முத்துக்குளிப்பில் ஈடுபட்டு வந்தனர்.

முத்துக்குளிப்பு பல்லாயிரக்கணக்கான மக்களுடன் தொடர்புடைய ஒரு பொருளாதார நடவடிக்கையாகும். முத்துக்குளிப்பவர்கள், படகோட்டுபவர்கள், படகு உரிமையாளர்கள், முத்து வியாபாரிகள், முத்திற்கான வரி அறவிடுவோர்கள், முத்துக்குளிப்புக் காலத்திலான மருத்துவ, நீதி, பொலிஸ் ஏனைய நிர்வாக நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் என முத்துக்குளிப்போடு தொடர்புடைய பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன் முத்துக்குளிப்புக் காலத்தில் அதனைப் பார்பதற்காக வருகின்ற பல நூற்றுக்கணக்கான ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்பவர்களும் இப்பிரதேசக் கடற்கரையோரத்தில் பல நடவடிக்கைகளில் ஈடுபடுவர். 1889 ஆம் ஆண்டு முசலிப் பிரதேச சிலாவத்துறையில் நடைபெற்ற முத்துக் குளிப்பைப் பற்றி Van (1888) என்பவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "பெப்ரவரி மாத ஆரம்பத்தில் அரசு அதிகாரிகள் முத்துக் குளிப்பவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பர் என்றும், பெப்ரவரி மாத நடுப்பகுதியில் முத்துக் குளிப்புடன் தொடர்புடைய பல்லாயிரக்கணக்கான மக்கள் சிலாவத்துறையில் கூடியிருந்தார்கள் மார்ச் மாத ஆரம்பத்தில் முத்துக் குளிப்பு ஆரம்பிக்கின்றது" என்று குறிப்பிட்டுள்ளார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படம் 22: முசலியின் முத்துக்குளித்தற் பிரதேசமும், செயற்பாடுகளும்






கடலில் ஏறக்குறைய 40-50 அடி ஆழத்திற்கு சுழியோடக் கூடியவர்களால் கடல் அடித்தளத்தில் இருந்து முத்துச் சிப்பிகள் எடுக்கப்படுகின்றன. முத்துக் குளிக்கும் சுழியோடிகளும், அவர்களின் உதவியாளர்களும் முத்துக் குளிப்பில் ஈடுபடும் முதலாளிகளால் உதவிக்கு அமர்த்தப்படுவார்கள். நூற்றுக் கணக்கான தோணிகளில் ஆயிரக்கணக்கானவர்கள் முத்துக் குளிப்பில் ஈடுபடுவதுண்டு. 1902 ஆம் ஆண்டு மறிச்சுக் கட்டியில் முத்துக்குளிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் பங்கு பற்றிய பல்வேறு பிரதேச மக்கள் பற்றிய விபரங்களைப் படம் 22 காட்டுகின்றது.

முத்துக்குளிப்பு நடவடிக்கைகளில் முஸ்லிம்கள் மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருந்தார்கள். முத்துக்குளிப்புடன் தொடர்புடைய எல்லா நடவடிக்கைகளோடும் முஸ்லிம்களுக்கு ஈடுபாடு இருந்தது. முஸ்லிம்கள் முத்துக் குளிப்பவர்களாகவும், படகோட்டிகளாகவும், முத்து வாங்கல் விற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடும் வர்த்தகர்களாகவும், முத்தைத் தரம்பிரிக்கும் ஆற்றல் கொண்டவர்களாகவும் காணப்பட்டார்கள் என வரலாற்று நூல்கள் எடுத்தியம்புகின்றன.

முத்துக் குளிப்புப் பற்றி முஸ்லிம்களைத் தொடர்பு படுத்தி எழுதப்பட்ட விபரங்களில் முத்தின் பெறுமதி அறிந்து அதனைத் தரம் பிரிக்கும் தேர்ச்சி கொண்ட முஸ்லிம்களின் திறமை வரலாற்று நூல்களில் மிகத் தெளிவாக விளக்கப்பட்டிருக்கின்றது. முத்தை அதன் தரத்திற்கும், அழகிற்கும் ஏற்ப முஸ்லிம்கள் 10 வகையாகப் பிரிப்பதுண்டு. மேற்குறிப்பிட்ட முத்தின் 10 வகைகளாவன ஆணி, கனதாரி, மக்கை, மடக்கு, குறவில், கனிப்பு, பீசல், குறல், தூள், ஒட்டுமுத்து, ஆகியனவாகும்.

முசலிப் பிரதேசத்துடனான முஸ்லிம்களின் தொடர்பு இப்பிரதேசத்தின் முத்துக் குளிப்பின் வரலாற்றினளவு பழமை வாய்ந்ததாகும். துரதிஷ்டவசமாக முத்துக்குளிப்புடனான முஸ்லிம்களின் வரலாற்று முக்கியத்துவம் இதுவரை ஆராயப்படாத ஒன்றாகக் காணப்படுகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பின்னிணைப்பு 4
# முசலிப் பிரதேச முஸ்லிம் புலவர்கள்

முசலி பொருளாதார வளங்களோடு கல்வி வளமும் மிக்க பிரதேசமாகும். இப்பிரதேச மக்களின் கல்விச் சிறப்புக்களில் ஒன்று இவர்கள் மத்தியில் மிக நீண்ட காலமாக இருந்து வந்த கவிப் புலமையும், திறமையுமாகும். இப்பிரதேசத்தில் கவிப்புலமை மிக்க புலவர்களும், பிரபல்யமான இஸ்லாமிய புராண விரிவுரையாளர்களும் வாழ்ந்திருக்கின்றார்கள். முசலிப் பிரதேச முஸ்லிம் கவிஞர்கள் பற்றி இப்பகுதியில் விளக்கப்படுகின்றது. இது நே.மு. ஹபிபு முகம்மது மரைக்காயர் அவர்களின் விபரங்களை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டது.

## 1. க. நெயினா முகம்மது மரைக்காயர் புலவர்

இவர் பண்டாரவெளியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பண்டாரவெளியின் மூத்த கல்விமான்களுள் தலைசிறந்த ஒருவரான இவர் பிரசித்தமான நொத்தாரிசாகவும் இருந்தார். இவர் தமது வாழ்க்கைக் காலத்தில் பல பாடல்களைப் பாடியிருக்கின்றார். அவற்றில் சீட்டுக்கவி, வழிநடைச் சிந்து, பிரார்த்தனைப்பாடல் என்பன குறிப்பிடத்தக்கனவாகும். இவர் வங்காலையில் வசித்த தனது நண்பர் பத்தேசு கூஞ்ஜை என்பவரிடம் குதிரைகள் கேட்டனுப்பிய சீட்டுக்கவியின் சில வரிகள் இந்நூலின் அத்தியாயம் 6இல் தரப்பட்டுள்ளன.

## 2. க. கிதுரு முகம்மது மரைக்காயர்

பண்டாரவெளியையே பிறப்பிடமாகக் கொண்ட இவர் இயற்கையிலேயே கவிப்புலமை மிக்க ஒருவராகக் காணப்பட்டார். எழுத்தறிவு குறைந்த அன்றைய காலக்கட்டத்தில் தமது உள்ளக் கிடக்கைகளையும், உணர்வுகளையும் பாடல் மூலமாக வெளிப்படுத்துவதில் வல்லமை மிக்கவராக இருந்தார். இவரது பாடல்களில் பெரும்பாலானவை நூலுருப் பெறாமையால் இன்று கிடைக்கக் கூடியதாக இல்லை.



## 3. மு. ஜமால்தீன் புலவர்

புலமைத்துவத்தில் சிறப்புப் பெற்றிருந்த இவர் கூளாங்குளத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மக்களின் வறுமை நிலை, சமூக விரோத செயல்கள், ஏக இறைவனின் வல்லமைகள் என்பவற்றைக் கருப்பொருளாகக் கொண்டு ஏராளமான பாடல்களைப் பாடியுள்ளார். வானம் பார்த்த பயிர்ச் செய்கையை மேற்கொண்டிருந்த அன்றைய நிலையில் உரிய காலத்தில் மழை கிடைக்காமையால் வாடி வதங்கிப் போன பயிர்களுக்கு மழை கிடைக்கப் பிரார்த்தித்துப் பாடிய ஒரு பாடலின் சில அடிகள் பின்வருமாறு

சீர் பெறும் இலங்கை நகரென்றுஞ் செழித்து
சேம முறு வாகு பெற உனதடி பணிந்து
ஏர் பெருக மங்கலச் செல்வமது உறுக
ஏகனே நன்மாரி இவ்வருச மீவாய்

அல்ஹம்து லில்லாஹி ஆன புகழெல்லாம்
ஆதியே உனையன்றி வேறுகதியுண்டோ
பல்வினைக டீர்துறுகு உனது றகுமத்தால்
வாவிகளில் நீர் பெருக வாகுமழை பொழிவாய்

## 4. நெ. முகிதீன் சாஹிபு மரைக்காயர் புலவர்

பிரசித்த நொத்தாரிசான இவர் சிறு பராயத்திலிருந்தே கவிதைகள் பாடும் வல்லமையைப் பெற்றிருந்தார். இவரின் சொந்த இடம் புதுவெளியாகும். இவர் கொடுக்கல், வாங்கல்கள், மக்களின் நாளாந்த நடவடிக்கைகள், உளப்பாங்குகளைப் பற்றிப் பல சிறந்த பாடல்களைப் பாடியுள்ளார். இறைபக்தி மிக்க இவரின் பாடல்களில் அநேகமானவை இஸ்லாமிய நம்பிக்கைகளோடிணைந்த அம்சங்களைப் பற்றியவையாகும். இவ்வகையில் மௌத்தைப் பற்றியும், அதற்குப் பின்னுள்ள நிகழ்வுகள் பற்றியும் பாடியுள்ள பாடலொன்றின் சிலவரிகள் பின்வருமாறு

நல்ல புனலியற்றி–நாற்றத்துடக்ககற்றி
சொல்லும் கபனுடுத்தித் தொழுது சந்தூக்கிலேற்றி
தூக்கியே சுமந்து கபு
றாத்தியே விரைந்து செல்லும்
துக்கத்தின முன்கர் நக்கீர் வந்தே சவால்
பக்குவமாய் கேட்டு –அக்கணத்தில் காக்க.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## 5. நெ. முகம்மது கௌதுப் புலவர்

முசலிக்கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட புலவர் இவர். இவருடைய பாடல்கள் கிடைக்கக் கூடியதாக இல்லை.

## 6. கெ.மு. ஹபீபு முஹம்மது மரைக்காயர் புலவர்

இவர் பிறந்த இடம் புதுவெளியாகும். வாழ்ந்த இடம் சிலாவத்துறை. தற்போது வாழ்வது புத்தளம் மாவட்ட நுரைச்சோலையில் இவர் முசலிப் பிரதேசத்தின் காதியாகவும், சமாதான நீதவானாகவும் கடமையாற்றியிருக்கின்றார். அதே நேரம் இவர் பிரபல்யமான கவிஞரும், இஸ்லாமியப் புராண விரிவுரையாளரும் ஆவார். மன்னார் மாவட்டக் கிராமங்கள் பலவற்றில் இவரை அழைத்து இவரின் புராண விரிவுரையைச் சிறப்பிப்பதுண்டு. இவரின் மற்றுமொரு சிறப்பு மன்னார் மாவட்டத்திலும் குறிப்பாக முசலிப் பிரதேசத்திலும் வாழ்ந்த கவித்திறன் வாய்ந்த முஸ்லிம் கவிஞர்களின் பாடல்களை மனனம் செய்து வைத்திருப்பதாகும். இவருடைய நினைவில் இருக்கின்ற இப்பிரதேச முஸ்லிம்களின் கவிதைப் பொக்கிசம், கவிதைகளுக்கான இவருடைய விளக்கங்களோடு எழுத்துருவில் கொண்டுவரப்பட வேண்டியது அவசியமானதாகும். இவருடைய கவிதைப் புலமைச் சிறப்புக்கு இவர் 1990ம் ஆண்டு பலவந்த வெளியேற்றத்திற்குட்பட்ட நினைவினைக் குறித்துப் பாடிய பாடல்கள் முக்கியமானதாகும். அதில் சில வரிகள் பின்வருமாறு:

நாடிழந்து நகரிழந்து, நங்கையரின் நகையிழந்து
காடுவழியாக சிலர் கஷ்டப்பட்டு வந்தாரல்லோ.
ஆடிழந்து மாடிழந்து அரண்மனைகள் தானிழந்து
தோடிழந்து தொங்கிழந்து துயரப்பட்டு வந்தோம் அல்லாஹ்
வீடிழந்து நெல்லிழந்து வேலைசெய்த மாடிழந்து
பாடுபட்ட பணமிழந்து பரிதவித்து வந்தோம் அல்லாஹ்.

## 7. மீ. ஹபீபு முகம்மது புலவர்

முசலி அளவக்கைச் சிறுக்குளத்தில் 1921இல் இக்கவிஞர் பிறந்தார். இவரின் கவிதைச் சிறப்பால் இப்பிரதேச மக்களால் கவியப்பா என்று செல்லமாக அழைக்கப்பட்டார். இப்பிரதேச கிராமங்களில் காணப்படும் களிகம்பு, கோலாட்டம் போன்ற கலை நிகழ்ச்சிகளின் போது அவற்றுக்குப் பொருத்தமாக பாட்டிசைப்பதோடு, இவ்வாட்டங்களில் சமர்த்தராகவும் இவர் காணப்பட்டார். தற்போது தனது முதிய வயதில் பள்ளிவாசல்துறை அல்ஹம்றா சொந்தக் குடியேற்றக் கிராமத்தில் தமது ஊரவர் உறவினர்களுடன் இவர் வாழ்ந்து வருகின்றார்.

## 8. க. பக்கீர் முகம்மது

இவர் முசலிக் கிராமத்தைச் சேர்ந்தவர். இவர் இஸ்லாமிய மார்க்க சம்பிரதாய செயற்பாடுகள் பற்றி சிறப்பான கவிதைகள் பாடியுள்ளார். இத்தகைய செயற்பாடுகள் இன்று இப்பிரதேச முஸ்லிம்கள் மத்தியில் வழக்கில் இல்லாவிட்டாலும் இவை பற்றிய இவரின் கவிதைகள் படிப்போரை வியக்க வைக்கும் கவிவளம் மிக்கவையாகும்.

## 9. க. முகம்மது காசிம் புலவர்

தம்பட்ட முதலியை சொந்தக் கிராமமாகக் கொண்டிருந்த இவர் முசலிப் பிரதேச கவிஞர்களுள் சிறப்பிடம் பெற்ற ஒருவரென்பதை இவரின் கவிதை மூலம் அறிந்து கொள்ளலாம். தமது சொந்தக் கிராம, அயற்கிராம பாரம்பரியங்கள் பற்றியும், கலாசார செயற்பாடுகள் பற்றியும் சிறப்பாக விளக்குவனவாக இவரின் கவிதைகள் காணப்பட்டன.

## 10. மு. முகம்மது காசிம் புலவர்

அகத்திமுறிப்பில் வாழ்ந்த முகம்மது காசிம் புலவரின் கவிதைகள் இப்பிரதேச முஸ்லிம்களின் குடியேற்ற வரலாறு பற்றி சிறப்பாகக் கூறுகின்றன. எனினும் இவர் நெற்செய்கையில் மேற்கொள்ளப்படுகின்ற உழுதல், அறுவடை, சூடடித்தல் போன்ற செயற்பாடுகளின் போது இவற்றைச் செய்யும் மிருகங்களின் காலடி ஓசைக்கொத்த சந்த நடையைப் பிரதிபலிக்கும் வகையிலும் கவிதைகளைப் பாடியுள்ளார்.

## 11. மு. முகம்மது மஸ்தான் புலவர்

மன்னாரில் கவிதைத் துறையில் தலை சிறந்தவரெனப் போற்றப்படும் மஸ்தான் புலவர் பொற்கேணியிற் பிறந்தவர். இவர் பல கவிதைச் சமர்களில் போட்டியிட்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தன்னுடைய ஆற்றலின் உயர்வை வெளிப்படுத்தியுள்ளார். கேட்போர் வியக்கத் தக்கதாய் அடுக்குத் தொடராகக் கவிதை பாடுவதில் சமர்த்தர். முசலிப் பிரதேசத்தில் சிதறலாகக் காணப்படும் இவரின் கவிதைகள் பல்வேறு வகையினதாகும். கல்வித்துறையிலும், கலை ஞானத்திலும் கூட இவர் தன்னுடைய திறமையைக் காட்டி அரிய சாதனைகளைப் படைத்துள்ளார்.

## 12. மு. அலி முகம்மதுப் புலவர்

இத்திக்குளம் என்ற விவசாயக் கிராமத்தில் வாழ்ந்த இவர் ஓர் இயற்கைப் புலவராவார். எழுத்தறிவு வாசனை குறைந்திருந்த போதும் தமதுள்ளுணர்வுகளைக் கவிதைகளாய் வடிப்பதில் தன்னிகரற்றவராகக் காணப்பட்டார். கால்நடைகளோடலைந்து திரியும்போது இயற்கையின் கொடைகளாய்க் காணும் பல்வேறு அம்சங்களையும் கருப்பொருளாய்க் கொண்டு தன் கவிப் புலமையைக் காட்டினார்.

## 13. க. முகம்மது சரீபுப் புலவர்

இவரின் சொந்தக் கிராமம் கொண்டச்சியாகும். புலமையில் தலைசிறந்து விளங்கிய இவர் கலைத்துறையிலும் களியாட்டங்களிலும் திறமை பெற்றிருந்தார். காணும் பொருட்களை கற்பனையில் வடித்து மெருகூட்டிப் பாடுவது இவரிடம் இயற்கையாகக் காணப்பட்டது.

## 14. செ. செ. சேகுதாவுதுப் புலவர்

சிலாவத் துறையிற் பிறந்து சிறந்த கவிஞராகத் தேர்ந்த இவர் கலைத் துறையிலும் ஆர்வங்காட்டினார். காலங்கடந்து காண்பாரற்றுக் கிடந்த பல அரிய கவிதைகளுக்கும் உயிரூட்டி நிலைக்கச் செய்த பெருமையும் இவரைச் சாரும். இயல்பான தன்னுடைய கவிதைகளோடு மற்றவர்களின் கவிகளுக்கும் கண்ணியம் கொடுத்து காத்தளித்தார்.

## 15. மு. முகம்மது முகைதீன் புலவர்

இந்தியாவின் பெரிய பட்டணத்தை பிறப்பிடமாகக் கொண்ட முகைதீன் புலவர் மன்னார் வந்து சிலாவத்துறையில் வசித்து வந்தார். கவிதைத்துறையில் ஆர்வமுடைய



இவர் பல கவிகளைப் பாடியது மட்டுமன்றி முசலிப் பிரதேசத்தின் கவிதை வளர்ச்சிக்கும் பங்காற்றியவராவார்.

## 16. மு. கச்சு முகம்மது புலவர்

கவிஞர்கள் காதல், வீரம், களியாட்டங்கள், செய்யுந் தொழில்கள், அந்தஸ்தால் உயர்ந்த ஆத்ம ஞானிகள், பாரம்பரிய சமய செயற்பாடுகள், வணக்க வழிபாடுகள், சமூக விரோதச் செயற்பாடுகள், மழைப் பிரார்த்தனை என பல்வேறு அம்சங்களையும் கருப் பொருளாகக் கொண்டு பாடல், கும்மி, தாலாட்டு, ஆசைக்கவி என பல்வேறு வடிவங்களில் கவிதைகளைப் புனைந்து கலைத்துறை வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தார்.

இவர்களைவிட புதுவெளியைச் சேர்ந்த உதுமா லெப்பைப் புலவர், வேப்பங்குளத்தைச் சேர்ந்த அப்துல் அசீஸ் புலவர் அத்துடன் சொந்தக் கிராமம் அறியப்படாத க. முகம்மது ஹசன் புலவர் ஆகியவர்களும் முசலிப் பிரதேச புலவர் வரிசையில் உள்ளடக்கப்பட வேண்டியவர்களாவர்.

முசலிக் கவிஞர்களின் ஆக்கங்கள் பல இன்று கிடைக்கக் கூடியதாக இல்லை. அரிய பல பாடல்களை மனனம் செய்து வைத்திருந்த பலர் இயற்கை மரணங்களால் எம்மை விட்டுப் பிரிந்து கொண்டிருக்கின்றார்கள். இச்சந்தர்ப்பத்தில் முசலி முஸ்லிம்களின் அரிய பொக்கிசங்களான முசலியின் கவிஞர்கள் பற்றியும், கவிஞர்களின் படைப்புக்கள் பற்றியும், கலை அம்சங்கள் பற்றியும் ஆவணப்படுத்தி பாதுகாக்க வேண்டியது ஒரு அவசரமான கடமையாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பின்னிணைப்பு 5

## அட்டவணை -17

### சிலாவத்துறை குடியிருப்பின் வர்த்தக, சேவை நிலையங்கள் பற்றிய விபரங்கள்

| இல | உரிமையாளரின் பெயர் | கடையின் பெயர் | வியாபாரத்தின் தன்மை |
|---|---|---|---|
| 1. | W.A. நஸ்ருல்லா | றிஸ்வானா ஸ்டோர்ஸ் | பலசரக்கு |
| 2. | A.C.A. கபூர் | சபீல் டெயிலரிங் | தையல் |
| 3. | M.A. தாஹிர் | அரூஸ் பேக்ஹவுஸ் | பேக்கரி |
| 4. | M.M.அபூபக்கர் | ஜ"மானா ஸ்டோர்ஸ் | பலசரக்கு |
| 5. | M.ஹாமீம் | ஹசன் ஸ்டோர்ஸ் | பலசரக்கு |
| 6. | N.M.H.மொஹமட் | அஸ்ரப் ஸ்டோர்ஸ் | பலசரக்கு |
| 7. | M.M தையூப் | ஜெசீமா ஸ்டோர்ஸ் | பலசரக்கு |
| 8. | O.M. உவைஸ் | சில்மியா டீ ரூம் | சிற்றுண்டி |
| 9. | M.ஹாமிட் | என்.எஸ். எம். ஸ்டோர்ஸ் | பலசரக்கு |
| 10. | C.M காசிம் | காசிம் ஸ்டோர்ஸ் | பலசரக்கு |
| 11 | M. அக்பர் | சபீர் ஸ்டோர்ஸ் | கருவாடு |
| 12 | M.ஹனீபா | றிஸ்வானா ஸ்டோர்ஸ் | மரக்கறி |
| 13 | M நிஜாம் | றபீஸ் ஸ்டோர்ஸ் | பலசரக்கு |
| 14 | றஹ்மதுல்லா | ஜெஸ்மின் ஸ்டோர்ஸ் | பலசரக்கு |
| 15 | H.M நஸீர் | என்.பி.சி. | மொத்த வியாபாரம் |
| 16 | M.ஹால்டீன் | ஹால்டீன் ஸ்டோர்ஸ் | மரக்கறி |
| 17 | மீராசா மரைக்கார் | ஹபீபா பேக் ஹவுஸ் | பேக்கரி |
| 18 | காதர் மொஹிடீன் | டீ ரூம் | தேநீர் |
| 19 | நஜ்முடீன் | சன்பரா ஸ்டோர்ஸ் | பலசரக்கு |
| 20 | றசாது | றம்சான் ஹோட்டல் | தேநீர் |
| 21 | S.M பிர்தௌஸ் | மஜீத் ஹோட்டல் | தேநீர் |
| 22 | M கபூர் | கபூர் ஸ்டோர்ஸ் | பலசரக்கு |
| 23 | S.M றாசிக் | எஸ்.எம்.ஆர். ஸ்டோர்ஸ் | பலசரக்கு |
| 24 | S.M றாசிக் | எஸ்.எம். ஆர். ட்ரான்ஸ்போட் | எண்ணெய் |
| 25 | M சம்சுதீன் | கபீல் ஸ்டோர்ஸ் | பலசரக்கு |
| 26 | W. அஸ்ரப் | அஸ்ரா ஸ்டோர்ஸ் | பலசரக்கு |
| 27 | M ஜலீல் | இமாம் ஸ்டோர்ஸ் | பலசரக்கு |
| 28 | S ஹாமிட் | நசீரா ஸ்டோர்ஸ் | பலசரக்கு |
| 29 | M.A. ஜமீல் | ஜமீல் மெகானிக் | பழுது பார்த்தல் |
| 30 | M.A.C.மௌஜ"ட் | மறியம் ஸ்டோர்ஸ் | மரக்கறி |
| 31 | A. சுபைர் | சுபைர் ஸ்டோர்ஸ் | பலசரக்கு |
| 32 | M கபீர் | கபீர் ஸ்டோர்ஸ் | பாத்திரம் |
| 33 | A. ஐயூப் | ஐயூப் டீ ரூம் | தேநீர் |
| 34 | M.A தாஹிர் | ஹரூஸ் ஸ்டோர்ஸ் | பலசரக்கு |
| 35 | M. மொஹமட் | சில்மியா டீ ரூம் | தேநீர் |
| 36 | M. ஹம்துான் | சாஹிர் ஸ்டோர்ஸ் | பலசரக்கு |
| 37 | M.C. ஜ"னைட் | றிஸ்மி டெக்ஸ் | ஜவுளி |
| 38 | M.C ஜ"னைட் | நியூஸ் கிறைன்டிங் மில் | ஆலை |
| 39 | M.C. ஜ"னைட் | றிஜாஸ் பிஸ் சென்றர் | மீன்சந்தைப்படுத்தல் |
| 40 | மொகமட் | நியூ ஸ்டோர்ஸ் | மரக்கறி |
| 41 | ஹபிதுல் கரீம் | நியூ டெக்ஸ் | ஜவுளி |
| 42 | N. பாஸ்தீன் | நிஜாம் ஸ்டோர்ஸ் | பலசரக்கு |
| 43 | M. மொஹிடீன் | டீன் சன்ஸ் | ஜவுளி |
| 44 | M. அக்பர் | சதாத் ஹோட்டல் | சிற்றுண்டி |
| 45 | M. அஜ்மல் | அஜ்மல் சைக்கிள் சொப்ஸ் | சைக்கிள் உதிரிப்பாகம் |
| 46 | M. றவூப் | றவூப் டெயிலரிங் | தையல் |
| 47 | M.M புஹாரி | புகாரி ஸ்டோர்ஸ் | மரக்கறி |
| 48 | N.M ஜலால் | ஹம்சா டீ ரூம் | சிற்றுண்டிச்சாலை |
| 49 | J. ஜபருல்லா | ஹம்சா ஸ்டோர்ஸ் | பலசரக்கு |
| 50 | M.P. மரைக்கார் | ஏ.எச்.எம். ஸ்டோர்ஸ் | மொத்தவியாபாரம் |
| 51 | M.P. மரைக்கார் | எ.எச்.எம்.லங்கா | எரிபொருள் |
| 52 | A.C.அஸ்ரப் | ஏ.சீ.ஏ. ஸ்டோர்ஸ் பிஸ்கட் | பலசரக்கு |
| 53 | M றாசிக் | நபீஸ் கூல்ஸ்பொட் | குளிர் பானம் |
| 54 | M ஜமீல் | காமில் ஸ்டோர்ஸ் | சைக்கிள் பாட்ஸ் |
| 55 | M சம்சுடீன் | பீப் ஸ்டோர்ஸ் | இறைச்சிக்கடை |
| 56 | M.B. ஹாலிடீன் | றிஸ்னா டெக்ஸ் | ஜவுளி |
| 57 | சாஹுல் ஹமீட் | வைற் ஸ்டோர்ஸ் | பலசரக்கு |

*மூலம்:* அகதி வெளிக்கள ஆய்வு, 1991.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**இலங்கையின் இனப்பிரச்சினையும் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட வடமாகாண முஸ்லிம்களும்**

**இப்பொதுத்தலைப்பில் வெளிவரவுள்ள நூல் தொகுதிகள்**

**தொகுதி 1:** அறிமுகம்.
**தொகுதி 2:** யாழ்ப்பாண முஸ்லிம்களும் கிளிநொச்சி முஸ்லிம்களும்.
**தொகுதி 3:** முல்லைத்தீவு முஸ்லிம்கள்
**தொகுதி 4:** மன்னார் தீவு முஸ்லிம்கள்
**தொகுதி 5:** முசலி முஸ்லிம்கள்
**தொகுதி 6:** மாந்தை–நானாட்டான் முஸ்லிம்கள்
**தொகுதி 7:** வவுனியா முஸ்லிம்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மன்னார் மாவட்ட முசலிப்பிரதேசத்தைச் சேர்ந்த
பள்ளிவாயில் பிரதம தர்ம கர்த்தாக்களாகிய நாங்கள்
அகதிகளாக வாழும் எமது மக்கள் சார்பாக
பின்வரும் செய்தியை அறிவிக்க விரும்புகின்றோம்.

இனப்பிரச்சினையில்
பக்க சார்பற்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்த நாங்கள்
தொடர்ந்தும் அதே நிலைப்பாட்டைக் கொண்ட மக்களாக
எமது பிரதேசத்தில் வாழ விரும்புகின்றோம்.

எமது சொந்த இடத்திற்கு நாங்கள் மீழ்வதற்காக
எடுக்கப்படுகின்ற முயற்சிகள்
தமிழ் மக்களினதும்,
அரசினதும் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட வேண்டும்.

நாங்கள் எமது பிரதேசத்தில் மீண்டும் குடியேறிய பின்னர்
எச்சந்தர்ப்பத்திலும் திரும்பவும் வெளியேற்றப்பட மாட்டோம்
என்பதற்கான உத்தரவாதம் எமக்கு அவசியம்.

நாம் எமது பிரதேசத்திலிருந்து வெளியேற்றப்படும் போது
எமது 21 கிராமங்களிலும் எமக்குச் சொந்தமான
எமது பொதுப் பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்த
சொத்துக்கள், வளங்கள் எல்லாம்
எமது வாழ்க்கையைத் திரும்பவும் ஆரம்பிப்பதற்கு எமக்குத் தேவை.

அதனால்,
எமது பலவந்த வெளியேற்றத்தால் ஏற்பட்ட பிரச்சினைகளை
மனிதாபிமான அடிப்படையிலும்,
மனித உரிமை அடிப்படையிலும் அங்கீகரித்து
எமது மக்களின் நலன் கருதும் நடவடிக்கைகளை
மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

**'முசலி முஸ்லிம்கள்'**
(அணிந்துரையில் இருந்து)

**ISBN 955-9445-05-7**

PRINTED BY UNIE ARTS (PVT) LTD.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்